# தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்

முனைவர் அன்னி தாமசு

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை-600113

# தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்

முனைவர் அன்னி தாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamilakkiyattil Ūnamurrōr |
| Editor | : | Dr. Annie Thomas<br>Professor<br>Faculty of Sociology, Art and Culture<br>International Institute of Tamil Studies |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113. |
| Publication No. | : | 415 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 kg TNPL Super Printing |
| Size of the Book | : | 22 x 14 cms |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | vi + 186 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 45/- |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | 'Handicapped' in Tamil Literature |

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

அரிய மானிடப் பிறவியில் கூன், குருடு, செவிடு போன்ற குறைகள் நீங்கிய மனிதனாகப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். உடற் குறையும், மனக் குறையும் மனித வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடைக்கல்லாக அமைந்துவிடுவதும் உண்டு. இத்தகைய குறைகளைப் பெருந்தடையாகக் கருதாமல் அவற்றைச் சாதனைப் படிக்கற்களாக மாற்றிக் காட்டுபவர்களும் உண்டு. அன்றாட வாழ்வில் இத்தகையவர்களை நாம் காண முடிகிறது. இவர்களுக்கு உளவியல் சார்ந்த சில பாதிப்புகளும் ஏற்படும். இதனால் இவர்களுடைய உண்மையான அறிவும், ஆக்க பூர்வமான சிந்தனைகளும் இச்சமுதாயத்திற்குக் கிடைக்க முடியாமல் போய் விடுவதுமுண்டு.

நம்முடைய இலக்கியங்கள் அவ்வக்காலச் சமுதாயக் கூறுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. முழுமையான மாந்தர்களை மட்டுமல்லாமல் மேற்சுட்டிய ஊனமுடைய மாந்தர்களையும் இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டத் தவறவில்லை. அவர்களுக்கு இருந்த சமுதாய, பொருளாதார, உளவியல் சார்ந்த பல கூறுகளை இலக்கியங்கள் எடுத்துக் காட்டியுள்ளமையையும் காண முடிகின்றது. அவ்வகையில் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் ஊனர்களைப் பற்றிய ஒரு தொகுப்பு ஆய்வாக இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலில் ஊனமுற்றோரின் சமுதாய உளவியல் சார்ந்த பல சிக்கல்கள் இலக்கியச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இலக்கியங்களில் மட்டுமல்லாமல் இலக்கணங்களிலும் இத்தகைய ஊனர்களைப் பற்றிய சிறப்புக் கூறுகள், சமுதாய வெளிப்பாட்டோடு சுட்டப்பட்டுள்ள நிலையையும் காண முடிகிறது. எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நான்கில் எள்ளலுக்கு விளக்கமும் எடுத்துக்காட்டும் கூற வந்த தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர், 'முடவர் செல்லும் செலவு எள்ளுதற் பொருண்மையாயிற்று' என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. உரைகளில் சுட்டிக் காட்டி வெளிப்படுத்தப்படும் அளவிற்கு ஊனம் பற்றிய நிகழ்வுகள் சமுதாயத்தில்

இடம்பெற்று இருந்தமையை அறிய முடிகிறது. ஊனமுற்றோரை எள்ளி நகையாடும் எவரும் மனத்தளவில் ஊனமுற்றோராகவே கருதப்படுவர்.

ஊனமுற்றோரின் வாழ்விற்கும், மேம்பாட்டிற்கும் அரசுமுதல் தொண்டு நிறுவனங்கள் அனைத்தும் ஆர்வம் காட்டிவரும் இவ்வேளையில், அவர்களைப் பற்றிய சமுதாய ஆய்விற்கும், உளவியல் ஆய்விற்கும் இந்நூல் துணை செய்வதாக அமையும். 'தமிழ் இலக்கியத்தில் ஊனமுற்றோர்' எனும் இந்நூலை வெளிக்கொணர்வதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பெருமை அடைகிறது. இந்நூல் ஊனம் பற்றிய ஒரு முழுமையான நூல் என்பதில் ஐயமில்லை.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப அவர்களுக்கும், கூடுதல் இணைச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி. இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த கணிப்பொறியாளர் திருமதி இரா. வெண்ணிலாவிற்கும் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1986 நவம்பர் திங்களில் சமூகவியல் துறை தோற்றுவிக்கப்பட்டது. மூத்த பேராசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் அத்துறைத் தலைமை ஏற்க, இணைப்பேராசிரியராக இருந்த நான் அத்துறைப் பணியில் அமைக்கப்பட்டேன். நாங்களே துறைப்பணியை வகுத்துக் கொள்ளவேண்டிய நிலையில், தமிழிலக்கிய அடிப்படையில் சமூகத்தைக் கண்டுகாட்டும் போக்கு ஏற்புடையதாகத் தோன்றியது. நூலாக்கத்திற்காக வகுக்கப்பட்ட திட்டங்களுள் 'தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்' என்பதும் ஒன்று. 1987 ஜூன் திங்களில் பேராசிரியரின் பணிநிறைவுக்குப் பின் இத்திட்டப்பணி என்வசம் தங்கியது.

சமூகத்தில் காணப்படும் பல்வகையான குறைபாடுகளையும் சிதைவுகளையும் கண்டு கணிக்கும் சமூக நோயியல் (Social Pathology) கல்வி, சமூகவியல் துறையில் குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றது. சமூக நோய்நிலையில் சுட்டத்தக்க ஒன்றான ஊனம் (handicap), தமிழில், தமிழ் இலக்கியப் பரப்பில் எவ்வாறு பதிவு பெற்றுள்ளது எனக் காணுதல் இத்துறைக் கல்விக்கும் உதவ இயலும். தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரையிலான தமிழ் இலக்கண, இலக்கியக் களன்; நிகண்டு, அகராதிகளின் சொற்கள்; நாட்டுப்புறவியலின் பழமொழி, விடுகதை, விளையாட்டு ஆகிய தளம்- ஆகியவற்றை அடிப்படையாக்கி, ஊனம்- ஊனர் பற்றிய தரவுகளை இணைத்துக்காணும் நோக்கில் இந்நூல் உருவாகியுள்ளது.

ஊன(முற்றோ)ர், ஊனம்- சொல்லும் பொருளும், எச்சம், உறுப்பறை, கூனும் குறளும், ஊமும் செவிடும், சமூகத்தில் ஊனர், பழமொழியிலும் விடுகதையிலும் ஊனர், விளையாட்டில் ஊனர் என ஒன்பது இயல்களாக நூல் அமைகின்றது. ஊனச் சொற்கள் பின்னிணைப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

ஊனமுற்றோர் என்ற முதல் இயல் அறிமுக நோக்கில் வரையப்பெற்றுள்ளது. அண்மைக் காலங்களில் மிக்க விழிப்புணர்வுடன் பேசப்பெறும் ஊனம் பற்றிய பண்டைய சிந்தனை எவ்வாறமைந்தது, ஊன வகைகள் என்னென்ன, இவற்றைப் பற்றிய முதற்குறிப்புகள் எவ்வாறமைகின்றன, பழந்தமிழ்க் குறிப்புகளிலிருந்து ஊனமுற்றோர் வாழ்வு பற்றிக் கிடைக்கும் தகவல்கள் எவை, சமூகத்தில் இவர்கள் எவ்வாறு அணுகப்பெற்றனர் ஆகிய பார்வைகள் இங்கு அமையும். நேர்ப் பொருள் நிலையிலும் எதிர்ப் பொருள் நிலையிலும் ஊனம்

குறியீடாகக் கையாளப்பெறல்; ஊனர் பாதுகாக்கப்பெற்றுப் புரக்கப்பட்டமை; ஊனநீக்கம் பற்றிய நம்பிக்கை; தண்டனையாக ஊனம் செய்தல் என்பன தொடர்பான செய்திகளும் இதில் தெரியவருகின்றன. ஊனம் பற்றிய கல்விக்குத் தமிழில் பெருவாய்ப்பும் களனும் அமைதலும் எடுத்துமொழியப்படுகின்றது.

ஊனம்-சொல்லும் பொருளும் என்ற இரண்டாம் இயல், ஊனத்தைக் குறிக்கத் தமிழில் கையாளப்படும் பல்வகையான சொற்களை அடிப்படையாக்கி ஆய்கின்றது. தொல்காப்பியம் முதல் தமிழ் லெக்சிகன் வரை அமையும் ஊனம் தொடர்பான சொற்கள் இங்குக் களனாகின்றன. உறுப்பறை என்ற அரிய சொல்வருகை தொல்காப்பியத்திற்கு உரியது. புறநானூறு தரும் சிதடு முதலான எண்பேரெச்சப் பட்டியல் பின்பு நிகண்டுகளில் தொடர்ந்து, பரியாயச் சொற்களும் பெற்றது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதி (Tamil Lexicon) எல்லா ஊனவகையும் உட்படுத்தி, 1068 சொற்கள் தருவது, தமிழ்ச் சமுதாயத்தில் ஊனம் பற்றிய சிந்தனையும் விழிப்புணர்வும் பெருகி அமைந்ததைக் காட்டக்கூடும். அறிவூனமான மருள் பற்றி 280 சொற்கள் அமைவது எல்லா ஊனங்களையும் விட இது கொடுமையானது, கொடூரமானது என்பதை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

எச்சம் என்ற மூன்றாம் இயல், பிறவியிலேயே ஏற்படும் ஊன நிலையை விளக்குகின்றது. எச்சம் பற்றிய முதல் பட்டியல் புறநானூற்றில் வருகிறது. சிதடு, உறுப்பில்லாத பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, விலங்கு வடிவில் பிறப்பது, மருள் என்பன அந்த எட்டு. சிதடு, கண் பார்வையின்மையாகிய குருடு என்பதைக் குறிக்கும். மருள் என்பதில் அறிவு மருளும், பால் மருளும் உட்படலாம். இப்பட்டியலில் 'முடம்' இடம்பெறாமை கவனிக்கத் தக்கது. ஊனப்பிறப்புப் பற்றிய சில நம்பிக்கைகள் இருந்தமை கீழ்க்கணக்கு நூல்கள் வழி அறிய முடிகிறது. இலக்கியங்கள் ஊனமுற்றோரைப் பாத்திரங்களாக- கதை மாந்தராகக் கையாண்டுள்ளன என்பதும் பதிவு பெறுகின்றது.

ஊனம் செய்தல்-உறுப்பு அறுத்தல் என்ற சிந்தனை தொல்காப்பியப் பழமையுடையது. வெகுளியின் விளக்கத்தில் உறுப்பறை சுட்டுப்பெறுகின்றது. கை, கால், மூக்கு போன்ற பல உறுப்புகள் அறுக்கப்படுகின்றன. அறு, துணி, தூல், பிடுங்கு போன்ற பல வினைச்சொற்கள் உறுப்பறைச் சூழலில் பயன் படுத்தப்படுகின்றன. பிறர் உறுப்பை அறுப்பதுடன், தம் உறுப்புகளைத் தாமே சிதைத்தல் என்ற பாங்கும் இலக்கியக் களனில் காணப்படுகின்றது. தவறு செய்தவருக்குத் தண்டனை வழங்குவதாக ஊனம் செய்தல் (mutilation as punishment) என்பதும் இலக்கியத்தில் உண்டு.

கூன், குறள் ஆகிய ஊன நிலைகள் ஐந்தாம் இயலில் விளக்கப்படுகின்றன. இத்தகு குறையுடைப் பிறவிகட்கு உடலியலடிப்படைக் காரணம் உள்ளமையைத் திருமந்திரம் தருகிறது. குறள் பிறவியூனமாக அமைய, மூப்பு- நோய் போன்ற காரணங்களாலும் கூன் ஏற்படல் உண்டு. காப்பியத் தலைவியர்க்குத் தோழியராக அமைவதில் இத்தகு மக்கள் காட்டப்படுவது கண்கூடு. மந்தரையைப் போன்ற எதிர்ப்பாத்திரப் பயன்பாடும் தனித்துச் சுட்டற்குரியது. கலித்தொகை காட்டும் கூன் குறள் உருவ, உணர்வு வருணனைகள் தனித்தன்மை உடையன.

ஊமும் செவிடும், கூன்-குறள் போன்று இணைத்துப் பேசப்படுகின்றன. ஊமை எனும் பேச்சற்ற நிலையும், செவிடு எனும் கேள்வியில்லாப் பாங்கும் உள்ளமையுடன், இரண்டு ஊனமுமுள்ள செவிட்டூமை என்ற பான்மையும் காணப்படுகிறது. பேச இயலா நிலையில் சைகையால் கருத்தை வெளிப்படுத்துதல் சிந்தாமணியில் காட்டப்படுகிறது. ஊமை கண்ட கனவு எனும் கருத்து, கீழ்க்கணக்கு முதலே வந்துவிடுகிறது. குறியீட்டுப் பொருளுடன் இவ்வூனங்கள் கையாளப்படலும் இலக்கியக் களனில் உளது. புலனும் பொறியும் சீராக அமையினும், மனக் கடினம் காரணமாகக் கேளாமை-செவிசாய்க்காமை அமையும் போது, கேளாச்செவி, மரச்செவி, துளையிலாச் செவி போன்ற சொல் வெளியீடுகள் பயனாகின்றன.

சமூகத்தில் ஊனர் என்ற தலைப்பு, பெரியபுராணத்தைக் களனாக்கி, அதில் காணப்பெறும் ஊனம்-ஊனர் பற்றிய குறிப்புகளைத் தொகுத்தும் வகுத்தும் தருகிறது. தண்டியடிகள் கண்பார்வையின்மை எனும் பிறவியூனத்துடன் அமைந்து, இறையருளால் குறை நீங்கப் பெறுகிறார்; இறை வழிபாடு அல்லது இறை அடியார் வழிபாட்டில் தடையும் இடையூறும் ஏற்படும் போதும் குற்றம் இழைக்கப்படும்போதும் தண்டனையாக ஊனஞ்செய்தல் அமைந்து, பின் இறையருளால் ஊனம் நீங்கப்பெறுகின்றனர். இறைமை, சமய நம்பிக்கை என்ற சார்பில் ஊனம் பற்றிய சமுதாயக் கண்ணோட்டம் இக்களனில் வெளிப்படுகின்றது.

மக்கள் இலக்கியமான பழமொழி, விடுகதை என்பனவும் ஊனம் பற்றி அறிய வாய்ப்பு அளிக்கின்றன. பழமொழியில் உயர்திணை ஊனமும் அஃறிணை ஊனமும் குறிப்பாக உயர் திணையைச் சுட்டி வர, விடுகதையில் இவை, இயங்கு-இயங்கா அஃறிணைப் பொருட்களை, இயற்கை- செயற்கைப் பொருட்களை விடையாகக்கொண்டு வந்து வேறுபடுகின்றன. மனிதனின்

இழிசெயல்களைப் பழிக்கவும், கீழான பண்புகளை எடுத்துச் சுட்டவும், நேரடியாக அணுகாது, மறைமுகமாகக் குறிக்க அல்லது குற்றஞ்சாட்ட பழமொழியின் ஊனங்கள் பயனாகின்றன. ஆயின் விடுகதையின் ஊனம், பொருட்களை இனங்காண குறியீட்டுத் தன்மை கொண்டு விளங்குகின்றன.

விளையாட்டில் ஊனம் என்பதை இரண்டாகப் பகுத்துக் காணலாம். ஒன்று, ஊனமுற்றது போன்ற அமைப்புடன் ஒருவரோ பலரோ விளையாட்டில் ஈடுபடுவது. மற்றொன்று, விளையாட்டுக்குப் பயன்படும் பாடலில் ஊனம் பற்றிய குறிப்போ கருத்தோ வருதல். விளையாட்டில் ஊனம் பெறும் இடத்தைக் காண்பதன் வழி, சமுதாயம், ஊனரைப் பற்றி என்ன நினைத்தது என்பதை விளங்கிக்கொள்ள வாய்ப்பு அமையும். நொண்டியடித்தல், கண் பொத்தி விளையாடுதல் போன்று புலனறிவும் விளையாட்டும் தொடர்புற்று அமைகின்றன.

இவ்வொன்பது இயல்களின் முன்கட்டுரை வடிவங்கள் பெரும்பாலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிக்கிழமைக் கருத்தரங்குகளில் வழங்கப்பெற்றனவாகும். பின்னிணைப்பாக அமையும் ஊனச் சொற்களின் அகர நிரல் விளக்கம், பெரும்பான்மை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் (Tamil Lexicon) அடிப்படையில் தேர்ந்து திரட்டப்பட்டதாகும்.

சமூகவியல், ஊனமுற்றோரைப் பற்றி என்ன கூறுகிறது, உளவியல் இவரை எவ்வாறு கணிக்கிறது, சட்டவியலுக்கு இவர் பற்றிய கண்ணோட்டம் என்ன என்பன போன்ற பார்வைகளும் இப்பொருண்மை பற்றி எழ முடியும். மேலும், தமிழிலக்கியக் களனில், உறுப்பில் பிண்டம், மா, சிதடு, முடம், மருள் போன்றன கையாளப்பெற்ற நிலையும் கண்டு அணுகுதற்குரியதாகும். மேலும் இந்நூற்றாண்டு வரையிலான ஏட்டு, வாய்மொழியிலக்கியங்களிலும் இதன் பரப்பைக் காணுதல் வாய்ப்பாக அமையும். இந்நூலில் உட்படாத இப்பொருள் பற்றிய பிறசில அணுகுதல்கள் மற்றொரு நூலாக உருவாகும்.

‘தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்’ எனும் இந்நூல் தற்போது வெளியிடப்படுகின்றமை தொடர்பாக, நிறுவனத் தலைவர், ஆளுநர் குழு, இயக்குநர், மதிப்பீட்டுக்குழு ஆகியோருக்கும்; ஒளிக்கோர்வை செய்த தொழில்நுட்பவியலாளருக்கும்; அச்சகத்தாருக்கும் என் நன்றி.

அன்னிதாமசு

# உள்ளே


| | |
|---|---|
| ஊன (முற்றோ)ர் | 1 |
| ஊனம்-சொல்லும் பொருளும் | 17 |
| எச்சம் | 33 |
| உறுப்பறை | 47 |
| கூனும் குறளும் | 65 |
| ஊமும் செவிடும் | 79 |
| சமூகத்தில் ஊனர் | 95 |
| பழமொழியிலும் விடுகதையிலும் ஊனர் | 109 |
| விளையாட்டில் ஊனம் | 127 |
| ஊனச் சொற்கள் | 141 |
| நூற்றொகை | 180 |
| சொல்லகராதி | 182 |

# ஊன(முற்றோ)ர்

## அறிமுகம்

சமூகவியல் கல்விக்குரிய அடிப்படை மூலங்கள் பலவற்றுள் இலக்கியமும் ஒன்று. இலக்கியம், இருப்பதையும் இயல்வதையும் மட்டுமன்றி, வருவதையும் எதிர்பார்ப்பதையும் கூடத் தருவதால், பல்பரிமாண நோக்கில், பல கோணப் பார்வையில் சமுதாயம் இலக்கியத்தில் சித்திரிக்கப்படுகின்றது. இதனால், இயல்பியல் (real) சமுதாயம் ஒருபால் சுட்டப்படுகிறதென்றால், மறுபக்கம், குறிக்கோளியல் (ideal) சமுதாயம் அமைக்கப்படுகின்றது. ஓரிடத்து நிறைகளும் உயர்வுமுடைய சமுதாயம் விளக்கப்பட, மற்றோரிடத்து, குறைகளும் குற்றங்களும் உள்ள சமுதாயம் தீட்டப்பெறுகின்றது. கொள்கைப்பிடிப்பும் கோட்பாட்டுச் செவ்வியுமுடைய சீரிய சமுதாய ஓவியங்கள் ஒருபால் தரப்படின், மற்றொரு பகுதியில் 'நோயுற்ற', உருக்குலைந்த, நெஞ்சிழந்த, நேர்மையற்ற 'ஊனமுற்ற' சமுதாயச் சிதைவுகள் வரையப்படுகின்றன. நாடும் காடும், அவலும் மிசையும் பூமியின் நிலப்பரப்பில் மட்டுமன்றி, பூமக்களின் மனப்பரப்பிலும் அமைவது, இதனால் இலக்கியப் பதிவு பெறுகின்றது. ஊனமுற்ற சமூகம் ஒருபால் அமையினும், மனக்குறையுற்ற மக்களுடன் உடற்குறையுற்றவரும் சமுதாய உறுப்பினராயமைவது இலக்கியத்தில் புலப்படுவது இங்கு எண்ணத்தக்கது.

## அணுகல்

'ஊனம்' என உடற்குறை இன்று குறிக்கப்பட, அச்சொல் முதலாட்சி பெறும் கீழ்க்கணக்கு நூல்கள், அவ்வாறன்றி, பொதுவாக, குறை (இனியவை. *13*), குற்றம் (ஏலாதி. *32*), கேடு (ஏலாதி. *61*) எனும் பொருளில் அச்சொல்லை ஆள்கின்றன. எனினும் இலக்கியக் குறிப்புகள், பண்டைக்காலச் சமுதாயம் முதலே உடற்குறையுற்றோர் இருந்தமைக்குச் சான்று நல்குகின்றன. சமுதாயத்தில் சீர் செய்ய அல்லது ஒழிக்க (eradicate) - நீக்க இயலாப் பல்குறைபாடுகளில் இவ்வூனம் இன்றளவும் அமைவதும் சிந்திக்கத் தக்கது.

இத்தகையோரைப் பற்றி, தற்காலம் மிகுதியாகச் சிந்தனை கொள்கிறது*. இந்நிலை முன்பு உண்டா? இவர்களைச் சமுதாயம் புறக்கணித்ததா? பாதுகாத்ததா? பேணியதா? ஏற்றுக்கொண்டதா? மதித்ததா? பயன்படுத்தியதா? இவர்க்குத் தீர்வுகள் கருதியதா? இவர் பற்றிக் கவலை கொண்டதா? உடற்குறை - உறுப்புக் குறை - புலன் குறைவு - மனவளர்ச்சிக் குறை என்ற நிலைகள் கருதப்பட்டனவா? உடற்குறையுடைய பிறப்பு, உடற்குறை ஏற்படுதல் அல்லது ஏற்படுத்தல், உடற்குறை நீக்கம் என்பன குறிக்கப்படுகின்றனவா? உடற்குறையுடைய மக்கள், உடற்குறையற்றோர் என்போர்க்கிடையே ஏற்றத் தாழ்வுகள் தமிழரால் கருதப்பட்டனவா? உடற்குறை யுடையவர் எத்தகைய மனப்பான்மையினராகக் காட்டப் பெறுகின்றனர்? உடற்குறைக்கும், சமய நம்பிக்கை, மூடநம்பிக்கை, மீயியற்கையாற்றல் போன்றவற்றிற்கும் தொடர்பு கருத - கற்பிக்கப்பெற்றதா? - என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன. இந்நிலையில், தமிழ் இலக்கியத்தில் ஊனர் பற்றிய செய்திகள் என்னென்ன, எவ்வாறமைகின்றன எனக் காண்டல் தேவையாகின்றது. மொழி - நாட்டு நிலையில் மட்டுமன்றி, நிலப்பரப்பு வரையறைகளைக் கடந்தும், உலக நிலையிலும் இது நோக்கப்பட இடமும் வாய்ப்பும் உண்டு. மிகப்பரந்த நிலையில் இக்கல்வி வளரும்போது, உலக மொழியின் இலக்கியங்கள், சமூகத்தின் இவ்வுறுப்பினர்க்கு என்ன செய்துள்ளது என்பது புலப்பட வழி அமையும்.

**களங்கள்**

ஊனம் - ஊனர் பற்றிய எண்ணங்களை மிகப்பல கோணங்களில் அணுகிக் காணக்கூடும். பிறவி ஊனம், பின்பு ஏற்பட்ட ஊனம் எனக் காணலாம். விபத்தால் ஊனமுறல், தண்டனையால் ஊனம் ஏற்படுத்தப்படுதல் எனக் கருதலாம். வெளி ஊனம், உள் ஊனம் எனவும், உடல் ஊனம், உளவூனம் எனவும் பார்க்கலாம். நோயும் ஊனமும் என இணைத்து அணுகலாம். சரிப்படுத்த இயலா ஊனம், ஊனம் நீங்குதல் / நீக்கப்படல் எனவும் அமைக்கலாம். பால் ஊனம் (அலி/பேடி), அரசியலும் ஊனமும், போரும் ஊனமும், அறிவியலும் ஊனமும் (ஹிரோஷிமா/

* Year of the Handicapped ; Home for the disabled; Rehabilitation Centre for the mentally and physically retarded; Helping the Invalid; School for the Blind; Deaf and Dumb School; Polio Home; Special News Bulletin for the hearing-impaired, etc.

போபால்), கால்வழியும் ஊனமும் (heriditary) என இன்னும் பல கோணங்களிலும் காண இடம் உண்டு. ஊனமுற்றோர் உளவியலும் தனித்த பார்வைக்கு வாய்ப்புத் தரலாம். ஒருவேளை, இவற்றுள் ஒருசில பார்வைக்கே தமிழிலக்கியம் இடமளிக்கலாம்.

இலக்கியமும் ஊனமுற்றோரும் என இணைத்துக்காணும் போதும் சில குறிப்பிடத்தக்க எண்ணங்கள் வெளிப்படுகின்றன. இலக்கியத்தில் ஊனமுற்றோர் என்பதும் இலக்கியம் படைத்த ஊனர் என்பதும் கருதப்படக்கூடும். உவமையிலும், (கதைப்) பாத்திரமாகவும் ஊனர் இலக்கியத்தில் வருவதுடன், சில பழமொழிகளுக்கு அடிப்படையாகவும், 'நொண்டி நாடகம்' போன்ற இலக்கிய வகைக்கு மையமாகவும் வருவது சுட்டத்தக்கது.

ஊனம் ஒருவனைப் படைப்பாளியாக அமைவதிலிருந்து தவிர்க்கவோ படைப்பாசிரியன் ஆகுவதிலிருந்து தடுக்கவோ இல்லை என்பதைத் தமிழிலக்கியமும் காட்டுகின்றது. சங்கப்புலவர் வரிசையிலுள்ள பெயர்களான உறையூர் ஏணிச்சேரி முட மோசியார், ஐயூர் முடவனார், முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன், முடத்தாமக் கண்ணியார், முடத்திருமாறன் என்பன 'முடம்' எனும் புறவூனம் அறிவூனமாகாததைக் காட்டுகின்றன. பிற்காலத்தும் இரட்டையர் (குருடு/முடம்), அந்தகக்கவி வீரராகவ முதலியார் (குருடு), மாம்பழக் கவிச்சிங்க நாவலர் (குருடு) போன்றோர் தென்படுகின்றனர். தற்காலத்தும் எழுத்தாளர் (சூடாமணி) நிலை இதனுடன் கருதப்படலாம். ஹோமர், மில்டன் போன்று உலகக் கவிஞரிலும், சூர்தாஸ் போன்று இந்தியக் கவிஞரிலும் கண்பார்வை இன்மை - இழத்தல் ஆகிய புலன்குறை, புலமைக்குறை ஆகாமை எண்ணத்தக்கது. ஊமையும் செவிடும் போன்ற புலன் குறைவுடைய புலவர் இல்லை எனக் கூறலாம்; ஊமையாக அல்லது பேச்சின்றியிருந்த நம்மாழ்வார், குமரகுருபரர் பிற்பாடு புலமை புலப்படுத்தியமை சமய - இறை நம்பிக்கைத் தொடர்புடையன என அமைதி கூறலாம்.

**வரலாற்றூடே**

தமிழிலக்கியத்தில், தொடக்ககால நூலாகக் கிடைக்கும் தொல்காப்பியம், ஊனம் பற்றி ஓரிரு குறிப்பே தருகின்றது; அவையும் நேரடியானவையோ, வெளிப்படையானவையோ அல்ல.

சொல்லதிகாரம், 'தன்மை திரிபெயர், உறுப்பின் கிளவி' என, 'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும் அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்' (தொல். சொல். 56) எனத் தருவதைச் சேனாவரையம்,

> 'தன்மை திரிபெயர் அலி. இதனோடு ஒருபொருட்கிளவியாய் வருவனவுங் கொள்க. உறுப்பின் கிளவி குருடு முடம் என்னுந் தொடக்கத்தன'

என விளக்கும். ஊனமுற்றோர் உயர்திணையாயினும் அஃறிணைச் சொற்களாலேயே குறிப்பிடல் எனும் அடிப்படையில் முதற்குறிப்பாக இதனைக் கொள்ளலாம்.

பொருளதிகார மெய்ப்பாட்டியலில் 'உறுப்பறை' (தொல். பொருள். 254) என்பதில் இரண்டாவது குறிப்புக் கிடைக்கிறது. உறுப்பு அறுத்தல் என இது அமைகின்றது.

எச்சம் என்ற ஊனக்குறிப்பு சங்கஇலக்கியத்தில் வருகின்றது. உறையூர் முதுக்கண்ணன் சாத்தனாரின் பாடல் (புறம். 28.1-6) குறைப்பிறவிகளின் முதற்பட்டியல் வழங்குகிறது. சிதடு, உறுப்பில் பிண்டம், கூன், குறள், ஊமம், செவிடு, மா, மருள் என்பனவற்றைத் தருவதுடன் எச்சம் எட்டு, அவை சிறப்பில்லாதன, பேதைமையுடையன, பயனற்றன (ஊதியம் இல்) என்பதனையும் சுட்டுகின்றது.

இவ்வெண்பேரெச்சத்தில் முடம் சேர்க்கப்படாமை தனித்தும் சுட்டத்தக்கது. உறுப்புகள் இன்மை, உறுப்புகள் இருந்தும் அவற்றின்/உடலின் அமைப்பும் அளவும் இயல்புக்கு மாறாக அமைதல், பொறி-புலன் குறைபாடு என எச்சங்களைப் பகுத்துக் காணலாம். ஐம்புலன்களில், மூக்கு தவிர மெய்-வாய்-கண்-செவி இவற்றின் ஆற்றல் குறைபாடுகள் அமைவதும், பிற புலன்களைவிட மெய்யின் குறைபாடே - செவ்வியின்மையே பெரும்பான்மையாகி முன்னிற்பதும் காணப்படுகிறது. கண் இருந்தும் காட்சி இன்மை, வாய்(நா) இருந்தும் பேச்சு இன்மை, காது (செவி மடல்) இருந்தும் கேள்வி இன்மை என்ற நிலையில், உறுப்புக் குறைபாடு, உறுப்புகளிருந்தும் அவற்றின் செயலின்மை என்பதைக் குறிக்கிறது. இவற்றைக் கிளைப்படமாக்கித் தரலாம்:




தொல்காப்பியம், சங்க இலக்கியத்திற்குப் பின்பு தொடர்ந்த காலத்தில், திருக்குறள், 'பொறியின்மை' (குறள். 618) என ஊனத்தை உணர்த்துகின்றது. இதற்கு உரைவிளக்கம் தரும் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர் ஆகியோருக்கு** மாறாக, பரிதியார், பொறியின்மையை, 'மெய் வாய் கண் மூக்குச் செவி குறைந்தது' எனத் தருவது குறிப்பிடத்தக்கது.

முன்சுட்டிய புறநானூற்றுக் குறிப்புரையில், உ.வே.சா. அவர்கள் மேற்கோளாகத் தரும் கந்தபுராண அடிகள் ஊனம் என்ற சொற் பயன்பாட்டைப் பொருளிணைவுடன் தருவது சுட்டற்குரியது.

கூனொடு வெதிரே பங்கு குருடு பே டூமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டொழியுமம்மா

---

* மருள் என்பதை இருவகையாகக் கொள்ள இடம் உண்டு. பால் குறைபாடு என்ற எண்ணம், 'மருள் - ஆணோ பெண்ணோவென்றறியப்படாத உறுப்பு மயக்கம்' என்ற சூடாமணி உரையாலும், அறிவுக் குறைபாடு என்ற கருத்து, 'மருள் என்பது அறிவின்றியே மயங்கியிருக்குமது' என்ற புறநானூற்று உரையாலும் அமையும்.

**பரிமே: பயனைத் தருவதாகிய **விதியில்லாமை**.........
மணக்: யார்க்கும் **புண்ணியமின்மை** குற்றமாகாது.
காளிங்: பொறி இன்மை என்பது **விதிஇல்லாமை** என்றது.
திருக்குறள் - உரைவளம். பொருட்பால், (தொகு.) ச. தண்டபாணி தேசிகர், தருமபுர ஆதீனம், 1951, பக். 388-389.

காலத்தால் மிகவும் பிற்பட்ட பொருட்டொகை நிகண்டு (19-ஆம் நூ) உடற்குறை எனும் சொற்பயன்பாட்டைத் தருகிறது.

## சொற்பெருக்கு

நிகண்டுகள், எச்சம் (எட்டு) என்பதனை விளக்கும் போதும், மக்கட்பெயர்த் தொகுதிப்பட்டியல் வழங்குமிடத்தும் ஊனர் பற்றிப் பேசுகின்றன. புறநானூறு தந்த பழங்கருத்தை அடியொற்றியே இவை பெரும்பாலும் அமைகின்றன. எனினும் எவையெவை குறைப்பிறவி என்ற கருத்தில் பல நூல்களிடையே பட்டியல் வேற்றுமை அமைதலும், பட்டியல்களிலும் முன்-பின் முறை வைப்பு வேறுபட்டு அமைதலும், சொல் வேறுபாடு உள்ளமையும் தெரிகிறது. ஒரு ஊனம் பல சொற்களால் குறிக்கப்படும் பரியாயச் சொல்நிலை அமைதல், ஒருவேளை சமுதாயத்தில் இதன் பெருக்கை உணர்த்துகின்றது எனக் கருதலாம்.

முன்சுட்டிய புறநானூற்றுப் பாடல் தராதபோதும், முடம் எனும் ஊனம் சங்க இலக்கியத்தில் பிறபலவிடத்துத் தரப்படுகின்றது. மேலும், 'பேடி' என்பது அக்காலத்து அருகி, 'நன்மகிழ் பேடிப் பெண் கொண் டாடுகை கடுப்ப' (அகம். 206) என அமைய, தொடர்ந்த திருக்குறள், சிலப்பதிகாரக் களத்தில் பெருகிப் பயில்கின்றது. அலி, கீழ்க்கணக்கில் சுட்டப்பெறுகின்றது (நாலடி. 85.4). பழமொழி நானூறு,

> **மேன்மைக்கண்**
> **நோக்கற் றவரைப் பழித்தல்என் என்னானும்**
> **மூக்கற் றதற்கில் பழி** **(115)**

என்பதில் மூக்கற்ற நிலை பற்றி இருந்த எண்ணம் வெளிப்படுகிறது.

### ஊனவகை

மேற்கண்ட குறிப்புகளனைத்தையும் சேர்த்து நோக்க, ஊனம் உணர்த்தும் பொதுச் சொல்நிலை தவிரப் பல ஊனவகைகளைக் குறிக்கும் சிறப்புச் சொல் பலவும் பயில்வது தெரிகிறது. எட்டு முதல் பன்னிருவகை ஊனம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. எனினும் எட்டு (எண்பேரெச்சம்) என்ற எண்வரையறை யொழிய வேறெங்கும் வேறு எண் நிலை எல்லைப்படுத்தப்படாமை குறிப்பிடற்குரியது.

### 1. சிதடு

புறநானூறு, 'சிறப்பில் சிதடு' எனக் குறிக்க, சங்க காலத்தே சிதடன் (புறம். 73), குருடர் (ஐங். மிகை.4) என்ற பயன்பாடுகளும்

காணப்படுகின்றன. கீழ்க்கணக்கு, குருடர் (பழ. 298), குருட்டுக்கண் (பழ. 218), நோக்கற்றவர் (பழ. 115) போன்றவற்றையும்; மணிமேகலை, காணார் (13.111) என்பதையும், தேவாரம் அந்தகன் (859.4) என்பதனையும் ஆளல் தெரிகின்றது. நாமதீப நிகண்டு, 'சிதடன் அந்தன் அந்தகன் குருடனாம்' (174) என அமைக்க, பொதிகை நிகண்டு, 'குருடன் அந்தராளனுடன் சிதடனும் அந்தகன் பேர்' (78) என அமைத்து, இரு சொற்களைக் கூடுதலாகப் பெற உதவுகின்றன.

## 2. உறுப்பில் பிண்டம்

**ஊன்தடி** (புறம்.74) என்ற குறிப்பு, உறுப்பில் பிண்டத்தின் பரியாயச் சொல் ஆகலாம். இதன் பழைய உரை, 'பிண்டமென்பது மண்ணைபோல் பிறக்குமது' என்ற விளக்கம் தருகின்றது. இலக்கியங்கள் இத்தகு ஊனம் பற்றி மொழியாதபோதும், சில நிகண்டுகள் நினைக்கின்றன. உரிச்சொல் நிகண்டு, 'கொள்கையில்லா வூன் பிண்டமில்லாவுறுப்பு' (2-5) என விளக்க முயல்கின்றது.

## 3. கூன்

குறைப்பிறவியாகி, இருபாலரையும் குறிப்பிடும் கூன், கூனி எனச் சங்க இலக்கியம் (கலி.94.30) முதலும், கூன்மகள், கூன்மடமகள் எனப் பெருங்கதையிலும் (3.6.160; 3.5.97) பால் வேறுபாடு புலப்படுத்தி வருகின்றது.

உரிச்சொல் நிகண்டு, 'கோடிய கூன் பெயராகும்' எனவும், கயாதரம் 'கோணல் கூன் குஞ்சம்' எனவும், நாமதீபம் 'கூன் கோணல்' எனவும், பொதிகை நிகண்டு, 'கூன் சினகோடி கோணலாம்' எனவும் கூறுகின்றன.

இவற்றுள் குஞ்சம் என்பது சில நிகண்டுகளால் குறள் என்பதைக் குறிக்க ஆளப்படுகின்றது.

## 4. குறள்; 5. சிந்து

சீவகசிந்தாமணி (631) முதல், குறள் என்பதுடன் சிந்து என்பதும் ஊனர் பட்டியலில் இடம்பெறுகின்றது. தொல்காப்பியம் செய்யுளியலில் பிறிதொரு நோக்கில் கூன், குறள், சிந்து ஆகியவற்றைத் தந்ததன் உருவ ஒப்புமை இங்கு இணைத்து நோக்கத்தக்கது (தொல். பொருள். 355.1, 344.2, 345.1).

குறள், வாமனம், சிந்து என்பன ஒரு பொருட் சொற்களாக உரிச்சொல் நிகண்டு, கயாதரம் ஆகியவற்றால் தரப்பட, குஞ்சம் என்பதையும் நாமதீபம், பொதிகை ஆகிய நிகண்டுகள்

இணைக்கின்றன. குள்ளன் என்ற சொல் வழக்கும், கூழை என்ற பயன்பாடும் இங்குக் கருதப்படலாம்.

**6. ஊம்**

சங்க இலக்கியத்திலேயே ஊமை (மலை. 501), ஊமன் (குறு. 58.4) ஆகிய சொற்களும் ஆளப்பெற்றுள்ளன. கீழ்க்கணக்கு மூங்கை (நாலடி. 158.3) என, கம்பன் மூங்கையன் (32) எனக் கூறுகின்றான். பேசார் என மணிமேகலை (28.223) எளிமையாக ஆள்கின்றது. 'ஊமை, மூகை, மூங்கை' எனும் சொல் நிலைகள் நாமதீபம், பொதிகை நிகண்டு ஆகியவற்றில் உண்டு.

**7. செவிடு**

'செவி செவிடுபடுபு' எனப் பரிபாடல் (2.38) சுட்ட, செவியிலன் (ஏலாதி. 19), செவிடன் (நாலடி.158) எனும் வடிவங்களைக் கீழ்க்கணக்கு தருகின்றது. மணிமேகலை, கேளார் (28.222) என மொழிந்தது. ஒத்த பொருளில் 'வெதிர்' என்பது கயாதரத்தில் (104) ஆளப்பெறுகின்றது.

**8. மா**

'மா என்பது விலங்கு வடிவாகப் பிறக்குமது' என்பது புறநானூற்றுப் பழைய உரை. 'மாப்பேதம்' எனப் பாரதிதீபம் கூறும். மணிமேகலையிலும் சில நிகண்டுகளிலும் மா சுட்டுப்பெற்ற போதும் தெளிந்த விளக்கமில்லை.

**9. மருள் (பால்); 10. மருள் (அறிவு)**

சேந்தன் திவாகரம் 'உறுப்பு மருள்' எனவும் பொருட்டொகை நிகண்டு 'உறுப்பு மயக்கம்' எனவும் விரிக்கின்றன. பால் வேற்றுமை அறியலாகாமை என்ற எண்ண இணைவில், அலி, பேடி (பேடு) என்பனவற்றை இத்துடன் கருதுதல் தகும். உரிச்சொல், கயாதரம், பொதிகை ஆகிய நிகண்டுகளின் சொற்பட்டியலை நோக்க அலி, பேடி என்பன குறிக்கும் பிற சொற்களாகப் பேடு, பேடர், பெண்டகம், சண்டம், கிலீவம் (கிலிபம், கிலீபம்), நபுங்கிஷம் என்பன அமைதல் தெரிகின்றது.

அறிவுக்குறை என்ற அடிப்படையில் பேதை/பேதைமை என்பன தனித்துக் கருதுதல் தகும்.

**11. முடம்**

முடவன் (குறு. 60), முடவு, முட(ம்) எனச் சங்க இலக்கியமும், கால் முடமானோர், கால் முடப்பட்டோர் என

மணிமேகலையும் (13,28) கையாள்கின்றன. கையில் ஏற்படும் ஊனம், கைஇல் (கையில் ஊமன் - குறு. 58), பொற்கைப் பாண்டியன் கதை (சிலப்பதிகாரம்) என அருகி வெளிப்பட்டது. நிகண்டுகளிலிருந்து, முடங்கல், பங்கு, குணில், மொண்டி ஆகிய சொற்கள் கிடைக்கின்றன. நொண்டி, சப்பாணி என வழக்கில் சொற்கள் உள. கந்தபுராணம் பங்கு எனத் தந்தமை ஏற்கெனவே காட்டப்பெற்றது.

## 12. மூக்குக்குறை

முன்கண்ட 'மூக்கற்றது' என்ற இலக்கியக் குறிப்புத் தவிர, மூக்கறை என்ற வழக்குப் பயன்பாடும் தெரியவருகிறது.

## ஊனர் வாழ்வு

பல்வகை உடற்குறைபாடுடைய மக்கள் எத்தகைய வாழ்வினராக அமைந்தனர் என்பது பற்றிய சில சிறப்புக் குறிப்புகள் தமிழிலக்கியத்தில் கிடைக்கின்றன. முன் சுட்டியவண்ணம் 'சிறப்பில் சிதடு' என்பதன் அடையும், 'பேதைமை அல்லது ஊதியம் இல்' என்ற 'விதி'யும் அமைந்தபோதும், இவர் நிலையும், இவருள் சிலர் சமுதாய வாழ்வில் பயனானமையும், இவரை நன்மை தீமை போன்ற பண்புக்குறியீடாகவும் கொள்ள வைத்தது.

ஊனமுற்றோர் நிலை பரிதாபத்திற்குரியதாக, உதவியற்றதாக, திக்கற்றதாக அமைதல் ஒருபால் காட்டப்படுகின்றது. பிறவி ஊனம் சுட்டப் பெற்றது போல முதுமை - வயது முதிர்ச்சியால் ஏற்பட்ட ஊனமும் கருதப்படுகின்றது. கவிஞர், மனித ஊனத்துடன், மரம் - மா, பறவையின் ஊனத்தையும் சுட்டுவதும் சிந்தித்தற் குரியது*.

நீரும் புல்லும் ஈயாது உமணர்
யாருமில் ஒருசிறை முடத்தொடு துறந்த
வாழா வன்பகடு........ (புறம். 307.7-9)

என, உழைத்து ஊனமுற்ற விலங்கு, உழைப்பை நுகர்ந்த மனிதரால், புரக்கப்படாது கைவிடப்படுகிறது. இதற்கு வேறாக, முடமுதிர் பறவை பேடைக்கு உணவளிக்கும் பாங்கும் உண்டு.

---

* முட(வு) முதிர்பலவு (அகம். 91.16, 352.1; நற்.26.6, 354.3), முடவு முதிர் புன்னை (அகம். 10.3), முடமுதிர் மருதம் (ஐங். 31.3), முடப்பனை (புறம். 229.3), முடக்காஞ்சி (பெரும்.189), முடச்சினை வெட்சி (குறு.209.5), கவைமுடக் கள்ளி (குறு. 174.2), குறுந்தாட்கூதளி (குறு. 60.1), குறுநிலைக்குரவு (நற்.56.1), குறுங்காற் கொன்றை (ஐங்.430.1); ஊமை எண்கு (மலை.501), கூனல் எண்கு (அகம். 112.1) - இவை ஊனமாக அன்றி இயல்பு விளக்கமாக அமையலாம்.

இரைவேட்டுக்
கடுஞ்சூல் வயவொடு கானல் எய்தாது
கழனி யொழிந்த கொடுவாய்ப் பேடைக்கு
முடமுதிர் நாரை கடல்மீன் ஒய்யும் (நற். 263.4-7)

'நம் சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பான்' (கலி. 65.13) என்பது, ஊனர் புரக்கப்படவில்லை, ஒதுக்கப்பட்டனர் என்ற எண்ணத்தைத் தருகிறது.

உடற்குறையுடையவர் துறக்கப்படாது, ஏவலராகவும், உதவியாளராகவும், குறுந்தொழிலாளராகவும் கொள்ளப்பட்டுப் பயன்பெற்றமை தமிழிலக்கியக் களத்தில் பலகாலத்தும் வெளிப்படுகின்றது. இலக்கிய முதன்மை/தலைமை மாந்தராக, இணைமை/துணைமை மாந்தராகக் கூட இவர் அமையமுடிவது தெரிகிறது.

கலித்தொகை (94), கூன் குறள் ஆகியவர்க்குப் பாடல் மாந்தராகும் பாங்கினை அளிக்கின்றது. 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் கடிவரையில புறத் தென்மனார் புலவர்' (தொல். பொருள். 25) என்பதனால் அடியோராகிய கூனுங்குறளும் உறழ்ந்து கூறிக் கூடியது' எனப் பாடல் நச்சினார்க்கினியரால் விளக்கப்படுகிறது. கூனியும் குறளனுமே இப்பாடற்றலைவர்.

தமிழ்க்காப்பியங்கள் அரசு ஏவலராக உடற்குறை யுற்றோரைக் காட்டி, பயிற்சி பற்றி அதனை ஒரு மரபாகக் கொள்ளச்செய்கின்றன. இளங்கோவும் கம்பனும் பற்றிய பார்வையில் இது விளக்கம் பெற்றுள்ளது*. பாண்டிமாதேவியைச் சூழ்ந்து வந்த குறுந்தொழிலிளைஞராகக் கூன், குறள், ஊம் அமைகின்றனர் (சிலம்பு. 20.17-18); சேர அரசியுடன் சார்ந்து நின்றவராகக் கூனும் குறளும் காட்டப் பெறுகின்றனர் (சிலம்பு. 27.214-215, 28.57-60). தசரதனின் உடன் சென்ற மக்களில் தேரை போன்ற சிந்தர்** அமைய (கம்பன். 770), சீதையின் சிலதியர் குழாத்தில் சிந்து, குறள், கூன் (கம்பன். 1139) இருந்தனர். இராவணனின் மந்திராலோசனையிலும் உழையராயினர் இத்தகு பலர்

---

* பார்க்க: இளங்கோவும் கம்பனும், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 1986, சமூகவியல்-மக்கள், பக். 155-156.

** மக்களுள் திரக் குறியானைக் குறளனென்றும், அவனிற் சிறிது நெடியானைச் சிந்த னென்றும் ....கூறுப.... தொல்.செய்.40-நச்சினார்க்கினியர் உரை.

(கம்பன்.6786).* பெருங்கதை கூன்மகள் தேரோட்டியதையும் (பெருங். 3.5.98), சாமரை வீசுவதையும் (பெருங். 3.14.84) தருகிறது.

காப்பியப் பெருமகளிரில் தலைமையும் முதன்மையுமுடைய சிலருக்குத் தோழியாகக் கூனி படைக்கப்படுவதிலும் அமைப்பொருமையும் மரபுத் தொடர்ச்சியும் காணப்படுகின்றன. காலப் பழமையுடைய இந்திய இதிகாசமான இராமாயணத்தில் கைகேயியின் தோழியாக மந்தரை எனும் கூனி அமைவது இதன் தோற்றக் களனாகலாம்.

மாதவியின் மாலையை விலைபேசிய கூனி (சிலம்பு. 3.167, 171); விசையையின் தனிமையில் உதவியாக வந்த தெய்வம் அவள் தோழி சண்பகமாலை எனும் கூனியின் உருவம் கொண்டு வருதல் (சிந்தாமணி. 314); 'அயிரா பதியெனு மம்பணைத் தோளி மானேர் நோக்கிற் கூனி' எனப் பெருங்கதை தருதல் (பெருங். 4. 12. 77-78) என இது விரிகின்றது.

தம் தலைமக்கட்கு உழையராகி, அணுக்கத்தொண்டராக நெருக்கங் கொண்டமையின், அவரிடம் இவர் பெற்ற செல்வாக்கு,

> விறற் புகழ் மன்னர்க்கு உயிரன்ன ரேனும்
> புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன் (பழமொழி. 275.4)

என்ற கீழ்க்கணக்குக் கருத்தை உருவாக்கியது எனலாம்.

**ஊனக்குறியீடு**

குறியீடாக ஊனம் அமைவதில் இரு தன்மை புலப்படுகின்றது. ஒன்று, ஊனம், அதன் தன்மை பற்றிக் குறை நிலை சுட்டப்பயன்படுதல். இது நேர்பொருள் நிலை (positive) ஆகலாம். மற்றொன்று, சில சூழலில் ஊனநிலை, சிறப்புடையது போன்ற தோற்றத்துடன் சுட்டப்பெற்று எதிர்நிலை (negative) புலப்படுத்துதல். இவற்றுள் முன்னது, உருவ அருவப் பொருள்நிலையில் பயன்பட்டு மேலும் பகுப்புக் காட்டுகின்றது.

சங்க இலக்கியம் ஊனரை உவமையில் ஆளும்போது, தமக்கும் பிறருக்கும் உதவ இயலா நிலையில் அவரைக் காட்டுகின்றது.

---

* உணர்வு இல் நெஞ்சினர் ஊமர் உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர் பொறிஇலர்
கொணரும் கூனர் குறளர் கொழுஞ்சுடர்
துணரும் நல்விளக்கு ஏந்தினர் சுற்றினார்
- கம்பராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1976.

பெருந்தேன் கண்ட இருங்கான் முடவன் (குறு. 60), துஞ்சு புலி இடறிய சிதடன் (புறம். 73), ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின் வெண்ணெய் உணங்கலைக் கண்ணிற் காக்க முயலும் கையில் ஊமன் (குறு. 58),

> கூவற் குராலான் படுதுயர் இரவிற் கண்ட
> உயர்திணை ஊமன்.......(குறு. **224**)
> மாரி இரவின் மரங்கவிழ் பொழுதின்
> ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஒராங்குக்
> கண்ணில் ஊமன் கடற்பட் டாங்கு....... (புறம். **238**)

என ஒரு ஊன, இரு ஊன நிலைகள் அமைகின்றன. இயல்பான மனிதருக்குரிய செயற்பாடு இவரிடம் குறைபடுவதுடன் தனக்கோ பிறருக்கோ தேவை ஏற்படும்போது உதவிக்கு யாரையும் அழைக்க இயலாமையும் வெளிப்படுகிறது.

உருவநிலையின் இவ்வூனமே, அருவநிலைப் பொருண்மைக்கும் அடிப்படை வழங்குகிறது. 'குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி, குருடும் குருடும் குழிவிழுந்த வாறே' எனத் திருமந்திரம் (1680) கூறுவது விவிலியத்திலும் உண்டு:

> அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியில் விழுவார்களே (மத்தேயு. **15.14**)

'ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்' என பாரதி (தமிழ்.2) கூறுவதும் இத்தகையது. எந்த உடல் ஊனமுமில்லாத மனிதன், செவ்விய சிந்தனை இன்மை - உண்மை உணர்ந்துகொள்ளாமை, சரியான செயல்திறன் குன்றியிருத்தல் ஆகிய நிலையினால் இவ்வாறு 'ஊனனாகக்' காட்டப்படுகிறான்.

விவிலியமும்,

> காதாரக் கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக் கண்டும் அறியாதிருப்பீர்கள். இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும் காதுகளினால் கேளாமலும் இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும்.... காதால் மந்தமாய்க் கேட்டு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் (மத்தேயு. **13,14-15**)

எனக் கூறுவது இங்கு இணைத்துக் காணத்தக்கது.

சில சூழல்களில் ஊனம் போன்ற அல்லது ஊனன் போலத் தம்மை அமைத்துக் கொள்ளும் நிலை சிறப்புடையது போலும் எனும்

எண்ணம் கீழ்க்கணக்கில் வெளிப்படுகின்றது. பிறருடைய மறை பொருளில் - இரகசியத்தைக் கேட்கும் நிலை ஏற்பட்டால், செவிடாக அமைய வேண்டும். புறங்கூறாது, தீச்சொல் பேசாதமைவதற்காக ஊமையாக மாற வேண்டும். தொடர்பற்றவரைப் பொறுத்தவரை, கண்டுகொள்ளாக் குருடராய் அமைதல் வேண்டும். இது நாலடியார் கருத்து.

பிறர் மறையின்கட் செவிடராய்த் திறனறிந்
தேதிலாரிற்கட் குருடனாய்த் திய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு (நாலடி. **158**)

ஒத்த எண்ணம் ஏலாதியிலும் காணப்படுகிறது.

சொல்லும் மறையிற் செவியிலன்
தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை (ஏலாதி. **19**)

இப்பகுதிகள், காந்தியடிகள் எடுத்துக்காட்டிய 'மூன்று குரங்குகளை' ஒரு வழியில் நினைவூட்டுகின்றன.

**ஊனர் பாதுகாப்பும் ஊன நீக்கமும்**

ஊனர் பாதுகாக்கப்படல் - புரக்கப்படல் எனும் சமூக நோக்கும் ஊனம் ஒழிக்கப்படல் எனும் எதிர்பார்ப்பும் இயல்பானவை யாகும்.

காப்பியக் களன், மணிமேகலையும் ஆபுத்திரனும் உணவூட்டிப்புரந்தவர் பட்டியலில் ஊனரையும் உட்படுத்துகின்றது.

காணார் கேளார் கால்முடப்பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி (மணி. **13.111-113**)

காணார் கேளார் கான்முட மானோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர் (மணி. **28.222-223**)

ஊனமுற்றோர் உணவளித்துப் பாதுகாக்கப்பட்டுப் புரக்கப்படும் சாத்தனாரின் இக்காட்சிக்கு வேறாக, ஊன நீக்கத்திற்குரிய வாய்ப்பான அமைப்பொன்றை இளங்கோவடிகள் தருகின்றார். ஐவகை மன்றங்களுளொன்றான இலஞ்சி மன்றம் மீயியல் சார்பின் ஊன நீக்கும் வழியாக அமைக்கப்பெறுகின்றது. ஊனரும் தொழுநோயினரும் முழுகியெழ நல்லுடல் பெறுவர் (சிலம்பு. **5.118-121**). மீயியலும் இறைமையுமே ஊனம் நீக்க முடியும் என்ற

சமயச்சார்புக் கருத்தின் அடித்தளம் இங்கு இணைகிறது. விவிலியமும் இயேசுவினிடத்தில் இதனை இணைக்கிறது.*

> குருடர் பார்வையடைகிறார்கள்; சப்பாணிகள் நடக்கிறார்கள்;
> குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்; செவிடர் கேட்கிறார்கள்;
> மரித்தோர் எழுந்திருக்கிறார்கள் (மத்தேயு. 11.5)

மணிமேகலைக் காப்பியம், புத்தர் தோன்றும் காலத்தை, இந்த ஊனங்கள் தோன்றாக் காலமாகச் சுட்டி (மணி. 12-86-98) எதிர்கால நம்பிக்கை காட்டுகின்றது.

**ஊனப்படுதல்**

பிறவி ஊனத்தின் வேறாக, பின்பு ஏற்படும்- ஏற்படுத்தப்பெறும் ஊனம் பற்றிய கருத்தும் தமிழிலக்கியத்தில் உண்டு. வெகுளிக்குக் காரணமாகத் தொல்காப்பியம் தந்த 'உறுப்பறை'யை இதற்குச் சான்றாக்கலாம். ஊனமுறுவித்தல் தண்டனையாக அமைதல் சங்க காலம் முதலே காணக் கிடைக்கின்றது. தண்டனையாகக் கண்பிடுங்கப்பட்டமை பரணர் பாடலில் இருமுறை வந்தது (அகம். 196.8-11; 262.1-6). அன்னி மிஞிலியின் தந்தையை, அவர் ஆ தம் புனத்துப் புக்கது பற்றிக் கோசர் இவ்வாறு துன்புறுத்த, திதியனின் உதவியுடன் கோசரைப் புறங்கண்டு அவள் பழிவாங்கியது இப்பாடல்களில் உவமையாகப் பொருந்துகின்றது.

பொற்கைப் பாண்டியனின் கதை, கை குறைக்கப்பட்டதைத் தரும் (சிலம்பு. 23.42-52). நொண்டி நாடகம், கள்ளனின் மாறுகை மாறுகால் வாங்கப்படலை இன்றியமையாக் கூறாக்கும். அயோமுகியையும் சூர்ப்பணகையையும் இலக்குவன் உறுப்புக்குறை செய்வதும், தூது வந்த அனுமனின் வாலை வெட்டும்படி இலங்கையர்கோன் பணிப்பதும் இராமாயணக் காட்சிகளாம்.

மனிதன் அளிக்கும் தண்டனையாக ஊனம் அமைவதுடன், இறைச் சினம் காரணமாகவும் ஊனமுறுதல் எனும் புராண

---

* 'அப்பொழுது சப்பாணிகள் குருடர் ஊமையர் ஊனர் முதலிய அநேகரை திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து அவர்களை அவர் பாதத்தில் வைத்தார்கள். அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். ஊமையர் பேசுகிறதையும், ஊனர் சொஸ்தமடைகிறதையும் சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும் ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலின் தேவனை மகிமைப்படுத்தினார்கள்' (மத்தேயு 15.30-31) என்பதில் சமயமும் இறையும் உறுப்புக்குறை நீக்கத்தில் இணைந்து வரல் புலப்படுகின்றது. நம்பிக்கைவயப்பட்ட மீட்சியாக இது புலப்படுகின்றது.

நம்பிக்கைச் சார்பும் உண்டு. கர்ண பரம்பரைக் கதைகளும் இதனைத் தரக்கூடும். கம்ஹாசுரனை தேவி ஊமையாக்கினாள் என்பதும்,* திருமால் சாபத்தால் தேவர் கண்ணிழந்தனர் என்பதும்** சான்றாக்கப்படலாம்.

## ஊனப் பயன்பாடு

உடற்குறையுடைமை வாழ்வியலில் பல்நிலையில் கையாளப்படலும் பயன் கொள்ளப்படலும் அந்நிலை வெறுக்கப்படவோ ஒதுக்கப்படவோ இல்லை எனும் எண்ணம் தருகின்றது.

திருமாலில் 'வாமன' அவதாரம் பொருந்தி, 'நெடியோன் குறளுருவாகி' என மணிமேகலை முதலாகச் (19.51) சுட்டப்படுகின்றது. கலித்தொகை, கூனி-குறளன் உருவ வருணனை அளிப்பதன் தொடர்ச்சிபோல், பெருங்கதை அயிராபதி எனும் கூனியைப் பன்முறை வருணிக்கின்றது (பெருங். 3.6.157-160; 3.8.51-55; 4.12.77-78).

> **கையினாற் சொலக் கண்களிற் கேட்டிடும்**
> **மொய்கொள் சிந்தையின் மூங்கையும் ஆயினேன்**
> **(சிந்தாமணி. 997)**

என்பது போன்று, இலக்கியத்தில், உணர்வு வெளியீட்டிற்கு, ஊனரின் புலன் செயல் மாற்றம் உதவுகின்றது.

வாழ்வியலில் நாளும் வழங்கும் பழமொழிகள் எல்லா மொழிகளிலும் ஊனர் செய்திகளைக் காட்டக் கூடும் என்பது தாய் மிதித்து ஆகா முடம் (பழ. 353), குருட்டுக்கண் துஞ்சிலென் துஞ்சாக்கால் என் (பழ. 218), குள்ளன் குடிகெடுப்பான், நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு*** போன்று பெருகி வரும்.

---

* 'கம்ஹாசுரனவன்.....உயர் தவம் ஆற்றி, ஓங்கிய வரம்பெற முயலுகையில், வாயது பேசி வரமது கேட்கும் வாய்ப்பெதும் இல்லா வகையினிலே தியவன் அவனை ஊமையன் ஆக்கித் தேய்த்தனையே மூகாம்பிகையே' - எழிற்பதி கொல்லூர் இருப்பவளே, சௌந்திரா கைலாசம், கலைமகள், ஏப்ரல் 1987, ப.8.

** ஆழ்வார் திருநகரி தொடர்பான இச்செவிவழிக் கதை பற்றிய செய்தி வழங்கியவர் நிறுவன ஆய்வாளர் வி. அழகர்ராமானுஜம்.

**** பார்க்க: கழகப் பழமொழி அகர வரிசை, 1970; இந்நூலின் இயல்: 'பழமொழியிலும் விடுகதையிலும் ஊனர்'.

விடுகதையிலும் ஊனர் வரலாம். குழந்தை விளையாட்டிலும்* கண்ணாமூச்சி, நொண்டி, ஊமை விளையாட்டு எனப் பல உள.

மொழியாக்கத்திலும் ஊனம் தொடர்பான சொற்கள் அமைந்து, பருப்பொருளைச் சுட்டியும் நுண்பொருளை விளக்கியும் வருதல் அகராதிகளை நோக்கப் பரவலாகத் தென்படுகின்றது. ஊமைக்காயம், குருட்டாட்டம், குருட்டுத்தனம், குருட்டுத் தீர்ப்பு, குருட்டு யோகம், குருட்டுவழி.......என இது விரியும்.**

சமூகவியலில் ஊனர் பற்றிய கல்வியும் தேவையானது என்ற கருத்து மேற்கண்ட செய்திகளை நோக்க ஏற்படுகின்றது. பரந்துபட்ட பார்வையின் இச்செய்திகள், ஆழப்பார்வையாலும், இன்னும் பல தரவுகளின் சேர்க்கையாலும் நூலாக விரியும் இயல்புடையன. தொடர்ந்து வரும் இயல்களில் ஒருசில பார்வைகள் கணிக்கப்பெறுகின்றன.

தமிழிலக்கிய அளவு என நின்றுவிடக்கூடியதல்ல இப்பொருண்மை. இந்திய, உலக அளவிலும் பல்வகையான உண்மைகள் நிரல்படக் கூடும். பாரதம் காட்டும் மன்னன் கண்ணற்ற திருதராட்டிரன், அதற்காகத் தன் கண்ணைக் கட்டிக்கொண்ட மனைவி காந்தாரி, கண்கட்டப்பெற்ற நிலையில்காட்சிப்படுத்தபெறும் நீதி தேவதை, சித்திரக்குள்ளன் கதை, ஏழு குள்ளர் பற்றிய தேவதைக் கதை, நாட்ரெடெமின் கூனன் (Hunch back of Notredem), நொண்டி நாடகம் எனப் பாத்திர, கதை, குறியீட்டு நிலைகள் பற்றிய மிகப்பல தரவுகளும் கருதப்பெறும்போது, சமூகத்தின் ஒரு சிறு கூறு, எவ்வாறு பல்பரிமாணம் காட்ட முடியும் என்பது உலகளாவிய நிலையிலும் புலனாகும்.

---

* பார்க்க: தமிழர் நாட்டு விளையாட்டுகள், இரா. பாலசுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980; இந்நூலின் இயல்: 'விளையாட்டில் ஊனம்'.

** பார்க்க: தமிழ் லெக்சின், தொகுதிகள்; இந்நூலின் பின்னிணைப்பு.

# ஊனம் - சொல்லும் பொருளும்

## ஊனம்

ஊனம் என்ற சொல், குறைவு, குற்றம், பழி, தீமை, அழிவு, பிணம், ஆந்தை எனும் ஏழு பொருள் தருவதாகத் தமிழ் லெக்சிகன் வழி அறிய முடிகிறது.

ஊனில் அல்லது உடலில் ஏற்படும் (உறுப்புக்) குறைவு அல்லது அழிவு 'ஊனம்' என்பதால் பெறப்படுகிறது.

வான் - வானம், கான் - கானம், உலகு - உலகம், நீல் - நீலம் என்பன போல ஊன் - ஊனம் எனும் சொற்களும் ஒரே பொருளில் ஆளப்படுவது வாய்ப்பாகலாம். 'உடலிலுள்ள கண்' - (physical) என்ற நிலையில் 'ஊனக்கண்' (ஊன்+(அ)+கண்) எனக் கொள்வதும், அது 'ஞானக்கண்'ணை நோக்கக் குறைவு உடையது என்ற பொருளில் 'ஊனக்கண்' (ஊனம்+கண்) எனக் கொள்வதும் இதற்குச் சான்றாகும்.

மேலும், கூன்+அன் = கூனன் என்பது கூன் உடையவன் என விளக்கம் பெறுவது போல ஊன் + அன் = ஊனன் என்பது ஊன்/ஊனம் உடையவன் என்று விளக்கம் தருவதால், இவ்வெண்ணம் வலுப்பெறும்.

தசை/சதை எனப் பொருள்படும் ஊ/ஊன் என்பது தமிழில் மட்டுமன்றிப் பிற பல திராவிட மொழிகளிலும் பொருளொருமை காட்டும் அடிச்சொல்லாக விளங்குவதை மொழியாய்வறிஞர் வெளிப்படுத்துவர் (பார்க்க:DED). இவ் அடிச்சொல்லிலிருந்து உடல்/ உடம்பு எனும் பொருள் எழுகின்றது. இந்நிலையில் அதனுடன், 'அம்' என்னும் பெயரொட்டு இணைய, 'குறையுற்ற உடம்பு' எனும் பொருண்மை உருவாவது மிகப் புதுமையானமையால் மேற்கண்டவாறு, ஊன் எனும் சொல்லிலேயே ஊனம் எனும் பொருண்மை தேரப்படுதல் தேவைப்படுகிறது.

## ஊனச் சொல் வரவு

'ஊனம்' எனும் சொல்லின் முதல்வரவைத் தரும் பதிற்றுப்பத்து இச்சொல்லை இப்பொருளில் ஆளவில்லை. 'இறைச்சி கொத்தும் பட்டடை மரம்' எனப் பொருள்படும் 'ஊனமர் குறடு' என்பதைச் சுட்டுமாறு 'ஊனத்து' (பதிற். 21-10) என ஆளப்பெற்றது.

'மாமிசம் கொத்துவதால் வடுப்பெற்ற கட்டை போல, தசை/உறுப்பு சதைந்து, சிதைந்து உடல் அமைவது ஊனம்', என, ஒப்புமையடிப்படையின் ஆகுபெயர் எனவும் இதனை நினைக்கலாம்.

'ஊனமர் குறடு' எனும் தொடக்கப் பொருண்மைக்குப் பின்பு, கீழ்க்கணக்கு நூல்களில் 'ஊனம்' என்பது ஆளப்பட்டபோதும், அங்கும் இன்றைய பொருளிலன்றி, குறை (இனியவை. 13), குற்றம் (ஏலாதி. 32), கேடு (ஏலாதி. 61) எனும் பொருண்மையிலேயே ஆளப்பெற்றமை கண்கூடு. எனவே, பொதுநிலையில் குறை, கேடு என்பனவற்றைக் குறிக்க வந்த சொல், மிகப் பிற்காலத்து மட்டுமே உடற்குறையை உணர்த்த வந்தது. கந்தபுராணம் (கி.பி. 14ஆம் நூ.) இச்சொல்லாட்சியை அமைத்ததை உ.வே.சா. அவர்களின் புறநானூற்றுக் குறிப்புரை (புறம். 28) மேற்கோளால் தெரியமுடிவது ஏற்கெனவே சுட்டப்பெற்றது.*

**ஊனச் சொற்கள்**

ஊனம் எனும் சொற்-பொருட் பயன்பாடு ஏற்படும் முன்பும் உடல் ஊனம் வேறு சொற்களால் புலப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

தொல்காப்பியம், பொருளதிகார மெய்ப்பாட்டியலில், சினச்சுவை பற்றிப் பேசும்போது, 'ஊனம் செய்தல்' என்ற பொருளில் 'உறுப்பறை' (உறுப்பு+அறுத்தல்) என்ற சொல்லைக் கையாண்டது (தொல்.பொருள். 254).**

புறநானூறு, பிறவியூனம் (Congenital deformity)என்ற கருத்தில் எச்சம் என்ற சொல்லைக் கையாள்கிறது (புறம்.28). சிதடு முதலிய எட்டு எச்சம் என்ற இதன் பட்டியல் நிலை தனித்தன்மையுடையது. தமிழ் லெக்சிகனின் படி, எச்சமெனும் இச்சொல் 13 பொருண்மைகளைப் பெற்றிருந்தாலும், வேறு பொருளில் தொல்காப்பியம் முதலே ஆட்சி பெற்றிருந்தாலும், இங்குப் புறநானூற்றில்தான் முதலில் இப்பொருட் பயன்பாட்டில் நிறுவப்படுகின்றது. மேலும், பிற்காலத்தில், திவாகரம் முதலான நிகண்டுகள் பலவும் புறநானூற்றுக் கருத்தை அடியொற்றி 'எண்பேரெச்சம்' பற்றிய பட்டியல்களை வழங்குகின்றன. சங்க இலக்கியத்தில், புறநானூறு தவிர, கலித்தொகை, 'முரி' என்ற சொல்லைப் புதிதாகத் தந்து, உறுப்புக் குறை என்ற பொருளைப் புலப்படுத்துகின்றது.

---

* 'கூனொடு வெதிரே பங்கு குருடு பேடுமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டொழியுமம்மா'.

** உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

**போ சித்தை மக்கள் முரியே நீ (கலி. 94.22)**

சங்க கால இலக்கியங்களை அண்மியமையும் பதினெண் கீழ்க்கணக்கு நூற்றொகுப்பில் இடம்பெறுகின்ற திருக்குறள், ஊனங்குறிக்க ஈரிடங்களில் இருவகைச் சொற்பயன்பாடு தருகின்றது.

**கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை (குறள். 9)**

என்பதில் 'கோளில் பொறி' எனப் புலன் குறைபாடு (defective sense perception) ஆகிய ஊனம் சுட்டப்பெறுகின்றது. மேலும்,

**பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்த**
**ஆள்வினை இன்மை பழி (618)**

என்ற குறளில், பொறியின்மை என்பது (deformity), உடல் ஊனத்தை (handicap), அறிவூனத்தை (mental retardation) இணைத்து உணர்த்த முயல்வதாகத் தெரிகிறது. இவ்வள்ளுவத் தொடர்கள், இவ்வாய்வுக்குட்பட்ட இலக்கிய-இலக்கணக் கள எல்லைக்குள் மீண்டும் பயன்பட்டதாகத் தெரியவில்லை. எனினும், பொறியறை, பொறியிலி என்னும் சொற்பயன்பாடுகள் தொடர்ந்த காலத்தில் அறியப்பெறுகின்றன (தமிழ் லெக்சிகன், 5, ப.2946).

பொறியறை - பொறியிலி (தொல்.சொல்.7.நச்.உரை: 'செறற் சொல் - செறுதலைப் புலப்படுக்கும் 'பொறியறை கெழீஇயிலி' அது பொய்ச்சீத்தை என்றாற் போல்வது')
- 14ஆம் நூ.

பொறியிலி - உறுப்புக் குறையுடையவன் (பிரபுலிங்.துதிகதி.1: 'பூவாய் நெடுங்கோட்டுறு பசுந்தேன் கைகால் முடங்கி பொறியிலி தன்......')
- 17ஆம் நூ.

பொதிகை நிகண்டு (18-ஆம் நூ.) பொறியிலர் (80) என்பதையும், கயாதரம் (கி.பி. 1450) பொறியற்றவர் (105) என்பதையும், பொருட்டொகை நிகண்டு (19-ஆம் நூ.) உடற்குறை (672) எனும் சொல்லையும் கையாண்டன. அரும் பொருள் விளக்க நிகண்டு (19-ஆம் நூ.), ஊகம் எனும் சொல்லின் பொருளில் 'உடற்குறை' என்பதைச் சேர்த்துள்ளது (56). உடற்குறை எனும் இச்சொல்லுக்குக் கவந்தம் எனும் பொருளைத் தமிழ் லெக்சிகன் தருவது இதனை

வேறுபடுத்துகின்றது. குறையுடல் என்பதற்கும் தலையில்லாத உடல் என்ற பொருளே காணப்படுகிறது.

இந்நூற்றாண்டின் சிறந்த சொற்களஞ்சியங்களுள் ஒன்றான இத்தமிழ் லெக்சிகன், வழக்கு, இலக்கிய/இலக்கணப் பயன்பாட்டிலிருந்து ஊனம் குறிக்கும் இன்னும் சில பொதுச் சொற்களையும் திரட்டித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை, பிறமொழித் தாக்கம், பேச்சுமொழிச் சார்பு ஆகியனவற்றைக் காட்டுவதுடன், ஊனம் இழிக்கப்பெற்றதையும் உணர்த்துகின்றன.

அகுணி, அங்ககீனம், அங்கவீனன், அரிட்டம், உறுப்பணங் கெட்டவன், உறுப்பற்றவன், உறுப்புக்குறை, உறுப்புக்கேடு, ஊத்தையட்டுதல், ஒச்சம், ஒறுத்தல், குற்றம், சரீரப்பழுது, சின்னப்படுதல், சொத்தி, சொத்தை, சொஸ்தி, மட்டை, முண்டம், மூளி, மெய்க்குற்றம், விகலன், விங்களம், வியங்கம் என்று 24 சொற்களுடன் இப்பட்டியல் நீண்டு அமைகின்றது. திட்டுதலாக அல்லது இழித்துக் கூறுவதாக (கெட்ட வார்த்தை) இவற்றுள் சில கையாளப்பெறுகின்ற வசை மொழி நிலை தனித்துக் கருதத் தக்கது (சான்று, முண்டம், மூளி).

**ஊனம் - அஃறிணை நிலை**

ஊனம் குறிக்கும் சொற்கள் பெரும்பாலும் அஃறிணை அமைப்பிலும் (குருடு), சிறுபான்மை மட்டும் உயர்திணை ஆண் (குருடன்) அல்லது பெண் (குருடி) என்ற பால்வேறுபாடு காட்டியும் அமைதல் தென்படுகின்றது. முழு மனிதனிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் நோக்கில் இச்சொற்பயன்பாடு அமைதல் கவனிக்கத்தக்கது.

ஊனச் சொற்களால் விலங்கு, தாவர ஊனத்தையும் குறிக்கும் பொதுமையும் இவ்வஃறிணை நோக்கில் கருதத் தக்கது. முடமுதிர் நாரை (நற். 263), முடவு முதிர் புன்னை (அகம். 10), ஊமை எண்கு (மலை. 501), கூனல் எண்கு (அகம். 42) எனவரும் இவை இயல்பு விளக்கமாகவும் அமையலாம்.

ஊனம் இழித்து மொழியப்படுகிறது, குறைத்து மதிப்பிடப் படுகிறது என்ற நிலையில் அஃறிணைப் பயன்பாடு அமைகிறது என்ற அடிப்படையில் கருதினாலும், பண்பு/குணம் குறிக்கும் நிலையில் பிற எல்லாப் பண்புச் சொற்களும் போன்ற முடிவே பெறும் எனும் மொழிமரபு நிலையும் கொள்ளப்படல் ஏற்புடையதாகலாம் (பொருத்திக் காண்க - தொல் - சொல். 56).

**ஊனவகை - சொற்கள்**

தமிழ் லெக்சிகன் சுமார் 1068 சொற்களைப் பல்வகையான ஊனம் தொடர்பாகத் திரட்ட வாய்ப்புத் தருகின்றது.* முன் சுட்டிய 24 ஊனப் பொதுச்சொல் தவிர பிற, குறிப்பிட்ட ஊனச் சார்பு காட்டுகின்றன. இச்சொற் பெருக்கு, ஒரு பொருட் பலசொற் பெருக்குக் காட்டுவதுடன், ஊன மிகுதி அல்லது ஊனர் மிகுதியைக் காட்டக் கூடுமா என்பது தனியாய்வுக்குரியது. அன்றியும் புறநானூறு முதல் சுட்டப்படும் 'மருள்' என்பதன் ஒரு பொருளான அறிவுக்குறைவு/ மன-உள ஆற்றல் குறைவு (mental deficiency/ below normal IQ) சுட்டும் சொற்கள் பெரும்பான்மை காட்டுவதும் சிந்தனைக்குரியது**. உளநோயாளிகளின் எண்ணிக்கை மிகுதியன்றி, அந்தப் பிரச்சினையின் ஆழமும் அழுத்த மிகுதியும் கூட இச் சொல் மிகுதிக்குக் காரணமாகலாம். குடி - போதை போன்றவற்றாலோ பிற பல சூழலாலோ ஏற்படும் தற்காலிக அறிவுக் குறைவு, மற்றும் தொடர்ந்தும் நீங்காதுமிருக்கின்ற மிகு (acute/chronic) புத்தி பேதலிப்பு என்ற தன்மை, மற்றும் இதன் பல் வகையான நிலைகள் (stages) என்பது பற்றியும் சொல்மிகுதி அமையக்கூடும் எனக் கருதலாம்.

ஆறாவது அறிவு, ஆறாவது புலன் எனச் சிறப்பித்து வேறுபடுத்திக் காட்டத் தக்க அறிவின் குறைவு, வெறும் ஊனமாக மட்டுமன்றி, நோயாகவும் கருதிப் பார்க்கப்படல், பிற உறுப்பு ஊனத்திலிருந்து ஓரளவு வேறுபடுத்திக் காட்டத் தக்கது. மூப்பு, நோய் மற்றும் பிற பல காரணங்களால் மெய், வாய், மூக்கு, கண், செவி ஆகிய மற்ற ஐந்து புலன்களும் ஊனப்படுதல் உண்டு எனினும் அவை ஊனமாகக் கருதப்படுமளவிற்கு நோயாக/பிணியாகக் கருதப்படுவதில்லை.

பொறியும் புலனும் என இணைத்துக் காணும்போது, கண் செவி ஆகியவற்றில் பொறியாக உறுப்பு இருந்தும், புலனாகிய காட்சி, கேள்வி என்பன இல்லாத நிலை காணப்படலாம். மூக்கு இன்மை அல்லது சிதைவு பேச்சுப்புலனைப் பாதிப்பதால் வாயுடன் இணைத்துக் காணத்தக்கது. உதடு, பல், நா எனப் பல நிலைகள் வாய் ஊனத்தில் அமைவது அதனை வேறுபடுத்தும். மேலும் மெய்யின் குறைபாடு, அளவுக் குறையால் குறளையும், அமைப்புச் செவ்வியின்மையால் கூனையும், கை கால் முதலிய எலும்பமைவின்

---

* இந்நூலின் இறுதியில் அமையும் 'ஊனச் சொற்கள்' என்ற சொல் வரிசை காண்க.

** சுமார் 280 சொற்கள். பார்க்க இவ்வியல் இணைப்பு-பட்டியல் 1.

(orthopaedic defect) குறைவால் கை முடம் கால்முடம் ஆகியவற்றையும், உறுப்பு இன்மையால் உறுப்பில் பிண்டத்தையும், உரிய வேறுபாடு இன்மையால் பால்மயக்கத்தையும் உட்கொண்டு பரப்புக் கொள்கின்றது.

இவை தொடர்பான சொல்லாட்சிகளும் மையக் குறைபாட்டையும் அதன் சார்நிலைகளையும் குறைவின் சிற்றெல்லை முதல் பேரெல்லைவரையுள்ள சிலபல படிநிலைகளையும் குறித்து வருவது தெரிகிறது.

**கண்**

சுமார் 75 சொற்களுடன் இப்பொறி/புலன் குறைவு, மன/அறிவுக்குறைவுக்கு அடுத்த இடத்தைச் சொல்நிலையில் கொள்கின்றது. (முடம் தொடர்பாகவும் சுமார் 75 சொற்கள் திரட்ட முடிகின்றது).

சிதடு என்பது பழைய வழக்காக அமைந்த போதும் (புறம். 28), அச்சொல்லை வழக்கிழக்கச் செய்யுமளவிற்கு, அந்தம், கண்ணறை, கபோதி, காபோதி, குருடு, கொத்தை, நுளை, நொள்ளை, பூஞ்சல், பொட்டை, மகுடம், மைம்மைப்பு, வாக்கி போன்ற வழக்குகள் தென்படுகின்றன. அந்தகன், அந்தன், அந்தராளன், ஆதன், குருடன், சாத்யந்தன், சிதடன், தர்ப்பணானனன், பொட்டையன் போன்று பால் வேறுபாடு காட்டும் சொற்களும்; பொறி/புலன் குறைவை வெளிப்படையாகத் தரும் கண்ணறையன், கண்ணிலன், கண்ணிலி, கண் தெரியாதவன், காணார், குருட்டுக்கண், நொள்ளைக்கண், நோக்கற்றவர், பார்வைக்குறை, பார்வையிலி, மண்டைக்கண், மரக்கண், வாக்குக்கண்ணன், விழிக்கண்குருடு போன்ற சொற்களும், கண் அமைப்பின் குறைபாடு பற்றி ஏகாட்சி, ஒற்றைக்கண்ணன், ஒன்றரைக்கண்ணன், கருடப்பார்வை, காக்கைக் கண்ணன், கோணப்பார்வை, சுக்கிரக்கண்ணன், சுக்கிராச்சாரி, சோங்கண் ஆகிய சொற்களும், சோர்வு, நோய் அல்லது முதுமை காரணமாகத் தோன்றும் பார்வைக் குறைவைப் பற்றியதான கண்டுயில்(லு)தல், கண்பஞ்சடைதல், கண்புகைச்சல், கண்பொறி தட்டுதல், கண் பொன்றுதல், கண் மயங்குதல், கண் மங்குலம், பூவெட்டுதல், பூச்சி வெட்டுதல், பூஞ்சல், பூஞ்சலாடுதல், பூஞ்சற்கண், பூத்துப்போதல், மாலைக்கண், வெள்ளெழுத்து ஆகிய சொற்களும் காணப் படுகின்றன.

இச்சொற்களுள், குறிப்பாக, சிதடு, நொள்ளை போன்றவற்றை மொழியியல் அடிப்படையில் மூலச்சொல்லாய்வுக்கு உட்படுத்தினால், ஊனம் பற்றிய இன்னும் சில தெளிவுகளைப் பெற முடியலாம்.

## செவி/காது

சுமார் 35 சொற்கள் செவி/கேள்வி ஊனம் தொடர்பாக அமைகின்றன. காதறை, காதிலி, கேளார், செவி மந்தம், செவியறை, செவியிலன், செவியிலி, மரச்செவி, மூளிக்காது, வன்செவி என உறுப்புப் - புலன் பெயருடன் வருவன உள. செவிடு, செகுடு என்ற வடிவங்களும் செவிடன், செவிடி எனப் பால் வேறுபாடு காட்டும் நிலைகளும் உண்டு. அகன்னம், ஏடன், கல்லம், செவணை, டமாரன், தோட்டந்தூரம், பதிரன், பாதிரியம், வதிர், வதியர், வதிரன், வெதிர் எனப் பிறமொழிச் சார்பும் வழக்கு நிலையும் காட்டுவன அமைகின்றன. செவிமடல் சிதைதல் காதறுதல், கூதை செய்தல் என்பதிலும், நோய்பற்றிக் கேள்வி பாதிக்கப்படுதல் காதடைத்தல், காதுமந்தம், காதெழுச்சி, செவிடுபடு வாதம், செவிமத்திபம், செவிமந்தம் ஆகியவற்றிலும் வெளிப்படுகின்றன.

## மூக்கும் வாயும்

மூக்கு, காற்றை உள்வாங்கி வெளிவிட்டு சுவாசிப்பதற்கும், அதன் புற உறுப்பின் நுகர்ச்சி மொட்டுகள் நல்-தீ நாற்ற நுகர்வுக்கும் உதவுகின்றன. மூக்கறை, மூக்கறைச்சி, மூக்கறையன், மூக்கிலி என்பனவற்றால் குறிக்கப்படும் புறமூக்கின்மை/புறமூக்கின் சிதைவு மூச்சு விடுவதைப் பெரும்பாலும் பாதிப்பதில்லை. முக அழகையும் இயல்பான பேச்சையும் இவையும் சப்பை மூக்கு எனும் நிலையும் பாதிக்கின்றன. மூக்குக் குறையாலமையும் இப்பேச்சுப் பாதிப்பு குணுக்கன், குணுகுணுத்தல் எனும் சொற்களால் விளக்கம்பெறும் பாங்காகும்.

வாய், உதடு, நா, பல் என்பனவும் மூக்குப் போன்றே பேச்சுறுப்பாகி உதவுவதால், அவை தொடர்பான ஊனங்களும் இங்கு இணைத்து எண்ணத் தக்கன.

ஒறுவாய், ஓவாய், சப்பைவாய், போழ்வாய் என்பன சிதைந்த, பல்லில்லாத, இயல்புக்கு வேறான வாயைச் சுட்ட வருகின்றன. கொன்னைவாய், திக்குவாய், தெற்றுவாய் என்பன பேச்சுக் குறைவைக் காட்ட வருகின்றன.

உதடு வெடிப்பு, மூளியுதடு, மூக்குப்பூரி, மூக்குப்பூறி என்பன மேல்வாயுதடு அல்லது மேலண்ணம் வரைப் பிளந்த நிலையையும் (cleft-lip, cleft-palat) அதனால் மூக்கொலிச் சார்புடன் பேச்சு வேறுபடுவதையும் முறையே காட்டுகின்றன.

ஒறுவாய்ப்பல், ஓட்டைப்பல், ஓவாய்ப்பல், கோணங்கிப்பல்லு, கோரப்பல், தெற்றுப்பல் (தெத்திப்பல்), மண்வெட்டிப்பல் என்பன

பல் அமைப்பின் செவ்வியின்மையை உணர்த்துகின்றன. இதுவும் பேச்சை ஓரளவு பாதித்து முக அழகையும் பாதிக்கக் கூடும்.

கவைநா, நாக்குத் தட்டுதல், நாவடைத்தல், நாவுழலை என்பன நாவமைப்பின் செவ்வியின்மையையும், பேச்சுக் குறைபாட்டையும் உணர்த்துகின்றன.

வாய், சுவையுணர்தற்கும் உணவயில்தற்கும் அமையினும், மனிதனுக்குப் பேச்சின் அடிப்படையாக அமைவதால், பேச்சின்மை, வாய்ப்பொறியின் புலன்குறைவாகிறது. அவாக்கு, நுலையிலி, பண்ணறையன், பேசார் எனும் நான்கு சொல் தவிர வரும் சுமார் இருபத்திரண்டு சொற்களும் பெரும்பாலும் ஊ அல்லது மூ எனும் தொடக்கத்துடன் அமைவது கவனத்தில் கொள்ளத் தக்கது. உவமன், ஊம், ஊமச்சி, ஊமணாமூஞ்சி, ஊமணை, ஊமப்பயல், ஊமன், ஊமாண்டி, ஊமை, ஊமைக்கூறன், ஊமைக்கோட்டான், ஊமைச்சி, ஊமையன், ஊர்மச்சி, மூகன், மூகை, மூகைமை, மூங்கர், மூங்கை, மூங்கையன், மூங்கைமை, மூகை என இவை அமையும். தெளிவற்ற பேச்சொலிகள், வாயொலி மூக்கொலி காரணமாக எழுவதால் அதனடிப்படையில் இச்சொல்வகைகள் அமைந்திருக்கலாம். பின்னவற்றில் வடமொழிச் சார்பு அமைவது வெளிப்படினும் பிற திராவிட மொழிகள் அல்லது உலக மொழிகளில் அமையும் சொற்பயன்பாடுகளுடன் ஒப்பிட்டுக் காணின் சில தெளிவுகள் கிடைக்கக்கூடும். ஒரு குடும்ப மொழிகளின் எண்ணுப்பெயர், மூவிடப்பெயர்களை ஒப்பிடுவது போல, இவையும் ஒப்பிடப்படுவது வாய்ப்பாகலாம்.

குரலடைப்பு, நாவடைப்பு என்பன, தற்காலிகமாக அமையும் பேச்சின்மையை அல்லது சரியாகப் பேசவியலாமையைக் குறிக்கலாம்.

## மெய்

மெய்க்குற்றம் அல்லது மெய்யில் உள்ள குறைபாடு என்பதே உடல் ஊனங்கள், உருவ ஊனங்கள் பலவற்றை உட்கொண்ட நிலையுடையது. உறுப்பில் பிண்டம், மா, மருள் (பால்மயக்கு) எனவும், குறள் கூன் எனவும் 'எச்சம்' எனப் பெயரிட்டுப் புறநானூறு தரும் ஊனங்களனைத்தும் மெய்யில் அடங்குவன. மேலும் இவற்றுடன் முடம் என்பதும் அடங்கும். கீழ்வருமாறு கிளைப்படம்வழி இதனை உணர்த்தலாம்.




**குறள்**

ஊன வகைகளில் ஓரளவு மிகுதியான சொற்பயிற்சி/ சொல்வரவு கொள்ளும் குறள், சிந்தையும் உள்ளடக்கி, சுமார் 60 சொற்கள் அமைத்து, சிதடு-முடம் ஆகியவற்றுக்கு அடுத்த இடம் பெறுகிறது. அங்குஷ்டம், ஹ்ரஸ்வம் போன்ற பிறமொழிச் சார்பினவும், கட்டை, குள்ளை, குட்டப்பய, கூழை போன்ற வழக்கு நிலையினவும், குண்டோதரன், சித்திரக்குள்ளன், வாமனம் போன்ற பழங்கதைத் தொடர்பினவும் இப்பட்டியலில் அமையும் (பார்க்க:பட்டியல்-2).

**கூன்**

மிகவும் சுருக்கமாக, சுமார் 15 சொற்களே அமைவதும், கூன், கூன்மகள், கூன்மடமகள், கூனன், கூனி, கூனுதல் என்பதுடன், குஞ்சன், குடக்கியன், குறண்டிப்போதல், கோடிய, கோணல், கோணன், சினகோடி, நெளியலன் எனும் சில அமைப்புகளே தென்படுவதும் தனித்தன்மை. சொல் மிகுதியின்மை, இவ்வூனம் அத்துணை 'பயங்கரமானதாக்'க் கருதப்படாமையைக் காட்டக்கூடும்.

**முடம்**

சுமார் 75 சொற்கள் அமைவதில், கால்முடம் மிக மிகுதியான இடத்தைத் தனக்குக் கொள்கின்றது. குறைத்தகை, கூழங்கை, கூழைக்கை, கையில் என்பனவே கையைக் குறிக்கத் தனியாக அமைகின்றன. அனூரு, கஞ்சன், கால்முடம், குகதி, குணி, குணில், கோடம், சப்பாணி, தூன், சொத்தி, நொண்டி, பங்கம், பங்கு, முட, முடங்கால், முடங்கி, முடத்தி, முடந்தை, முடம், முடவன்,

முடவாண்டி, முடவு, மெண்டி, லங்கடா, விகல பாணிகன் என்பன பொதுமையான சொற்களாக அமைகின்றன. காலிலி இருகாலும் இல்லாததையும், நொண்டிக்கால் ஒருகாலிலுள்ள குறையையும் குறிக்கலாம். உதறுகால், உதைகால், கட்டைக்காலி, கடப்புக்கால், கப்புக்கால், கப்பைக்காலன், கவட்டுக்கால், கவைக்கால், சப்பைக்கால், கிந்துகாலன், தெற்றிக்கால், தெற்றுக்காலன், முட்டிக்கால், வள்ளக்கால், விற்கால் என்பன காலின் அமைப்புக் குறைகளையும் அதனால் நடப்பதில் ஏற்படும் செவ்வியின்மையையும் புலப்படுத்தும். பின்னதைக் கால்வாங்குதல், கிந்துதல், குந்தி நடத்தல், தாங்கி நடத்தல், நொண்டுதல், நொடித்தல், முடவுதல் என்பனவும் காட்டவல்லன.

**உறுப்பில் பிண்டம்**

இதனைக் குறிக்கக் குறைப்பிள்ளை, முதிராப் பிண்டம், மோகை என்பனவே அமைகின்றன. பிற ஊனப் பிறவிகளைப் போலன்றி இது, உயிரின்றிப் பிறத்தல் அல்லது தொடர்ந்து உயிர் வாழாமை பற்றிச் சொல்லாட்சிச் சுருக்கம் அமையலாம்.

**மா**

விலங்குவடிவாய்ப் பிறக்கும் மா பற்றிய சொல்லோ செய்தியோ வேறு காணப்படவில்லை. புராணச் சார்பில் மீயியல் மாந்தர், தேவர், அரக்கர், முனிவர், விலங்குத் தொடர்பு காட்டும் ஆனைமுகன், கயமுகன், பரிமுக மாக்கள், வியாக்கிரபாதர் முதலியன வேறாகும். மேலும், மாபற்றிய கருத்து ஊனச் சார்பில் வேறுபடுத்திச் சிந்திக்கத்தக்கது.

**பால்மருள்**

அலி, பேடி என இரு நிலைகள் சுட்டப்படுகின்றன எனினும் அவ்வாறு பிரித்து அணுகிக் காண்பதன் தேவை கேள்விக்குரியது. சுமார் 40 சொற்களுடன், குறளுக்கு அடுத்த இடம் இதற்கு அமைகிறது.

அண்ணகன், அண்ணாளன், அல்லி, அலி, அழிதூஉ, ஆணலி, இடபி, இப்பந்தி, கிலிபம், கிலீபம், கிலீவம், கோஷா, சண்டம், சண்டன், சிகண்டி, தூவரன், நபுங்கிஷம், நபுஞ்சகம், நபுஞ்சகன், நபும்ஸகம், நாமர்தா, பண்டகன், பெட்டையன், பெண்டகம், பெண்டகன், பெண்ணலி, பெண்ணை வாயன், பேடர், பேடன், பேடி, பேடு, பேதை, மகண் மா, மருள், வசங்கெட்டவன், வண்டரன், வருடவரன், வறடன் என்பன இவ்வகைப்பாட்டில் வரும் சொற்கள்.

**ஊனச் சொற்பொருள்**

ஊனம் குறிக்கும் சொற்கள் எல்லாம், எப்பொழுதும் அப்பொருளே குறித்து வருவதில்லை. மரபுத்தொடர்களில் வரும்போது குறிப்பாகப் பொருளுணர்த்தும் நிலையில் அமைவதும் சில சொல்வழக்கு நிலையில் ஆகுபெயராக, அன்மொழியாக நின்றும், பயன்பாட்டிடத்தைப் பொறுத்தும் குறியீட்டுப் பொருள் உணர்த்திவருவதும் உண்டு. இவை தனியாய்வுக்குரியன*.

அந்தகஜ நியாயம், அந்த பங்கு நியாயம், அந்த பரம்பரை என்பது போல் பிறமொழித் தொடர்பு காட்டியும், ஒற்றைக் காலில் நிற்றல், கால் முரிதல், நொண்டிச் சாக்கு, மனக்குள்ளம், மூக்கறு(த்)தல் என அமைந்தும் முன் வகைக்குச் சான்று பகரும்.

பாழ், வீண், பயனற்றது, உள்ளீடற்றது என்ற பொருள் புலப்படும் வண்ணம் வரும் அலிமரம், ஊமைப்பணம், ஊமைத்தேங்காய், குருட்டுப்பனங்காய், பொட்டைக்கிணறு என்ற பயன்பாடுகள் பின்னதில் அமையும்.

மேலும், இலக்கியம், வழக்கு, அகராதிப் பயன்பாட்டில் ஊனம் என்ற பொதுச்சொல் பிற பொருளும் தருவது போல, மற்ற ஊனவகைச் சொற்கள் சிலவும் வேறு பொருண்மைகளும் பெறுவது தெரிகிறது. ஊமன் - ஆந்தை; எச்சம் - எஞ்சியது; கண்ணிலன் - இரக்கமற்றவன்; கண்ணிலி - எறும்பு; காதறைச்சி - சண்டை பிடிப்பவள்; காலிலி - அருணன், பாம்பு; குருடன்- சுக்கிரன்; குள்ளம் - கொடுமை, தந்திரம்; குறள் - சிறுமை, பாவகை; கூன் - செய்யுளில் வரும் உறுப்பு; கூனி - கூனியிறால் மீன் வகை; சிதடி - கறையான்; சிந்து - பாவகை; பகற்குருடு - கூகை; பேடி - கோழை எனச் சான்றுகள் பல்கிப் பெருகும்.

**கருத்து முடிபுகள்**

ஊனம் குறிக்கக் காலந்தோறும் வேறுவேறு சொற்கள் கையாளப்பட்டு வருகின்றமையை இலக்கணம், இலக்கியம், நிகண்டு மற்றும் அகராதிகள் உணர்த்தும்.

ஊனச் சொற்களும், ஊனவகைச் சொற்களும் எண்ணிக்கை மிகுதி காட்டுவதன் காரணம், மக்கட்தொகையில் ஊனமிகுதி அல்லது ஊனம் என்ற பிரச்சினையின் ஆழமும் அழுத்தமுமாகலாம்.

---

* See: Ūṉam (handicap) and idiomatic usages, Annie Thomas, Paper sent to the xviii All India Conference of Dravidian Linguists, Kanyakumari, 1990.

அறிவூனம் தொடர்பான சொற்கள் சுமார் 28% அமைந்துள்ளமை மேலும் ஆழ்ந்த ஆய்வுக்குரியது.

ஊனச் சொற்கள் மரபுத் தொடர்களை ஆக்குவது தனித்த சிந்தனைக்குரியது.

ஊனங்குறிக்கும் சொற்களுக்கு வேறு பொருண்மை அமையும்போது, அதன் தொடர்பு தனித்துக் கருதப்பட்டு, பயன்பாட்டில், குறியீட்டுப் பொருண்மை ஆக்கத்தின் அடிப்படைகள் காணப்பட வேண்டும்.

ஒத்த மொழிக்குடும்பத்திலும், தொடர்புடைய மொழிகளிலும் இவ்வகைச் சொற்கள் திரட்டி ஒப்பீட்டாய்வு செய்யப்படுதல் தமிழின் தனிச்சொற்களை இனங்காண உதவும்.

**இணைப்பு. பட்டியல் 1**

*மருள் (அ. அறிவுமருள்)*

| | | |
|---|---|---|
| அக்கியானி | இப்பந்தி | கட்டைப்புத்தி |
| அஞ்சலி | இரண்டுங்கெட்டான் | கடாச்சங்காத்தன் |
| அஞ்ஞை | இருமூடம் | கடைப்புத்தி |
| அடிமடையன் | இருள் | கழுக்காணி |
| அடிமுட்டாள் | இலைச்சுமடன் | கழுந்தன் |
| அடுப்பூதி | இளமை | காக்கறை மூக்கறை |
| அண்ணை | ஈவி ழுங்கி | காபோதி |
| அப்புண்டு | உள்ளநோய் | காமாட்டி |
| அபுதன் | உறுப்பணங்கெட்டவன் | கிஞ்சணன் |
| அம்மாஞ்சி | உன்மத்தன் | கிறுக்கன் |
| அமிர்தங்கலங்குதல் | உன்மாதம் | கிறுக்கு |
| அருப்புகன் | எட்டம் | குப்பான் |
| அவ்வியக்தன் | எப்பியன் | குமதி |
| அறாக்கட்டை | எப்பிராசி | குருவித்தலைப் |
| ஆணாப்பிறந்தோன் | ஏய்ப்பிலேவட்டன் | பைத்தியக்காரன் |
| ஆதன் | ஏனவாயன் | கூமுட்டாள் |
| ஆதன்மை | ஐஞ்ஞை | கூர்மையில்லோன் |

| | | |
|---|---|---|
| கூழன் | சுயம்பு | பயித்தியக்காரன் |
| கூழாமட்டி | சுவாவி | பயித்தியம் |
| கூழை | சூன்மதம் | பல்லவராயன் |
| கேனவாயன் | சொக்கன் | பளகர் |
| கேனம் | சோடன் | பன்னாடை |
| கையர் | சோடை | பாமரம் |
| கொங்கான் | சோழப்பிரமஹத்தி | பாலிசன் |
| கோட்டிக்காரன் | ஞானப்பைத்தியம் | பிச்சி |
| கோம்பை | டிம்மிக்கட்டை | பிச்சு |
| சக்கட்டை | தட்டை | பிண்ணாக்குமடையன் |
| சடன் | தடிப்பயல் | பிண்ணாக்கு மாடன் |
| சந்திரரோகம் | திமிரன் | பிண்ணாக்குமூடன் |
| சப்பரை | திமிராகரன் | பிணவறையன் |
| சர்வமுட்டாள் | திராபன் | பித்தம் |
| சாம்பிராணி | தீவானம் | பித்தன் |
| சாம்பிராணி மாடன் | துக்கப்பைத்தியம் | பித்து |
| சிறுமகன் | தெக்கணம்பட்டி | பித்துக்கொண்டாடுதல் |
| சுண்டன் | தெக்கணமுட்டி | பித்துக்கொள்ளி |
| சுத்தமுட்டாள் | தெண்ணன் | பித்துப்பிடித்தல் |
| சுத்த மூடன் | தெம்மாடி | பித்தேறி |
| சுத்தன் | நிர்மூடன் | பித்தோன்மதம் |
| சுத்தாத்துமா | நிர்மூடி | பிரசவபைத்தியம் |
| சுபாவக்காரன் | நிருமூடம் | பேக்கலாண்டி |
| சுபாவம் | நிருமூடன் | பேகூப் |
| சும்பத்தனம் | நிருமூடி | பேது |
| சும்பப்பிரபஞ்சம் | நின்மூடன் | பேதை |
| சும்பன் | நீசன் | பேமாலம் |
| சுமடம் | பசடன் | பேமாளம் |
| சுமடன் | பயலி | பேய்த்தனம் |

| | | |
|---|---|---|
| பேயன் | மண்டு | மயங்கியோர் |
| பைத்தியம் | மண்டூகம் | மயங்குதல் |
| பொறியிலி | மண்ணன் | மயர்வு |
| போளி | மண்ணாந்தை | மயரி |
| மக்காயன் | மண்ணை | மயல் |
| மக்கு | மணையன் | மருள் |
| மக்கையன் | மத்தகன் | மருளன் |
| மங்கிணி | மத்தபிரமதத்தன் | மருளி |
| மசணை | மத்தம் | மலைப்பு |
| மசை | மத்தன் | மழுகூழை |
| மட்டம் | மத்தோன்மத்தம் | மழுங்கல் |
| மட்டி | மதம் | மழுங்குணி |
| மட்டித்தனம் | மதன் | மழுங்குணி மாங்காய் |
| மட்டை | மதிகேடன் | மழுங்குணி மாங்கொட்டை |
| மடச்சாம்பிராணி | மதிகேடி | மழுமட்டை |
| மடத்தனம் | மதிகேடு | மனக்குருடு |
| மடமட்டி | மதிமயக்கம் | மாட்டுப்புத்தி |
| மடம் | மதிமோசம் | மாடன் |
| மடவன் | மதியிலி | மான்றார் |
| மடவார் | மதியீனம் | மானன் |
| மடவியர் | மந்தபுத்தி | முட்டன் |
| மடவோர் | மந்தம் | முட்டாட்டம் |
| மடன் | மந்தவறிவு | முட்டாள் |
| மடைச்சாதி | மந்தன் | முட்டுற்றவன் |
| மடைத்தனம் | மந்தி | முத்தண்ணா |
| மடையசாதி | மந்தையன் | முத்தன் |
| மடையசாம்பிராணி | மப்பன் | மும்மூடம் |
| மடையன் | மப்பு | மும்மூடர் |
| மடையன் சாம்பிராணி | மயக்கம் | முருடன் |

முழுமகன்
முழுமூடன்
மூடத்தனம்
மூடதை
மூடம்
மூடலை
மூடன்
மூடனம்
மூடாத்துமா
மூடி
மூடு
மூர்க்கம்
மூர்க்கன்
மூர்ச்சிதம்
மூளைகெடுதல்
மூளையில்லாதவன்
மூளைவறண்டவன்
மைந்து

மையல்
மையலவர்
மொட்டை
மொட்டைப்புத்தி
மொண்ணையன்
மொத்தி
மொத்து
மொத்தை
மோடம்
மோடன்
மோடனம்
மோடு
மோழை
மௌட்டியம்
மௌட்டியன்
வடுகன்
வழுக்கட்டை
வழுங்கல்

வறிது
வறியோன்
வஜ்ரசும்பன்
விறகுதலையன்
வெள்ளை
வெள்ளைப்புத்தி
வெள்ளைமகன்
வெள்ளைமை
வெளியார்
வெளிறன்
வெளிறு
வெறி
வெறித்தல்
வெறிகொள்ளுதல்
வெறிது
வெறிமுண்டன்
வெறியன்
வைதேயன்

**பட்டியல் - 2**

**குறள்**

| | | |
|---|---|---|
| அங்குஷ்டம் | குறள் | நருவாணி |
| கஞ்சன் | குறள்மகன் | படுவி |
| கட்டை | குறளன் | பணிந்தவன் |
| கட்டைச்சி | குறளி | பதுக்காய் |
| கட்டையன் | குறியோர் | பதுக்காயன் |
| கராளை | குறுமை | பள்ளை |
| கருவல் | கூழை | பள்ளைச்சி |
| கறடு | கூழையன் | பள்ளையன் |
| கறளை | கூளி | பறுகன் |
| குஞ்சம் | சித்திரக்குள்ளன் | பறுகு |
| குஞ்சன் | சிந்தன் | பன்னாட்டுக்கூடை |
| குட்டபஸ்கி | சிந்தினர் | மக்கண்முரி |
| குட்டை | சிந்து | மாணி |
| குட்டைச்சி | சிறுமட்டம் | வட்டன் |
| குட்டையன் | சிடை | வண்டன் |
| குண்டவண்டன் | நக்கவாரி | வாமன் |
| குண்டோதரன் | நசுக்குணி | வாமனம் |
| குள்ளம் | நசுகுணி | வாமனன் |
| குள்ளல் | நரியன் | ஹ்ரஸ்வம் |
| குள்ளன் | நருக்காணி | |
| குள்ளி | நருங்கல் | |

# எச்சம்

## (பிறவியூனம் - Congenital deformity)

**சொல்**

'எச்சம்' எனும் சொல்லுக்குத் தமிழ்லெக்சிகன், கீழ்வரும் பதின்மூன்று பொருண்மைகளை வழங்குகின்றது:

> 1. மிச்சம் 2. சந்ததி 3. மகன் 4. எச்சில் 5. பறவை முதலியவற்றின் மலம் 6. ஒரு வாசனைப் பண்டம் 7. குறைவு 8. பிறப்பிலே வரும் குறை 9. எச்சவனுமானம் 10. தொக்கு நிற்பது 11. உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயரும் வினையும் 12. பெயரெச்ச வினையெச்சங்கள் 13. எக்கியம் (யாகம்) என்பன அவை.

இவற்றுள் எட்டாவதாக வரும், 'பிறப்பிலே வரும் குறை' என்பது இங்கு எடுத்துக்கொள்ளப்பெறுகிறது.

இப்பிறவியூனம் எச்சம் என்பதுடன், வியங்கம், அரிட்டம் எனும் பிறமொழிச் சொற்களாலும் குறிக்கப்படலைத் தமிழ் லெக்சிகன் வழி அறியலாம்.

மேலே சுட்டப்பெற்றவற்றுள், குறைவு (7), சந்ததி (2) என்னும் எச்சப்பொருளை இணைத்துக் காணும் அடிப்படையில், 'குறைவுடைய சந்ததி' எனக் கொண்டு, இதனை, மரபுவழிப்பட்டது (Heriditary) என்றோ பிறப்புவழிப்பட்டது என்றோ கருதிப்பார்க்க முடியலாம். அதாவது, பெற்றோரில் ஒருவர்/இருவர் அல்லது மூதாதையரில் யாரேனும் ஊனமுடையவராக இருந்து, அதே ஊனம் அக்கால்வழியினரில் ஒருவருக்கோ சிலருக்கோ பலருக்கோ வரக்கூடுமானால் அது முன்வகையைச் சாரும். இந்நிலை அமையக்கூடிய வாய்ப்பை உடலியல், மருத்துவவியல் ஆய்வும் பிறவும் விளக்கலாம். இவ்வாறு, முன்மரபினருக்கு இல்லாது, பிறக்கும்போதே குழந்தைக்கு ஊனம் இருப்பின் அது பிறவியூனமாகின்றது. தாயின் வயிற்றில் கருவாக நிலைக்கும் உயிரணுவின் சிதைந்த தன்மையாலோ (aberrated gene) அன்றி, கருவளரும்போது தாயின் உள/உடல் தன்மையாலோ,

அல்லது பிறக்கும் போது ஏற்படும் சிக்கல், கருவிப்பயன்பாடு போன்றவற்றாலோ ஊனமேற்படலெனப் பலநிலை அமையும். இவையும் மருத்துவ, உள-உடலியல் ஆய்வில் விளக்கமுறலாம்.

**களனும் கருத்தும்**

தமிழிலக்கிய இலக்கணக் களனில் தொல்காப்பியம் முதல் பெரியபுராணம் வரைப் பார்க்கும்போது, பிறவியூன வகைகள், அவற்றைக் குறிக்கும் பிற சொற்கள், அவற்றின் தன்மைகள், மனிதஉயிர்களிலும் பிறவுயிர்களிலும் இத்தன்மை அமைதல், ஊனர் எள்ளப்படல், ஊனர் பாதுகாத்துப் புரக்கப்படல், ஊனம் நீங்க வழிமுறைகள் நினைக்கப்படல், சமுதாய - சமய எதிர்பார்ப்புகள், அரசப் பயன்பாடுகள், பிறவியூனர் - பின்பு உற்ற ஊனர் ஆகியோரின் ஒத்த / வேறுபட்ட நிலைகள், ஊனர் இளையராக, முதியராக, ஆணாக, பெண்ணாக அமைதல், இலக்கியப் பாத்திரமாக இவர் வரும்போதுள்ள நிலை, பிறவியூனர் பெயரும், புகழும் பெற்றவராக வந்தமை எனப் பல நிலைகள் எதிர்பார்க்கலா மெனினும் தரவுகள் சிலவே காணப்படக்கூடும்.

பிறவியூனமுடைய குழந்தை, கருவுயிர்க்குமுன்னே இறத்தல் (foetal death), ஈன்றணிமையில் இறத்தல் (post natal death), குழந்தைப் பருவத்தில் இறத்தல் (infant mortality), இயல்பாக மனிதனுக்குரிய வாழ்வெல்லை (average life span) வரை வாழ்தல் அல்லது வாழாமை என்பன போன்ற புள்ளிவிவரங்கள் பெறப்படக் கூடுமானால், ஆற்றலுடையது வாழ்தல் (survival of the fittest)- ஊனமுடையது வாழாமை/குறைந்த விழுக்காடு காலமே வாழ்தல் போன்ற எண்ணங்கள் தெளியலாம். அன்றியும், 'உறுப்பில் பிண்டம்' எச்சவகையுளொன்றாக அமைதலும் (புறம். 28), 'ஊன் தடி பிறப்பினும் ஆளன்றென்று வாளில் தப்பார்' (புறம். 74) எனக் கொலைப்படுதலும் இங்கு இணைத்துக் கருதப்படலாம்.

மேலும், இந்திய மக்கட்தொகையில் எத்தனைபேர் (12 மில்லியன்), எத்தனை விழுக்காட்டினர் (1.8%)* பிறவியூனராக அமைகின்றனர், எந்தெந்த ஊனம் (சான்றாக: குருடு, செவிடு, ஊமை......) மிகுதியாக/குறைவாக எண்ணிக்கையில் அமைகிறது, ஏன்; ஊனமிருப்பினும் பிற மனிதரைப் போல் கல்வி, பணி, இல்வாழ்வு போன்றவற்றில் ஈடுபட முடிகின்றவர் எத்துணை பேர்,

* சென்னை வானொலி, முதலாம் அலைவரிசை உரை: 3.11.92 காலை, 7.45 - 8.00

புறவுறுப்பூனம் அதாவது வெளிப்படத் தெரியும் ஊனம், உறுப்பிருந்தும் புலனறிவு இல்லாத ஊனநிலை என்பன வேறுபடுத்திக் காணப்பட முடிகின்றனவா, ஒரு ஊனம் மட்டுமுள்ள பிறவி, பல ஊனம் (multiple deformity) இணைந்த பிறவி என்பன காணப்படுகின்றனவா, பிறவி ஊனம் நீங்குதல் உண்டா, செயற்கை உறுப்புப் பொருத்தி இயல்பு நிலைக்கு ஊனரைக் கொணரும் முயற்சி தெரிகிறதா, ஊனர் மறுவாழ்வுத் திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளனவா என்பன போன்ற தொடர்பான தரவுகளும் முழு ஆய்வுக்கு வேண்டப்பெறுகின்றன. இவற்றுள் சிலவற்றைப் பிறவியூனருடன், பின்புற்ற ஊனருக்கும் பொருத்திக் காணலாம்.

**குறிப்புகள்**

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை, எச்சம் என்ற பெயரில், பிறவியூனம் குறிக்கப்படல், புறநானூறு முதல் காணப்படுகிறது; அவை எண் வகையின என மொழியப்பெற்று, பட்டியலும் தரப்பெறுகின்றது:

**சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்**
**கூனுங் குறளும் ஊமும் செவிடும்**
**மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்கு**
**எண்பே ரெச்சம் என்றிவை யெல்லாம்**
**பேதைமை யல்லது ஊதியம் இல்லென**
**முன்னும் அறிந்தோர் கூறினர்** (புறம். **28.1-6**)

இங்கு, எண்வகை எச்சங்களாக அமைக்கப்படுவன மேலும் ஆய்தற்குரியன. இப்பட்டியலின் முழுமை/முழுமையின்மை கருதப்பட வேண்டும். இப்பட்டியல் புறநானூறு தவிர வேறெங்கு அமைகிறது எனக் காணலாம். அங்கு, எண்ணிக்கைக் குறைவோ, மிகுதியோ, வகை வேறுபாடோ, வைப்புமுறை மாற்றமோ உளதா எனவும் நினைக்கலாம்.

ஊனங்கள் பலவாக இருப்பதால் எல்லாம் பிறவியூனமாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. உறுப்பில் பிண்டம், மா, குறள், பால்மயக்கமான மருள் போன்றன பிறவியூனமாக மட்டும் அமையக் கூடியன; விபத்து, நோய், முதுமை போன்ற காரணங்களால் இவை பின்பு ஏற்படவில்லை. ஆனால் சிதடு, கூன், ஊம், செவிடு, அறிவு மருள் என்பன பிறவியில் மட்டுமன்றி, பின்பும் ஏற்படலாம். நரம்புத் தளர்ச்சி, தசைநார்கள் கட்டுப்பாடின்றியிருக்கும் நிலை (spastics), மூளைக்கும் புலன்களுக்கு முள்ள தொடர்பு (co-ordination) செவ்வியற்றிருத்தல் என்பன,

மூளைக்காய்ச்சல் நோயால் ஏற்படும் பின்னடைவு என்ற சில மிக இளம் குழவிப் பருவத்திலேயே அமைந்து, பிறவி யூனமாகவே தோற்றந்தரலாம்.

தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷன்' (அப்போஸ்தலர். 3.2) என முடம் பிறவியூனமாகக் காட்டப்படினும், புறநானூற்றுப் பட்டியல் எண்வகை எச்சத்தில் முடம் என்பதை இணைக்காமை சிந்தித்தற்குரியது. சங்க இலக்கியம் பல குறிப்புகளில் முடத்தைச் சுட்டுவதால், விடுபாடுக்குக் குறிப்பாகக் காரணம் இருக்கலாம். முடத்தைப் பிறவியூனமாகப் புலவர் பட்டியலில் முதன்மைப்படுத்தாதிருக்கலாம்; அல்லது முடம் உறுப்புக் குறையேயன்றி குருடு செவிடு போலப் புலன் குறையன்று என்பதால் உட்படாதிருக்கலாம்; முழுமைச் செயற்பாட்டுக்குத் தடையாக இருந்தாலும் ஊன்றுகோலின் உதவியுடன் ஓரளவு செயற்பட இயலுதல் அல்லது பிறரால் சுமக்கப்பட்டுச் செல்லல் எனப் பிற எச்சங்களிலிருந்து வேறுபடுதலும் பட்டியலில் இணையாமைக்குக் காரணமாகலாம்.

செவிமடலின்மை, மூக்கு இன்மை, மேலுதடு கிழிந்திருத்தல், விரல்-கை இல்லாதிருத்தல் போன்ற நிலைகளும் இப்பட்டியலில் உட்படாமையை விடுபாடு எனவோ, பிறவற்றில் உட்படக்கூடியது எனவோ அமைதி காணலாம். மேலும், இயல்புக்கு மாறாக ஆறுவிரல்கள் அமைதல், பூனைக்கண், மாறுகண் (squint eye), குறுங்கழுத்து (bull neck), கிளிமூக்கு அமைதல் போன்றவையும் பிறவியிலேயே காணப்படலாம். எனினும் எச்சம் என்பதில் உட்படக் கூடுமோ என்பது சிந்திக்கத் தக்கது. இவை குறையாக முதன்மைப் படுத்தப்பட்டுக் கருதப்படவில்லை எனவோ அல்லது ஊனம் என்று கருதவில்லை எனவோ கொள்ளலாம். மேலும், இயல்பான வாழ்வுக்குப் பெருந்தடையாக இவை அமையாமையும் பட்டியலில் இவை இணைவு பெறாமைக்குக் காரணமாகலாம்.

**நிகண்டுகள்**

புறநானூற்றுக்குப் பின்பு எண்பேரெச்சப் பட்டியல் தரும் சில நிகண்டுகள் குறிப்பிடத்தக்கனவாய் அமைகின்றன.

திவாகரம் (8ஆம் நூ.), மா என்பதற்குப் பதிலாக முடம் என்பதைத் தருவதைத் திருத்தம் எனக் கருதக்கூடும்.

> சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
> கூனும் குறளும் ஊமையுஞ் செவிடும்

**முடமும் உறுப்புமருளும் மக்கட்குத்**
**திண்சிறப் பில்லா எண்பே ரெச்சம்** *(ப. **295**)*

புறநானூற்றில், ஏதேனும் சுவடியில் மா என்பதற்கு முடம் என்பது பாடபேதமாக உள்ளதா என அறியவரின் தெளிவு கிடைக்கும். புறம் மருள் எனப் பொதுவாகத் தந்து பால்மயக்கம், அறிவுமருள் ஆகிய இரண்டையும் உட்படுத்த வாய்ப்பளிக்க, திவாகரம் 'உறுப்பு மருள்' என முன்னதைத் தேர்ந்து வரையறுத்துக்கொள்ளச் செய்கின்றது.

சூடாமணி நிகண்டு *(10ஆம் நூ.)*,

**குறளொடு செவிடு மூங்கை கூன் மருள் குருடு மாவே**
**உறுமுறுப் பில்லா பிண்டம் ஓதிய எண் மெய்யெச்சம்**
***(95, ப. 26)***

என முடமின்றி மாவே சுட்டியது.

உரிச்சொல் நிகண்டு *(14ஆம் நூ.)*, முறை மாற்றத்துடன் இவ்வெட்டு எச்சங்களைத் தந்தது.

**குறள் செவிடு மூங்கை முடங் கூன் குருடு**
**துறுபிண்டம் பேடுடனே யெச்ச - முறுமெட்டாம்**
***(27, ப. 107)***

உடற்குற்றம் என்ற நிலையில் ஆசிரிய நிகண்டு *(18ஆம் நூ.)* கீழ்வரும் பட்டியலைத் தருகின்றனது.

**குற்ற முட மூமை யலி மருள் செவிடு குருடு கூன்**
**குறளெனச் சொல்லு மெட்டாம்** ***(37)***

பொருட்டொகை நிகண்டு *(19ஆம் நூ.)*,
**எச்ச மெட்டா மவை குறள் கூனூமை**
**செவிடு குருடு முட முறுப்பு மயக்க**
**முறுப்பில் பிண்ட மிவையே யெண்வகை**
**யுடற்குறை யென்ன வோதவும் படுமே** ***(672, ப. 52)***

எனத் தருவதும் குறிப்பிடத்தக்கது. இப்பட்டியல்களை ஒப்பிடும் போது கீழ்க்காணும் கருத்துகள் வெளிப்படுகின்றன.

(1) புறம் தரும் அதே எட்டு எச்சங்களைச் சூடாமணி தருகிறது. ஆனால் முறை வைப்பில் மாற்றம் உண்டு. மா எனும் எச்சத்தை இவ்விரு நூல்கள் மட்டுமே தந்தன.

(2) புறநானூற்றுப் பட்டியலின் முறைவைப்பிலேயே திவாகரம் தருகிறது. என்றாலும் புறத்தின் மாவுக்குப்

பதில் முடம் அமைத்து, மருள் என்பதை உறுப்பு மருள் எனத் தெளிவுபடுத்தியது.

(3) ஆசிரிய நிகண்டு, மருள் என்பதால் அறிவு மயக்கத்தைக் கருதுவதை, அது தரும் அலி என்ற மற்றொரு எச்சம் உணர்த்துகின்றது.

(4) ஆசிரிய நிகண்டு மட்டும் உறுப்பில் பிண்டம் என்பதைத் தரவில்லை.

(5) உரிச்சொல் நிகண்டு, மருள் அல்லது உறுப்பு மயக்கம் என்பதைத் தராது, பேடு என்பதைத் தந்தது. ஆசிரிய நிகண்டு தரும் அலி என்பதுடன் இது இணைத்துக் கருதத்தக்கது.

(6) சொல்லாட்சியில், சிதடு - குருடு எனவும்; உறுப்பில் (லாப்) பிண்டம் - துறு பிண்டம் எனவும்; ஊம் - ஊமை, மூங்கை எனவும் கையாளப்படுகின்றமை நிகண்டுகட்கிடையே வேறுபாடாகும்.

(7) முறைவைப்பால் குறிப்பிட்ட ஊனம் கொடியது எனவோ அன்று எனவோ கருதவியலவில்லை. (அ) சிதடு என்பதைப் புறமும் திவாகரமும் முன் வைக்க, (ஆ) குறள் என்பதைச் சூடாமணி, உரிச்சொல், பொருட்டொகை நிகண்டுகள் முதலில் வைக்கின்றன.

(8) புறம், நிகண்டுகள் தவிரப் பிறவிடங்களில் எச்சப் பட்டியல்கள் அமையின் அவற்றுடன் இவை ஒப்பிடத்தக்கன.

### இலக்கிய எண்ணம்

தமிழ் நூல்கள் ஊனம் பற்றிய எண்ணத்தைத் தருமிடத்து, அவை பிறவியூனமா அல்லதா என்று பெரும்பான்மை உய்த்துணரும் நிலையேற்படுகிறதேயொழிய, அனைத்துக் குறிப்புகளிலும் தெளிவாக வெளிப்படையாகப் பெறப்படவில்லை. சான்றாக,

**இந்நிலத்து**
**ஆற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்**
**உள்ள மெள்ளிய மடவோன் தெள்ளிதின்**
**துஞ்சுபுலி இடறிய சிதடன் போல**
**உய்ந்தனன் பெயர்தலோ வரிதே.......** (புறம். 73)

எனப் புறநானூறு ஆளும் உவமையில் வருவது, பிறப்பிலேயே கண்பார்வை இன்மையா, அல்லது பின்பு ஏற்பட்ட இழப்பா என்பது

வெளிப்பட்டுத் தோன்றவில்லை. இரு நிலையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்கப்பட்டன போலும்.

எனினும், குறிப்பிட்ட சூழலில் ஊனம் ஏற்பட்டது/ ஏற்படுத்தப்பட்டது என்ற தரவு இல்லாதவிடங்களைப் பிறவியூனமாக எடுத்துக் கொள்ளலாமெனவோ, வெளிப்படையாகப் பிறவி யூனமெனக் குறிக்கப்படும்போது மட்டுமே எடுத்துக் கொள்ளலா மெனவோ வரையறுத்துக்கொள்ள முடியும். சான்றாக, 'கண்ணில் ஊமன் கடற்பட்டாங்கு' (புறம். 238) எனவும் 'கையில் ஊமன் கண்ணிற் காக்கும் வெண்ணெ யுணங்கல்' (குறு. 58) எனவும் இருவூன மிணைந்து வருவதை முன்வகையில் கருதலாம். பின் வகையில், கலித்தொகை, கூன் - குறள் உறழ்ந்து கூறுவதைத் தரும் பகுதியிலுள்ள கருத்தை அமைக்கலாம்.

அன்னையோ
காண்டகை யில்லாக் குறள் நாழிப் போதினான்
ஆண்டலைக் கீன்ற பறழ் மகனே ............
தொக்க
உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்பு (கலி. 94)

என்பதில் 'ஈன்ற' எனவும் 'பிறப்பு' எனவும் வருவதால் பிறவியூனம் என்று ஓரளவு தெளியமுடிகிறது.

**ஊனப்பிறப்பு - நம்பிக்கை**

ஊனமான பிறப்பு முன்பிறவி வினையைச் சார்ந்தது என்ற நம்பிக்கை காணப்படுகிறது. நாலடியார்,

உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே இம்மை
அலியாகி ஆடி உண்பார் (85)

எனத் தருவதில் இதனை உணரலாம். அலியைப் பற்றிக் கூறப்பட்ட இக்கருத்தை எல்லா வகை ஊனப்பிறவிக்கும் பொதுமைப்படுத்த இயலாது போகலாம்.

ஊனப்பிறப்பு மட்டுமன்றி, ஊனமற்ற நற்பிறப்பும் வினைவயப்பட்டது என்பதும்; நோயாளிக்கும் ஊனருக்கும் உணவு அளித்து, உதவியோர் நற்பிறப்படைவர் எனபதும் கீழ்க்கணக்கின் கருத்தாகும் (பார்க்க: சிறுபஞ்ச. 74, 75; ஏலாதி. 36, 52, 53, 78, 80).

மணிமேகலை, ஊனப்பிறவிகள் ஏற்படாத காலமாக புத்தனின் தோற்றக் காலத்தைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. முன்னது சமுதாய நம்பிக்கையெனில் இது சமய நம்பிக்கை சார்ந்தது எனக் கொள்ளலாம்.

புத்த ஞாயிறு தோன்றுங் காலை...
கூனுங் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் மன்உயிர் பெறாஅ
(மணி.12.86...97-98)

இக்கருத்தை மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் சமயநூல் அடிப்படையில் கூறினாரா அல்லது சிலப்பதிகாரக் கருத்தை ஒருவழி மறுக்கும் வண்ணம் தந்தாரா என்பது ஐயம். இளங்கோவடிகள் இலஞ்சி மன்றத்தை ஊனம்/நோய் நீக்கும் பாங்கில் (பிறவி ஊனம் என விதந்தோதாது) படைக்கின்றமை இக்கருத்தை ஏற்படுத்துகிறது.

கூனுங் குறளு மூமுஞ் செவிடும்
அழுகுமெய் யாளரு முழுகின ராடிப்
பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியு மிலஞ்சி மன்றமும்
(சிலம்பு. 5.118-121)

இவ்விரு குறிப்புகளிலும் அமையும் ஊனர் பட்டியல், புறநானூறு - நிகண்டுகளளிக்கும் எண்பேரெச்சப் பட்டியலுடன் ஒப்பிடத் தக்கன. இங்கு, (1) எண் கொடுத்துத் தொகை கூறுதல் காணப்படவில்லை. (2) எட்டு வகை கூறப்படாது, மணிமேகலையில் ஆறும், சிலப்பதிகாரத்தில் நான்கும் மட்டும் கூறப்பெற்றன. (3) இரண்டிலும் ஒரே முறை வைப்பில் நான்கு ஊனம் (கூன், குறள், ஊம், செவிடு) தரப்படுகின்றன. (4) புறநானூற்றில் இந் நான்கு / ஆறு ஊனமும் இதே முறைவைப்பில் தரப்பெற்றதன் தொடர்ச்சியாக இவை அமைகின்றன. (5) அங்கு, புறநானூற்றில் முதலில் வைக்கப்பட்ட சிதடு (குருடு) இங்கு இரண்டிடத்தும் விடப்படுவது, அதுவே ஊனங்களில் மிகக் கொடுமையானது என்ற கருத்தைக் கேள்வி கேட்பதுபோல் அமைவதாகத் தோன்றுகின்றது.

## பிறவியூனர் - பயன்பாடு

மக்கட் சமுதாயம் பிறவியூனரை எந்த அளவு பயன்படுத்தியது, அரசு அவர்களை எவ்வகையில் கையாண்டது என்ற கேள்விகட்குக் கலித்தொகை முதலாகக் கிடைக்கும் விடை, அவர்களை ஏவலராகப் பயன்படுத்தியது என்பதே. ஏற்கெனவே சுட்டிய வண்ணம்,

அடியோராகிய கூனுங்குறளும் கலித்தொகையில் (94) காட்டப்பெற, பிற சங்க இலக்கியக் குறிப்புகள் ஊனப்பணியாளரைத் தரவில்லை. எனினும், கீழ்க்கணக்கு முதலாகக் காப்பியங்கள் சில, அரசவை ஊழியரில் ஊனரைக் காட்டி, அதனையொரு மரபாக அமைத்துவிடுகின்றன.

பழமொழி நானூறு (275), அரசர்க்கு உற்றுழியுதவும் அமைச்சரை ஒத்து, அல்லது மிக்கு இத்தகு ஏவலராகக் கூனர் அமைவதைத் தருகின்றது. அரசமா தேவியரின் (அடிமைச்) சுற்றத்திலும், அரசவைப் பணியாளரிலும் ஊனர் காட்டப்படும் போது அவர்கள் ஆடவரா, பெண்டிரா எனப் பெரும்பாலும் விதந்தோதப்பெறாது, உயர்திணைப் பன்மை (பலர்பால்) அல்லது அஃறிணைச் சொற்பயன்பாட்டுடன் தரப்பெறுகின்றனர்.

சிலப்பதிகாரம் இவர்களை அரசமாதேவியின் பணியாளராகக் காட்டுகின்றது. பாண்டிமாதேவி,

கூனுங் குறளு மூமுங் கூடிய
குறுந்தொழி லிளைஞர் செறிந்து சூழ்தர (20.17-18)

வருகின்றாள். சேரமாதேவியைக் கூனுங்குறளும் வாழ்த்துவதும்,

சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று
பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தான் (27.214-215)

அவருடன் பேடியும் மங்கலப் பொருட்கள் ஏந்துவதும் குறிப்பிடப்படுகின்றன.

மான்மதச் சாந்தும் வரிவெண் சாந்தும்
கூனுங் குறளுங் கொண்டன வொருசார்
வண்ணமுஞ் சுண்ணமு மலர்பூம் பிணையலும்
பெண்ணணிப் பேடிய ரேந்தினர் ஒருசார்
(28.57-60)

மணிமேகலை, அரசச் சுற்றத்தில் இத்தகையோரைத் தந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பெருங்கதை கூனையும் குறளையும் பலமுறை,

போகக் கலப்பையும் பொறுத்தனர் மயங்கிக்
கூனுங் குறளு மாணிழை மகளிரும் (1.38.177-178)

நானச் செப்பொடு கூன்பின் றுளங்க (1.40.29)

குறிவயி னின்ற குறள்வயி னோக்கார் (1.44.37)

குங்குமங் கொண்ட கூன் வழுக்குறவும் (1.46.256)

பாலிகை பற்றிய குறள் வழிப்படரவும் (1.46.263)

எனத் தருவது பிறவிடத்தும் பயில்வது நினையத் தக்கது. மேலும், சிலப்பதிகாரம் ஊன ஊழியரைத் தரும் நிலைக்கு ஒருபடி மேற்சென்று, 'பாகனை யொழித்துக் கூன்மகள் கோல் கொள' (3.5.97) எனத் தேரை ஓட்டியமையையும், சாமரை வீசுவதையும் (3.13.84) தந்து, கூன்மகள், கூன்மடமகள் என்ற ஆட்சியையும் பெருங்கதை புகுத்தியுள்ளது. சீவகசிந்தாமணியும், 'தேரை நடப்பன போல் குறள் சிந்தினொடு......' (631), 'கூன்களுங் குறளு மஞ்சி.....' (764) என இவர் அரண்மனைச் சுற்றத்தில் அமைந்ததைக் காட்டுகின்றது. கூன்மகள் என்பதுபோலக் குறள்மகன் எனப் பயன்படுதல் சூளாமணியில் உண்டு.

ஆங்கோர்

கொன்னவில் பூதம்போலும் குறள்மகன் இதனைச்
சொன்னான் (679)

இதற்கு உரையெழுதும்போது, 'மகளிரிருக்குமிடத்தே குறளுஞ் சிந்துங் காவல் புரிதல்' என்று தரப்பட்டுள்ளதால், சூழல் தொடர்பு பற்றிய பொதுக்கருத்து இங்கும் தொடர்தல் வெளிப்படுகின்றது. மேலும், 'தேரையாய்க் குறளுஞ் சிந்து மிதந்தன சில்ல சிந்தி' (1678) என்பதும் சூளாமணி தரும் காட்சி.

காப்பியக் களனின் இப்புனைவின் தொடர்ச்சி கம்பராமாயணத்திலும் அமைகின்றது. அரசியருடன் மட்டுமன்றி அரசருடனும் இத்தகு மக்கள் சென்றமை குறிப்புப்பெறுகின்றது. தசரதனின் உடன்சென்ற மக்களில், 'தேரை போன்ற சிந்தர்' (770) அமைவது, சூளாமணியின் உவமைத் தொடர்ச்சியைக் காட்டுகின்றது. சீதையின் சிலதியர் குழாத்துள் 'சிந்தொடு குறளும் கூனும்' (1139) இருந்தனர். பிற நூல்களுக்கு வேறாக, மந்திராலோசனை நிகழும் அரசவையில் ஊனர் பலர் ஏவலராக நின்றமை இங்கு, இராவணன் அவையில் காட்டப்படுவது தனித்த சிந்தனைக்குரியது.

உணர்வு இல் நெஞ்சினர் ஊமர் உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர் பொறிஇலர்
கொணரும் கூனர் குறளர் கொழுஞ்சுடர்
துணரும் நல்விளக்கு ஏந்தினர் சுற்றினார் (6786)

இராவண மந்திராலோசனைக்கு அமைக்கப்படும் இப் பின்புலம், அவையோரின் தன்மையை / தகைமையைக் குறிப்பாகச் சுட்டக் கம்பனால் பயன்கொள்ளப்பெற்றதோ என்பது ஐயம். இராவணனின்

எண்ணங்களும், கருத்துகளும், திட்டங்களுமே முன்னிற்க, பிறர், எதிர்ப்பு/மறுப்புக் குரல் எழுப்பாது, எழுப்பினாலும் எடுபடாது அமைந்த பாங்கால், உணர்வில் நெஞ்சினராய், ஊமராய், கேள்வி எழுப்பாதவராய், கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவராய், தாம் நடவாது - பிறரால் நடத்தப்பெற்றவராய் அமைந்தனர் என்பது குறிப்பு ஆகலாம். அன்றியும், அயோத்தி, மிதிலை அல்லது கிட்கிந்தையில் இத்தகு மந்திர அவை காட்டப்பெறாது, இலங்கையில் மட்டும் காண்பிக்கப்படலும் இச்சிந்தனையை வலுவாக்கும்.

**பிறவியூனர் - பாத்திரங்கள்**

பெயரோ, உறவோ/தொடர்போ, பதவியோ/தகுதி நிலையோ சுட்டப்படாத இவ்வூனமாந்தர் போன்று அமையாது, பெரும் பான்மைக் காப்பியங்கள், சில ஊனரைக் கதைப் பாத்திரங்களாகக் காட்டி, பெயர் சுட்டி, தலைமாந்தரோடு தொடர்பு அமைவது புலப்படுத்தி, தோழி, விதூடகன், அடித்தொழிலர் போன்று அவர் நிலை காட்டிக் கையாளுவதும் காணப்படுகிறது.

கூனி எனும் பாத்திரம் காப்பியத் தலைமை அல்லது முதன்மை மகளிர் சிலருக்குத் தோழியாக அமையலாம் என்பதில் நூல்களிடையே ஒற்றுமை காணப்படுகின்றது. அரச மகளிருக்கு மட்டுமன்றி, அரசால் சிறப்புப்பெறத் தக்கவர்க்கும் இந்நிலை காணப்பட்டுள்ளது. தோழி என விதந்தோதப்படாமலும், சிலப்பதிகாரம், மாதவியின் மாலையை விலைபேசிய கூனியைத் தருகிறது.

மானமர் நோக்கியோர் கூனி கைக்கொடுத்து
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை.......
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு......

***(3.167....171)***

இங்குக் கூனியின் பெயர் சுட்டப்படவில்லை.

விசயை, சீவகனைக் கருவுயிர்க்கும் இடுகாட்டுச் சூழலில், அவள் தனிமையில் உதவியாக வந்த தெய்வம் அவள் தோழி சண்பக மாலை எனும் கூனியின் உருவம் கொள்கின்றது (சிந்தாமணி.314).

பெருங்கதை, 'அயிராபதியெனும் அம்பணைத் தோளி, மானேர் நோக்கிற் கூனி' (4.12.77-78)யைப் பன்முறை பல்வகைச் செயற்பாட்டுடன் ஒரு இயங்கு பாத்திரமாக (active) இயக்கப் பாத்திரமாகக் காட்டுகின்றது*. கம்பராமாயணம் மந்தரை எனும் கூனியைக் காட்டுவது யாவரும் அறிந்ததே.

---

* பார்க்க: பெருங். 3.6.117-120, 200; 3.7.1; 3.8.51-55, 87; 3.9.47.

கூனி பந்தடிக்கும் காட்சி, பெருங்கதையில் தனித்தன்மை கொள்கின்றது (4.12.77-85). அயிராபதியெனும் கூனி பந்தடிக்க, அதற்குப் போட்டியாக விச்சுவலேகை யெனும் குறளி பந்தடித்தலும் இங்கு அமைவது பிற நூல்களில் காட்டப்பெறாததாகும்.

குறளியாக, அநங்கவிலாசினி எனும் 'படுவி' சிந்தாமணியில் காட்டப்படுதல் (1653) சுட்டத்தக்கது. தோழியாகக் கூன் - குறளுடன் பேடியுமமையலாமென்பதைச் சிந்தாமணி, காந்தருவதத்தையின் தோழியாக வீணாபதியைக் காட்டுதல் புலப்படுத்தும் (555, 651, 652).

சூளாமணி, திவிட்டனின் விதூடக நண்பனைக் குறியகை, ஊதிய வயிறு, குஞ்சித்த வடிவுடன் பேதைமையுமுடையவனாகக் காட்டுவது (1566, 1568) தனித்த வகையினது. இவ்வாறு, தோழமைச் சூழலின் ஊனரில் பல்வகைமை தெரிகிறது.

**பிறவியூனர் - முதன்மை மாந்தர்**

தமிழிலக்கியம் மிக அருகி, காப்பிய.கதைக் களனில், முதன்மை/தலைமை/துணைமை/சார்பு மாந்தரில் பிறவியூனம் காட்டுவதாகத் தெரிகிறது. பிறவூனங்களன்றிக் கண்ணின்மையே இங்கு முன்னிற்கின்றது.

கண்ணற்ற திருதராட்டிரன் (பாரதவெண்பா, 215, 670, 671 உரை), சலபோசன முனிவரும் மனைவியும் (கம்ப. 1679-90) என்போர் போலன்றி பெரியபுராணம் தண்டியடிகளை ஒரு புராணத்தில் முதன்மைப்படுத்தித் தருவது குறிப்பிடத்தக்கது. முன்னவர் செயலற்றவராகக் காட்டப்பட, இவர், ஊனம் தடையாகாது, செயல்திறம் நிரம்பியவராகக் காட்டப்படுகின்றார்.

இவர், 'நாட்டமிகு தண்டி' எனத் திருத்தொண்டத் தொகையிலும் (5), திருத்தொண்டர் திருவந்தாதியில்,

> **கண்ணார் மணி ஒன்றும் இன்றிக் கயிறுபிடித் தரற்குத்**
> **தண்ணார் புனற்றடந் தொட்டலுந் தன்னை நகும் அமணர்**
> **கண்ணாங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்**
> **விண்ணாயகனிடைப் பெற்றவன் ஆரூர் விறற் றண்டியே**
> **(37)**

எனவும் குறிக்கப்பெறுகின்றார். பெரிய புராணம், இவரைப் 'பிறந்த பொழுதே கண் காணார்' (பெரிய.தண்டி.1) எனத் தெளிவாகப் பிறவியூனராகத் தருகின்றது. இவ்வாறவரமையினும் இறைவனுக்குக் குளம் அமைக்கும் பணியில் ஈடுபடுவதும், சமணரால்

எள்ளப்படுதலும், இறையருளால் ஊனம் நீங்குதலும் விரிவரலாறாக 26 பாடலில் முழுமையான கதையாகத் தரப்படுவது பிற இலக்கியங்களில் அமையாததாகும்.*

**கருத்து முடிபுகள்**

மேற்கண்ட மூன்று பகுதிகளையும், முன்கண்ட இலக்கியக் கருத்துகளையும் ஒருசேரக் காணும்போது சில உண்மைகள் தெளிவுபடுகின்றன.

*எச்சம், பிறவியூனம் என்பதைக் குறிக்கவரும் பழஞ் சொல்லாகும்.*

*எண் சுட்டுடன் வரும்போது எச்சம் எட்டு என்ற குறிப்பே காணப்படுகிறது.*

*ஊனப்பிறப்புப் பற்றிய நம்பிக்கை கீழ்க்கணக்கில் மட்டும் அமைகிறது.*

*ஊனநீக்கத்திற்கு இலஞ்சிமன்றம் என்பது இளங்கோவின் சிந்தனைப்படைப்பாகும்.*

*புத்த ஞாயிறு தோன்றினால் எச்சங்கள் தோன்றாது எனும் கருத்து மணிமேகலைக்கு மட்டும் உரியது.*

*கூனுங்குறளுமான பிறவியூனர் ஏவலர் குழாத்தில் இருந்தது கலித்தொகை முதல் கம்பராமாயணம் வரைத் தொடர்ந்தமைந்தது.*

*புறநானூறும் நிகண்டும் பட்டியலிடாத சிந்தர், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவற்றில் உட்படுகின்றனர். இவரைக் குறளுடன் அடக்கலாம்.*

*முடமாகப் பிறவியூனர் இலக்கியப்பாத்திரங்களுள் இடம் பெற்றமை புலப்படவில்லை.*

*தலைவியின் அல்லது தலைமைமகளிரின் தோழி கூனியாகக் காப்பியங்களில் அமைதல், தொல்காப்பிய/சங்க இலக்கியத் தோழியர் மரபிலிருந்து மாற்றம் காட்டுகிறது.*

---

* இறையருளால் பிறவியூனம் நீங்கல் பிற சமயச் சார்பு இலக்கியங்களிலும் அமையும்.

பார்க்க: விவிலியம்: மத்தேயு *20.29-34*; லூக்கா *18.35-43*; யோவான் *9.1-41*

தோழியான கூனி, 'உள்ளமும் கோடிய கொடியளாக' மந்தரையில் காட்டப்படுதல் பிறவிடத்து இல்லை.

மகளிருக்குத் தோழியாக ஊனமுடையோர் காட்டப்படுதல் போல ஆடவர்க்குக் காட்டப்படாமை தனித்த சிந்தனை வழங்கலாம்.

திவிட்டனின் விதூடக நண்பனை ஊனத்தோழன் என்பதைவிட, எள்ளல்-நகை தோற்றும் பிற்கால நாடகப் பாத்திரத்தை (கோமாளி/Clown)ஒத்து அமைவதாகக் கருதலாம்.

அரசமா தேவியரின் ஏவலர் அல்லது தோழி, அல்லது அரசவை ஏவலரில் கூனும் குறளுமே முதன்மைப்பட்டுத் தொடர்ந்த போதும், பேடியைச் சிலப்பதிகாரம், சிந்தாமணி ஆகியனவும், (மா - உறுப்பில் பிண்டம் தவிர) அறுவகை ஊனரையும் கம்பராமாயணமுமே தந்தன. இத்தேர்ச்சியின் காரணம் ஆய்வுக்குரியது.

பிறவியூன நீக்கம்/தவிர்ப்பு பற்றிய எண்ணம்/நம்பிக்கை சிலம்பிலும் மணிமேகலையிலும் மட்டுமே உண்டு.

பிறவியூனர் (பிறரால்/பிறசமயத்தாரால்) எள்ளப்படல் தண்டியடிகளுக்கு முன் காட்டப்படவில்லை.

எக்குறிப்பும், ஊனரை இரப்பவராகவோ போக்கற்றவராகவோ காட்டவில்லை.

இறையருளால் பிறவியூனம் நீங்கி, அது, பழித்தவருக்கு ஆகுதல், தண்டியடிகளிலும் அமணரிலுமாகப் பெரிய புராணத்தில் காட்டப்படுதல் புதுமை.

ஊனர் வாழ்வுக்கான அல்லது மறுவாழ்வுக்கான (rehabilitation) திட்டங்கள் எனத் தனியே வகுக்கப்பெறாவிட்டாலும், அரண்மனை அல்லது அரசவை, அவருக்கு (அல்லது அவருள் சிலருக்கு) ஏவலர்/குறுந்தொழிலாளர் பணியளித்திருந்தது என்பதால் அவர்கள் புரக்கப்பட்டனர், பாதுகாக்கப்பட்டனர் என்ற கருத்தை ஓரளவேனும் வழங்கும்.

# உறுப்பறை

**சொல்**

உறுப்பு+அறு+ஐ (தொழிற்பெயர் விகுதி) என்ற புணர்ச்சியில் அமையும் உறுப்பறை எனும் சொல், வழக்கில் பயிலப்பெறும் காதறை, மூக்கறை போன்றவற்றின் சொல்லமைப்பை ஒத்துள்ளது.

**விளக்கம்**

உடலுறுப்பை அல்லது உறுப்புகளைச் சிதைத்தல், அறுத்து நீக்குதல், பயனில வாக்குதல் - அதாவது ஊனம் செய்தல் என 'உறுப்பறை' என்பதை விளக்கலாம்.

உடல் ஊனம் பற்றிய தமிழ் இலக்கண இலக்கியக் களம் சார்ந்த கல்வியில், முதலாவது தரவாக 'உறுப்பறை' அமைவதுடன் தொல்காப்பியம் தரும் ஒரே குறிப்பாகவும் அமைகின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியலில், 'வெகுளி' (கோபம்) எனும் சினச்சுவை எழுகின்ற நான்கு களங்களுள் முதலாவதாக இதனை அமைக்கின்றது.

**உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன**
**வெறுப்ப வந்த வெகுளி நான்கே** **(256)**

இதற்கு உரையெழுதிய இளம்பூரணர், 'உறுப்பறையாவது அங்கமாயினவற்றை அறுத்தல்' எனவும், பேராசிரியர், 'உறுப்பறையென்பது கைகுறைத்தலுங் கண்குறைத்தலு முதலாயின' எனவும் விளக்குகின்றனர். இம்மெய்ப்பாட்டியல் நூற்பாவையும் உரையையும் நோக்க, உறுப்பு அறுபடுவதால் சினம் எழுகிறது எனவோ, சினத்தின் வெளிப்பாடாக உறுப்பு அறுக்கப்படுகிறது எனவோ கருத இடம் உள்ளது. மனித மெய்ப்பாடுகளே முதன்மைப்படுத்தப்பெற்றுக் கூறப்பட்டாலும் பறவை, விலங்கு போன்ற உயிர்களும், தேவர் நாகர் போன்ற மீயுயிர்களும் உறுப்பறையிலுட்படலாம்.

**'முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று'**
**(கலி.52)**

**என்பது உறுப்பறையான் வந்த வெகுளி**

எனும் பேராசிரியர் உரைப்பகுதி இதனை ஒருவழியுணர்த்தும்.

**அணுகல்**

உறுப்பறையைக் குறிக்க, 'அறு' என்பது தவிர வேறு சொற்களும் காணப்பட வாய்ப்புண்டு. 'அறுப்பேன் எனல்', 'அறுத்தல்' ஆகிய இருநிலைகளிலிது அமையும். தாமே தம் உறுப்பறுத்தல், பிறருறுப்பறுத்தல் என்பனவும் வரக்கூடும். தற்செயலாக (யதேச்சையாக) உறுப்பறுத்தலா, அல்லது கருதிச் செய்தலா (intentional) என வகைமை கருத முடியும். விபத்து, போர், நோய் காரணமாக அறுவை செய்தல் (amputation) போன்ற சூழலும், தண்டனை எனும் விளைவும் வெளிப்பட இடமுண்டு. இலக்கியத்தில் உறுப்பறை வரும்போது கருவாகவா, திருப்பமாகவா, முடிவாகவா வருகின்றது எனவும் பார்க்கலாம். எத்தகைய பாத்திரங்கள் உறுப்பறைக்கு உட்படுகின்றனர், என்னென்ன உறுப்புகள் அறுக்கப்படுகின்றன எனவும் காணக்கூடும். அரசியல், சமயம், சமுதாயம் போன்று, எச்சார்பு வெளிப்படுகின்றது என்பதும் கருதப்படலாம். 'வெறுப்ப வந்த வெகுளி'தான் எல்லா உறுப்பறையிலும் வெளிப்படுமா எனவும் காணலாம்.

**சொற்கள்**

ஒருசொல் நீர்மைத்தாகத் தோற்றம் தரும் உறுப்பறை என்பதற்கு ஒத்த, இணையான சொற்பயன்பாடு, சுந்தரர் தேவாரத்தில் 'அங்கம் சிதை' (9.7) என்பதில் தென்படுகிறது. மேலும் அப்பொருள் தரத்தக்க வினைப்பயன்பாடு பலவும் காணப் படுகின்றன. ஏறத்தாழ 50 வினைச்சொற்கள், உறுப்பைக் குறிக்கும் சொற்களை அண்மியும் தொடர்ந்தும் வந்து இக்கருத்தைத் தருகின்றன (காண்க. இணைப்பு-1). அடு, ஈர், கொய், துணி, வெட்டு என்பன போன்ற தனிச்சொற்களும், அறுப்புண், கொய்துகுறை, சின்னபின்னஞ்செய், துண்டமிடு, பொதக்குத்து போன்ற சொல்லமைப்பு நிலையும் காணப்படுகின்றன. எனினும் வழக்கில் காணப்படும் சிவு (வீசு > சிவு : haplology), வாங்கு போன்றன இடம்பெற வில்லை.

பிறநூல்களுக்கு வேறாக, கல்லாடம் 'வரன்முறை செய்' என்ற பயன்பாட்டைத் தருகின்றது.

> புதவு தொட்டெனத் தன் புயன்முதிர் கரத்தினை
> வரன்முறை செய்த கூன்மதிக் கோவும் (கல்.100.5-6)

எனக் கைதறித்த பொற்கைப்பாண்டியன் நிலை சுட்டப்படுகின்றது. இக்கதை ஏற்கெனவே சிலப்பதிகாரத்தில் (23.51-52) கூறப்பட்டதாகும்.

உறுப்பறை பற்றிய இச்சொற்களில், பொதுச்சொற்களும் சிறப்புச் சொற்களும் உள்ளமையை இனங்காணலாம். குறிப்பிட்ட உறுப்புக்கேற்ப இவ்வினைச் சொற்கள் மாறுபடக்கூடும். சில அருகிப் பயன்படுவனவாகவும் பிறசில பெருவரவினதாகவும் அமையலாம். செய்வோர் - செயல் - சூழல் என்பனவற்றிற்கேற்பவும் நூலாசிரியருக் கேற்பவும் கூடச் சொற்பயன்பாடு காணப்படலாம்.

தரவுகளில், உறுப்பு ஊனஞ் செயல் தொடர்பாக இந்தச் சொற்கள் ஆளப்பட்டாலும், வினைச் சொல் தனித்து எல்லா விடத்தும் அப்பொருளே தரும் எனத் தமிழ் வழக்கில் தோன்ற வில்லை. எனவே இவற்றைப் பொதுச்சொல் என்று சொல்ல முடிகிறதேயன்றிச் சிறப்புச் சொற்கள் எனப் பட்டியலிட வியலவில்லை 'எறிந்த சண்டி, இடந்த கண்ணப்பன்' (தேவா.சுந். 83.6) என்பதுபோல் அருகி, உறுப்புச் சுட்டு இன்றி, சூழலால் உறுப்பறை உணர்த்தல், வினைச்சொல்லில் அமைகின்றது.

இட, ஈண்டு, சூல், பறி, பிடுங்கு, பொதக்குத்து ஆகியன கண்ணுக்கு மட்டுமே வருகின்றன. உகு, தகர் என்பன பல்லுக்கும், கிழி வாய்க்கும் அமைகின்றன.

அறு, ஈர், கொள், துணி என்பன மிகுந்து பயில, உய், ஓச்சு, சேது, திருகு, துமி என்பன அருகி வந்தன.

வெவ்வேறு வினைச்சொற்கள் ஒரே செயலுக்கு அமைவது மொழிவளம் எனக் கூறல் தகும். கழற்சிங்கர் தம் தேவியின்கையை வெட்டியமையைத் திருத்தொண்டர் திருவந்தாதி (64) 'கை தடிந்தான்' எனவும், பெரியபுராணம் 'செங்கை வளையொடும் துணிந்தா ரன்றே' (பெரிய.கழற்.10) எனவும் தடி - துணி என வெவ்வேறு வினைச்சொல்லோடு தருவது உன்னத்தக்கது. அவ்வாறே சண்டேசுர நாயனார் தம் தந்தையின் காலை வெட்டியமையை, 'தாள்கள் சிந்தும்', 'தாள்கள் துணித்த' எனப் பெரியபுராணமும் (பெரிய.சண்டே. 51,52), 'மழுவினாலெறிந்த' எனத் திருத்தொண்டத் தொகையும் (3), 'தாதை தாளைக் கூர்மழுவொன்றா லோச்ச', 'தாதையைத் தாளற வீசிய' என அப்பரும் (தேவா.அப். 65.6, 187.8), சிந்து - துணி - எறி - ஓச்சு - வீசு என்ற வேறுவேறு வினைச்சொல்லால் தருகின்றனர். இலக்கிய ஆசிரியன் புதியபுதிய சொல்லைச் சேர்ப்பது, களை (சீவக. 2795), கொய் (கம்பன். 10216), சின்னபின்னங்கள் செய் (கம்பன். 5202), சேது (திருவாசகம். திருத்தோணோக்கம்.7), துமி (கம்பன். 7598), பொதக்குத்து (நீலகேசி. 770) போன்ற பலவற்றில் புலப்படுகின்றது.

**உறுப்புகள்**

சிதைக்கப்படும் உறுப்புகள் எவையெவை என்பதையும் இலக்கிய வாயிலாகக் கண்டு பட்டியலிட முடிகிறது. உறுப்பறை எனவும் (தொல். பொருள். 256), உறுப்புக்குறைபட்டு எனவும் (பெருங். 4.2.36), அங்கம் சிதைத்து எனவும் (தேவா. சுந்.9.7) பொதுவாக வருவன தவிர, கண் (நயனம்), கலை, கழுத்து, கால் (தாள்), கை (கரம்), கொடிறு, சிறகு, செவி (காது), தலை (சிரம், முடி), தோள் (புயம்), பல், முகம், முலை (கொங்கை), மூக்கு (நாசி), மேல் (?), வயிறு, வாய், வால், வெரிந் என்பனவும் சிதைவுறல் அறியப்படுகின்றன. சந்திரனின் கலை (தேவா.சுந்.16.9), மலையின் சிறகு (பாரத. 761உரை), அனுமனின் வால் (கம்ப. 6880) என்பனவும் சிதைவுறுதல் பட்டியலிலமையும் (பார்க்க, இணைப்பு-2). 'நாக்கு அறுத்தல்' என்பது வெளிப்படையாக அமையாதபோதும், 'போழ்க என் நாவே' (புறம். 132.2) என்பதிலும், 'குசத்தி நாக்கைக் கூழையாய் அறுத்தாலும் குடம் இரண்டுகாசென்பாள்' எனப் பழமொழியிலும் அமைவது குறிப்பிடத்தக்கது.

ஒருவரின் ஒரு உறுப்பு துண்டிக்கப்படுதல் என்பதும், பல உறுப்பு சிதைக்கப்படுதல் என்பதும் உண்டு. சூர்ப்பணகையை இலக்குவன் உறுப்பறை செய்வது ஒன்று முதல் மூன்றுறுப்பளவும் அமைக்கப்படுகிறது.

> கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்
> (திவ்விய. 600)

> கருமக ளிலங்கையாட்டி பிலங்கொள்வாய் திறந்துதன்மேல்
> வருமவள் செவியும் மூக்கும் வாளினால் தடிந்த எந்தை
> (திவ்விய. 1292)

> இளைய வீரன்
> அல்கிய திருவைத் தேற்றி, அவளுடைய செவியும் மூக்கும்
> மல்கிய முலையும் கொய்தான் (கம்ப. 10216)

தலையரிதல் என்பது உறுப்பறையாகவன்றி, கொலையாக அமையலாம். தலை உறுப்பாக அமையினும், தலை நீங்குதல் உயிர் நீக்கம் ஆகும் என்பதால் இவ்வெண்ணம் எழுகின்றது. எனினும், தேவர் - அரக்கர் என்ற நிலையில் பல தலைகளில் ஒன்று/சில அறுபடுதல் இங்கு உறுப்பறையாகக் கருதலாம். பிரம்மனின் ஐந்தலையிலொன்று அறுபடுகின்றது:

***நிறங்கிளர் செந்தாமரையோன் சிரமைந்தி***
***னொன்றறுத்த நிமலர் கோயில்*** (தேவா. ஞான. 131.7)

இராவணனின் (சில) தலை(கள்) சிவப்படுகின்றன:

***சேம மதிள் சூழிலங்கைக் கோன்***
***சிரமும் கரமும் துணித்து......*** (திவ்விய. 1702)

பலரின் பல உறுப்புகள் சிதைத்தல் என்ற நிலையில், சிவபெருமானின் செயல், உறுப்புகளின் பட்டியலுடன் தரப்படுகின்றது.

***அரிபிரமன் தக்கன் அருக்க னுடனே***
***வரு மதி வாலை வன்னி நல் இந்திரன்***
***சிர முக நாசி சிறந்த கை தோள் தாள்***
***அரனருள் இன்றி அழிந்த நல்லோரே*** (திருமந். 358)

திருவாசகம், இதனை உறுப்பழிவாகவன்றி, உறுப்புகள் தூய்மை செய்யப்பட்டதாகப் பட்டியலிடுகிறது. இதனை, பக்தி இலக்கியத் தனித்தன்மையாகக் கருதலாம்:

***காமன் உடல் உயிர் காலன் பற்காய்கதிரோன்***
***நாமகள் நாசி சிரம்பிரமன் கரம்எரியைச்***
***சோமன்கலை தலை தக்கனையும் எச்சனையும்***
***தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ***
(திருவா. தோணோ. 11)

பல் கதிரவனுக்கும், மூக்கு கலை மகளுக்கும், கலை (ஒளிக்கதிர்) சந்திரனுக்கும், கரம் நெருப்புக்கும் அகற்றப்படுதல் என்பன, புராண காலத்திற்கு உறுப்பறையைக் கொண்டு சென்றுவிடுகின்றன.

## இலக்கியக்களம்

இலக்கியக் களனில், காலம், இடம், பாடுபொருள் என்பனவற்றிற்கேற்ப, உறுப்பறை பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன எனக் கணிக்க முடிகின்றது.

சங்க இலக்கியத்தைவிட, பக்தி இலக்கியக் காலத்தும், காப்பியச் சூழலிலும், புராணப் பொருண்மை நுவலுமிடத்தும் உறுப்புச் சிதைவு, ஒப்பீட்டு நிலையில், மிகுதியாகப் பேசப்படுகின்றது. நிகழ்வு என்று எடுத்துக்கொண்டாலும், போர்க்களக் காட்சி வருணனை என்று பார்த்தாலும் சங்க காலத்தைவிட, பின்பே குறிப்புகள் பெருகி அமைகின்றன.

நற்றிணை தரும் திருமாவுண்ணி (216), புறநானூறு அளிக்கும் வீரத்தாய் (278), அகநானூறு சுட்டும் அன்னி மிஞிலியின் தந்தையின் கண்களைக் கோசர் பிடுங்கியது (196, 262) என்பனவே சங்க இலக்கியம் தருவன.

பதினெண் கீழ்க்கணக்கில் அருகி, நாலடி (84, 123), பழமொழி (115, 189), நான்மணிக்கடிகை (72), சிறுபஞ்சமூலம் (76), ஏலாதி (50) என்பன ஓரிரு குறிப்புகளை, அறங்கூறலாக, செயல் - விளைவு சுட்டலாகத் தருவதுடன் அமைகின்றன.

சிலப்பதிகாரம், கண்ணகி தன் மார்பைத் திருகியெறிந்ததைத் தந்ததுடன், பொற்கைப் பாண்டியன் செயல், போர்க்களக் காட்சியில் உறுப்புச் சிதைவு என்ற சிலவற்றையே அளித்தது.

பிற காப்பியங்களில், மணிமேகலை குறிப்புத் தராதபோதும், பெருங்கதை, சிந்தாமணி, நீலகேசி, பாரதவெண்பா போன்றன அருகி ஓரிரு குறிப்புத்தர, கம்பராமாயணம் சுமார் 45 இடங்களில் உறுப்பறையைச் சுட்டுகின்றது. சூர்ப்பணகையின் உறுப்புச் சிதைவு, போர்க்களக் காட்சி என்பன கம்பனில் மிகுகளன் அமைக்கின்றன.

வைணவ, சைவ பக்தி இலக்கியங்களை நோக்க, உறுப்பறை அமையும் வகை தனித்தன்மையுடையதாகத் தென்படுகின்றது. திவ்வியப்பிரபந்தம், இராமன் காகத்தின் கண்ணை அழித்ததையும், இலக்குவன் சூர்ப்பணகையின் உறுப்புச் சிதைத்ததை (ப் பன்முறை)யும், இராவணன் தலை, கரம் அரியப்பட்டதையும் தருகின்றது. பன்னிரு திருமுறை கடவுள் செயலிலும் நாயன்மார் செயலிலும் உறுப்பறையை இணைக்கின்றது. திருமாலின் கண், பிரமனின் தலை, சூரியனின் பல், அக்கினியின் கை, இந்திரனின் தோள், நமனின் கால்...எனச் சிதைவுப் பட்டியல் நீள்கிறது. திருத்தொண்டர் பற்றிய தொகையும் அந்தாதியும் புராணமும் சண்டி தந்தையின் காலையும், கலிக்கம்பர் மனைவியின் கரத்தையும், செருத்துணையும் கழற்சிங்கரும் தேவியின் மூக்கையும் கையையும் முறையே அரிந்ததையும் முதன்மைப்பட மொழிகின்றமை கண்கூடு.

அரசியல் அல்லது அரசநீதி காரணமாக அமைந்ததாகக் கோசர் அன்னி மிஞிலியின் தந்தையின் கண்களைந்தது, பொற்கைப்பாண்டியன் தன் கையையே அரிந்தது என்பன அமையும். சமயம் அல்லது சமயநீதி என்பது செருத்துணை, சண்டி போன்றோர் செயலில் பொருந்தும். பிறன்மனை நயந்தவிடத்து, 'காணின் குடிப்பழியாம் கையுறின் கால் குறையும்' என நாலடியார் தருவது (84) சமுதாயச் சார்புடையது. இலக்குவனின் செயல் இவற்றிலிருந்து

வேறுபட்டு, தனிமனித நிலை காட்டித் தன் ஆளுமை/ஆதிக்கம் எனப் புலப்படுவதாகக் கூறலாம். இதனையும், தம்மைத்தாமே உறுப்பறை செய்தலையும் உளவியல் பார்வையிலும் அணுகக்கூடும். மேலும், சுக்ரீவன் போர்க்களத்தில் கும்பகருணனின் செவியும் மூக்கும் பறித்ததும் (கம்ப. 7265, ........) தனியே அணுகப்படலாம்.

**தம்முறுப்பறை**

குறிப்பிட்ட ஒரு காரணம் அல்லது சூழல் தான், தாமே தம் உறுப்பை அழிப்பதற்கோ அறுத்தகற்றுவதற்கோ காரணமாயிற்று எனக் கணிக்கவியலவில்லை. பல காரணம், பல சூழல் தென்படுகின்றன. மேலும், அறியாமை என்பதன் குறியீடாகவும் இது அமையலாம் என்பதைத் தானே தன் கண்ணைக் குத்துதலில் நீலகேசி புலப்படுத்துகின்றது:

> **தன் கையிற் றன்கண்ணைத் தானே பொதக்குத்தி**
> **யென்செயக் குத்தினை யென்பார் பிறரில்லை** (நீல. 770)

மார்பை அறுப்பேன் எனப் புறநானூற்று வீரத்தாய் கூறுவதற்கும், அதனைச் செய்த திருமாவுண்ணி, கண்ணகி நிலைக்கும் வேறுபாடு உளது. தவறு நிகழ்ந்தால் தண்டனையுண்டு; தன் மகன் புறமுதுகிடல்வழித் தவறினால் தான் (அவன்) தண்டிக்கப்படுதல் என்ற வஞ்சினங் கூறுநிலை முன்னதில் அமையும். பொற்கைப் பாண்டியன் தன் கரத்தை வெட்டிக் கொண்டதும் தவறு-தண்டனை எனும் இவ்வகையினதே. ஆயின் இங்கு, அறியாது செய்த தவறு என்ற பாங்கு வேறுபாடாகும். அன்றியும் திருமாவுண்ணி கண்ணகி நிலை, தன்னை வருத்துதல், தன்னழிவு - தற்சிதைவு என்ற நிலையில் தற்கொலையோடு அண்மி வருகிறது. தவறிழைத்தவர் பிறராக, தன்னைத் தானே தண்டித்தல் என்பது உளவியலாளரால் குற்றவுணர்வு வெளிப்பாடாகச் சுட்டப்படுவதுண்டு.

உணர்வு மிகை என்ற நிலையில், வருத்த மிகுதியால் ஏற்பட்ட உளச் சிதைவு, நிலைதடுமாற்றம், எதிர்ப்புணர்ச்சியைத் தன்முகமாகத் திருப்பிவிடுதல் என. இதனை அணுகலாம். அல்லது தன்மேல் ஏற்படும் கழிவிரக்கம், பிறரும் தம்மேல் இரக்கம் கொள்ள வேண்டுமென்ற ஆழ்மன/உணர்விலிமன நிலையாகி வெளிப்பட்டுத் தன்னுறுப்புச் சிதைவில் புலப்படுகிறது என அணுகலாம்.

வெறுப்பு/சின மிகுதி போல அன்பு மிகுதியும் தன்னை உறுப்பறை செய்வதில் புலப்படும் என்று தெரிகிறது. கண்ணை இடந்து அப்பிய கண்ணப்பரைக் குறித்துக் 'கண்ணப்பனொப்பதோர்

அன்பின்மை கண்டபின்' (திருவாச.திருக்கோ. 4) எனக் கூறுவதில் அன்பு (மிகுதி) சுட்டப்படுவது இவ்வெண்ணத்தை ஏற்படுத்துகின்றது. தான் வழிபடும் இறையிலிங்கத்தின் கண்களில் செந்நீர் வடிந்த சிக்கலான சூழலில், அதனைச் செவ்வையாக்கச் செயல்படுவதாக இது அமைகின்றது.

கண்ணை இடந்து ஈதல் என்பது பன்முறை வருவது அதற்கொரு தொன்மச்சாயல் (archetype) வழங்குவதும் கருதத் தக்கது. 'கண்ணே வேண்டுமெனினும் ஈயக் கடவேன்' (கம்பன். 1522) என்ற தசரதன் சொற்களும்; திருமால் ஆயிரம் பூவால் சிவனை அர்ச்சிக்கும் முயற்சியில் ஒரு மலர் குறைந்தபோது தன் கண்ணைச் சூன்றதும் (தேவா. அப். 55.6, 65.9, 100.4), புத்தன் தன் கண்ணை அகழ்ந்து வழங்கியதாக நீலகேசி கூறுவதும் (நீல. 205), கண்ணப்பரின் செயலும் (திருத். திருவந். 11), கண்ணை அழித்தலாகவன்றி, அளித்தலாக - இழத்தலாகவன்றி ஈதலாக - கெடுத்தலாகவன்றி கொடுத்தலாக அமைகின்றன. இன்றைய 'கண்தானத்தின்' ஊற்றுக்கண் போலும் இது.

கண்ணை அழித்தல் என்பது மேலும் இரு வகையாகப் புலப்பட வாய்ப்புளது. கணவனான மன்னன் திருதராட்டிரன் பார்வையின்மை பற்றி, காந்தாரி (நீதி தேவதை சிலை போல?) கண்ணைக் கட்டிக்கொள்ளுதல் ஒரு வகை. கண்ட காட்சியின் கொடுமை மிகுதி பற்றி, இனிக் காணவிரும்பாமல் தம் கண்ணைத் தாமே கெடுத்தல் என்பது பிறிதொரு நிலை.

இராமனுக்கு முடியில்லை, காடே செல்வான் என்று கேள்வியுற்று, தொடர்ந்த நிகழ்வுகளைக் கண்டு, துன்பத்தின் எல்லையைத் தொட்ட மக்கள், 'விழி போயிற்று இன்று என்றார்' (கம்பன். 1688) எனவும், 'பெண் கொடுவினை செயப்பெற்ற நாட்டினில் கண்கொடு பிறத்தலும் கடையென்றார் சிலர்' (கம்பன். 1740) எனவும் தரப்படுவதுடன், தங்கள் கண்ணையும் அழித்துக் கொண்டது, 'சுரிகையின் கண்மலர் சூன்று நீக்கினார்' (கம்பன். 1777) எனத் தரப்பெறுகின்றது. தம் நிலைக்கு இரங்கல், தாமே தம்மை வருத்தல், உயிர்வாழ விரும்பாமை எனத் தொடர்நிலையாவது குறிப்பிடத்தக்கது.

சிபி புறவுக்காகத் தன் தசையைப் பருந்துக்கு அரிந்து இட்டமை தன்னுறுப்பறையாகக் கருதத்தக்கது. மேலும், அறியாமையும், தவறான எச்செயலும், தன்னைத்தானே உறுப்பறை செய்வதற்கு ஒப்பாகும் என்ற கருத்து, இராவணனுக்கு மாரீசன் கூறும் அறிவுரையில் வெளிப்படுகின்றது:

> **அற்ற கரத்தோடு உன்தலை நீயே அனல்முன்னில்**
> **பற்றினை உய்த்தாய்...... (கம்ப. 3245)**

இவற்றிலிருந்து, தம்முறுப்பறையின் ஈரெல்லைகள் வெளிப் படுகின்றன.

## தண்டனையாகப் பிறர் உறுப்பறை

எத்தகைய குற்றங்களுக்கு எத்தகைய உறுப்பறை தண்டனையாகிறது என்பது தனியாய்வுக்குரியது. காலந்தோறும் இதில் வேறுபாடமைகிறதா எனக் காணலாம். இன்ன குற்றத்திற்கு இன்ன உறுப்பைச் சிதைத்தல் என்றோ, எந்த உறுப்பு குற்றத்திற்குக் காரணமாயிற்றோ அதை அறுத்தல் என்றோ, இத்தகைய எந்த முறையும் - தொடர்பும் இன்றி, நீதி செய்தலைத் தன் கையில் எடுத்துக்கொண்டு தான் வேண்டியவாறு உறுப்பறுத்துத் தண்டித்தல் என்றோ பலவாறு காணமுடிகிறது.

அன்னி மிஞிலியின் நிகழ்வில், அவள் தந்தையின் பசு கோசர்களின் வயலில் புகுந்து பயிரை அழித்ததால் அத்தந்தையின் கண்கள் பறிக்கப்பெறுகின்றன. இதில் ஆவின் தவறுக்கு/செயலுக்கு அதன் உடமையாளன் தண்டனை பெறுவது, 'ஒருவர் தவறுக்கு இன்னொருவர் தண்டனை பெறுதல்' என்பது போலாகிறது. முத்தொள்ளாயிரம், 'உழுத உழுத்தஞ்செய் ஊர்க்கன்று மேய கழுதை செவி யரிந்தற்று' என்பது ஒருவகையில் இதனை ஒத்தது. மேலும் 'அறியாப்பிழை/சிறுதவறுக்குப் பெருந்தண்டனை' என்ற தோற்றமும் இங்குச் கோசர் செயலில் புலப்படுகின்றது. உறுப்பறையில், கண்களைதல் மிகக் கொடுமையான பெருந்தண்டனையாக அமைகின்றது.

பிறர் மனை புக்க தவறுக்குக் கால் குறைத்தல் தண்டனையாக நாலடியாரில் வெளிப்பட்டது ஏற்கெனவே சுட்டப்பெற்றது. களவு செய்தால் கைகுறைத்தல் கண் சூல்தல் என்பன தண்டனையாவதை இறையனார் களவியல் உரை (ப. 25) குறிப்பிடும்.

இறைமைக்கு எதிரான தவறுகள் பல்வகையான உறுப்புக் குறையால் தண்டிக்கப் பெறுகின்றன. இறைவனே தண்டித்தல், மனிதர் தண்டித்தல் என இதன்கண் இருவகை அமைகின்றன. முழுமுதற் கடவுள் என்ற நிலையில் சிவன் பிறகடவுளர் சிலரை இவ்வாறு தண்டித்தல் காணப்படுகிறது. பிரமனின் தலைகளுளொன்று, சரஸ்வதியின் மூக்கு, நெருப்பின்கை, சூரியனின் பல் என்பன சிதைக்கப்பெறுகின்றன.

சுருதியான் றலையு நாமகண் மூக்குஞ் சுடரவன் கரமு
முன்னியங்கு
பரிதியான் பல்லு மிறுத்தவர்க் கருளும் பரமனார்.......
(தேவா. ஞான. 376.5)

மேலும், இந்திரனின் தோள், சந்திரனின் கலை, யமனின் கால் என்பனவும் சிதைக்கப்பெறுகின்றன.

புரந்தரன் றன் றோடுணித்த புனிதா
(தேவா.அப். 245.2)

சோம னொளி கலைகள் பட வுழக்கி
(தேவா.அப். 254.5)

நமனை யொரு கால் குறைத்த நாதர்
(தேவா. அப். 267.2)

இவர் என்னென்ன குற்றம் செய்து இத்தகு தண்டனை பெற்றனர் என்பது காணப்பெற்றால், சமூகத்தில் குற்றம் - தண்டனை தொடர்புக்கும், சட்டத்தில் குற்றம் - தண்டனை தொடர்புக்கும், புராணத்தில் அவற்றின் தொடர்புக்கும் உள்ள இணைவோ வேறுபாடோ அறியப்பெறலாம். தக்கன் வேள்வியில், சிவன் அழைக்கப்பெறாத நிலையில், பிறதேவர் அழைக்கப்பெற்ற பான்மையில், உரிய இடம் தனக்கு அளிக்காது மதியாது ஒதுக்கப்பட்ட நிலையில், அவ் அவமரியாதைக்குப் பழிவாங்கலாக சிவனால் இத்தண்டனைகள் வழங்கப்பெற்றது சிந்திக்கத் தக்கது. மேலும் குறளையுரைத்ததால் (புறங்கூறல்), அயன் சிரத்தை சிவன் வெட்டிய குறிப்பும் காணப்படுகிறது (11ஆம் திருமுறை. நக்கீரர். போற்றித். 18,19). இவையனைத்திற்கும் 'வெறுப்ப வந்த வெகுளி' காரணம் எனக் கூறல் சாலும்.

தம்முறுப்பறையுடன் ஒப்பிடும்போது, கவலை வருத்தம் அன்பு என்பனவும் உறுப்பறைக்கு நிலைக்களனாவது முரண் நிலையில் இங்கு உடன்வைத்து எண்ணத்தக்கது. எதிர்ப்புணர்ச்சியைக் காட்டுவதற்கு இருநிலையும் பயன்படுவதாகத் தெரிகிறது.

## இலக்கியப் பயன்பாடு/வாழ்வியலில் இடம்

மனித வாழ்வியலில் உறுப்பறையின் இடம் என்ன? இலக்கிய ஆக்கத்தில் அதன் பயனென்ன? ஒரு செயலின் தொடக்கமாகவா, திருப்பமாகவா, முடிவாகவா, தீர்வாகவா உறுப்பறை அமைகின்றது? முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் (தொடக்கம் - திருப்பம் - உச்சம் - வீழ்ச்சி - முடிவு) என்ற அனைத்துப் படிநிலையிலும்

அமைதல் கூடுமா? தனிப்பாடலில், பக்தி இலக்கியத்தில், காப்பியத்தில் அவை உட்படும் நிலைகள் ஒருதன்மையினவா வேறுபட்டனவா? இவை வரலாற்றுத் தன்மையுடையனவா இல்லையா? - நிகழ்வா கற்பனையா? போன்று எழும் வினாக்கள் உள.

ஆண் பெண் வேறுபாடின்றி மனிதர் உறுப்பறைக்குட்பட்டதை இலக்கியம் காட்டுகின்றது. எவ்வயதினர் என்று விதந்தோதப் படாவிட்டாலும் இளையர் - முதியர் என்று காட்டப் பெறாமையால் இடை வயதினர் (adult) என்று கருத முடிகிறது. சிபி, பாண்டியன் போன்றோரால் அரசனும்; அன்னிமிஞிலி, திருமாவுண்ணி நிகழ்வால் பொதுமக்களும்; கழற்சிங்கன் தேவி, சூர்ப்பணகை ஆகியோரால் அரச-அரக்கப் பெண்டிரும்; சண்டேசுர நாயனார் கதை வழி அந்தணரும் இதற்கு உட்பட்டமை தெரிகிறது. குடிச்சிறப்புரைத்தலாக, உவமையாக, நிகழ்வு கூறுதலாக (narration of incident) இவை இலக்கியத்தில் இடம்பெறுகின்றன. தம்மை வெளிப்படுத்தவும், தம் கருத்தைச் செயல்படுத்தவும் மனிதரால் இவை கையாளப்பெற்றதாகக் கருத முடிகிறது. இதைச் சரியென்று சொல்வதற்கில்லை. இந்நாளைய சட்டம் - நீதிமுறை இதுபற்றி என்ன கூறுகிறது என்ற தனியாய்வும், இதனுடனான அதன் ஒப்பீட்டாய்வும் பல தெளிவுகள் வழங்க முடியும்.

காரணமாக அல்லது தொடக்கமாக, முதனிகழ்வாக உறுப்பறை அமையாது, காரியமாக, விளைவாக, தொடர்ந்து நிகழ்வுகள் ஏற்படற்கேற்ற வழியாக உறுப்பறை அமைவது தெரிகிறது. வீரத்தாயின் சொற்களும், திருமாவுண்ணியின் செயலும் உறுப்பறையை முடிவாகக் காட்டுகின்றன; அன்னி மிஞிலியின் கதையில் கோசர் அவள் தந்தையின் கண்ணைப் பறித்தது கருவாகி, அவரழிவு நிறைவாயிற்று. இலக்குவன் அயோமுகியை உறுப்புச் சிதைவு செய்தது முடிவாகவும், சூர்ப்பணகையை அவ்வாறு செய்தது திருப்பமாகவும் காப்பிக் களனில் காட்டப்படுகின்றன. பெரியபுராணம் தரும் மூக்கரிதல், கை தடிதல், தாள் அறுத்தல், கண்ணிடந்து அப்புதல் என்பன விளைவாகி, இறையருளால் அவை மீண்டும் சரியாகுதல் என்பன துய்த்தலாகி நிறைகின்றன. இவை பக்தி இலக்கியத்தின் தனித்தன்மையாகலாம். அன்பின் மிகுதி (altruism) புலப்படும் வண்ணம் அமைந்த கண்ணப்பரின் செயலும் சிபியின் செயலும் 'உச்சம்' (climax) ஆகவும் அமைகின்றன. உயிரிரக்கம் (ஜீவ காருண்யம்) பற்றி சிபி தசையளிக்க, மனிதாபிமானமாக அச்செயல் உருவாவது பாரதிதாசன் சொற்கள் வரை தொடர்வதைக் காணமுடிகிறது.

**வாயைத் திறக்கவும் சக்தி - இன்றி**
**வயிற்றைப் பிசைந்திடும் ஏழைகட்கே - நீ**
**தாயென்ற பாவனையோடு - உன்**
**சதையையும் ஈந்திட ஒப்புதல் வேண்டும்**
**(வாழ்வில் உயர்வுகொள், பா.தா.க. 1, 1988)**

முன் சுட்டிய வண்ணம் இலக்கிய வகைக்கேற்பவும், படைப்பு நோக்கத்திற்கேற்பவும் உறுப்பறையைக் காட்டுதலில் வேறுபாடு அமைகின்றது. கோசர் பற்றிய குறிப்பு வருவதால் அன்னிமிஞிலி கதையில் வரும் உறுப்பறை வரலாறாகலாம். பக்தி புராண இலக்கியங்களில் வருவதும் மீவியல் முடிவு கொள்வனவும் புனைவுப்படைப்பாகலாம்.

முதன்மை-தலைமை மாந்தர் உறுப்பறையிலுட்படல் என்பது சிறிது அருமையாகும். வீரத்தாய், திருமாவுண்ணி, கண்ணகி, பாண்டியன், சிபி, கண்ணப்பனெனத் தாமே தம்மைச் சிதைப்பவரில் தலைமை மாந்தரைக் காண இயல்கிறது. பிற்கால நொண்டி நாடகங்களில், குதிரைத் திருட்டுக்காக மாறுகை - மாறுகால் வாங்கப்படுபவனைத் 'தலைவன்' எனலாகாது; அதைவிட, இறைவன் அல்லது வள்ளல் பாடல் தலைவனாக அமைவதால் முதன்மை மாந்தன் (primary character) என்று கூறல் பொருந்தலாம். பகைவர் அல்லது எதிரணியினர் உறுப்பறைக்குட்படுதல் மிகுதி.

தவறு செய்யாவிட்டாலும், தூது, தமக்குச் செவ்வியற்றதாக அமைவதால், தூதுவனின் உறுப்பை அறுப்பது உண்டு என்பதை இலக்கியம் வழி அறியமுடிகின்றது. நந்திக்கலம்பகம்,

**......நந்தி தன் மறவோர்க ளிடத்தே**
**பெண்ணெனன்பவன் வாயைக் கிழி**
**தூதன் செவி அறடா (மிகை. 1)**

எனத் தருவதும், கம்பராமாயணம், தூதுவனாக வந்த அனுமனை, 'தொல்லை வாலை மூலம் அறச் சுட்டு......' (5921) எனக் கருதுவதும் இதற்குச் சான்றாம். எதிர்ப்பைக் காட்டும் நோக்கம் இங்கு வெளிப்படுகின்றது.

கொல்வதற்குப் பதிலாக அல்லது ஒரு முன்படி நிலையாகக் கூட உறுப்பறை அமைய முடியுமோ என்பதைத் தொல்காப்பியச் சூத்திரச் சொல்வைப்பு முறையான, 'உறுப்பறை.......கொலை' என்பதில் உணரக்கூடும். அன்றியும் கம்பனும்,

**இளையவள் தன்னைக் கொல்லாது இருசெவி மூக்கு ஈர்ந்து**
**விளைவு உரை என்று விட்டார்...... (5920)**

எனக் கூறுவதும் இதற்குச் சான்றாகலாம்.

ஊறு செய்யும் நோக்கம் (offence) முதன்மையாக அமையாமல், தற்காப்பு நோக்கில் (defence) ஊனம் செய்யப்பட்டதாக சமாதானம் கூறல்/நியாயப்படுத்தல் குரல் எழுவதை திவ்வியப்பிரபந்தம் தருகிறது. இலக்குவன் சூர்ப்பணகையின் உறுப்பரிந்ததை,

**கருமக ளிலங்கை யாட்டி பிலங்கொள்வாய் திறந்து தன்மேல்**
**வருமவள் செவியும் மூக்கும் வாளினால் தடிந்த எந்தை**
**(1292)**

என இத்தொனியுடன் அமைக்கும்.

போர்க்களத்தில், தாக்குதல் தற்காப்பு ஆகிய இருநிலைகளிலும் உடற்குறை செய்யப்படுதல் வாய்ப்பு எனினும், தொல்காப்பியப் புறத்திணையோ, புறநானூறு பதிற்றுப்பத்தின் புறப்பாடல்களோ உறுப்பறையை வழங்கியதாக, வருணித்ததாகத் தெரியவில்லை. கீழ்க்கணக்கின் களவழியும் இதனை முதன்மைப்படுத்தவில்லை. காப்பியங்களிலும் கம்பராமாயணத்தளவு களக்காட்சியில் உறுப்பழிவு பிறவிடத்து அமையாமை குறிப்பிடத்தக்கது.

### சில எண்ணங்கள்

வெறுப்ப வந்த வெகுளி உறுப்பறைக்குக் காரணம் எனத் தொல்காப்பியம் கூறிய போதும் பிற காரணங்களும் இலக்கிய ஆய்வில் புலப்படுகின்றன.

தம்முறுப்பறுத்தலும் பிறருறுப்பறுத்தலும் ஒத்த சூழலிலோ ஒரே களனிலோ அமையவில்லை.

உறுப்பறைக்கு உட்பட்ட உறப்புகளின் பட்டியல் நீண்டதாக அமைகிறது. குறிக்கும் வினைச் சொற்களும் பலவாக அமைகின்றன.

குற்றத்திற்குத் தண்டனை என்ற நிலையில் உறுப்பறை முன்னிற்கிறது.

தற்காலத்து ஏற்படுவது போன்ற விபத்து, நோய்க்குரிய அறுவை போன்றவற்றால் உறுப்பு நீக்கம் காணப்படவில்லை. போரில் உறுப்பழிவு காணப்படுகிறது. யதேச்சையாகவோ, முதனிகழ்வாகவோ வன்றி, விளைவாக.....பின்னிகழ்வாக உறுப்பறை தெரியவருகின்றது.

ஊனம் பிறவியில் மட்டுமன்றி உறுப்பறையால் இடையிலும் நிகழலாம் என்பது தெரிகின்றது.

உறுப்பறையால் ஏற்பட்ட ஊனம் நீங்குதல் என்பது சமய/புராண/இறைச்சார்பில் மட்டும் அமைந்தது.

ஊனம் மறைய/நீங்கச் செயற்கை உறுப்பிணைத்தல் என்பது பொற்கைப் பாண்டியனிடம் மட்டுமமைந்தது.

அரச, சமூக, பக்திக் காரணமும் உறுப்பறையும் இணைத்துப் பார்க்கப்படல் போல, தற்காலச் சட்டவியலும் உறுப்பறையும் இணைத்துப் பார்க்கப்படல் கூடும்.

மக்கள் வாழ்வியலும் பிறமொழி இலக்கியக் கருத்துகளும் கூட ஒப்பீட்டாய்வில் கருதப்பட்டு, தனித்த எண்ணங்கள் பெறப்படக் கூடும்.

## இணைப்பு-1

### உறுப்பறைச் சொற்கள்

அடு - காட்டா யாயின் ஆண முன்கை யடுதும் யாமென (பெருங். 1.56.109-110)

அரி - போதினைத் தான் மோந்த தேவிதன் மூக்கை யரிய (திருத். திருவந். 64)

அரிந்திடு - தலையை அரிந்திட்டுச் சந்தி செய்தானே (திருமந். 340)

அழி - சிரமுகநாசி சிறந்தகை தோள் தாள்... அழிந்த (திருமந். 358)

அற்று - மூக்கற்றதற் கில்லை பழி (பழ. 115)

அற - சிரமூன்றறத் தன் திருப்புருவம் நெரித்தருளி (திருவாச. பூ. 6)

அறவீசு - தாதையைத் தாளற வீசிய (தேவா.அப். 187.8)

அறவெறி - தாதை தாளற வெறிந்த சண்டி (,, சுந். 55.3)

அறு - நிறங்கிளர் செந்தாமரை யோன் சிரமைந்தி னொன்றறுத்த (தேவா.சம். 131.7)

அறுப்புண்- தேவர் கோனால் சிறகறுப்புண்டு (பாரதவெண். 761 உரை)

இட - எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன் (தேவா.சுந். 88.6)

இழ - கடுப்பத் தலைகீறிக் காலும் இழந்து (பழ. 189)

இற்று - மலையெடுத்தான் சிரம் ஈரைந்தும் இற்றவாறுந்தீபற (திருவா.திருவுந். 19)

இறு - பரிதியான் பல்லு மிறுத்தவர்க்கு (தேவா.சம். 376.5)

இறுத்துக்கொள்-இரவிகளி லொருவன் பல்லிறுத்துக் கொண்டார் (தேவா.அப். 310.9)

ஈண்டு - மெய்ம்மலர்க் கண்ணை ஈண்ட (தேவா. அப். 49.5)

ஈர் - இளையவள்.....இருசெவி மூக்கு ஈர்ந்து (கம்ப. 5920)

ஈராவிடு - கொடிமூக்கும் காதிரண்டும் ஈராவிடுத்த (திவ்விய. 3775)

உகு - பகலவன்றன் பல்லுகுத்த படிறன் (தேவா.அப். 248.10)

உடை - கொடிறு உடைக்கும் கூன் கையர் (குறள். 1077)

உய் - உன்தலை நீயே அனல்முன்னில் பற்றினை உய்த்தாய் (கம்ப. 3245)

எறி - தாதை தாள் மழுவினா லெறிந்த (தேவா.சுந்த. 39.3)

ஒடி - ஒடித்தனன் வெரிநை (கம்ப. 401)

ஓச்சு - தந்தை தாளைக் கூர்மழு வொன்றா லோச்ச (தேவா.அப். 65.6)

கடி - தமையனைத் தலையும் கடிந்த வெம்தாசரதி (திவ்விய. 391)

களை - கால் கை களைந் தாங்கே (சீவக. 2795)

கிழி - பெண்ணெனன்பவன் வாயைக் கிழி (நந்தி. மிகை.1)

குத்து - (பார்க்க:பொதக்குத்து)

குறை - உறுப்புக்குறைபட்டீருட்பட் (பெருங்.4.2 35.36)

கெடு - கண்கெட்டார் (சிறுபஞ்ச. 76)

கொய் - அவருடையச் செவியும்........முலையும் கொய்தான் (கம்ப. 10216)

கொய்து குறை - கொங்கை செவி நாசி கொய்து குறைத்தான் (கம்ப. 6880)

கொள் - தேவர் கண்கொண் டானை (தேவா. அப். 240.3)

சிதை - திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் (தேவா.அப். 267.4)

சிந்து - தந்தை......தாள்கள் சிந்தும் (பெரிய.சண். 51)

சின்ன பின்னஞ் செய் - உங்கை மூக்கும் உம்பியர் தோளும் தாளும் சின்ன பின்னங்கள் செய்த அதனை (கம்ப. 5202)

சுடு - தொல்லை வாலை மூலம் அறச் சுட்டு (கம்ப. 5921)

சூல் - நாடகம் நயந்து காண்பார்......கண் சூன்றும் (சீவக. 2989)

செறு - தக்கன்றன் தலையைச் செற்ற தலையவன் (தேவா.அப். 299.7)

சேது - தாதை தாளிரண்டும் சேதிப்ப (திருவாச.தோணோக். 7)

தகர் - உரமேற்ற விரவி பற்றகர்த்து (தேவா.அப். 254.5)

தடி - அங்கவள் கை தடிந்தான் (திருத்-திருவந். 64)

தடிந்திடு - தலையைத் தடிந்திட்டு தானங்கி யிட்டு..... (திருமந். 340)

தறி - வடிவாளை வாங்கி.....கை தறித்து (பெரிய.கலிக். 8)

திருகு - இடமுலை கையால் திருகி (சிலம்பு. 20.43)

துண்டமிடு- இடறிய தாதைதாள் துண்டமிடு சண்டி (தேவா.சுந். 16.3)

துணி - செங்கை வாளொடும் துணித்தார் (பெரிய.கழற். 10)

துமி - தோள் தாளை வாள்கொடு துமித்து (கம்ப. 7598)

தேய் - மதிக்கலை சிதையத் திருவிரலாற் றேய்வித்து (தேவா.சுந். 16.9)

நீக்கு - அரக்கி மூக்கை நீக்கி (திவ்விய. 745)

நெரி - வானவர்கோன் புயநெரித்த (தேவா.அப். 290.10)

படவுழக்கு- சோமனொளி கலைகள் படவுழக்கி (தேவா.அப். 254.5)

பறி - கண்ணைப் பறித்தவாறுந்தீ பற (திருவாச.திருவுந்தி. 12)

பிடுங்குறு- கண்ணைப் பிடுங்குறும் சிலவர் (கம்ப.மிகை. 762)

பிடழியச் செறு - கரங் கண் பீடழியச் செற்று (தேவா.சுந். 16.9)

பொதக் குத்து - கண்ணைத் தானே பொதக்குத்தி (நீல. 770)

பொன்றச் சிந்து - திருமாறன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி (தேவா.அப். 254.5)

போக்கு - மூக்கும்போக்குவித்தான் (திவ்விய. 339)

முரி - கல்லாத பேதையன் வீழ்வானேல் கால்முரியும் (நான்மணி. 72)

முறி - காலினோடு கை முறிய (பெரிய. தண்டி. 23)

வார் - மூக்கினைப் பிடித்து வார்ந்தார் (பெரிய.கழற். 6)

வீசு - (பார்க்க - அறவீசு)

வெட்டு - அயன் சிரத்தை வெட்டி (11-ஆம்.நக்கீ.போற்றி. 18-19)

வேறாக் கொள் - வியாத்திரதன் தலையும் வேறாக் கொண்டார் (தேவா.அப். 310.9)

**இணைப்பு-2**

**உறுப்புகள்**

உடம்பு - அரிந்துடம் பிட்டோ னறந்தரு கோலும் (சிலம்பு. 27.168)

கண் - தந்தை கண் கவின் அழித்த (அகம். 196.8,9)

கலை - சோமன் ஒளி கலைகள் படவுழக்கி (தேவா.அப். 254.5)

கழுத்து - கழுத்து அற்றார் (கம்ப. 8100)

கால் - கையுறின் கால் குறையும் (நாலடி. 84)

| | | |
|---|---|---|
| கை | - காலினோடு கைமுறிய | (பெரிய. தண்டி. 23) |
| கொடிறு | - கொடிறுடைக்கும் | (குறள். 1077) |
| சிறகு | - தேவர் கோனால் சிறகறுப் புண்டு | (பாரத. 761. உரை) |
| செவி | - கழுதை செவியரிந்தற்றாகும் | (முத்தொள். 60) |
| தலை | - அறுத்தா னயன்றன் சிரமைந்திலு மொன்றை | (தேவா.ஞான. 30.7) |
| தோள் | - தோளுந் தலையுந் துணிந்து | (சிலம்பு. 26.205) |
| பல் | - அண்பல் இறக் | (சீவக. 2795) |
| முகம் | - சிரமுக நாசி.....அழிந்த | (திருமந். 358) |
| முலை | - ஒரு முலை அறுத்த | (நற். 216.9) |
| மூக்கு | - எழில் நீள்குமிழ் மலர் மூக்கரிந்தான் | (திருத்தொண்.திருவந். 166) |
| மேல் | - அங்கம் ஆம் மேல் அறுந்து | (கம்ப.மிகை. 708) |
| வயிறு | - வால் அறுந்து வயிறு துணிந்து | (கம்ப.மிகை. 708) |
| வாய் | - பெண்ணெனன்பவன் வாயைக் கிழி | (நந்தி.மிகை. 1) |
| வால் | - தொல்லை வாலை மூலம் அறச் சுட்டு | (கம்பன். 5921) |
| வெரிந் | - ஒடித்தனன் வெரிநை | (கம்பன். 401) |

## கூனும் குறளும்

### சொற்பொருளும் வருகையும்

'எண்வகை ஊனம்' என்ற பட்டியலில் தவறாது இடம்பெறுவனவாகக் கூனும் குறளும் அமைகின்றன. இவை பிற ஊன நிலைகளிலிருந்து சிறிது வேறுபட்டன. குருடு, நொண்டி, ஊமை, செவிடு போன்ற பிற ஊனங்கள், உறுப்புக் குறையாக, புலன் குறையாக அமைகின்றன. இவையிரண்டும் இவ்வாறன்றி - அதாவது உறுப்புக் குறையாக அன்றி - உடற் குறையாக வருகின்றன. கூன், உடலின் அமைப்பில் ஏற்பட்ட குறையாகவும், குறள், உடலின் அளவில் ஏற்பட்ட குறையாகவும் காணப்படுகின்றன. இவையிரண்டுமே பிறவிக் குறையாகவோ (congenital deformity) கூன் மட்டும் நோய்/முதுமை பற்றி ஏற்பட்ட குறையாகவோ காணப்படலாம்.

இவ்விரு சொற்களும் தான் தொல்காப்பியம் முதலே வருகை பெறுகின்றன. ஆனால் பிற ஊனங் குறிக்கும் சொற்கள் அங்கு இல்லாதது போல, இச்சொற்களும் ஊனப்பொருளில் வருகை தரவில்லை என்பது ஒப்புமையாகும். செய்யுள் கட்டமைப்பான யாப்பியல் தொடர்பாக இவை அங்கு வருவதும், உடற்கட்டமைப்பு தொடர்பாக இவையே ஊனம் சுட்டுவதும் இணைத்து நினைத்தற்குரியன.

> **நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்**
> **தேறிய நிலத்தே *குறளடி* யென்ப** (தொல்.செய். **35**)

> ***குறளடி* முதலா அளவடி காறும்**
> **உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப** (தொல்.செய். **54**)

எனக் குறளும்,

> ***அசை கூன் ஆகும் அவ்வயின் ஆன*** (தொல்.செய். **46**)

> ***சீர் கூன் ஆதல் நேரடிக் குரித்தே*** (தொல்.செய். **47**)

எனக் கூனும் வருகின்றன. இங்கும், குறள், அளவு தொடர்பானது என்பதும், கூன், அமைப்பு தொடர்பானது என்பதும் போதரும். இதனால் இவை ஒரு பொருள் ஒரு சொல் என்னும் நிலையினவாக அன்றிப் பல பொருள் ஒருசொல் நிலை பெற்று அமைகின்றன. தமிழ்

லெக்சிகன் இச்சொற்களுக்குக் கீழ்வரும் பொருண்மைகளைத் தருகிறது.

கூன் - 1. வளைவு 5. ஆந்தை
2. உடற்கூனல் 6. பெரும்பாத்திரம்
3. கூனன் 7. செய்யுளில் அளவுக்கு மேல் வரும் அசையும் சீரும்
4. நத்தை
(தமிழ் லெக்சிகன், தொகுதி 2, ப. 1082)

குறள்- 1. குறுமை 5. குறளடி
2. ஈரடி உயரமுள்ள குள்ளன் 6. குறள் வெண்பா
3. பூதம் 7. திருக்குறள்
4. சிறுமை
(தமிழ் லெக்சிகன், தொகுதி 2, பக். 1046-1047)

**இணைந்த வருகை**

இக்கூனும் குறளும், ஊனப்பட்டியல்களில் பெரும்பாலும் இணைந்தே வருகின்றன.

(1) சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளு மூமுஞ் செவிடும் (புறம். 28.1-2)

(2) கூனுங் குறளு மூமுஞ் செவிடும் (சிலம்பு. 5.118)

(3) கூனுங் குறளு மூமுங் கூடிய (சிலம்பு. 20.17)

(4) சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று (,, 27.214)

(5) மான்மதச் சாந்தும் வரிவெண் சாந்தும்
கூனுங் குறளுங் கொண்டன வொருசார்
(சிலம்பு. 28.57-58)

(6) கூனுங் குறளு மூமுஞ் செவிடும் (மணி. 12.97)

(7) போகக் கலப்பையும் பொறுத்தனர் மயங்கிக்
கூனுங் குறளு மாணிழை மகளிரும்......
(பெருங். 1.38.177-178)

(8) பாவையு மற்றதன் கோயிலுஞ் சுமக்கும்
கூனுங் குறளு மேனாங் கூறிய (பெருங். 4.10.70-71)

(9) சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளும் ஊமையுஞ் செவிடும்
(திவாகரம், ப.295)

(10) கூனொடு குறளும் சிந்தும் சிலதியர் குழாமும்
(கம்பன். 799)

(11) சிந்தொடு குறளும் கூனும் சிலதியர் குழாமும்
(கம்பன். 1139)

(12) புணரும் கேள்வியர் அல்லர் பொறிஇலர்
கொணரும் கூனர் குறளர் கொழுஞ்சுடர்
(கம்பன். 6786)

(13) குற்ற முடமூமை யலி மருள் செவிடு குருடு
கூன்குற ளென்ச் சொல்லு மெட்டாம்... (ஆசிரிய. 37)

(14) எச்ச மெட்டா மவை குறள் கூனாமை....
(பொருட். 123)

குறுந்தொழிலிளைஞர் குழாம் குறிக்கப்படுமிடங்களிலும், நிகண்டுகளிலுமமையும் பட்டியலிலும் 'இரட்டையராக' இணைந்து காட்டப்படும் இவர்கள் இலக்கியப் பாத்திர நிலையில் எங்கும் அவ்வாறே காட்டப்படுகின்றனர் எனக் கூறவியலாது.

## இலக்கிய வருகை

இலக்கியத்தில் பின்புல மாந்தராக இவரமையும் பாங்கு மேற்சுட்டிய தரவுகளிலும் பிறவிடத்தும் அறியவருகின்றன. எனினும் எல்லாவிடத்தும் அவ்வாறே அமைந்துவிடாது, முன்புலத்தில் இடம்பெறுநிலையும் காணப்படுகின்றது. முன்புலத்திலும், முதன்மை மாந்தராக/தலைமை மாந்தராக வரும் நிலை சிறிது அருகியதே; துணைமை மாந்தர் பாங்கு அமைவது ஒப்பீட்டு நிலையில் எண்ணிக்கையில் மிகுதி கொள்கின்றது. மேலும், இருபாலரிலும் இவை அமைவதும், இவரிடம் செயற்றிறம் காட்டப்படுவதும் தனித்துக் காணற்குரியதாகும். சில அமைப்பொருமைகளும் அமைப்பொழுங்குகளும் புலப்படத் தக்கதாக இவை வருமிடங்களும் உள. பாத்திரப் பெயர்ச்சுட்டுடனும் பெயர்ச் சுட்டின்றியும் அமைந்து வேறுபாடு கொள்வதும் உண்டு. அவ்வாறே, இவ்வூனங்கள் பண்புக் குறைபாட்டின்/தீயபண்புகளின் குறியீட்டுக் குறிப்பு வழங்கியும் வழங்காதும் அமைந்து ஒருமையின்மை தருவதும் காணப்படுகின்றது. ஊனம் ஏற்படுதல், ஊனம் நீங்குதல், ஊனவுரு மேற்கொள்ளுதல் என்றும் கூட இலக்கிய வருகையில் குறிப்புத் தேர முடியலாம். இவை, சுமார் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரையிலான இலக்கியங்களைக் களனாகக் கொண்டு காட்டப்பெறுகின்றன.

## பிறப்பு

கூன், குறள் எனும் குறையுடல் - உயிர்ப்பிறவிகள் தோன்றுவதற்கு உடலியல் ரீதியான காரணங்கள் அமையக்கூடும் என்பதைத் திருமந்திரம் வழி அறியமுடிகின்றது.

பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்.....
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்..... (480)

## நோய்

பிறப்பில் மட்டுமன்றி, பின்பு ஏற்படும் நோய் காரணமாகவும் கூன் எனும் ஊனநிலை அமையக்கூடும் என்பதையும் இத் திருமூல வாசகமே உணர்த்துகின்றது.

வீங்கு கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனு முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே (655)

## மூப்பு

முதுமையால் ஏற்படும் ஊனநிலைகள் பலவற்றுள்ளும் மேற்கண்ட இவற்றையும் இணைத்துக்காண முடியலாம். சிலப்பதிகாரம், கோவலனைக் கருணைமறவனாக மாடலன் வாயிலாக உணர்த்துமிடம் கோல்காலாக ஊன்றி வந்த 'வளைந்த யாக்கை'யை யுடைய முதிய பார்ப்பானை வரைகின்றது.

தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கை மறையோன் றன்னை....
(சிலம்பு. 15.44-45)

வளைந்த யாக்கை என்பதால் கூனாக முதுகு அமைந்தமை கருதப்படலாம்.

முதுமை காரணமாக உருவம் சுருங்குதல்/குறுகுதல் என்பதை, முழுமையாக அன்றியும் 'குறள்' என்பதுடன் சார்த்திக் கருதலாம்; கலித்தொகை ஊனமுற்ற முதுபார்ப்பானை விரிக்கும் சொற்கள் இக்கருத்தைத் தோற்றுவிக்கும்:

திரத் தறைந்த தலையுந் தன் கம்பலுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பான் (கலி. 65.5-7)

கரண்ட, கறளையான உருவமாக இதனைக் கருத முடிகின்றது.

## தலைமை

முன்புலத்தில் அமைகின்ற தலைமைப் பாத்திரம்/பாத்திரங்கள் ஊனமுடையோராகக் காட்டப்படுவது மிகவும் அருமை (கண்ணற்ற திருதராட்டிரன் - சான்று). அதுவும் கூன்/குறள் அவ்வாறமைதல் அருமையிலும் அருமை என்று சுட்டலாம்.

மரபு மாறல் அல்லது மரபு மீறல் என்று கூறத்தக்க நிலையில் அமையும் கலித்தொகை 94-வது பாடல், அகப்பாடற்றலைமைக்கு உரியோரல்லோரை அத்தலைமைப்படுத்தித் தருகிறது. ஏவல்பணி புரியும் கூனுருவினளான பெண்ணும் குறளுருவினனான ஆணும் இங்கு இத்தகு தலைமை பெறுகின்றனர், தலைவன் தலைவியராக.

> "இஃது, 'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்'
> என்பதால் அடியோராகிய கூனுங்குறளும்
> உறழ்ந்து கூறிக் கூடியது (மருதக்கலி. **29**)"

என விளக்கமும் அமைகின்றது. தொல்காப்பியம் (பொருள். 23) புறநடையாகத் தந்த 'அடியோர்', 'வினைவலர்' எனும் பாங்கு இங்கு ஊனராக அமைந்த அந்நிலையினருக்கு விரிவு பெறுகின்றது. தமிழிலக்கியக் களத்தில் இப்பாங்கு பின்பு எக்காலத்தும் தொடர்ந்து அமையவில்லை. எனவே, இது தனிவகையினதாகும் (exception).

## இறைமை

இறைவன் குறையுருக் கொள்ளுதல் என்பதிலும், இறையருளால் ஊனம் நீங்குதல் என்பதிலும் ஊனமும் இறைமையும் தொடர்பு கொள்கின்றன.

திருமாலின் திருவவதாரங்களுள் ஒன்றான 'வாமன' உருவேற்பு முன்நிலைக்கு இடமளிக்கின்றது. தமிழிலக்கியக் களத்தில், முதலில், மணிமேகலை இதனைச் சுட்டுகின்றது.

> நெடியோன் குறளுருவாகி நிமிர்ந்து தன்
> அடியில் படியை அடக்கிய அந்நாள்...... (மணி. **19.51-52**)

தொடர்ந்து, பல நூல்களிலும், சிறப்பாக பக்தி இலக்கியங்கள், சமய/ புராணத் தொடர்புடைய காப்பியங்கள் ஆகியவற்றிலும் இச்செய்தி சுட்டப்பெற்று குறள்-இறைமைத் தொடர்பு பதிவு பெறுகின்றது. குறளாக வந்தது அவ்வாறே தொடராது குறளுரு நீங்குதல் என்பதும் அமைகின்றது.

> மாவலி வேள்வியில் *மாணுருவாச்* சென்று
> (நாலாயிரம். **219**)

> *குறட்* பிரமசாரியாய் மாவலியைக்
> குறும்படக்கி யரசு வாங்கி (,, **418**)

> பஞ்சிச் சிறுகூழை உருவாகி (,, **1104**)

> வன்மா வையம் அளந்த என் *வாமனா*.. (,, **2316**)

*மாணி*யாய் நிலங்கொண்ட மாயன்...(நாலாயிரம், **2647**)

மறுமா ணுருவாய் மற்றிணை யின்றி வானோரைச்
செறுமா வலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
*குறுமா ணுருவன்* (தேவாரம். சம்பந்தர். **101.5**)

தரணி யளந்த வாமனனும் (,, ,, - **318.9**)

ஓர், ஆல்அமர் வித்தின் *அருங்குறள்* ஆனான்...(கம்பன். **413**)

அவுணர் வேந்தன்
கொடுத்தநாள் அளந்துகொண்ட *குறளனார்* குறியபாதம்....
(,, **8743**)

மாவலிதன்

மங்கல வேள்வியிற் பண்டு *வாமனனாய்* மண்ணிரந்த
(பெரிய.தடுத். **90**)

திருமாலின் இவ்வுருவமே 'குறள்' என்பதற்குச் சிறப்புச் சேர்த்திருக்கக் கூடும். இவ்வடிப்படையே அகத்தியரைக் குறுமுனியாகக் காட்டும் சூழல் ஏற்படுத்தியிருக்கலாம்.

கரை செயல் அரிய வேதக் குறுமுனி கையும் ஒவ்வா...
(கம்பன். **10288**)

பொற்றவனார் திருக்கயிலை மலைநின்றுங் குறுமுனிபால்...
(பெரிய. **30**. திருமூல. **2**)

பொதியமலைக் குறுமுனிவன்..... (சேக். புரா. **91**)

நாயன்மார் வாழ்வியல் தருகின்ற கூன்பாண்டியன் பற்றிய நிகழ்ச்சியில் மட்டும், கூன் நீங்குதல் என்பது அருகி அமைந்து இறைமைச் சார்பு காட்டுகின்றது.

முதலில் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி, இதனைக் குறிக்கிறது.

கூற்றுக் கெவனோ புகறிரு வாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடு தருமக்
கோற்றொத்து கூனனும் கூன்போய்க் குருடனும் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே. (**48**)

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் இதனைச் சுட்டி விரிக்கின்றார். திருநாவுக்கரச நாயனார் புராணம், திருஞானசம்பந்தர் புராணம், கூற்றுவ நாயனார் புராணம்

ஆகியனவற்றில் இச்சுட்டு இடம் பெறுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் துதிக்குமிடத்து,

> **கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்**
> **யானும் பரவித் தீர்கின்றேன் ஏழுபிறப்பின் முடங்குகூன்**
> **(பெரிய. 39. கூற்றுவ. 9)**

என்பது அமைகிறது. இதில், 'கூன்.......தீர்த்து' எனச் சுருக்கமாக அமைகின்றது. ஞானசம்பந்தர் செயல் விளக்கம் பெறும்போது,

> **தென்னவன் *கூன் நிமிர்த்தருளி*..... (பெரிய.21. திருநா.391)**
> **வல்லமணர் தமைவாதில் வென்றதுவும் வழுதிபால்**
> **புல்லிய கூன் நிமிர்த்ததுவும் (பெரிய.21.திருநா.399)**
> **சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருநீற்றின்**
> **சார்வடைய கூன்நிமிர்ந்த தென்னவனார் தம்முடனே...**
> **(,, ,, 405)**

எனக் 'கூன் நிமிர்த்தமை' பதிவு பெறுகின்றது. இது ஞானசம்பந்தரின் வழியாக நிகழ்ந்த செயல் என்ற பாங்கில் அவர் புராணத்தில் தனி இடம் பிடிக்கின்றது.

> **எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்றெழுதும் ஏட்டில்**
> **தம்பிரான் அருளால் வேந்தன் தன்னைமுன் ஓங்கப் பாட**
> **அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னுஞ் சீர்த்திச்**
> **செம்பின் செங்கோலென்னத் தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே**
> **(பெரிய.28. திருஞா. 847)**

சிலப்பதிகாரம் தரும் இலஞ்சிமன்றமும் (5.121), மணிமேகலை புத்தரின் தோற்றம் ஊனப்பிறப்பை நிறுத்தும் என்பதும் (12.86) இறைமைச் சார்பில் இதனுடன் இணைத்து நினைத்தற்குரியன.

**துணைமை**

துணைப்பாத்திர அளவில் கூனும் குறளும் அமைவது தனித்துக் கருதத் தக்கது. இதில் இருவகை கருதப்படலாம். ஒன்று தோழமை, மற்றொன்று எதிர்மை. தோழியாக (தோழனாக, விதூடகனாக) வரவு பெறுவன முன்வகை. முரண் பண்புடன் எதிரணிச் செயற்பாடு கொள்ளும் நிலை பின்வகை. இவையிரண்டும் கதை/காப்பியச் சார்பு கொள்வதும் தனித்த சிந்தனைக்குரியது. கூனே குறளைவிட இதன்கண் மிகுவரவு கொள்வதும் சுட்டத்தக்கது. இவற்றிலும் பெண் பாத்திரமே மிகுதியாக அமைவதும் குறிப்பிடத்தக்கது.

**தோழமை**

தோழமைப் பாத்திரமாகக் கூனும் குறளும் அமையும்போது, குறிப்பிட்ட செயல்திறனின்றி வந்து போவதும், செயற்பாட்டுத் திறனுடையதாக அமைவதும் ஆகிய இருநிலைகளும் காணப்படலாம்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம் தொடக்கமாகவே தலைவி-தோழி எனும் ஈரிணைவுப் பாத்திரநிலை பதிவு பெற்றுவிடுகின்றது; எனினும் அவ்விடங்களில் தோழி எனும் பாத்திரம் ஊனநிலையினதாகக் குறிக்கப்படவோ காட்டப்படவோ இல்லை. ஆனால் காப்பியங்களில் வரும் சில தலைமை மகளிர்தம் தோழியராக இத்தகு ஊனமுற்றோர் அமைக்கப்படுகின்றனர்.

சிலப்பதிகாரம் முதலில் இதற்கு இடம் தருகின்றது. கண்ணகி காட்டப்படும் சூழலிலன்றி, மாதவி தரப்படும் சூழலிலேயே இது அமைவது தனிப்படுத்தி நோக்கற்பாலது.

..... மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து....
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு....... **(3.166...172)**

கூனிகை கொடுக்கப்பட்ட மாலையைக் கோவலன் வாங்குகின்றான் என்பதில், இவள் மாதவியின் தோழி என்பதைவிட, அவள் தாய் சித்திராபதியின் தோழி எனக் கொள்ள இடம் அமையலாம் (மாதவியின் தோழி வசந்தமாலை கூனியாகக் காட்டப்படவில்லை); அல்லது ஏவல் சிலதியரில் ஒருவராகவுமமையலாம்.

பெயர் சுட்டப்படா இந்நிலைக்கு மாறாக, பெருங்கதை, சீவகசிந்தாமணி ஆகியன பெரும்பாலும் கூன்/குறளாக அமைந்த தோழியரைப் பெயர் சுட்டித் தருகின்றன. பதுமாபதிக்கு அயிராபதி எனும் கூனி தோழியாக அமைகின்றாள்:

செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதியெனு மம்பணைத் தோளி
மானேர் நோக்கிற் *கூனி*....... (பெருங். **4.12.76-78**)

வாசவதத்தைக்கு, விச்சுவலேகை எனும் குறளி தோழியாகக் காட்டப்படுகின்றாள்.

பேசிய முறைமையின் ஏசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோ ளனைய
அச்சமில் காரிகை விச்சுவ லேகையென்
றுற்ற நாமப் பொற்றொடிக் குறளி.....(பெருங். **4.12.92-95**)

இவ்வாறு நேரடியாகவன்றி, சீவகனின் தாயாகிய விசயைக்குச் சண்பகமாலை யெனும் கூனி தோழியாக அமைகின்றாள் என்பது குறிப்பாகத் தரப்படுகின்றது.

......சண்பக மாலை யென்னும்
கூனிய துருவங் கொண்டோர்
தெய்வதங் குறுகிற் றன்றே...... (சீவக. 314)

சீவகன் உருவாக்கிய மலர்மாலையையும் பந்தையும், பணி செய்யும் படுவி (குறளி) யொருத்தி கனகமாலைக்கு வழங்குவதற்காகப் பெறுகிறாள் என்பதில், விச்சுவலேகை (பெருங்கதை) போல குறளி அமைகின்றாள்.

பானுண் டீஞ்சொல்லாளோர் படுவி வண்டார்ப்ப
வந்திறைஞ்சினாளே........ (சீவக. 1653)

இங்குப் பெயர்ச்சுட்டு அமையவில்லை. சூளாமணியிலும் இது தொடர்கின்றது. ஆண்பாலாகக் குறள் காட்டப்படல் இங்கு மட்டும் அமைகின்றது; பெயர் சுட்டப்பட்ட நிலையில் நெருக்கமான தோழமையும் சுட்டப்படாதவிடத்து ஏவலர் நிலையும் அமைவதாகக் கொள்ளலாம்.

ஆங்கோர்
கொன்னவில் பூதம்போலும்
குறண்மக னிதனைச் சொன்னான்........
(சூளா. 679)

விதூடகன், கோடிய/குஞ்சித்த (கூன்/கோணல்) வடிவினனாக அமைவதும் இச் சூளாமணி தருகின்றது.

.....விதூடக னுழைய னானான்.
.....கோடிய நிலையின் முன்னாற்
குஞ்சித்த வடிவ னாகி...... (சூளா. 1564, 66)

இத்துணைமை/தோழமை மாந்தர் குறிப்பிட்ட சில செயற்பாட்டுடன் சுட்டப்படுகின்றனர். நகர நம்பியர் திரியும் மறுகில் மாலைக்கு விலை கூறி விற்பது போன்ற தோற்றத்துடன் சிலம்பில் கூனி காட்டப்படுகின்றாள்; கொண்ட நோக்கம் நிறைவேற்றிக் கோவலனுடன் மாதவியின் மணமனை புகுகின்றாள். காப்பியத்தில் ஒரு பெரிய திருப்பமே அவளால் அமைகின்றது.

அயிராபதியும் விச்சுவலேகையும் பந்தடிக்கும் காட்சியில் நகைச்சுவையுணர்வுக்காகப் பயன்கொள்ளப் பெறுகின்றனர் (4.12 - பந்தடி கண்டது). சாமரை வீசுவது மட்டுமன்றி, பாகனை நீக்கித் தேர் செலுத்தும் பணியையும் அயிராபதி செய்கின்றாள். மேலும்

உதயணனுக்கும் பதுமாபதிக்குமிடையே அன்பு வளர, ஒருவரையொருவர் அறிமுகம் பெற அயிராபதியே காரணமாகி பாத்திர முதன்மை கொள்கின்றாள் (3.6. பதுமாபதியைக் கண்டது).

சிந்தாமணியில், சீவகன் பிறந்தபோது, தெய்வமொன்றே கூனியாகிய தோழியுருவில் வந்து, குழந்தை சீவகன் பாதுகாப்புடன் வணிகனிடம் வளரக் காரணமாகின்றது.

இவற்றை, நோக்க, சிலம்பு, பெருங்கதை, சிந்தாமணி ஆகிய மூன்றும் ஊனப் பாத்திரங்களை இன்றியமையாப் பயனுடன் அமைத்தது புலப்படுகின்றது.

**எதிர்மை**

கம்பராமாயணம் தரும் மந்தரை எனும் கூனி, கைகேயியின் தோழி என்ற நிலையில் தோழமைப் பாத்திரமாகவும் கருதப்படக்கூடும். எனினும் பாத்திரம் பயன்கொள்ளப்பெற்ற நிலை பற்றி 'எதிர்மை' என இங்குக் கருதப்படுகிறது.

கம்பனுக்கு முன்பே, நாலாயிரம் இக் கூனியைப் பேசுகின்றது. தொழுத்தை என இழிக்கின்றது:

கூன் தொழுத்தை சிதகுரைப்பக்
கொடியவள் வாய்க் கடிய சொற் கேட்டு......
(நாலாயிரம். **415**)

கூனுருவில் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட.....
(நாலாயிரம். **739**)

இராமன் சிறுவயதில் கூனியின் கூன் மீது உண்டையெறிந்தான் எனும் செய்தியும் இங்கு உண்டு. இத்தகு அமைப்பு பிறவிடத்துக் காணப்படாதது.

கொண்டை கொண்ட கோதை மீது தேனுலாவு கூனி கூன்
உண்டை கொண்ட ரங்க வோட்டி யுள்ம கிழ்ந்த நாதனூர்...
(நாலாயிரம். **800**)

ஒருகால்
நின்றுண்டை கொண்டோட்டி வன்கூன் நிமிர
நினைத்த பெருமான் (நாலாயிரம். **1899**)

இது கம்பராமாயணத்தில் அருகிய குறிப்பே பெறுகின்றது.

பண்டை நாள் இராகவன் பாணி வில் உமிழ்
உண்டை உண்டதனைத் தன்உள்ளத்து உள்ளுவான்
(கம்பன். **1447**)

அன்னான் அந்த கூனி கூன் போக
உண்டை எறிந்த போது (கம்பன். 7288)

'மந்தரை சூழ்ச்சிப் படலம்' அவள் செயல் திறத்தை உணர்த்தப் போதுமானது. காப்பியத்தில் பிறவிடத்து, 'கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து' (6179) என இராமன் குறிக்கப்படும் நிலையில் இவள் செயலின் முதன்மை பதிவு பெறுகின்றது. 'உள்ளமும்கோடிய கொடியள்' (1487) எனவும், 'துன்னருங் கொடுமனக் கூனி' (1445) எனவும், 'சூழ்ந்த தீவினை நிகர் கூனி' (1454) எனவும், 'கொடிய கூனி' (1459) எனவும், 'வினை நிரம்பிய கூனி' (1485) எனவும், 'வேதனைக் கூனி' (1460, 2299) எனவும், 'கொடிய கூனீயும் அல்லால் கொடியர் பிறர் உளரோ' (1704) எனவும் பன்முறை பல்வகையாக இவளது ஒரே பண்பு/செயல் நிலை தரப்பெறுகின்றது. இது கம்பனில் மட்டுமே காணப்படும் பெருக்கமாகும்.

கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்ப கோல்துறந்து (1313)

என்ற அயோத்தியா காண்டத் தொடக்கப் பாடல் இவள் செயலைத் திருப்புமுனையின் மையமாக வலியுறுத்துகின்றது. இராமன் காடேகல் எனும் பெருநிகழ்வுக்குக் கைகேயி (வரம்) கருவி எனின் அதற்குக் கரு கூனியின் எண்ணம்-சொல்-செயலே. இத்தகு நிலையில் விரிவாக ஆழமாக ஊனப்பாத்திரமொன்றை எந்தத் தமிழிலக்கியமும் வேறிடத்துக் காட்டியதாகத் தெரியவில்லை.

ஊனம், கொடுமைக்கும் தீமைக்கும் குறிப்பு ஆகுவதை குறியீடு ஆகுவதையும் இங்குத் தான் தெளிவாகக் காணமுடிகின்றது.

## உருவம்

ஊனமுற்றோர் உருவ வருணனை என்பதும் இலக்கியங்களில் அருகியே வருகின்றது. எனினும் சில அடைகளும், சிறு அடைத் தொடர்களும் வழி சுருக்கமானதும் ஓரளவு விரிவானதுமான விளக்கங்கள் அமைகின்றன.

கூன் உரு, குறுகிய மேனியினதாகக் காட்டப்பெறுகின்றது.

குறியது ஆம் மேனி ஆய கூனியால்.....
(கம்ப. 4126)

கூன் விளக்கம் பெறாவிடினும், கூனியின் மான்போலும் பார்வை விளக்கம் பெறுவதைச் சிலம்பும் பெருங்கதையும் காட்டும்:

மானமர் நோக்கியோர் கூனி...... (சிலம்பு. 3.167)

மானேர் நோக்கிற் கூனி......... (பெருங். 4.12.78)

பெருங்கதை, அயிராபதியின் வருணனையைப் பல்கூறு விளங்கத் தருகின்றது. கோலக் கூன்மகள் (3.9.47), சேயிழைக் கூன் மகள் (3.6.200, 3.7.1), அம்பணைத் தோளி (4.12.77) என்பதுடன்,

ஏந்திள வனமுலை யெழில்வளைப் பணைத்தோள்
மாந்தளிர் மேனி மடமா னோக்கின்
ஆய்ந்த கோலத் தயிரா பதியெனும்
கூன்மட மகடனை...... (பெருங். **3.6.157-160**)

எனவும்,

இடுகிய கருங்கண் வீங்கிய கொழுங்கவுட்
குறுகிய நடுவிற் சிறுகிய மென்முலை
நீண்ட குறங்கின் நிழன்மணிப் பல்கலம்
பூண்ட வாகத்துப் பூந்துகி லல்குல்
அயிரா பதியெனுஞ் செயிர்தீர் கூனியை
(பெருங். **3.8.51-55**)

எனவும் வருணனை அமைகின்றன. உருவ வருணனை மட்டுமன்றிப் பண்பு விளக்கமும் அமைவதை, 'செயிர்தீர்' எனும் அடை புலப்படுத்தும். மந்தரையாகிய கூனியிடமிருந்து பண்பு நலனில் வேறுபட்ட பாங்காக இதனை உணரமுடிகின்றது.

கூன் விளக்கம் பெற்றவளவு குறள் விளக்கம் பெறவில்லை. குறளை விடச் சிறிதளவு பெரிதான சிந்து, ஆமை, தேரை போலமைந்த உவமை விளக்கம் காணப்படுகிறது.

வாலதி, பூமி தோய் பிடி, சிந்தரும் போயினார்
காமர் தாமரை நாள்மலர்க் கானத்துள்
ஆமை மேல் வரும் தேரையின் ஆங்கரோ..... (கம்ப. **770**)

பெருங்கதையும் சிந்தாமணியும் சூளாமணியும் ஒரளவு ஒத்த காட்சி தருகின்றன.

நீலத் தெண்ணீர் நீந்து *மாமையிற்*
கோலக் குறுக்கை வாள் கூட்டுட் கழீஇப்
பாலிகை பற்றிய *குறள்*வழிப் படரவும் (பெருங். **1.46.261-63**)
கொட்டுப் பிடிபோலுங் கூனுங் குறளாமை
விட்டு நடப்பன போற் சிந்தும்..... (சீவக. **2798**)
ஆரந் துயல்வர வந்துகில் சோர்தர
வீரம்படக் கையை மெய்வழி வீசித்
*தேரை* நடப்பன போற்குறள் சிந்தினொ
டோரு நடந்தன வொண்டொடி முன்னே..... (சீவக. **631**)
*தேரையாய்* குறளுஞ் சிந்துமிதந்தன சில்ல சிந்தி....
(சூளா. **678**)

அளவின் குறுமை என்பதை ஆமை, தேரை என்பதில் விளங்கிக் கொள்ள முடிகிறது. கலித்தொகை முதலே 'ஆமை' எனும் உவமை அமைகின்றது (தேரை - தவளை வகை; இன்றைய வழக்கில் தவளை/ தவக்களை எனக் குள்ள உருவமுடையவர் குறிக்கப்படல் ஒப்பிடத்தக்கது); இழிவு, அழகின்மை என்பதும் உள்ளுறுத்தப் படுவதாகக் கருதலாம்.

சூளாமணியில், 'கொன்னவில் பூதம் போலும் குறண் மகன்' (679) என பூதவடிவம் அமைந்தது தரப்படுகின்றது.

கூனும் குறளும், ஒருவர் உருவத்தை ஒருவர் பழிப்பதன் வழி, வடிவ விளக்கம் பெறச்செய்வதைக் கலித்தொகை தருவது தனிவகையாகும்.

நீருள் நிழல் போல நுடங்கி உருச் சுருங்கி (2-7) எனவும், எறித்த படைபோல் முடங்கி மடங்கி நெறித்து விட்டு (9-10) எனவும், கொக்குரித் தன்ன (17) எனவும் கூனியை விளித்து விரித்தல் அமைகின்றது. காண்டகை யில்லாக் குறள் (5), ஆண்டலைக்கு ஈன்ற பறழ் மகன் (6), வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன கல்லாக் குறள் (13-14), உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டு (27),

> யாமை யெடுத்து நிறுத்தற்றால் தோளிரண்டும் வீசி......
> ......காமர் நடக்கும் நடை (31-33),

தண்டாத் தகடுருவு (40) எனக் குறள் பலவாறாக விரிக்கப் பெறுகின்றது. மேலும், விரும்பத்தகாத உருவநிலை அமையுமாறு உள்ளுறுத்துச் சுட்டப்படுகின்றது. 'பேயும் பேயும் துள்ள லுறும்' (28) என இருவரும் பேயாகக் காட்டப்படுதலும், 'குறு வட்டா நின்னின் இழிந்ததோ கூனின் பிறப்பு' (27-28) என்ற வெளியீடும் இதை வலியுறுத்தும்.

## தொகுப்புரை

கூனும் குறளும், சொல் நிலையில் தொல்காப்பியம் முதலே பயன்கொள்ளப்படுகின்றன.

கூனும் குறளும் பாத்திர நிலை பெறுவதைக் கலித்தொகை முதல் காண முடிகின்றது.

புறநானூறு முதலாகக் கூனும் குறளும் பட்டியல்களில் இணைந்து, அடுத்தடுத்து வருவது பெரும்பான்மை.

கதைப்போக்கில் கூனி எனும் பாத்திரப் படைப்பு செயல் முதன்மைபெறுவதைச் சிலப்பதிகாரம் முதலான காப்பியங்கள் காட்டுகின்றன.

தோழியாகக் கூனி அமைதல் என்பதில் சில காப்பிய இலக்கியங்கள் அமைப்பொருமை புலப்படுத்துகின்றன.

தோழி/சிலதியாகக் குறளி அமைவது அருகி உண்டு.

தீய பாத்திரமாக (க்கம்ப) ராமாயணத்தின் மந்தரை எனும் கூனியே அமைகிறாள்.

ஒப்பீட்டு நிலையில் கூனன் பற்றிய குறிப்புக் குறைவு.

கூன் பாண்டியன் இறைமைச் சார்பில் ஊனநீக்கம் பெறுதல் தனிவகை.

குறள், திருமாலின் வாமன அவதாரத்தில் தனித்தன்மை பெறுகின்றது.

குறுமுனி எனும் கருத்தும் தனித்த சிந்தனைக்குரியது.

கூனும் குறளும் பந்தடியிலீடுபடுதல் பெருங்கதையில் மட்டுமே உளது.

சிந்து பற்றிய குறிப்புகள் சிலவாக அமைகின்றன.

ஆமை, தேரை ஆகியன குறளுக்கு உவமையாவதில் கருத்தொருமை காணப்படுகிறது.

கலித்தொகையே முதலில் கூன்-குறள் உருவங்களை சிலதொடர்கள் வழியேனும் வருணிக்க முயல்கிறது.

உருவம் என்பதைவிட, பாத்திரம் என்ற நிலையிலேயே பெருங்கதை அயிராபதி, விச்சுவலேகை ஆகிய கூன், குறளை வருணிக்கின்றது.

ஊனம் தீமைக்குக் குறியீடாக அமையும் எனும் எண்ணம் நிறுவப்பெறவில்லை.

வாமன அவதாரம், கூன்பாண்டியன் ஆகிய நிலைகளில் காட்டப்பெற்றாலும் குறள்/கூன் ஊனங்கள் இழிபிறப்பு எனும் கருத்து முன்நிற்கின்றது.

# ஊமும் செவிடும்

**விளக்கம்**

பேச்சு இன்மை/பேச்சுக்குறைபாடான ஊமைநிலையும், செவிப்புலனுணர்வின் செவ்வியின்மையான செவிடும் தம்மில் தொடர்புடையன. ஊமையாக இருக்கும் ஒருவன் செவிடனாகவும் இருக்கலாம். ஆனால் பிறவிச் செவிடனாக இருப்பவன் நிச்சயமாக ஊமையாக இருப்பான். ஏனெனில் பேச்சொலிகளாலான மொழியை மொழியவியலாதவன் ஊமையாகின்றான். ஒவ்வொரு குழந்தையும் பிறந்து, குடும்பத்தில் - சமூகத்தில் வளரும் சூழலில் உடனிருப்போரின் தொடர்பு காரணமாக மொழியைப் பயில்கிறது. இம்மொழிப்பேறு செவிப்புலன் உதவி மற்றும் ஒத்துழைப்பின்றிப் பெரும்பாலும் பெறப்படவியலாததால், செவிடு, வாய்மொழி - பேச்சு - அற்று அமைய வேண்டியதாகிறது. உதட்டசைவு, கையசைவு மற்றும் பிற உத்திகள் வழியாகக் கருத்துப்பரிமாற்றம் அமைய இயலுமேயன்றி மொழிபேசல் இயலாததாகின்றது. பேச்சுறுப்புகள் செவ்வியுடையதாக அமைந்தாலும், கேட்டு உணர்ந்த பின்பே, போலச் செய்தலாக, அவ்வொலிகளைத் திரும்ப உச்சரிக்க முடியும் என்பதால், செவிப்புலச் செவ்வியின்மை பேச்சுப்புலனைப் பாதிக்கின்றது. இதனால், ஊமை, செவிடு, செவிட்டூமை என்ற மூன்று நிலைகள் காணப்படமுடிகிறது.

எண்பேரெச்சமாக ஊனர் பட்டியலைப் புறநானூறு வழங்குமிடத்து, இவற்றை இணைத்தே தருகின்றது:

> சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
> கூனுங் குறளும் ஊமும் செவிடும் (புறம். **28.1-2**)

தொடர்ந்து வரும் நிகண்டுகள் சிலவும் இவ்வாறே தருகின்றன.

> கூனுங்குறளும் ஊமையுஞ் செவிடும் (திவா. **295**)

> குறளொடு செவிடூமுங்கை கூன்மருள் (சூடா. **95**)

> எச்சமெட்டா மவை குறள்கூ னூமை
> செவிடு குருடு....... (பொருட். **672**)

> குறள் செவிடு மூங்கை முடங்கூன் (உரிச். **27**)

ஊம், ஊமை, மூங்கை என மூன்று சொற்கள் இங்குப் பேச்சுப் புலன் குறைபாட்டைச் சுட்ட வருகின்றன. செவிடு ஒன்றே செவிப்புலன் குறைபாட்டைக் குறிக்க இவற்றில் கையாளப்பெற்றது. எனினும் தமிழிலக்கியக் களத்திலும் (கி.பி. 12ஆம் நூ. வரை) அகராதி, நிகண்டுகளிலும் (பார்க்க: இணைப்பு-1) இவற்றிற்கு நேரான பரியாயச் சொற்கள் பெருக்கம் காட்டி அமைகின்றன.

## சொல் வருகை

பால் பிரித்துக் காட்டாத நிலையிலும், பால் பிரித்துக் காட்டும் நிலையிலும் இச் சொற்கள் வடிவு கொள்ளலாம். முன்னது அஃறிணைச் சாயலும் பின்னது உயர்திணைச் சார்பும் கொள்கின்றன. 'ஊமை எண்கு' (மலை.501), திசைகளும் செவிடு உற (கம்ப. 3878) என அஃறிணையும் 'உயர்திணை ஊமன் போல' (குறு. 224), செவி இலன் (ஏலாதி. 19) என ஆண்பால் சுட்டியும் சான்று அமையும். பலர்பால் அமைப்புடன் ஊமர் (கம்ப. 521) செவிடர் (நாலடி. 158) எனும் பயன்பாடுகளும் உண்டு. பெண்பால் குறிக்கும் சான்று இலக்கிய வருகையில் பெறப்பட்டிலது.

ஊனச் சொல்லால் நேரடியாகவும், ஊனம் புலப்படும் வண்ணம் பிற சொற்களாலும் இப்பாங்கு குறிக்கப்படல் இலக்கியத்தில் அமையும். வெவ்வேறு ஆசிரியரும், நூலும், காலமும் இவற்றிற்குக் காரணமும் களமும் வழங்கலாம்.

பேச்சுப்புலன் குறைபாடாக, உரையாதவர், ஊம், ஊமர், ஊமர்கள், ஊமன், ஊமனார், ஊமை, நா இல்லார், நாக்குப்போழ்தல், பேசார், மூகை, மூங்கர், மூங்கை, மூங்கைகள், மூங்கையர், வாய் இழந்தமை எனப் பதினாறு சொற்கள் காணப்படுகின்றன. இவை கால வரிசையில் கீழ்வருமாறு அமையும்.

ஊம் - கூனுங் குறளும் ஊமும் செவிடும் (புறம். 28)

நாக்குப்போழ்தல்- ஆழ்கவென் உள்ளம் போழ்கவென் நாவே (புறம். 132)

ஊமை - ஊமை எண்கின் குடாவடிக் குருளை (மலை. 501)

ஊமன் - உயர்திணை ஊமன் போல (குறு. 224)

மூகை - தீய புறங்கூற்றின் மூகையாய் (நாலடி. 158)

மூங்கை - தீச் சொற்கண் மூங்கை (ஏலாதி. 19)

நாஇல்லார் - கால் இல்லார் கண்இல்லார் நாஇல்லார் (ஏலாதி. 36)

வாய் இழந்த(மை)- வாய் இழந்த வாழ்வினார் (ஏலாதி. 78)

பேசார் - பேணா மாக்கள் பேசார் பிணித்தோர் (மணி. 28.223)

ஊமர் - ஒன்றும் ஊணரா வூமர் (தேவா. ஞான. 71.10)

உரையாதவர் - உரையாதவர்கள் மே லொழியா வூனமே (தேவா. ஞான. 83.3)

ஊமனார் - ஊமனார் தங்கனா வாக்கினா னொருநொடி (தேவா. ஞான. 291.3)

மூங்கர் - கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித் தென்ன (தேவா. அப். 101.1)

மூங்கைகள் - மூங்கைகள் போலுண்ணு மூடர் (தேவா. அப். 102.1)

ஊமர்கள் - ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்(திருமந். 870)

மூங்கையர் - மூங்கையர் சொல் பெற்றென்ன (கம்ப. 10299)

எனக் காலந்தோறும் இவை வேறுபட்டு வந்தமை தெரிகின்றது.

செவிப்புலக் குறைபாடு சுட்டி, இருப்புச் செவி, காது இன்மை, காது தூர்தல், கேட்கிலாமை, கேள்வி அன்மை, கேளாச்செவி, கேளாத கேள்வி, கேளார், செவி இழத்தல், செவிஇன்மை, செவிகழிதல், செவிகேட்பிலாமை, செவிகேளார், செவிடு, துளையிலாச்செவி, தூர்ந்த செவி, மரச்செவி, வன்செவி எனப் பதினெட்டு சொற்கள் காணப்படுகின்றன.

செவிடு - கூனும் குறளும் ஊமும் செவிடும் (புறம். 28)

தூர்ந்த செவி - பாழூர்ங் கிணற்றில் தூர்க என் செவியே (புறம். 132)

காது இன்மை - காது இரண்டும் இல்லாதாள் (சிறுபஞ்ச. 3)

செவி இன்மை - சொல்லும் மறையிற் செவிஇலன் (ஏலாதி. 19)

கேளார் - காணார் கேளார் கால்முடப்பட்டோர் (மணி. 13.111)

| | | |
|---|---|---|
| செவி கேட்பிலாமை | - | பன்னீர்மை குன்றிச் செவி கேட்பிலா படர் நோக்கிற் (தேவா. ஞான. 59.6) |
| கேட்கிலாமை | - | பித்தர் சொன்னம் மொழி கேட்கிலாத பெரு மானிடம் (தேவா. ஞான. 254.10) |
| துளையிலாச் செவி | - | இளைய கால மெம்மானை யடைகிலாத் துளையிலாச் செவித் தொண்டர்காள் (தேவா.அப். 180.3) |
| வன்செவி | - | வன் செவியோ நின்செவிதான் (திருவா.திருவெம். 1) |
| இரும்புச்செவி | - | வன்பராய் முருடொக்கும் என் சிந்தை, மரக்கண், என்செவி இரும்பினும் வலிது (திருவா. செத்திலாப். 4) |
| கேளாச்செவி | - | காணாக்கண் கேளாச்செவி என்றிருப்பார்க்கு (திருமந். 588) |
| கேளாத கேள்வி | - | காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்... (திருமந். 1610) |
| செவிகழிதல் | - | அழிகின்ற வோருடம் பாடுஞ் செவி கண் கழிகின்ற காலவ் விரதங்கள்.... (திருமந். 2140) |
| மரச்செவி | - | சோதியுட் சோதி தன் பேர் செல்லாச் செவிமரம் (11-ஆம். பொன்.42) |
| காது தூர்தல் | - | வாமன நம்பீ உன் காதுகள் தூரும் (நாலாயிரம். 146) |
| செவிகேளார் | - | கழியமூப்பிற் செவி கேளார் (சிந். 1913) |
| கேள்வி அன்மை | - | உரைப்பொருள் புணரும் கேள்வியர் அல்லர் (கம்ப. 6780) |
| செவி இழத்தல் | - | செவியும் இழந்தாயோ என்ன (பெரிய.31. தண்டி.8) |

எனக் காலந்தோறும் மாறி வந்துள்ளன.

இச்சொற்களை, மூன்று அடிப்படையில் உருவானவையாக வகைப்படுத்திக் காணலாம்.

| | |
|---|---|
| (1) உறுப்புச்சுட்டு(பொறி)சான்று: (இன்மை) | நா இல்லார், வாய் இழந்தவர், காது இன்மை, துளை இலாச் செவி. |
| (2) புலனறிவுச் சுட்டு (இன்மை): | உரையாதவர், பேசார், கேள்வி அன்மை, கேளார். |
| (3) ஊனச்சுட்டு: | ஊம், ஊமை, மூகை, மூங்கை, செவிடு. |

உறுப்புச்சுட்டு என்னும் வகையில், செவியூனம் தொடர்பாக, மற்றொரு துணை வகையும் புலப்படுவதாகக் கொள்ளலாம். புலனும் பொறியும் இருந்தும் (மனக்கடினத்தினால் போலும்) கேளாமை அல்லது கேட்க மறுக்கும் நிலை அமையுமிடத்து, இரும்புச் செவி, மரச்செவி, வன்செவி எனும் சொற்பாங்கு புலப்படுகின்றது.

மேலும், புலனும் பொறியும் இருந்தும், அவை அழியும்/ இல்லாமலாகும் எனும் அமைப்பும் காதுதூர்தல், செவி தூர்தல் என்பதில் காணப்படுகின்றது.

ஊனம் குறிக்காமலும் ஊனச் சுட்டு வரக்கூடும் என்பதும் தெரியவருகின்றது (பார்க்க: இணைப்பு:2).

## அறியவரும் கருத்துகள்

பிறவி ஊனம் பற்றிய கருத்து அமைய, ஊனம் செய்தல், பல ஊன இணைவு, ஊனர் செயல் விளக்கம், அவர் தன்மை புலப்பாடு, பொறியவித்தல்/புலனடக்கம் ஊனச் சூழலில் புலப்படுதல், ஊனம்பழித்தல், ஊன நீக்கம், சமய/இறைமைச் சார்பில் குறியீடாக ஊனம் வருதல் என்பன போன்ற கருத்துகளும் அறிய வருகின்றன.

## பிறவி ஊனம்

எண்பேரெச்சம் பற்றிய புறநானூற்றுக் கருத்து (28), பிறவியூனமாக ஊம், செவிடு ஆகியவற்றைத் தருகின்றது. திருமந்திரம், பிறவியூனமாக (ச் செவிடைக் காட்டாமல்) ஊமையைத் தருகிறது:

*மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்....* **(481)**

இதன் மருத்துவ உண்மை ஆராய்ச்சிக்குரியது. மூப்புக் காரணமாக இந்த ஊனம் அமையலாம் என்பதும் உண்மை (சிந். 1913; திருமந். 2140; தேவா.ஞான. 59.6).

## ஊனம் செய்தல்

குற்ற உணர்வு காரணமாகத் தாமே தம்மை ஊனம் செய்தல், தண்டனையாக ஊனம் செய்தல், சினம் காரணமாக உறுப்பறையில் ஈடுபடல் என நிலை பலவாக அமையும் வாய்ப்புள்ளபோதும், பண்டை இலக்கியத்தில் இத்தகு தகவல்கள் அருமையாகவே உள்ளன.

முதலில் நினைக்க வேண்டிய புரவலனை, நினையாது மறந்து, பின்பு உள்ளிய புலவன், தன்னிலை இரக்கமாக 'ஊனமாகுதலை'ச் சுட்டுவது அருகி அமைகின்றது. இதில் நாக்குப் போழ்தல், செவி தூர்தல் என்பன சுட்டப்பெறுகின்றன.

முன்னுள்ளு வோனைப் பின்னுள்ளி னேனே
ஆழ்கவென் உள்ளம் போழ்கவென் நாவே
பாழூர்க் கிணற்றில் தூர்கவென் செவியே....(புறம். 132.1-3)

பேச்சுறுப்புகளைச் சிதத்தல் எனும் ஊனம், நாவு போழ்தல் என இங்கு வருவதுடன் 'வாயைக் கிழி' என நந்திக்கலம்பகத்திலும் அருகி வந்தது (மிகை. 1).

செவியூனம் என்பதில் இரு பாங்கு அமையலாம்; புறச்செவிமடலை அறுத்தல் - அழித்தல் என்பது ஒன்று; கேட்கும் ஆற்றல் இல்லாமலாக்குதல் என்பது மற்றொன்று.

சங்கப்பாடலில் 'செவி தூர்க' என வந்ததன் தொடர்ச்சி நாலாயிரத்திலும், வாமன நம்பீ உன் காதுகள் தூரும் (146), சிரீதரா உன் காது தூரும் (147) என அமைந்தது. அங்குத் தன்னிரக்கம் என்றால் இங்கு 'அச்சுறுத்தல்' புலப்படுகின்றது.

கேள்விப்புலனழிவு என்பது இவற்றிலும், கீண்டன செவிகள் (8455), தேர்க்குரல் ஓதை பொங்க செவிமுற்றும் செவிடு செய்த (9708) எனக் கம்பனிடமும் (இராமாவதாரம்) அமைகின்றது.

செவிமடலை அறுத்தல், எச்சரிக்கையாக, 'தூதன் செவி அறடா' என நந்திக்கலம்பகத்திலும் (மு.சு.), தண்டனையாக இராமாயணத்திலும் அமைகின்றன. நாலாயிரமும், இராமாவதாரமும் சூர்ப்பணகை செவியரியப் பெற்றதை வழங்குகின்றன (பார்க்க: இணைப்பு-3). கும்பகர்ணன் உறுப்புச் சிதைவில் செவியும் உட்படுவதை இங்கு இணைத்துக் கருதலாம் (கம்பன்.7562).

**பல ஊன இணைவு**

ஊமும் செவிடும் இணைந்த ஊனநிலை (செவிட்டூமை) சொல் அல்லது விளக்க நிலையில் இங்கமைத்த இலக்கியக் களத்தில் புலப்படவில்லை. ஆனால் குருடு, முடம் போன்ற ஊனப்பாங்குடன் இணைத்துத் தரப்படுதல் அமைகிறது.

கண்ணில்லாத ஊமையின் இயலாமை, செயலற்ற நிலை புறநானூற்றுக் காட்சி ஆகின்றது:

மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞ ருற்ற நெஞ்சமொ டொராங்குக்
கண்ணில் ஊமன் கடற் பட்டாங்கு (புறம். 238)

கையில்லாத ஊமையின் இத்தகு செயலாற்றவியலா நிலையைக் குறுந்தொகை அமைக்கும்:

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற்காக்கும்
வெண்ணெ யுணங்கல் போல..... (குறு. 58)

கண்ணும் காதும் 'பிறழ்ந்த' பாங்கு, சூளாமணியில் விதூடகனைக் காட்சிப்படுத்துமிடத்தில் அமைவது (1598) தனிவகையினது. தண்டியடிகளைச் சமணர் எள்ளி நகையாடும் சூழலில், காட்சியூனத்தைச் செவியூனத்துடன் இணைத்து அமைப்பது பிறிதொரு நிலையாகும்.

மந்த உணர்வும் விழிக்குருடும் கேளாச்செவியும்
மற்றுமக்கே
இந்த உலகத் துள்ளன...... (பெரிய. 31. தண்டி.8)

**ஊனர் செயல்**

பேச்சுத்திறன் இல்லாதவர்களின் செயல் அருகி விளக்கம் பெறுகின்றது. வெளிப்படையாக வன்றியும், செவிப்புல ஊனத்தினரையும் இதன்கண் இணைத்துக் காண முடிகின்றது. சிந்தாமணி, கைச் சைகையால் கருத்துப் புலப்படுத்தப்படுவதைக் கண்கள் உணர்வதையும்,உறுப்புகளே 'உரையற்ற பேச்சை' உணர்த்துவதையும் சுட்டுகின்றது.

கையினாற் சொல கண்களிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேன் (997)

ஊமர் போலத் தம் உரையவிந் துறுப்பினில் உரையா (2760)

'சைகைமொழி' என்ற ஒன்றை இவற்றில் உணர முடிகின்றது.

**ஊனர் இயல்பு**

உவமை ஆக்குமிடத்தும் பிற சூழலிலும் ஊனரின் தன்மை புலப்படுத்தப்படுகின்றது.

பேச்சற்ற நிலை மட்டுமன்றி உரையவிந்து, ஒலியின்றி யமைந்த பாங்கு பரவலாகக் காட்டப்படுகின்றது.

**கூவற், குராலான் படுதுய ரிரவிற் கண்ட**
**உயர்திணை யூமன் போல..... (குறு. 224)**

என்பதில் செயலற்ற நிலை, குரலெழுப்பி உதவவியலாத நிலை என்ற இயலாமை (helpless condition) புலப்படுகின்றது. 'வேண்டுவ உரையா மூங்கையரா மெனும்' என்ற பெருங்கதைத் தொடரும் (2.8.139) 'ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள்' எனும் கம்பராமாயணத் தொடரும் (521) உணர்வை உரையால் வெளிப்படுத்த இயலா ஊமர் பாங்கைக் காட்டுகின்றன. ஊமை கண்ட கனவு எனும் பழந்தொடர் வெளியீடும் ஒத்த கருத்தை அமைக்கும்.

துஞ்சு ஊமன் கண்ட கனா (திரிகடு. 7)

ஊமனார் கண்ட கனவினும் பழுதாய்
ஒழிந்தன கழிந்தவந் நாள்கள் (நாலாயிரம். 950)
தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தங்கனா வாக்கினா னொருநொடி
(தேவா. ஞான. 291.3)
ஆரிய வூமன் கனவென வாக்கிய
கூடற் பெருமான் (கல்லாடம். 4.8)

பயனின்மை எனும் எண்ணமும் இவற்றில் புலப்படுதலைக் காணலாம். இத்தகு ஊனரிடம் பேசுவதில் பயனில்லை என்பதும் தெரிகின்றது.

(உணர்வு இல் நெஞ்சினர்) ஊமர், உரைப்பொருட்
புணரும் கேள்வியர் அல்லர்....(கம்ப. 6780)

இப்பயனில் சொல்நிலை செவிடர் ஊமையரோடு பேசுவதாகவும் ஊமை வழி காட்டுவதாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது:

மற்றிருந் தீர்கட் கறிய லாகா
மாதவ னென்பதோ ரன்பு தன்னை
உற்றிருந் தேனுக் குரைப்ப தெல்லாம்
ஊமைய ரோடு செவிடர் வார்த்தை
(நாலாயிரம். 617)

எத்தைக்கொண் டெத்தகை யேழை யமணோ டிசைவித்
தென்னக்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித் தென்னக் கேடு
செய்தாய்.....(தேவா.அப். 101.1)

புறநானூறு, இவரைப் பற்றிப் பேதமை யல்லது ஊதியம் இல் (28) என விளக்கிய பண்பு நிலை திருமந்திரத்திலும், வந்து ஊமையை விளக்குகின்றது:

ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்..... (870)

பண்பு அல்லது செயல் விளக்கப்படும்போது, செவிடு என்பதைவிட ஊமை என்பதே அதிக விளக்கம் பெறல் தனித்துச் சிந்தித்தற்குரியது. இதனால், இங்கெல்லாம், ஊமை என்பதில் 'செவிட்டூமை' என்பதும் அடங்கும் போலும் எனும் ஐயம் தோன்றுகின்றது.

**'ஊனச்சிறப்பு'**

குறைகளற்ற, ஊனமே இல்லாதநிலை சிறப்பிக்கப்படுதல் இயல்பு. ஊனம் சிறப்பிக்கப்படுதலோ அத்தகு இயல்பல்லாதது. ஆனால், பொறிவாயில் ஐந்தவித்தல் (குறள். 6) எனவும், புலனடக்கம் எனவும் (அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை, குறள். 343) வரும் நிலைக்கு விளக்கம் போல் 'ஊனம்' பயன்படும்போது, ஊனம் சிறப்பிக்கப்படுவதாகக் கருத முடிகிறது; அல்லது ஊனம் வழியாகச் சிறப்பான கருத்துக் கூறப்படுவதாகச் சொல்ல முடிகிறது.

அறநூல்களில் இப்பாங்கு அமைவது அமைப்பொருமை கொள்கின்றது. மறைபொருள் பேசப்படுமிடத்துச் செவிடாகவும் புறங்கூறாது ஊமையாகவும் இருத்தலை நாலடியார் சுட்டும்:

பிறர் மறையின்கட் செவிடராய்த்.....தீய
புறங் கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு (156)

ஏலாதியும் இக்கருத்தை ஒப்ப மொழியும்:

சொல்லும்
மறையில் செவிஇலன் தீச்சொற்கண் மூங்கை
இறையில் பெரியாற்கு இவை (19)

இதனால்தான் போலும் இத்தகு ஊனர் அரசவை-அரண்மனை ஏவலராகின்றனர் (பார்க்க: இணைப்பு-4). சமய நிலையில்

புலனடக்கம் நல்வழி தருவதாகச் சிறப்பிக்குமிடத்தும் இவ்வாறு ஊனச்சுட்டு வர வாய்புளதைத் திருமந்திரம் காட்டுகின்றது.

(கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டுமே வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண்) கேளாச்செவி என்றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே (588)

**ஊனம் பழித்தல்**

முழுமை இன்மை பற்றி ஊனம் பழிப்புக்குள்ளாகின்றது. இதில் இரு நிலை அமையலாம். ஒன்று ஊனம் உள்ளமை சுட்டிப் பழித்தல். மற்றொன்று, பழிப்புக்கு - இழிவாகப் பேசுவதற்கு ஊனம் பயன்பெறுதல்.

தண்டியடிகளின் ஊனம், மேலும் மற்றொரு ஊனமும் சுட்டிப் பழிக்கப்படுதல் (ஏற்கெனவே தரப்பெற்றது) இங்கும் முதல் வகையாகப் பொருந்தும்.

உண்மையை உணராத நிலையை இடித்துரைக்கும் சூழலில் ஊனம் வழி பழிப்பு அமைகின்றது:

"இன்றுளர் நாளை யில்லை" யெனும் பொருள்
ஒன்று மோரா துழிதரு *மூமர்காள்*....(தேவா.அப். 198.9)

சமயக் கோட்பாட்டை உணராதவர்/பிற(சமயத்தின)ரைப் பழித்து மொழியுமிடத்தும் இவ்வாய்ப்பு அமையும் (பார்க்க: இணைப்பு-5).

மதியந்தவழ் மாட மாளிகைக் காழி என்றால் வணங்கார்
ஓதியம் பணைபோல் விழுவார் அந்தோ சில *ஊமர்களே*
(11-ஆம் திரு. ஆளுடை. 6)

நின்றுண் சமணர் இருந்துண் டேரர் நீண்ட போர்வையார்
ஒன்று முணரா *வூமர்* வாயில் உரைகேட் டுழல்வீர்காள்
(தேவா. ஞான. 71.10)

மலமென் றுடம்பை மதியாத *ஊமர்*
தலமென்று வேறு தரித்தமை கண்டீர் (திருமந். 2137)

**ஊனநீக்கம்**

மீயியற்கை இறைமைச்சார்பு மற்றும் சமயக்கோட்பாடு ஊன நீக்கம் பற்றிய சிந்தனை வழங்குவதாகத் தெரிகின்றது. இளங்கோவின் கற்பனை, ஊனம் நீக்கும் இலஞ்சி மன்றத்தைப் படைத்துள்ளது (சிலம்பு. 5.118-121). ஆனால் எந்த ஊனரும்

ஊன நீக்கம் பெற்றதை இளங்கோ காட்டினாரா என்பது ஐயமே. சாத்தனாரும், புத்த ஞாயிறு தோன்றுங் காலை, மன்னுயிர், ஊனப் பிறப்புகளைப் பெறாதென (மணி. 12.96-98) வருவதுரைத்து அமைந்தார். கம்பனும், குதிரைகள் பேரொலி எழுப்பியதை ஊமர் உரைபெற்றதாக உவமமேபடுத்தினார்.

துரகதப் புரவி எல்லாம் மூங்கையர் சொல்பெற் றென்ன
அரவப் போர் மேகம் என்ன ஆலித்த....

**(10299)**

திருமந்திரத்தில்,

காணாத கண்ணுடன் கேளாத கேள்வியும்.....
...... காணா யெனவந்து காட்டினான் நந்தியே **(1610)**

என வரும் ஊன நீக்கம் உடற் சார்புடையதல்ல.

தனித்து வாழ்தல், தடையின்றி வாழ்தல் அல்லது எந்தச் சார்பும் தேவைப்படாது வாழ்தல் என்ற நிலை ஊனருக்கு இல்லாததால், அப்பாங்கு மாறும் பொருட்டு ஊன நீக்கம் பற்றிய சிந்தனை அமைவதாகத் தெளியலாம். ஊனம் நீங்க-நீக்க இயலாத இயல்புச் சூழலில் ஊனர் புரக்கப்படல் தேவையாகின்றது. மணிமேகலை மட்டுமே உணவளித்து இவர் பாதுகாக்கப்படுதலைச் சுட்டுகின்றது (13.111 -; 28.222). இளங்கோவும் கம்பனும், இவரை அரண்மனை ஏவலராக்கியதும் (முன் சுட்டியது) புரத்தலாக அடங்கலாம். இந்நிலை அமையாத போது, 'முறையது மயங்கி வாழ்வோர் மூங்கை அந்தகர்க்குத் தீயோர்' ஆகின்றனர் (கம்ப. மிகை.1122).

### குறியீடாக ஊனம்

திருமந்திரத்தில் காணப்படும் சில குறிப்புகள், சமயச் சார்பில், ஊனம் குறியீடாக ஆளப்படக்கூடும் என்பதைக் கருதத் துணையாகின்றன. இவை, தனித்த ஆழ் ஆய்வுக்கும் தெளிவான விளக்கத்துக்கும் உரியன.

இறைமையை உணர ஊனம் தடையில்லை என்பது திருமந்திரம்.

**கண்ணின்றிக் காணும்** *செவியின்றிக் கேட்டிடும்*
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே **(1872)**

எனினும் ஊமைமொழி, ஊமை எழுத்து, ஊமைக்கிணறு என வருவன என்ன குறிப்புடையன என்பது புலப்பட்டிலது (பார்க்க:

இணைப்பு-6). அன்றியும் 'ஆன்மா'தான் ஊமனாகக் காட்டப்படுகிறதோ என்பதும் ஐயம்:

**கானத் தெழுந்த கருத்தின் தலையிலே**
**ஊனத் தவித்தைவிட் டூமனின் றானே (2157)**

இறையை உணர்தல்தான் ஊமைநிலை போலும் என்பதும் தோற்றம்:

**வாக்கு மனமும் இரண்டும் மவுனமாம்**
**வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம் (1896)**

மேலாய்வு இதனை விளக்கலாம்.

**தொகையுரை**

ஊமும் செவிடும் இணைத்துக் கூறப்படும் நிலை காணப்படுகின்றது. இவற்றைக் குறிக்க இலக்கியத்திலும் அகராதியிலும் சொல்பல வருகின்றன. பிறவி ஊனம், முதுமையால் ஊனம் என்பன ஊம், செவிடு ஆகியவற்றிலும் உண்டு. ஊனம் செய்தல் பற்றிய எண்ணம் சங்க இலக்கியத்திலும், செவி அரிதல் இராமாயண நிகழ்விலும் காணப்படும். கண்ணில்லாத ஊமன், கையில்லாத ஊமன், கண்ணில்லாத செவிடன் என்பனவற்றை இலக்கியம் காட்டுகின்றது. ஊனரின் பண்பும், செயலும் உவமையில் காட்டப்படுதல் உண்டு. ஊனச் சிறப்பு என்பது தனி வகையாகத் தென்படுகிறது. ஊனரைப் பழித்தல், புரத்தல், ஊன நீக்கம் பற்றிய சிந்தனை என்பன சமுதாயத்தில் இவரது இடத்தை உணர உதவும். 'ஊமை' தொடர்பான திருமந்திரக் 'குறியீட்டு' ஆட்சிகள் தனி ஆய்வுக்குரியன.

## இணைப்பு - 1

(தமிழ் லெக்சிகனிலிருந்து திரட்டப்பெற்றவை)

**(1) ஊமை**

| | |
|---|---|
| அவாக்கு | ஊமைக்கூறன் |
| உவமன் | ஊமைக்கோட்டான் |
| ஊம் | ஊமைச்சி |
| ஊமச்சி | ஊமைப்பயல் |
| ஊமணாமூஞ்சி | ஊமையன் |
| ஊமணை | ஊர்மச்சி |
| ஊமன் | குரலடைப்பு |
| ஊமாண்டி | நாவடைத்துப்போதல் |
| ஊமை | நுலையிலி |

பண்ணறையன்
பேசார்
மூகம்
மூகன்
மூகை
மூகைமை
மூங்கர்
மூங்கை
மூங்கையன்
மூங்கைமை

## (2) செவிடு

அகன்னம்
ஏடன்
கல்லம்
காதடைத்தல்
காதடைப்பு
காதறுதல்
காதறை
காதிலி
காதுமந்தம்
காதெழுச்சி
கூதைசெய்தல்
கேளார்
செகுடன்
செவணை
செவிடன்
செவிடி
செவிடு
செவிடுசெல்லுதல்
செவிடுபடுதல்
செவிடுபடுவாதம்
செவிமத்திபம்
செவிமந்தம்
செவியறை
செவியிலி
டமாரன்
தோட்டந்தூரம்
பதிரன்
பாதிரியம்
மரச்செவி
மூளிக்காது
வதிர்
வதிரன்
வன் செவி
வெதிர்
வெதிரன்

## இணைப்பு - 2

சேய வானமும் திசைகளும் செவிடு உற......கம்ப. 3876

மா திசைகளும் செவிடு உறக் குத்தினான்......கம்ப. 3896

சேண் எறிந்து எழுதிசை செவிடு எறிந்தன.....கம்ப. 7480

பத்துத் திசையும் செவிடு எய்தன......கம்ப. 7970

சேண் எறிந்து நிமிர் திசைகளோடு மலை செவிடு எறிந்து....கம்ப. 8062

செவிடு செல்லக் கிழிந்தன திசைகள் எல்லாம்.....கம்ப. 8105

நெடுந்திசை செவிடு எறிதர......கம்ப. 9135

உலகு செவிடு பட.......கம்ப. 9457

எண்திசை செவிடு எறிதரச் சென்று உற்றதால்......கம்ப.மிகை.751

ஓதை எப்புறமும் செவிடு உற்றதை......கம்ப.மிகை. 846

மாதிரக் களிற்றினைச் செவிடுறக் கொடுக்கும்......கல்லாடம். 39.15

சிறு நாணொலி திசைகள் செவிடுபடச் சிலம்பின......பாரத. 485.உரை

திசையனைத்தும் செவிடுபட்ட தென்றவாறு......பாரத.585.உரை

திசைகளைச் செவிடுபடுத்தி......பாரத. 627.உரை.

இவற்றில் திசை, திசையானை, புறம், உலகு, மலை என்பன செவிடுற்றதாக வரும் வெளியீடு, ஒலி மிகுதியை மிகைப்படுத்திக் கூறுவதால் ஏற்பட்ட உத்தியாகும். 'தேர்க்குரல் ஓதை பொங்க செவி முற்றும் செவிடு செய்த' (கம்ப.9708) என அருகி மனிதனுக்கும் வந்தது.

## இணைப்பு - 3

நுடங்கிடைச்
சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவள்
ஆர்க்க அரிந்தானைப் பாடிப்பற.....நாலாயிரம். 314

கலையிலங்கு மகலல்குல் அரக்கர் குலக் கொடியைக்
காதொடு மூக்குடனரியக் கதறியவ ளோடி....நாலாயிரம். 1231

கருமக ளிலங்கையாட்டி
பிலங்கொள் வாய் திறந்து தன்மேல்
வருமவள் செவியும் மூக்கும்
வாளினால் தடிந்த எந்தை....நாலாயிரம். 1292

மீதோடி வாளெயிறு மின்னிலக முன்விலகு முருவினாளை
காதோடு கொடிமூக்கன் றுடனறுத்த கைத்தலத்தா
...நாலாயிரம். 1580

நின் இரு காதொடு நாசி துமிப்பதன் முன் அகல்..கம்ப.
3597

துளைபடு மூக்கொடு செவி துமித்து உக.....கம்ப. 3631

பெரிய சூர்ப்பணகைதன்
கரியமா நகிலொடும் காதொடும் நாசியை
அரியினார்...... கம்ப.மிகை. 319

கம்பன் கழகப் பதிப்பின், கீழ்வரும் எண்ணுள்ள பாடல்களிலும் 'செவி அரிந்தமை' சுட்டப்படுகின்றது: 5920, 6880, 7005, 7562, 7565, 7566, 7568, 7596, 7597.

## இணைப்பு - 4

கூனுங்குறளு மூமுங் கூடிய
குறுந்தொழி லிளைஞர் செறிந்து சூழ்தர..... (சிலம்பு. 20.17-18)

ஊமர், உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர்.....
துணரும் நல்விளக்கு ஏந்தினர் சுற்றினார்... (கம்ப. 6786)

## இணைப்பு - 5

உன்மகள் தான் ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ
(நாலாயிரம். 482)

வீங்கிய தோள்களுந் தாள்களுமாய் நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணு மூடர்.... (தேவா.அப். 102.1)

ஆனைக் காவிலெம் மானை யணைகிலர்
ஊனைக் காவி யுழிதர்வ ரூமரே (தேவா.அப். 145.1)

இளைய கால மெம்மானை யடைகிலாத்
துளையிலாச் செவித் தொண்டர்காள்..... (தேவா.அப். 180.3)

மாடு தேடி மயக்கினில் வீழ்ந்து நீர்
ஓடி யெய்த்தும் பயனிலை யூமர்காள்... (தேவா.அப். 191.4)

அள்ளலார் வய லன்பி லாலந்துறை
உள்ளவா றறியார் சில ரூமரே (தேவா.அப். 194.6)

உரிந்த வுடையார் துவரா வுடம்பை மூடி
யுழிதருமவ் வூமரவர் உணரா வண்ணம் பரிந்தவன் காண்
(தேவா.அப். 299.8)

சோதியுட் சோதி தன்பேர் செல்லாச் செவிமரம்

(11-ஆம். பொன்வண். 42)

மன்றாடவும் பின்னும் மற்றவன் பாதம் வணங்கி அங்கே
ஒன்றார் இரண்டில் விழுவர் அந்தோ சில ஊமர்களே

(11-ஆம். கோயில் திரு. 42)

## இணைப்பு - 6

மோனங் கைவந் தூமையாமொழி முற்றுங்காண் (1611)

ஊமை எழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை யகத்தினில் அஞ்சும் அடங்கிடும் (2158)

ஊமைக் கிணற்றகத் துள்ளே உறைவதோர்

ஆமையின் உள்ளே யமுவைகள் ஐந்துள (2304)

# சமூகத்தில் ஊனர்

சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்டகாலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கட் கூட்டம் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பாகும்.[1] தனக்கேயுரிய உட்குழுமங்கள், நிலப்பரப்பு, பண்பாட்டுத் தனித்தன்மை, பாலியற் கோட்பாடு எனும் பண்புகளுடையதான, ஓரளவு தனித்ததோ தன்னிறைவுடையதோவான மக்கட்தொகுதி எனப் பகுப்பாய்வு விளக்கம் சமூகம் என்பதற்குத் தரப்படுகின்றது.[2] 'தனிமனித வாணாளைவிட நீண்ட ஆயுளுடையதும் தன்னிறைவுச் செயற்பாட்டு ஒழுங்குமுறையுடையதும் இனப்பெருக்கத்தால் புது உறுப்பினர்ச் சேர்க்கையுடையதுமான மக்கட்குழு' என்ற சமூகச் செயன்முறைக் கோட்பாட்டு விளக்கம் பற்றியும் தெரியமுடிகின்றது.[3]

மக்களுறவையும் அதன் விளைவுகளையும் பற்றிய அறிவியலான சமூகவியல் அணுகி ஆராய்கின்ற பல செயன்முறைப் பிரச்சினைகளுள் ஒன்றாக, 'ஊனர்கள் குற்றவாளிகள் போன்ற பயனற்றவர்களைப் பொறுத்த வரையில் சமூகத்தின் போக்கு என்ன?' என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.[4]

இழப்புகளின் விளைவோ, அல்லது உடல் உள உணர்வுத்தடைகளின் இடையீடோ ஊனமாக விளக்கப்படுகின்றது.

---

1. கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956, தொகுதி 4, ப. 477.
2. International Encyclopaedia of Social Sciences, (Ed) David L. Sills, Collier Macmillan, London, 1972. Vol.14, p.577.
3. The well known functional conception of society put forth by Aberle and his colleagues will serve to illustrate a detailed concept of society and the way it enters into a system of sociological thought. According to these analysts, "A Society is a group of human beings sharing a self sufficient system of action which is capable of existing longer than the life span of an individual, the group being recruited atleast in part by the sexual reproduction of the members". Ibid, p. 578.
4. பார்க்க: கலைக்களஞ்சியம், தொகுதி-4, பக். 478-479.

தனிமனிதனுக்குத் தனிப்பட்ட சமூகத் தொழில் நிலைகளில் ஒட்டி ஒழுக ஒவ்வாமையில் ஊனம் புலப்படுகின்றது.[1]

சமூகம் ஊனரைப் பற்றிப் பல காலங்களில் பல்வேறு விதமாகக் கருதியது தெரிகிறது. வரலாற்றின் ஒரு காலக்கட்டத்தில் அஞ்சித் தவிர்ப்பதற்குரியவனாக ஊனமுற்றவன் அமைந்தான். அவனுடைய ஊனம் சமய மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் அணுகப்பெற்றது. அவனைத் தூய்மையாக்கவோ, வசியப்படுத்தவோ முடியாதபோது, அகற்றி ஒதுக்கி வைக்கப்பெற்றான். அக்காலச் சமூகம் அவன் மீது எந்த உண்மையான பொறுப்பும் ஏற்கவில்லை. ஆயின் 19-ஆம் நூற்றாண்டுச் சமூகம், அதுவரை தள்ளிவைக்கப்பெற்ற பிரஷ்டம் செய்யப்பட்ட - ஊனனை, ஒரு நோயாளியாக, இரங்கற் குரியவானக, பாதுகாத்துப் புரக்கப்பட வேண்டியவனாகக் காணத் தொடங்கியது. மருத்துவத்துறை இவர்மீது தனிக்கவனம் கொண்டு ஆவன செய்தது. இருபதாம் நூற்றாண்டிலும் இது தொடர்ந்தது. எனினும், உடற்கூறு நிலையில் முழுமையான மனிதனுக்கு மாறாகவே உடற்குறையுற்றோர் கருதப்பெற்றனர். உடல், உள, உணர்வுக் குறையுடைய மனிதரைச் சமூகப் பொருளாதார வகுப்புகட்குள் ஒருமைப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் பற்றிச் சிந்திக்கும் ஒழுங்கான தேசிய முயற்சிகள் இந்நூற்றாண்டில்தான் ஏற்பட்டுள்ளன. சமூகங்கள் அண்மைக்காலத்து மட்டுமே ஊனமுற்றோருக்கு ஒத்த வாய்ப்பு என்ற நம்பிக்கைக்குப் பொறுப்பேற்றுள்ளன. மேலும், ஊனமுற்றோர் தம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் சமூகச் செயற்பாடுகளில் பங்கேற்கும் தகுதி பெறவும் உதவ இக்காலச் சமூகங்கள் முன்வந்துள்ளன.[2]

சமூக அறிவியலின் உலகளாவிய நிலையிலுள்ள இவ் எண்ணங்கள் தமிழ்ச் சமூகவியல் ஆய்விலும், அணுகிக் காணத் தக்கன. குறிக்கோட் சமூகமும் இயல்பியல் சமூகமும் கண்டு காட்டப்பெறுமளவிற்கு ஊனர் பற்றிய கல்வியும் அமையும் வாய்ப்பு

---

1. The term "handicapped" refers to the effects of losses or the interposition of physical, mental or emotional barriers. The individual is handicapped with reference to the achievement of personal, social or work adjustment.

   - Internationl Encylopaedia of Social Sciences, Op.cit., Vol. 16, p.351.

2. See: 'Vocational Rehabilitation'. Ibid. p. 350 ff.

ஏற்கெனவே சுட்டப்பெற்றுள்ளது. வாழ்வியல் தரவுகட்குக் களனாகவும், சமூகவியல் கல்விக்குரிய அடிப்படை மூலங்களுள் ஒன்றாகவும் இலக்கியம் அமைவதால், தமிழிலக்கியங்களை அடிப்படையாக்கி ஊனமுற்றோர் பற்றிப் பொதுவான கல்வி அமைய முடியும். சான்றாக, பெரியபுராணம் எனும் ஓரிலக்கிய நூலினைக் களமாக்கி, அதன் தரவுகளினடிப்படையில் பிறவியூனம் (ஊனப் பிறப்பு), பிழையால் ஊனம், தன்னையே ஊனஞ் செய்தல், தண்டனையாக ஊனம், தற்காலிக ஊனம், ஊன நீக்கம், ஊனம் நீங்குதலில் நம்பிக்கை - இறைமையின் இடம், ஊனர் நிலை, ஊனர் செயல் போன்ற செய்திகளைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு அமைகின்றது. இவற்றுள் பெரும்பான்மையான கருத்துகளும் முன்னிலக்கியக் காலத்தும் காணப் பெற்றன என்பது குறிப்பிடத் தக்கது. ஆயின் முன்னிலக்கியம் சுட்டும் சில ஊனர் சமூக எண்ணங்கள் இங்குக் காணப்படாதும் உள்ளன.

**சொல் வருகை**

ஊனம் எனும் சொல் சுமார் இருபது முறை பெரியபுராணத்தில் (சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம், ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம், 1970) வருகின்றது. ஆயின், 'மனித உடற்குறை' என்ற இன்றைய பொருணிலை அவற்றுள் காணப்படவில்லை. மாறாக இச் சொல்லின் கீழ்க்கணக்கு வருகைகளிலமைந்த குறை (இனியவை, 13), குற்றம் (ஏலாதி. 32), கேடு (ஏலாதி. 61) எனும் பொருண்மை நிலைகளே, ஊனம் எனும் சொற்கு இங்கும் காணப்பெறுகின்றன.

ஊனமிகு பகைத் திறத்தாற்.... (திருநகரச். 36)
ஊனமேல் ஒன்றும் இல்லார்.. (தடுத்தாட். 196)
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் (திருநாவுக். 101)

**ஊனவகை**

எச்சம் எனும் செற்சுட்டுடன் எட்டு ஊனவகைகளின் முதற்பட்டியல் புறநானூற்றில் (28.1-6) அமைய, அவற்றுள், உட்படாத முடம் சங்க இலக்கியத்துள் பிறவிடத்துக் காணப்பட்டு (கலி. 65.13, குறு. 60) அமையினும், பெரிய புராணத்தில் இவற்றின் வரவு குறைவுபட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் அமைகின்றன.

'சிறப்பில் சிதடு' எனப் புறம் தந்த கண்ணற்ற குருட்டு நிலை, தண்டியடிகளில் காட்டப்பெறுகின்றது (31. தண்டியடிகள்

புராணம்). பாண்டிய மன்னன், கூன் உடையனவாக அமைகின்றான் (28. திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், 847). கால் கை வெட்டி நீக்கி ஊனம் செய்தல் என்ற நிலையில், முடம், சண்டீசன் (20. சண்டேசுர நாயனார் புராணம்), கலிக்கம்பர் (44. கலிக்கம்பநாயனார் புராணம்), கழற்சிங்கர் (53. கழற்சிங்க நாயனார் புராணம்) ஆகியோர் புராணத்தில் இடம்பெறுகின்றது. தாதையின் இரு காலையும் சண்டீசரும், மனைவியின் கரத்தைக் கலிக்கம்பரும், அரசியின் மூக்கைச் செருத்துணையாரும் அவள் கரத்தைக் கழற்சிங்கரும் வெட்டி நீக்குகின்றனர்.

பாத்திரநிலையின் இவ்வூனத்திற்கு வேறாகவும், ஊனம் தொடர்பான சில சொல், பொருள் நிலைகள் பெரியபுராணத்தில் கையாளப்பெறுகின்றன. குறள், தேவாரப் பதிக வகையான திருவிருக்குக்குறளை,

> மருவு திரு இயமகமும் வாளா இருக்குக்குறள் மற்றும்
> பெருகும் இசைத்திருப் பதிகத் தொடையும் புனைந்தார்
> பிள்ளையார் (திருஞானசம். 999)

எனவும், பூத கணங்களை,

> கோதிலா இசைகுலவு குண்டைக் குறட்
> பூதம் என்றெடுத்தோதி (மேற்படி, 965)

எனவும் குறிக்கிறது. வாமனன் (தடுத்தாட், 90), குறுமுனி (திருமூல. 2) ஆகிய குறிப்புகளும் குறளை விரிவுபடுத்துகின்றன.

தண்டியடிகளை, அமணர் ஏளனம் செய்யும் எள்ளல் சூழல் சொற்களில், 'செவிடு' பற்றிய குறிப்புக் கிடைக்கின்றது.

> அந்தமில்லா அறிவுடையார் உரைப்பக் கேட்ட அறிவில்லார்
> சிந்தித்திந்த அறங்கேளாய் செவியும் இழந்தாயோ என்ன
> மந்தவுணர்வும் விழிக்குருடும் கேளாச் செவியும் மற்றுமக்கே
> இந்த உலகத் துள்ளன என்றன்பர் பின்னும் இயம்புவார்
> (தண்டி. 8)

இங்கு வரும் 'மந்த உணர்வு' என்பது அறிவுக் குறைவைச் சுட்டிப் புறநானூற்றின் 'மருள்' என்பதன் விளக்கத்துடன் ஒப்பவைத்துக் கருதப்படல் கூடும். 'மருள் என்பது அறிவின்றியே மயங்கியிருக்குமது' (புறநானூறு, மூலமும் உரையும், (பதி) உ.வே. சாமிநாதையர், உ.வே.சா. நூலகம், சென்னை, 1971, ப. 75) என்பது அங்கமையும் விளக்கம்.

'பொறியின்மை' என்ற சொல் - கருத்தும் பெரியபுராணத்தில் அமைகின்றது. வழிபடு இறையுரு மீது விழுந்த சிலம்பியை ஊதித்துமிந்த மனைவியை நீலநக்கர், 'பொறியிலாய்' (திருநீலநக். 13) எனக் கடிக்கின்றார். பொறியின்மை என்பது இங்கு உறுப்புக் குறையான ஊனத்தைக் குறிக்காத போதும், சொல் நிலையில் திருக்குறளின் தொடர்ச்சி காட்டுகின்றது. ஆள்வினையுடைமையின்,

> பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
> ஆள்வினை யின்மை பழி (குறள். 618)

என்பதற்குப் பரிதியார் தரும், 'மெய் வாய் கண் மூக்குச் செவி குறைந்தது பங்கமல்ல; அறிவின்மை பங்கம் எ-று' (திருக்குறள் உரைவளம் - பொருட்பால், (தொகு), ச. தண்டபாணி தேசிகர், தருமபுர ஆதினம், தருமபுரம், 1951, பக். 388-389) எனும் விளக்கம் இங்கு இணைத்துக் காணத் தக்கது.

அப்பரின் வாழ்வியல் பெருங்கயிலைக் குலக்கிரியை எய்தும் முயற்சியில் அவர் அங்கம் தேய்ந்து உறுப்பு அழிந்த நிலையைக் காட்டுகிறது (திருநாவுக். 357-360)

> அப்புறம் புரள்கின்ற நீளிடை அங்கம் எங்கும் அரைந்திடச்
> செப்பருங்கயிலைச் சிலம்படி சிந்தை சென்றுறும் ஆதலால்
> மெய்ப்புறத்தில் உறுப்பழிந்தபின் மெல்ல உந்து முயற்சியும்
> தப்புறச் செயலின்றி அந்நெறி தங்கினார் தமிழாளியார்
> (மேற்படி. 360)

அப்பர் தேவாரம், 'அங்கமெலாங் குறைந்து (அழுகு தொழுநோயராய்)' எனக் குறிப்பதும் (309.10) இதனுடன் இணைத்துக் காணத்தக்கது.

**பிறவி ஊனம்**

புறநானூற்றின் பட்டியல், ஊனப் பிறவிகளைக் காட்டியபோதும், பெரிய புராணத்தின் குறிப்புகள் பெரும்பாலும் பிறவியிலேயே ஊனமாக அமைதல் எனப் பொருந்தவில்லை. தண்டியடிகள் பிறப்பால் குருடர் என்பது துலங்குகிறது.

> தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத்
> தவமுடையார்
> அண்டவாணர் மறை பாட ஆடுஞ் செம்பொன் கழல் மனத்துக்
> கொண்ட கருத்தின் அகநோக்குங் குறிப்பே அன்றிப்
> புறநோக்கும்

**கண்ட உணர்வு துறந்தார் போல பிறந்த பொழுதே கண்காணார்**
**(தண்டியடிகள். 1)**

நின்றசீர் நெடுமாறனாகிய பாண்டியனின் கூன், பிறவியூனமாகலாமெனினும் நேரடியான தெளிந்த வெளிப்படையான குறிப்பு சேக்கிழார் சொற்களில் காணப்பட்டிலது.

**பிழையால் ஊனம்**

பிறப்பில் அன்றி, இடையில் ஏற்படும் சில ஊனங்கள், செய்த பிழையின் பலனாக - விளைவாகக் காட்டப்பெறுகின்றன. சுந்தரர் வாழ்விலும், தண்டியடிகளை எள்ளிய அமணர் தாழ்விலும் கண் இழத்தல் - பார்வை இழப்பு - என்பது பிழையால் ஏற்பட்ட ஊனமாகப் புரிய இயல்கின்றது. மகிழின் கீழ் சபதம் செய்து, சங்கிலியாரை மணந்து, திருவொற்றியூர் நீங்காதுறைந்த சுந்தரர், ஆரூர் செல்லும் விருப்பில் சபதம் விட்டுச் செயற்பட்டதால் பார்வை மறைகின்றது (ஏயர் கோன். 274). தண்டியடிகள், 'சவால்' போன்று,

**நில்லா நிலையீர் உணர்வின்றி நுங்கண் குருடாய் என்கண் உல**
**கெல்லாங் காண்பான் யான்கண்டால் என் செய்வீர்**
**(தண்டி. 9)**

எனக் கூறற்கேற்ப, இவரது பார்வைக் குறைவு அமணரைச் சென்று பற்றுகிறது. அண்ணல், தீர்த்தக்குளங் கல்லக் கண்ட அமணர் பொறாராகிய பிழை, 'இமுதை அணமர் விழித்தே கண்ணிழந்து தடுமாறக்' காரணமாகின்றது (தண்டி. 4,20). மேலும் இவ் விளைவுக்கு இறைவன் துணையும் குறிக்கப்பெறுகின்றது (தண்டி. 12-13). அன்றியும், சுந்தரரின் பார்வை இழப்பு தற்காலிக மானதாகவும், அமணரது கண்ணிழப்பு நிரந்தரமானதாகவும் அமைந்தமையும் புரிய முடிகின்றது.

**தண்டனையாக ஊனம்**

பிழையூனம், தண்டனையூனம் என்பன தம்மில் தொடர்பு உடையன. எனினும் தவறு செய்தவரைத் தண்டிக்கும் நோக்கில் உறுப்புக்குறை செய்தல், உறுப்பை அல்லது உறுப்புகளைச் சிதைத்தல், வெட்டி நீக்குதல் என்பது தனித்துக் கருதத்தக்கது.

'குற்றமும் தண்டனையும்' எனக் காணும்போது, ஊனம் செய்தல் எனும் தண்டனை நிலை, சங்ககாலம் முதலே தென்படுகின்றது. தண்டனையாகக் கண்பிடுங்கப்பெற்ற

நிகழ்வொன்று, பரணர் பாடலில் இருமுறை உவமையாகப் பொருந்தியது (அகம். 196. 8-11; 262.1-6). அன்னி மிஞிலியின் தந்தையை, அவர் ஆ புனத்துப் புக்கது பற்றிக் கோசர் இவ்வாறு வருத்த, திதியனின் உதவியுடன் கோசரைப் புறங்கண்டு அவள் பழிவாங்கியது இப்பகுதிச் செய்தி.

பெரியபுராணம், இறைமை தொடர்பாகவும், 'பக்தி வைராக்கிய' வெளிப்பாடாகவும், இறைவழிபாட்டில்/அடியார் வழிபாட்டில் குற்றமிழைத்தோர்க்கு உடனடித் தண்டனையாகவும் கை, கால், மூக்கு வெட்டி நீக்குதலைக் காட்டுகின்றது. மணற்கோயில் ஆக்கி அருச்சனை செய்யும் சிறுவனைக் கண்டு வெகுண்டு, திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தியபோது, தந்தை எனவும் பாராது அவன் இருதாளும் வெட்டி நீக்குகின்றார் சண்டீசர் (சண்டேசுர. 51-52). இச்செயலின் 'சிறப்பு' தேவாரத்திலும் வலியுறுத்தப் பெறுகின்றது.

ஆமலி பாலு நெய்யு மட்டி யர்ச்சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாத தன் றாதை தாளைக்
கூர்மழு வொன்றா லோச்சக் குளிர் சடைக் கொன்றை
மாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவினாரே
(அப்பர். 65.6)

இண்டை மலர் கொண்டு மண லிலிங்க மது வியற்றி
யினத் தாவின் பாலாட்ட விடறிய தாதையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர் தொழுதேத்த.....
(சுந்தரர். 16.3)

என இது பல்கும்.

கலிக்கம்பரும் கழற்சிங்கரும் 'மகளிர்' கை தறித்தவராகக் காட்டப்பெறுகின்றனர். ஒரு உறுப்பு தவறு செய்தால் அந்த உறுப்பு தண்டிக்கப்பட வேண்டும் போலும் எனும் எண்ணம் இங்கு எழுகின்றது. விவிலியக் கருத்து இங்கு ஒப்பிட்டுக் காணத்தக்கது.

உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு....
(மத்தேயு. 5.29-30)

என இது அமையும். பாண்டியன் கைகுறைத்த செய்தி (சிலம்பு 23.42-50), தானே தனக்கு வழங்கிய தண்டனையாகிப் பழமை காட்டுகின்றது.

அடியார் திருவடி விளக்கும் முயற்சியில் கலிக்கம்பர் ஏற்பட்டபோது, மனைவியார், கரக நீர் வார்க்காதிருந்தார் என அவர் வெள்கி, வாளால் அவள் கையை வெட்டுகிறார் (கலிக்கம்ப. 8). இறைவனுக்குரிய புதுமலரை எடுத்து மோந்த தவறுக்கு, அரசன் உரிமைப் பெருந்தேவியின் துங்கமணி மூக்கைச் செருத்துணையார் அரிய (செருத்துணை. 5), கழற்சிங்க நாயனார், 'எடுத்த கையை முன்னரிவது' எனத் தன் தேவியின் கரத்தை வெட்டி நீக்குகின்றார்.

**கட்டிய உடைவாள் தன்னை உருவி அக் கமழ் வாசப்பூத்**
**தொட்டு முன் எடுத்த கையாம் முற்படத் துணிப்ப தென்று**
**பட்டமும் அணிந்து காதல் பயில் பெருந் தேவியான**
**மட்டவிழ் குழலாள் செங்கை வளையொடு துணிந்தாரன்றே**
**(கழற்சிங். 10)**

ஊன வகையில், 'மூக்கின்மை' சுட்டப்பெறாத போதும், மூக்கையறுத்தல் எனும் இத் தண்டனை நிலை, இராமாயணத்தின் சூர்ப்பணகை, அயோமுகி ஆகியோரின் மூக்கு முதலியனவற்றை இலக்குவன் அறுத்து நீக்குதல் (கம்பன். 2825, 3631-32) என்பதில் தொன்மை புலப்படுத்துகின்றது. ஆயின், இவற்றில் தவறு செய்த உறுப்பைத் தறித்தல் என்பதைவிட, தவறு செய்தவரின் உறுப்புகளைச் சிதைத்து அழகிழக்கச் செய்தல் என்பது முன்னிற்கின்றது.

### தன்னையே ஊனஞ் செய்தல்

தன்னுயிர் நீக்கல் அல்லது நீக்க முயலல், தன்னுருவழித்தல் பற்றிய குறிப்புகள் பெரியபுராணத்தில் அமைவது போன்று, தன்னை ஊனம் செய்தலும் அருகியேனும் காணப்பெறுகின்றது. ஆயின் பொற்கைப் பாண்டியன் கதை போன்று, தவறுக்குத் தண்டனையாகவன்றி, அன்பூற்றின் அளவில் பெருக்க வெளியீடாக இது அமைகின்றது.

வழிபாட்டு இறையுருவின் கண்ணில் குருதி பெருகக் கண்டு 'உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு ஊன்' என்ற கொள்கை கொண்டு தன் கண்ணைப் பறித்து இறைவனது கண்ணில் வைத்து அப்பிய கண்ணப்பர், இவ்வாறு தன்னையே ஊனம் செய்தவராக அமைகின்றார் (கண்ணப்ப. 178-185).

ஆயிரம் மலர்களால் பெரியோனை வழிபடும் முயற்சியில் ஒரு மலர் குறைய, நாரணன் தன் கண்மலரை இடந்திட்டது, இறைவழிபாட்டின் இடையூறு தன்னையூனஞ் செயற்குக் காரணமாதலைப் பிறவிடத்தும் காட்டிப் பழமை கொள்கின்றது.

நக்குலா மலர் பன்னூறு கொண்டு நன் ஞானத்தோடு
மிக்க பூசனைகள் செய்வான் மென்மல ரொன்று காணா
தொக்கு மென் மலர்க் கணொன்றங் கொரு கணை யிடந்து மப்பச்
சக்கரங் கொடுப்பர் போலுஞ் சாய்க்காடு மேவினாரே
(அப்பர். **65.9**)

என்ற குறிப்பு தேவாரத்தில் அமைகின்றது.

**ஊன நீக்கம்**

ஊனம் நீங்குதல் அல்லது நீக்கப்படல் என்பதும் சமூகவியல் சிந்தனையில் உட்படக்கூடும். மருத்துவம் இதற்கு உதவுதல் என்பது இக்காலத்திற்குப் பொருத்தமானது. உயிர் மருத்துவனான இறைவன் அல்லது மீவியல் இதற்குக் கருவியும் காரணமுமாவது நம்பிக்கை வயப்பட்ட பழஞ்சிந்தனையாகும். பெரியபுராணமும் இதற்குக் களன் வழங்குகின்றது. பிறவியூனம் நிங்குதலுடன், இடையில் ஏற்பட்ட தற்காலிக ஊனமும் நீங்கல் தென்படுகின்றது.

கூன் பாண்டியன், இறையடியாராகிய ஞானசம்பந்தரால் கூன் நீங்கப்பெறுகின்றான்.

எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என் றெழுதும் ஏட்டில்
தம்பிரான் அருளால் வேந்தன் தன்னைமுன் ஓங்கப் பாட
அம்புய மலராள் மார்பன் 'அநபாயன்' என்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னவன் கூன் நிமிர்ந்ததன்றே.
(திருஞானசம். **847**)

பாப்பாடிப் பெற்ற இம் மீட்சி போலவே சுந்தரரும் மீண்டும் மீண்டும் இறைவனை வேண்டி வேண்டி இழந்த பார்வையை மீண்டும் பெறுகின்றார். பிழையால் ஏற்பட்ட ஊனமாயினபடியால், பிழை பொறுத்துக் கண்கொடுத்தருளியதாகப் புலப்படுகின்றது.

எண்ணாத பிழைபொறுத்திங் கியான்காண எழிற்பவள
வண்ணா கண்ணளித் தருளாய் என வீழ்ந்து வணங்கினார்.
.......மங்கை தழுவக் குழைந்தார்
மறைந்த இடக்கண் கொடுத்தார் (ஏயர்கோன். **286-87**)

இழந்த இரு கண்களில் ஒன்றே பெற்றமையால் மீண்டும் 'மற்றைக் கண் தாரீர்' என வேண்டி வணங்கி அதனையும் பெறுகின்றார் (ஏயர்கோன். 308-310).

தண்டியடிகளின் ஊன நீக்கத்தில் இருநிலைகள் அமைகின்றன. ஒன்று, அவருடைய பிறவிக் குருட்டு நிலை மாறிக் கண் பெற்றமை. மற்றொன்ற அவரை நீங்கிய ஊனம், அவரை எதிர்த்த - எள்ளிய அமணரைப் பற்றியமை-

> நெஞ்சில் மருவுங் கவலையினை ஒழிநீ நின்கண் விழி தந்தவ்
> வஞ்ச அமணர் தங்கண்கள் மறையுமாறு காண்கின்றாய்
> (தண்டி. 13)

இங்கு ஒருவர் ஊனம், இன்னொரு 'குழு'வுக்கு ஆகின்றது. விவிலியம் தரும் நாகமான் வரலாற்றில், நாகமானின் தொழுநோய், நீங்கி, கேகாசியைப் பற்றுகின்றது. இத்தகு இடமாற்றம், வெப்புநோய், 'பையவே சென்று பாண்டியற் காக' (திருஞான. 704) எனப் பிறவிடத்தும் காணப்படுவது ஒப்புநோக்கத் தக்கது.

**ஊனம் - இறை/நம்பிக்கை**

இறைமையுடன் தொடர்புடையதாகவும் நம்பிக்கை வயப்பட்டதாகவும் ஊனம் - ஊனநீக்கம் அமைதல் முன் இலக்கியங்களைப்போல, பெரியபுராணத்தும் தெளிகின்றது. சுந்தரர் கண் பார்வை இழந்து ஊனனானமை, இறைவன் முன்னிலையில் மகிழ் அடியில் தந்த வாக்குறுதியை விட்டதனாலாகும்.

சுந்தரர், தண்டி, பாண்டியன் ஆகியோர் கதைகள் வாயிலாக, ஊன நீக்குதற்குரிய வழிமுறை 'இறையருள்' எனத் தெரிகின்றது; இறையடியார் துணை எனத் தெளிய முடிகின்றது; திருநீற்று வல்லமை எனவும் புரியமுடிகின்றது.

> சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருநீற்றின்
> சார்வடையக் கூன்நிமிர்ந்த தென்னவனார் (திருநாவுக். 405)

எனக் குறிப்பு அமையும். மேலும், அப்பருக்குத் தீங்கு நீங்கிய யாக்கை இறையருளால் கிடைக்கின்றது (திருநாவுக். 367).

ஊன நீங்குவதற்காக ஊனமுற்றோர் ஏற்கவேண்டிய செயற்பாடு, பின்பற்ற வேண்டிய செயல்முறை என எதுவும் பொதுமைப்படுத்தப்படாத போதும், தூய்மையடைவதற்குக் குறியீடு போன்று, நீரில் மூழ்குதல் அமைவது பரந்தநிலைச் சிந்தனைக் குரியது. தண்டியடிகள் குளத்தில் மூழ்கி யெழும்போது பார்வை பெறுகின்றார்.

ஏய்ந்த அடிமை சிவனுக்கியான் என்னில் இன்றென்
கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே ஆவ தென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எழுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார்
தொழுது புனல்மேல் எழுந் தொண்டர்
தூய மலர்க்கண் பெற்றெழுந்தார் (தண்டி. 19, 20)

யோர்தானில் மூழ்கி, நாகமான் தொழுநோய் நீங்கியதும், இயேசு பிரான், பிறவிக்குருடனுக்குப் பார்வை யளிக்கச் சீலோவாம் குளத்தில் கழுவச் சொன்னதும் (யோவான். 9.1-12) இங்கு ஒப்பு நோக்கத் தக்கன.

மேலும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காட்டிய 'இலஞ்சி மன்றம்' எனும் நீர்நிலையும், ஊனமும் நோயும் நீக்கும் வன்மையுடையதாக அமைவது, தமிழ்ச் சிந்தனையில் முன்தொடர்ச்சி கொள்கின்றது (சிலம்பு. 5.118-121).

நீர்நிலை, நோய், ஊன நீக்கல் என்ற இத்தொடர்புப் பாங்கு, 'பெதஸ்தா' குளத்திலும் ஒருசார் பொருந்துவதை விவிலியத்தில் காணமுடிகின்றது.

> எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருக்கிறது. அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு. அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்த மாவான். (யோவான். 5.2-4)

அன்றியும், பெரியபுராணத்தில், சுந்தரர் இடக்கண் பெற்றபின், இறைவன் கட்டளைப்படி குளத்தில் மூழ்கிப் பிணி நீங்கப் பெறுகின்றார்.

பரவியே பணிந்தவர்க்குப் பரமர் திருவருள் புரிவார்.....
வரமலர் வண்டறை தீர்த்த வடகுளத்துக் குளி என்ன....

**மிக்க புனல் தீர்த்தத்தின் முன் அணைந்து வேதமெலாம்**
**தொக்க வடிவாயிருந்த துருத்தியார் தமைத் தொழுது**
**புக்கதனில் முழுகுதலும் புதியபிணி அது நீங்கி**
**அக்கணமே மணியொளிசேர் திருமேனி ஆயினார்**
**(ஏயர். 298, 299)**

ஊன நீக்கத்தில் உலகளாவிய நிலையில் ஒப்புமைச் சாயல் இவற்றில் வலியுறுத்தப் பெறுகின்றது.

**கூனுங் குருடுந் தீர்த் தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்**
**யானும் பரவித் தீர்கின்றேன் எழுபிறப்பின் முடங்குகூன்**
**(கூற்றுவ. 9)**

என்ற விரிவு, புறநோயும் - ஊனமும் - பிறவி நோயும் நீங்கல் இறைமையில் இணைவதைப் புலப்படுத்துகின்றது.

**ஊனர் நிலை**

பரிவுக்கு அல்லது பரிதாபத்திற்குரியதாக ஊனர் நிலை அமையக்கூடும். ஊனர் புரக்கப்படல், பாதுகாக்கப்படல் என்பதும் பயன்படுத்தப்பெறல் என்பதும் தமிழின் பழைய இலக்கியங்களில் காணப்பட்டபோதும் பெரியபுராணத்தில் அமைப்புண்ணவில்லை. மணிமேகலைக் காப்பியம், அவளும் ஆபுத்திரனும் உணவூட்டிப் புரந்தவர் பட்டியலில் ஊனரையும் உட்படுத்துகின்றது (மணி. 13. 111-113; 28.222-223). சிலப்பதிகாரம், அரண்மனை ஊழியராக ஊனரைப் பன்முறை காட்டியது, கம்பராமாயணத்திலும் பயின்று, இவரும் சமூகத்திற்குப் பயனுடையவரானமையைப் புலப்படுத்துகின்றன (பார்க்க, இளங்கோவும் கம்பனும், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 1986, பக். 155-156). ஆயின் பெரியபுராணம், ஊனர் எள்ளப்படுதலையும், எள்ளலுக்குரிய காரணமாக ஊனம் அமைதலையுமே காட்டுகின்றது. அமணர் தண்டியடிகளை எள்ளி, அவர் நட்ட கம்பும் கயிறும் பறித்து அவமானஞ் செய்து இடுக்கண் விளைத்தல் இதனை உணர்த்தும் (தண்டி. 8, 10-11).

**ஊனர் செயல்**

கண்ணற்றோரின் செயல் நிலை உணரப் பெரியபுராணக் குறிப்புகள் உதவுகின்றன. சங்கிலிக்காகத் தன் கண்ணை இறைவன் மறைத்த பொழுது, பிறர் வழிகாட்ட முன்போந்து, இறைவன் ஊன்றுகோலருள அதனைப் பயன்கொண்டு சுந்தரர் செல்லல் (ஏயர்கோன். 277, 279) தரப்பெறுகின்றது.

ஊனம் முயற்சிக்குத் தடையாக அமையாமையும், ஊனமுற்றோரும் செயற்பட முடியும் என்பதும் தண்டியடிகளிடம் வெளிப்படுகின்றது. இறைவழிபாட்டுத் திருத்தொண்டில் ஈடுபட்ட அவர், தீர்த்தக்குளம் பெருகக் கல்லும் முயற்சியை மேற்கொள்கின்றார். அடையாளத்திற்குக் கம்பு நட்டு, வழியறியக் கயிறு கட்டி, தடவித் தடவிச் சென்று செயல்திறம் காட்டுகின்றார்.

**குழிவா யதனிற் குறி நட்டுக் கட்டுங் கயிறு குளக்குலையின்**
**இழிவாய்ப் புறத்து நடுத்தறியோ டிசையக் கட்டி இடைதடவி**
**வழியால் வந்து மண்கல்லி எடுத்து மறித்துந் தடவிப்போய்**
**ஒழியா முயற்சியா லுய்த்தார் ஓதும் எழுத்தஞ் சுடனுய்ப்பார்**
**(தண்டி. 5)**

**சில எண்ணங்கள்**

1. அகவூனம் புறவூனம் எனக் காணும் போது முன்னது மிகத் தீதாய் அமைகின்றது. புறவூனர் தம் நிலையில் புலன் குறைவுடையவராய், உறுப்புகளற்றவராய் இருக்கின்றனரே யொழியப் பிறர்க்குத் தீமை செய்பவராக இல்லை. ஆயின், 'உள்ளமும் கோடிய' (கம்பன். 1487) அகவூன நிலையினர் சமூகத்திலிருந்து அடியோடு நீக்கப்படவேண்டிய தீயோராக உள்ளனர். 'அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல்....' (குறள். 35) எனத் தூய்மைப்படுத்தப்பெற வேண்டிய அகவூனம் பலவும் தனித்த சிந்தனைக்குரியன.

2. பிறவியூனம், ஊனஞ் செய்தல், ஊன நீக்கம், ஊனர் செயல், ஊனர் நிலை என்பனவற்றுள், பிறவற்றைவிட, "ஊனர் சமூக நிலை" என்பது முதன்மையான - முக்கிய சிந்தனைக்குரியது.

3. சமூகவியல் ஆய்வில் ஊனமுற்றோர் பற்றிய சிந்தனை தெளிவாகவும் விளக்கமாகவும் முழுமையாகவும் காணப்படல் தேவையாகும்.

4. தமிழிலக்கியங்களை முழுமையாகக் கண்டு கருத்துகள் தேரப்பெறும் போது காலந்தோறும் இவர் பற்றிய எண்ண நிலை வெளிப்படும்.

5. ஏட்டிலக்கியத்துடன் நின்றுவிடாது, வாய்மொழி இலக்கியமும் - கதை, பாடல், பழமொழி, விடுகதை, வழக்கு / மரபுத் தொடர் - இவர் பற்றிய தரவுகளுக்குக் களனாகும் போது செய்தி விரிவுபெறும்.

6. வரலாற்று நிலையில் இவர் பான்மை புலப்படக் கல்வெட்டு, சிற்பம், ஓவியம் முதலியனவும் அணுகப்படல் சிறப்பாகும்.

7. படைப்பாளராக (இலக்கியம், கலை) இவர் அமையும் சூழலில், உளவியல் நோக்குடன் படைப்பினை இணைத்துக் காணல் பிறிதொரு பரிமாண விரிவு அளிக்கும்.

8. இவர் தொடர்பான நம்பிக்கை, பழக்கம், விலக்கு போன்றன திரட்டப்பெறும்போது, சமூகத்தில் இவர்நிலை மேலும் விளக்கம்பெறும்.

9. இவரை மையமாகக் கொண்டு ஆக்கப்பெறும் படைப்புகள் தனித்த பார்வைக்குரியனவாய்த் தென்படுகின்றன.

10. நூல் பலவாக விரியும் பான்மையினதாக இவ்வூனர் கல்வி அமைகின்றது.

# பழமொழியிலும் விடுகதையிலும் ஊனர்

## முன்மொழி

சமூக - மானுடவியல் கல்வியின் அடிப்படைக் களப்பொருண்மையுள் நாட்டாரியலும் ஒன்று. பழமொழியும் விடுகதையும் உள்ளிட்ட நாட்டாரிலக்கியம் பலவும் மொழியின் 'நயமுடைப்' பகுதியாகி, மக்களிடம் - பழங்குடியினரிடம் - காணப்படும் 'சொற்கலை'யாக அமைகின்றன. இனிய பொழுதுபோக்கு ஆகுதல் சொற்கலையின் வெளிப்படைப் பயன்பாடு. மேலும், கற்பித்தல் அல்லது அறிவுறுத்தல், சமூகத்தைக் கட்டுப்படுத்தலும் நெறிப்படுத்தலும், தலைமை கொள்ளல், உணர்வு வடிகாலாதல், பண்பாட்டுத் தொடர்ச்சி தருதல், அரசியற் கருத்துப் பரப்புக்குப் பயன்படல் எனப் பிற பயனும் அவற்றிற்குண்டு.

தமிழைப் பொறுத்தவரை பழமையான தொல்காப்பியம் எனும் இலக்கண நூலே பழமொழி (முதுசொல்/மொழி), விடுகதை (பிசி) என்பனவற்றைக் குறித்துவிடுகிறது.* முன்னது, பழமொழி நானூறு, பழமொழிச் சதகங்கள் பலவற்றின் வழி ஏட்டிலக்கியத் தன்மை பெறுகின்றது. எனினும் வாய்மொழியாகத் தொடரும், மக்களிடைப் புழங்கும் பாங்கால், நாட்டுப் பாங்கினதாக இங்குக் கொள்ளப்பெறுகின்றது.

பழமொழி, புறநிலையில், வெளிப்படையான சொற்பொருட் பாங்கில் அமைவதில்லை. அவை உருவாகிப் பயன்படும் சமூகச் சூழலோடு பொருந்தி ஆழ்பொருள் வழங்குவன. விடைத் தேர்ச்சி என்பது விடுகதையைப் பழமொழியிலிருந்து வேறுபடுத்துகிறது. சுருக்கமாக அமைதல், ஒப்புமையின் அடிப்படையில் உருவாதல் என்பன பொதுப்பண்புகள். மூதாதையரின் அறிவுத் திரட்சியாகப் பழமொழி கருதப்பெறுகின்றது. பெரியவர்க்குரியது பழமொழி யெனின், விடுகதை சிறுவர்க்குரியது. சமூகச் சீர்கேடுகளை விமரிசிக்கப் பழமொழியும் விடுகதையும் கைவர, மேம்பாடுகளைப்

---

* பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும் (தொல்.பொருள். 384)
பிசி விளக்கம் - தொல்.பொருள். 478.
முதுமொழி விளக்கம் - தொல்.பொருள். 479.

புகழவும் பழமொழிகள் அமைகின்றன. விடுகதைகள் உணர்வு வடிகாலாகி - சமூக - உளவியல் பயன் தரத்தக்கன.

**ஊனம்/ர்**

உடற்குறையும் உள(அறிவு)க் குறையும் ஊனப் பொது நிலைகளாகும். நேரடிச் சமூகத் தரவுகளிலிருந்து இவ் வகையினர் பற்றி அறிவதுடன், ஏட்டிலக்கிய நாட்டிலக்கியத் தரவுகளிலிருந்தும் இவர் குறித்துத் தெளிய இயலும். இவற்றிற்கிடையே ஒருமை அமையுமெனினும் வேறுபாடும் காணக்கூடும் என்பது கருதுகோள். ஏடு சுட்டாததை வாய்மொழி தரலாம். அகராதியிலும் உட்படாத 'புதிய' சொற்கள், பொருள்கள் காணப்பெறலாம். ஊனரைப் பழித்தலும் - இழித்தலும், ஊனம் குறியீடாதலும், மரபுத் தொடர் ஆக்குதலும் செவ்விலக்கியத்தை விடப் பிறிதில் மிகுந்த வாய்ப்பின. ஒப்பீட்டு நிலையில் காணும் போது, பொதுமக்களின் மன நிலை இவர்பால் இரக்கமும் கனிவும் குன்றியதாகப் புலப்படுவதும் வலியுறுத்தப்பெறலாம்.

உறுப்பு இன்மை, உறுப்புக்குறை, உறுப்புச் செயற்பாடின்மை அல்லது செவ்விய செயற்பாடின்மை; உறுப்புக் குறைத்தல் அல்லது செயலிழக்கச் செய்தல்; இவை பிறவியில் அமைதல் அல்லது பின்பு ஏற்படுதல்; விபத்து, நோய், முதுமை காரணமாக இந்நிலை ஏற்படுதல் - எனப் பல நிலைகள் இக்களங்களிலும் தரவுகளாகின்றன. ஊனங்குறிக்கின்ற (ஊனச்) சொற்களாக அமையினும், பழமொழியிலும் விடுகதையிலும் அவற்றின் ஆட்சியில் சிறிது வேறுபாடு அமைகின்றது. பழமொழி பெரும்பாலும் இவ்வூனச் சொற்களை ஊனம் குறித்தே பயன்கொள்ள, விடுகதை சிறிது வேறுபடுகின்றது. இவ்விடுகதையில் ஊனச்சொற்களிருப்பினும் அவை ஊனம் குறிக்கவில்லை. இடை இல்லாத, முகமில்லா, கழுத்தில்லா, பல்லில்லா, குடலில்லா, தசையில்லா, வயிறில்லா, விரலில்லை, நடக்கத் தெரியாதவன், நடக்க முடியாதவன், ஒற்றைக் கண்ணன் என்பன போன்று வருவன பல ஒருவகையின; உறுப்பு உண்டு - செயலின்மை என்ற பாங்கில் 'வாயுண்டு பேசமாட்டான்' எனவும் உறுப்பும் செயலுமில்லை என்றவாறு 'செவியில்லாத செவிடன்' என்பன போன்றும் வருவன பிறிதொரு வகை; இவை விடுகதைக்கே உரிய 'ஊனநிலை' எனலாம். ஏனெனில் விடுகதை கூறும்போது இச்சொற்கள் வருகின்றனவே யொழிய அவற்றின் விடையில் ஊனம் அல்லது ஊன(முற்றோ)ர் வரவில்லை. கிட்டிய

தரவுகளைப் பார்க்க, ஊனம் அல்லது ஊனர் விடையாமாறு எந்த விடுகதையும் ஆக்கம்பெறவில்லை.

பழமொழியில் உயர்திணை ஊனமும் அஃறிணை ஊனமும் குறிப்பாக உயர்திணையைச் சுட்டிவர, விடுகதையில் இவை இயங்கு-இயங்கா அஃறிணைப் பொருட்களை, இயற்கை-செயற்கைப் பொருட்களை விடையாகக் கொண்டு வந்து வேறுபடுகின்றன. மனிதனின் இழிசெயல்களைப் பழிக்கவும், கீழான பண்புகளை எடுத்துச் சுட்டவும், நேரடியாக அணுகாது, மறைமுகமாகக் குறிக்க அல்லது குற்றஞ்சாட்ட பழமொழியின் ஊனங்கள் பயனாகின்றன. ஆயின் விடுகதையின் ஊனம், பொருட்களை இனங்காண குறியீட்டுத் தன்மை கொண்டு விளங்குகின்றன.

பார்த்த தரவுக் களனில், 50 பழமொழிகளுள் ஒன்றில் ஊனம் வருகின்றதென்றால் (2%), விடுகதையில் 25-இல் ஒன்று ஊனம் சுட்டி வருகிறது (4%). ஒரு பழமொழியில் ஒரு ஊனம் வரலே பெரும்பான்மை. அருகி நான்கு வரை இது மிகுந்து செல்லலாம். சான்று:

கள்ளனை நம்பினாலும் *குள்ளனை* நம்பலாகாது; (1)

*சப்பாணிக்கு நொண்டி* சண்டப் பிரசண்டன்; (2)

*ஊமையன்* பாட *சப்பாணி* ஆட *செவிடன்* கேட்க *குருடன்* பார்க்க; (4)

விடுகதை ஒன்றில், விளக்கத் தேவைக்கேற்ப ஒன்றும் பலவும் ஊனங்கள் அமையும். சான்று:

*கூனற்* கிழவனுக்குக் குதிகால் வரைப் பற்கள் (1)

*ஒத்தைக்கால் குள்ளனுக்கு* எட்டுக்கை (2)

*காலில்லா* மாடொன்று கட்டுண் டிருப்பதைக்
*கண்ணில்லான்* காவல் காத்துக்கொண்டிருக்கக்
*கையில்லான்* பாலைக் கறந்து கொடுக்க
*வாயில்லான்* வாங்கி வயிறு நிறைய உண்டானே.(4)

கருத்து விளக்கத்திற்காகப் பழமொழியும் விடுகதையும் ஊனத்தைப் பயன்படுத்தும் சூழல்கள் தனித்த சிந்தனைக்குரியன. ஊனம் வருகின்ற பழமொழிகளிலும் விடுகதைகளிலும், ஊனச் செய்தியை நீக்க இயலுமா அல்லது அவை இன்றியமையாதனவா

எனக் காணின், இவை உட்படுதலின் தேவை வெளிப்படும். ஊனச் செய்தி வருகின்ற சில பழமொழிகள் தரும் பொருளை, அச்செய்தி இல்லாத பழமொழிகளும் தர வாய்ப்புண்டு.

*நொண்டிக்* குதிரைக்குச் சறுக்கினது சாக்கு;
வேலைக் கள்ளிக்குப் பிள்ளை மேல் சாக்கு

என்பது போன்றும்,

*குள்ளப்* பார்ப்பான் கிணற்றில் விழுந்தால் தண்டு எடு தடி எடு;
நரி கிணற்றில் விழுந்தால் தண்டு எடு தடி எடு.

என்பது போன்றும் அமைவன சான்று. ஒரே கருத்தைத் தரும் பல பழமொழிகளும் தொடர்ச்சியாக ஊனச் சுட்டுடன் அமைவதும் காணப்படுகின்றது.

*சப்பாணி* மாப்பிள்ளைக்குச் *சந்துஒடிந்த* பெண்சாதி;
மொட்டைச்சிக்குத் தகுந்த *மூக்கறையன்*;
வயிற்றெரிச்சல் பெண்சாதிக்கு *மாலைக்கண்* ஆம்புடையான்;
சண்டிக் குதிரைக்கு *நொண்டிச்* சாரதி;
காட்டுக் கிளாக்காயும் *கண்கெட்ட* தயவில்லா ஓணானும் கோத்துக் குலவுவது போல.

இவை ஊனக் குறிப்பு இணைவதின் இன்றியமையாமையை விளக்கும்.

பொதுவாகச் சொன்னால், குறை சுட்டவே ஊனம் பழமொழியில் பயன்படுவதாகத் தெரிகிறது. இன்மை, இயலாமை இழப்பு, இழிவு, செயலறுதல், ஏற்புடையதன்றாதல், அறியாமை, தவறு எனப் பல நிலைகளாக இது பெருகும். மிக அருகி, எதிர்நிலையின்றி, நேர்நிலையாக, 'உயர்வான' கருத்து எனத்தக்க பாங்கில்,

*பிறவிக் குருடனுக்குக்* கண் கிடைத்தது போல;
*பிறவிக் குருடனுக்குத்* தெய்வம் கண் கொடுத்தாற் போல;

என்பன போன்றன அமைகின்றன.

விடுகதையிலும், ஒரே விடைக்கு நேராக, ஊனத் தொடர்புடனும்அன்றியும் ஆக்கங்கள் உருவாகலாம்:

**உயிரில்லா உடலுள்ள *ஊமையாம்* தோழா**
**உயர்வான உண்மைகளை உரைத்திடுவான் தோழா**
**கையின்மேல் காசளித்தால் வந்திடுவான் தோழா;**
**சின்னச் சதுரப் பெட்டி**
**சிங்கார வர்ணப் பெட்டி**
**கற்றோர்க்குக் கைப்பெட்டி**
**விற்றோர்க்குப் பணப்பெட்டி**

இவ்வாறே ஒரே விடை வரும் வண்ணம் வேறுபட்ட ஊனத் தொடர்புடைய விடுகதை எழலாம்:

**அக்காள் *சப்பாணி* தங்கை நர்த்தனப்பெண்**
**இந்த இருவரும் இல்லாவிட்டால்**
**குடித்தனப் பெண் சிணுங்குவாள்;**
**நெட்டை அக்காள் தாக்குகிறாள்**
***குட்டை* அக்காள் தாங்குகிறாள்;**

ஆயின், பழமொழிக்கு வேறாக, விடுகதை, குறை அல்லது இழிவைச் சுட்ட எங்கும் ஊனத்தைப் பயன்கொண்டிலது. அதன் காரணம், பெரும்பாலும் பண்புகட்கோ செயல்கட்கோ வன்றி, பொருட்குச் சுட்டாகி விடுகதை வருவது ஆகலாம்.

விடுகதையிலும் பழமொழியிலும் இவ்வாறு ஊனர் இடம்பெறுகின்றமை, சமுதாயம் அவரைப் பற்றிய சிந்தனையும் கொண்டிருந்தது எனக் காட்டும். எனினும் சமுதாயத்தில் ஊனரின் விழுக்காடோ, சமுதாயம் அத்தகையோரைக் குறித்த கரிசனம் உடையதாக இருந்தது என்பதோ, அவரை மதித்தது என்பதோ புலப்பட்டிலது. எனினும் இது மேலும் ஆய்ந்து அணுகத் தக்கது.

**சொற்கள்**

ஊனம் குறித்தும் ஊனம் தொடர்பாகவும் ஏறத்தாழ 1,050 சொற்கள் தமிழ் லெக்சிகனில் காணப்படுகின்றன. இந்தச் சொல் மிகுதி ஊனர் மிகுதியாக இருந்தனர் என்பதையா, ஊனம் பற்றிய எண்ணம் மிகுதியாக இருந்தது என்பதையா காட்டுகிறது என்பது புலப்பட்டிலது. தரவுக்கு எடுத்துக்கொண்ட விடுகதையிலும் பழமொழியிலும் முறையே சுமார் 70, 1130 என ஊனம் காட்டும் சொல் வெளியீடுகள் அமைகின்றன.

பெரும்பாலும் ஒரு ஊனநிலை குறிக்க, ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் வருகின்றன. ஏட்டிலும் அகராதியிலும் காணப்படும்

செஞ்சொற்கள் இங்குப் பெரும்பாலும் வருதலில்லை அல்லது அருகிவருகின்றன. புறநானூறு குறிக்கும் சிதடு, குறள், ஊம், மருள் என்பன போன்ற சொற்கள் இங்குக் கையாளப்பட்டில; ஆயின் அவ்வூனங்கள் சுட்டப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு ஊனங் குறிக்க வரும் சொற்களின் எண்ணிக்கை ஒப்பிடும்போது, சில உறுப்புக் குறைவுக்குப் பல சொற்களும், மற்றும் சிலவற்றிற்கு ஓரிரு சொற்களும் அமைவது இந்நிலை பற்றிய இன்னும் சில சிந்தனைகளை வழங்கலாம்.

**ஊனம்:** ஊனம் என்ற சொல் விடுகதையிலின்றி, பழமொழியில் வழங்குகின்றது. 'குத்தாத காதுக்கு ஊன மில்லை' எனத் தனித்தும், 'கண்ணூனன் கைப்பொருள் இழப்பான்' என ஊன நிலையுடன் இணைந்தும் வருகின்றது. கண்ணூனம்/ன் என்ற ஆக்கம் அகராதியிலும் இடம்பெறவில்லை.

**கண்:** கண்குறை தொடர்பாகப் பல வெளியீடுகள் பழமொழியில் அமைவது தனித்த சிந்தனைக்குரியது. அஃறிணைச்சொல், உயர்திணை விகுதியுடையது, பிறவிக் குறை சுட்டுவது, உறுப்பிருந்தும் செயலின்மை தருவது, கண்ணின் குறைபாடு, நோய் அல்லது முதுமை காரணமாகக் கண்ணில் ஏற்படும் சிதைவு, குருடு-கபோதி-நொள்ளை-அந்தகன் போன்று கண்ணூனம் குறிக்கும் நேரடிச் சொல்லைப் பயன்படுத்தாது விளக்கமாகக் கூறுதல், சொல்லடிப்படையில் ஆக்கப்படும் மரபுத்தொடர் என இது பலவாகும் (இணைப்பு காண்க). இவ்விரிவு விடுகதையில் இல்லை. எனினும் ஒற்றைக்கண், சிமிட்ட வகையறியான், பார்க்காது, விழிக்க மாட்டான் என விடுகதையில் வருவன பழமொழியில் பெறப்படாதன.

மொத்தப் பார்வையில், கண் தொடர்பான ஊனச் சொல்லாக்கங்களே பிற ஊனங்களிலும் எண்ணிக்கையிலும் ஆட்சியிலும் மிகுந்து பழமொழியில் அமைவது தெரிகிறது. அதாவது, ஹெர்மன் ஜெர்சனின் தொகுப்பில் ஊனம் தொடர்பான 85 பழமொழிகள் கிடைப்பதில், 35 பழமொழியில், மொத்தம் 45 இடங்களில் கண்-ஊனம் ஆளப்படுகின்றது. ஊனங்களிலனைத்திலும் மிகுந்த துன்பமான, உதவியற்ற, பரிதாப நிலையாகக் கண் ஊனம் அமைந்ததும், அவ்வாறு சமுதாயத்தால் கருதப்பட்டதும் இதற்குக் காரணமாகலாம். குருடரைக் காண்பது 'அமங்கலம்' அல்லது 'சகுனத்தடை' என்ற கருத்துடைய பழமொழி இல்லெனினும்

சமுதாயம் இத்தகு எண்ணம் கொண்டது எனத் தோன்றுகின்றது. ஒளி, கல்வி, அறிவு, கண்ணோட்டம் போன்ற பல சிறப்புகட்குக் கண் குறியீடாகும் நிலையும், கண்பேற்றின் உயர்வையும் கண் இன்மையின் குறைபாட்டையும் புரிந்துகொள்ளத் துணைத் தரவு வழங்கலாம். ஐம்புலன் - ஐம்பொறி என நினைக்கும்போது, 'கண்டு கேட்டு' என முதலிலும் 'மெய்-வாய்-கண்-மூக்கு-செவி' என மத்தியிலும் வைத்தலும் இங்கு மேலும் விளக்கம் தர வல்லன.

ஊனம் செய்தல், அல்லது ஊனம் ஏற்படுத்துதல் என்பது பிற உறுப்புகளுடன் கண்ணுக்கும் அமைவதும் இங்குச் சுட்டற்குரியது.

**காது:** காது, செவி என்ற உறுப்புப் பெயரடிப்படையில் ஊனச் சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. புற உறுப்பு இன்மை அல்லது இழப்பு, கேள்வித்திறன் அவ்வுறுப்புக்கு இல்லாத நிலை ஆகியன உட்படுகின்றன. இவ்வுறுப்புச் சிதைவு அதற்கெனத் தனிச் சொல்லாக்கத்துடன் அமைதல் (காதறுந்த/பட்ட/மூளி), மூக்கு எனும் உறுப்புக் குறையிலும் அமைவது தனித்த சிந்தனை தரலாம். இங்கும் அஃறிணை உயர்திணை விகுதிபெறல், உறுப்புக்குறை செய்தல் என்பன காணப்படுகின்றன. ஊசியின் நூல் நுழையிடம் 'காது' எனப்படுவதால் காதறுந்த/காதற்ற ஊசி - என மனிதனுக்கன்றியும் வரும். மேலும்,

**கம்மாளன் பசுவைக் காது அறுத்துக் கொள்ள வேண்டும்**

என வருமிடத்திலும் இது வேறுபடுகின்றது.

முன் சுட்டியது போல செவியில்லாத செவிடன், காதில்லை போன்ற வெளியீடுகள் விடுகதையில் அமைகின்றன.

காது குத்துதல் என்பதை 'ஊனம் செய்தல்' என எடுத்துக்கொள்ள முடிவதால் தொள்ளைக்காது (வடிந்த காது?) என்பது இங்கு இணைக்கக்கூடும்.

**வாய்:** நாவு, பல் என்ற உறுப்புகளும், பேச்சு எனும் திறனும் குறைவுறுதல் இங்கு வரத் தக்கன. பேச்சுத்திறன் என்ற பாங்கில் பல் இணைவதில்லை.

பல் பிடுங்கின பாம்பு, பல் போனவளுக்கு என பழமொழியும், பல்லில்லா என விடுகதையும் தருவன 'ஊனம்' எனக் கருதப்படாதிருக்கவும் கூடும்.

இங்கு வாய் என்ற புற உறுப்புக்குறை சுட்டப்பட்டிலது. வாயில்லாவிட்டால் எனப் பழமொழியும், வாயில்லாத, வாயில்லாதான், வாயில்லாமல், வாயில்லான், வாயில்லை, வாயுமில்லை என விடுகதையும் தருவன பேச்சு(த்திறன்) இன்மையைக் குறிப்பனவாம். 'நாக்கைக் கூழையாய் அறுத்தாலும்' என உறுப்புச் சிதைவும், பேச்சுத் தன்மையின் செவ்வியின்மை உளறுவாயன், தெத்துவாயன் எனவும் அமைவது பழமொழியின் பாங்கு. ஊமை என்பதுடன் 'மௌனி' எனவும் பழமொழி மட்டும் தருவது குறிப்பிடத் தக்கது. இச்சொல் அகராதியில் இருப்பினும் அதற்கு ஊமை என்பதை ஒத்த பொருள் நிலை அங்கில்லை.

**மூக்கு:** உயிர்க்கும் உறுப்புச் செயல் நிலை, உயிருடை உயிர்கட்கெல்லாம் அமையும் எனினும், அப்புற உறுப்பு ஊனந் தொடர்பான செய்திகளும் தெரியவருகின்றன. பிற உறுப்பு ஊனங்களுக்கு வேறாக மூக்கிற்கு மட்டும், இன்மை, அறுதல், ஒடிதல், கெடுதல், அழித்தல் என்பன மிக்கு வருகின்றன. மூக்கில்லை, மூக்கில்லாமல் என்பன மட்டும் பழமொழியில்வர மூக்கறை முதலிய பல விடுகதையில் வருகின்றன.

**கால்:** விடுகதையில், பிற ஊனங்களினும் மிகுதியாகச் சொற்பயில்வது கால் ஊனம் என்பது குறிப்பிடத்தக்கது. கண்ணிற்கு அடுத்ததாகக் காலின் குறைபாடே பழமொழியிலும் சொல்மிகுதி கொள்கின்றது.

'அடியில்லை' என விடுகதை தருவது சிறிது வேறுபட்டது. 'பிறக்கிற பொழுதே முடம்' என்பது பழமொழிக்குரியது. மொண்டி என்ற வடிவத்தையும், உதறுகாலி, துடைகாலி என்ற சாரியல்புகளையும் மூன்றுகால் எனும் கருத்தினையும் பழமொழி வழங்குகின்றது. 'ஒற்றைக்கால் குள்ளன்' என இரு ஊனங்களை இணைத்தல், 'கால் இல்லாத கபடன்' எனப் பண்பு விளக்கல், நடக்காது - நடக்க முடியாது போன்று காலின் செயலின்மையைத் தருதல் என்பன விடுகதையில் மட்டும் அமையும். 'கட்டை ஊடாடிய கால்' எனும் பழமொழித் தொடரில் மட்டும் 'ஊன நீக்கத்தின்' கருவிப் பயன்பாடு வருகிறது.

**கை:** ஊற்றுறுப்பாகிய மெய்யில் ஊனம் சுட்டப்படுமிடத்துக் கால் தவிர, கை, சிறகு, வால் என்பன குறிக்கப்பெறுகின்றன. இவ்வூனங்களுக்குத் தனிச்சொல் இருப்பதாகப் புலப்படவில்லை (கூழை?).

சிறகொடிந்த, சிறகில்லா என்பன பழமொழியில் மட்டும் உண்டு. வால் அறுந்து போச்சு எனப் பழமொழியும், வாலுமில்லை என விடுகதையும் சுட்டும். இவை உறுப்பு ஊனத்தை அன்றி, செயலின்மை - செயலிழத்தல் - இழிவடைதல், இழப்பு என்ற பாங்கினை உணர்த்தும்.

கை ஊனம், கையின்மை யாகவும், கை நீக்கப்படுவதாகவும் வருகிறது. 'கால் - கை யில்லாப் பாவி' எனவும் விரலில்லை எனவும் விடுகதை கூறுவன தனித்தன்மையுடையன. கூழைக் கையன், இரு கையும் கூழையாய்ப் போச்சு எனும் பழமொழித் தொடர்கள், கையூனத்துடனும் 'கூழை' என்பதைச் சார்த்திக் கருதச் செய்கின்றன.

'கையை அறுத்தாலும் அகப்பை கட்டிக்கொண்டு' என்பது செயற்கை உறுப்புச் சிந்தனையின் தொடர்ச்சி ஆகலாம்.

**பிற உறுப்புகள்:** ஊனம் என்ற பட்டியலில் உடனடியாக உட்பெறாத, முன்சுட்டிய, 'ஊனமில் ஊனங்கள்' சொல்நிலைக்காக இங்குக் கருதப்படுகின்றன. பழமொழி, இடுப்பொடிந்த என்பதை குறையாகக் கொள்ள வாய்ப்புத் தருகிறது. 'பங்கறை' என இது தருவது, தனியுறுப்பின் இன்மையாக வன்றி, மொத்தப் பார்வையில் அழகின்மை (அவலட்சணம் : அகராதி) சுட்டுவதும் இங்கு இணையக்கூடும்.

**குறள்:** தனியுறுப்பிலன்றி மொத்த உடலளவில் அமையும் இக்குறைபாடு பன்முறை சுட்டப்படுகின்றது. கூன் - குறள் எனும் நிலைகளை ஒப்பிட, பின்னதே மிகுதியாகச் சொல்லாட்சி வகை பெறுவது தெரிகிறது. இவ்வுடற்குறை பற்றிய எண்ணத்தின் சமூகப் பாதிப்பை இது காட்டலாம்.

கட்ட, குள்ள, குட்டை, குறிய, கூழ - எனும் 'அடிச்சொல்' நிலைகள் பெருகி வருகின்றன. வருமிடம் நோக்கக் குண்டன், முண்டன் எனும் சொற்களும் பழமொழியில் குறள் சுட்டுவனவாகத் தோன்றுகின்றன.

முண்டனுக்கு இரண்டாள்
கோழிக்காய்ச்சலும் குண்டன் காய்ச்சலும் விடாது
குழந்தை காய்ச்சலுடன் குண்டன் (குள்ளன்) காய்ச்சலும் பொல்லாது

குண்டுக் குள்ளன் என விடுகதையும், அருங்குள்ளன், அறக்குள்ளன் எனப் பழமொழியும் தருவன தனித்தன்மையுடையன. 'குறியார்'

எனும் பயன்பாடு, 'நெடியார் குறியாரை ஆற்றிலே தெரியலாம்' என்பதில் வரும்போது குள்ளம் என்பதை யன்றி, சராசரி உயரமின்மை என்பதையும் குறிக்கக் கூடும். கட்டை போன்ற பிற சிலவற்றிற்கும் இது சாரலாம்.

**கூன்:** இரு களங்களிலும் ஓரிரு சொல்லுடன் பயின்றது. குனி, கூன், கோணல் என்பன தவிர, பரியாயச் சொற்கள் பல இல்லாத உடற்குறையாக இது அமைவது தெரிகிறது.

**மருள்:** அறிவின்மையும், பால் மயக்கமுமாகப் புறநானூற்று (28) உரையிலும், சூடாமணி உரையிலும் விளக்கம் பெறும் இதன்கண் அடங்கும் வண்ணமும் ஒருசில சொற்களே உள. அவையும் ஒப்பீட்டு வாய்ப்பின்றி பழமொழியில் மட்டும் அமைந்தன (இணைப்பு-1 காண்க).

ஒரு பொருட் பலசொல் என்ற மொழி - இலக்கண மரபுக்கேற்ப இவ்வூனங்குறித்து வரும் பலசொல்லும் இயல்பு எனினும், ஒரு சொல் இருக்க, பிற சொல் உருவாகுவதன் - பயன்படுவதன் தேவையும் எண்ணத்தக்கது. பிற மொழிகளுடன் ஒப்பிட்டுக் காணின், தமிழில் மட்டும் இப் பெருக்கமா எனவும் அறிய முடியும். அதனால் சிறப்பு விளக்கம் பெறவும் முடியும்.

'எண்பேர் எச்சம்' பற்றிப் புறநானூறு (28) கூறுமிடத்து சுட்டும் 'உறுப்பில் பிண்டம்', 'மா', என்பன இப்பழமொழி, விடுகதைகளில் காட்டப்படாமை கருத்திற் கொள்ளத்தக்கது.

அகராதி போலன்றி, பழமொழி - விடுகதைகள் ஊனங்குறித்து பெரும்பாலும் தமிழ்ச் சொல்லே ஆள்வதும் குறிப்பிடத்தக்கது. விலக்காக அந்தகன், ஜெ (ச)ன்மக்(குருடன்), நபுஞ்சகன் போன்றன அருகி பழமொழியில் இடம்பெற்றன.

### சமுதாயச் சிந்தனை

ஊனரைப் பற்றிய எத்தகு கருத்து மதிப்பீடுகளை மக்கள் கொண்டிருந்தனர் என உணர இங்கும் இடமமைகின்றது. ஊனமிருப்பினும், அவரால் பயனுண்டு; குறையிருப்பினும் இவர்பால் இரக்கங்கொண்டவர் உளர்......போன்ற எண்ணங்களை விடுகதை சிலவற்றின் அமைப்பிலிருந்து உய்த்துணர முடிகிறது.

**கண்ணில்லாத நான் குருடருக்கு** *வழிகாட்டுகிறேன்;*
**காதில்லை கேட்பதற்குக் கண்களில்லை பார்ப்பதற்கு**

வாயுமில்லை பேசுதற்கு
வந்தவர்க்கு *நீதியுண்டு என்னிடத்தில்;*
கையும் இல்லை காலும் இல்லை கட்டப் பொண்டாட்டி
கைஎடுக்கும் நேரம் எல்லாம் *காரியக்காரி*

என வருவன பல, 'ஊன'ரின் பயன்பாட்டை உட்கொண்டன.

குயவனோ கன்னனோ என்னைப் பெற்றான்
பெண்களோ என் கழுத்தைக் கட்டிக்கொள்வர்
ஆண்களோ தோளின்மேல் வைத்துக் கொண்டார்
கால் கை யில்லாப் பாவிக்கு *இரங்காருண்டோ!*

என்பது அவர்பால் இரக்கங்காட்டினர் என்பதைத் தெரிவித்தாலும், 'ஒல்லியான மனிதன், ஒருகாது மனிதன், காது போனால் தொடமாட்டார்கள்' என்பது மறுதலைக் கருத்தையும் தருகின்றது. வேண்டப்படாத மக்களாக ஊனர் அமைதல் இது.

விடுகதையின் முன்னிரு பண்புகள் பழமொழியில் அமைந்தில. இது குறிப்பிடத்தக்கது. ஊனர்கூட, சிறப்புச் சான்றாக இயலும் என்பது, 'அயலார் உடைமையில் அந்தகன் போல் இரு' எனும் ஓரிடத்தில் மட்டும் வெளிப்படுகின்றது. இச்செய்தி ஏட்டிலக்கியத்திற்கும் உரியதாகவும் சிந்தனையாளரின் சான்றாகவும் அமைவது அறிந்ததே.

பழமொழியின் மொத்தப் பார்வையில், ஊனரின் 'பண்புக் குறைபாடு'களே மிகுந்து மொழியப்படுவதாகத் தெரிகின்றது. பண்புக் குறைக்கு உடற்குறை குறியீடாகிறது என இதனை அமைத்துக் கொள்ள, அமைதிகாண முடியும். எனினும், ஊனர் தீமை செய்வர், தீமை பயப்பர், சகுனத் தடையாவர், அவருடன் வாழ்தல் கடினம், செயல் குறைபாடு உடையவர், இழிக்க - பழிக்கப்படுபவர், பயனற்றவரும் பிரச்சினை தருபவருமாதல், தம் தகுதிக்கு மீறிய ஆசையினர், சினம் - அழுக்காறு கொள்பவர் எனப் பல நிலைகள் விளக்கம் பெறுகின்றன. அன்றியும் சில பழமொழிகள் நம்பிக்கை வயப்பட்ட சிந்தனைகளாக, ஊனம் இறையால் ஏற்பட்டது அல்லது ஏற்படவில்லை, ஊனரை இறைவன் (மன்னன்?) பாதுகாப்பான் என்பனவற்றைத் தருவதும் (இணைப்பு-2 காண்க) மேலும் ஒப்பீட்டுச் சிந்தனை நிலையில் ஆயத்தக்கது.

ஒரே சமுதாயத்தில் எழுந்த பழமொழியும் விடுகதையும் இவ்வாறு ஊனம்/ர் பற்றிச் சிறிது வேறுபட்ட பார்வைக்

கோணங்களைத் தருவதன் பொருத்தம்/பொருத்தமின்மை மேலும் சிந்தனைக்குரியது. தத்தமக்கென வெவ்வேறுபட்ட அமைப்புகளைக் கொண்ட இலக்கிய வகைகளாக அமைவதும், கருத்துத் தேவையும் வெளியீட்டுப் பாங்கும் தனித்தன்மை கொள்வதும் இவ் வேறுபாட்டிற்கு அடித்தளமாகலாம்.

சில 'பதவி'ச் சார்புகளும், இனச் சார்புகளும், நிலைகளும் ஊனம் - ஊனமுறல் - ஊனமுறுத்தல் என்பனவற்றுடன் அருகி இணைவதும் சிந்தனைக்குரியது (இணைப்பு-3 காண்க); இது மக்கட் பாகுபாடு, படிநிலை பற்றிய சிந்தனைகளுடன் இணைந்து ஆயப்பட வேண்டியதாகக் கருதலாம்.

## தொகையுரை

1. ஊனம்/ர் பற்றிய கல்விக்குப் பழமொழி, விடுகதை என்பனவும் உதவுகின்றன.
2. விடுகதையினும் பழமொழியே நேரடியாக ஊனம் பற்றிய செய்திகளைத் தருகின்றது.
3. வழக்கிலிருக்கும், ஊனங்குறிக்கும் சொற்கள் இவற்றில் தரப்படுதல், அகராதிப் பட்டியலிலிருந்து வேறுபடுத்திக் காண உதவும்.
4. ஊன நிலைகள் மட்டுமன்றி, ஊனர் பற்றிய எத்தகு சிந்தனைகளை, மன இரக்கம்/பரிவு போன்றவற்றைச் சமுதாயம் கொண்டிருந்தது எனவும் ஓரளவேனும் உணர இவை சிறந்த தரவு வழங்குகின்றன.
5. உடற்குறை சுட்டப்பெற்றவளவு அறிவுக்குறை சுட்டப்பெறாமை தொடர்ந்து ஆய்தற்குரியது.
6. தொழில், இனம், நிலை போன்றனவும் சார்த்திக் காணப்பெறும் பாங்கு ஊனம் பற்றிய எண்ணத்தின் மற்றொரு பரிமாணம் காட்டலாம்.

## இணைப்பு-1

1. **கண் குறைபாடு:** (பழமொழி): அந்தகன், அவிந்துபோன கண், இரண்டு கண்ணும் நொள்ளை, இல்லிக்கண், இழிகண்ணணி, இளியற்கண், ஒருகண், ஒற்றைக்கண்ணன், ஓரக்கண்ணன், கண் இரண்டும் போனாலும், கண் இல்லாதவர்; கண் இல்லை, கண் இழந்த, கண் ஒன்றாவது

போக வேண்டும், கண்குருடு, கண்கெட்ட, கண்ணிருந்தும் குருடு, கண்ணுக்குக் கேடு, கண்ணூானன், கண்ணைக் குத்த, கண்ணைக் குத்துதல், கண்ணைக் கெடுத்து, கண்ணைக் கொடுத்து, கண்ணைப் பிடுங்கி, கண்தெரியாத, கண்தெரியாது, கண்பஞ்சடைந்த, கண்பறிகொடுத்து, கபோதி, குருட்டாட்டம், குருட்டுக்கண், குருடு, குருடர், குருடர்கள், குருடன், குருடி, செ(ஜ)ன்மக்குருடன், நொள்ளை, நொள்ளைக் கண்ணா, நொள்ளைக்கண்ணாச்சி, நொள்ளைக் கண்ணி, பிறவிக்குருடன், மாலைக்கண், முண்டைக்கண்ணி(?), விழியின்றி, வெள்ளெழுத்து.

(விடுகதை): ஒற்றைக்கண், கண் இல்லாத, கண் இல்லாதவன், கண் இல்லாமல், கண் இல்லான், கண் இல்லை, குருட்டு, குருடன், சிமிட்ட வகையறியான்(?), பார்க்காது, பார்வை இல்லான், விழிக்க மாட்டான்.

2. காது: (பழமொழி): காது அறுந்த, காதற்ற, காதறுத்து, காதறுந்த மூளி, காதறுபட்ட மூளி, காது இழந்தவர், காதுங்கேளாது, காதை அறுத்தவன், காதை அறுத்துக்கொண்டாள், செவி அறுத்தாலும், செவிடன், செவிடு, தொள்ளைக்காது, பிறவிச் செவிடன்.

(விடுகதை): ஒரு காது, காதில்லை, காது போனால், செவிடர், செவியில்லாதவன், செவியில்லை, செவியில்லாத செவிடன்.

3. வாய்: (பழமொழி): ஊளறுவாயன், ஊமை, ஊமைப்பயல், ஊமையன், தெத்துவாயன், நாக்கைக் கூழையாய் அறுத்தாலும், பேசவும் அறியான், மௌனி, வாயில்லா விட்டால், பல்போன, பல்லுப்பிடுங்கின.

(விடுகதை): ஊமை, பேச்சில்லை, பேசமாட்டான், வாயில்லாத, வாயில்லாதவன், வாயில்லாமல், வாயில்லான், வாயில்லை, வாயுமில்லை, பல்லில்லா.

4. மூக்கு: (பழமொழி): அறுத்த மூக்கு, அறுந்த மூக்கு, சிந்தி அறுந்து போகிற மூக்கு, சில்லி மூக்கு, தனக்கு (தமக்கு) மூக்குப் போனாலும், மூக்கறுந்த மூளி, மூக்கறுபட்ட மூளி, மூக்கறை, மூக்கறையன், மூக்கில்லை, மூக்கிலி, மூக்குக்குக்கேடு, மூக்கை அழிப்பார், மூக்கை அறுத்துக்

கொள்கிறது, மூக்கை அறுப்பாள், மூக்கை உடைத்தாற் போல, மூக்கை ஒடித்தாற்போல.

(விடுகதை): மூக்கில்லாமல், மூக்கில்லை

5. கால்: (பழமொழி): உதறுகாலி, ஒற்றைக்கால், கால் இல்லை, கால் இல்லாதவள், காலுமில்லை, காலைக் குறைத்தல், சப்பாணி, துடைகாலி, நொண்டி, பிறக்கிற பொழுதே முடம், முட, முடம், முடவன், மூன்றே(று) கால், மொண்டி.

(விடுகதை): அடியில்லை, ஒத்தைக்கால் குள்ளன், ஒற்றைக்கால், கால்கள் இல்லை, காலில்லா, காலில்லாத, கால் இல்லாத (கள்வன்) கபடன், கால்கையில்லாப்பாவி, காலில்லாதவன்/ள், காலு இல்லாத, காலு இல்லாத கையில்லாத சீவனக்கனம், காலுமில்லை, சப்பாணி, நடக்கத் தெரியாதவள், நடக்கமாட்டாதவள், நடக்கமாட்டாள், நடக்க முடியாது, நடக்கறியாள், நடக்காது, நொண்டி.

6. கை: (பழமொழி): இருகையும் கூழையாய்ப் போச்சு, கூழைக்கையன், கை இல்லாதவன், கை இற்றுப்போம், கையை அறுத்துவிட்டாலும், கையை உடைத்து விட்டவன், கையைக் குறைத்தல், கையை வெட்டிப்போட்டாலும், சிறகில்லா; சிறகொடிந்த; வால் அறுந்து போச்சு.

(விடுகதை): கால்கையில்லாப்பாவி, கைகளுமில்லை, கையில்லா, கையில்லாதான், கையில்லான், கையில்லை, கையுமில்லை காலுமில்லை, விரலில்லை; வாலுமில்லை.

7. பிற உறுப்புகள்: (முன்பகுதிகளின் பல், சிறகு, வால் என்பனவற்றை இங்கும் அமைக்கலாம்).

(பழமொழி): இடுப்பொடிந்த, கழுத்து இல்லாதவர், சந்து ஒடிந்த, தலையை உடைத்தல், மொட்டைச்சி(?), மொட்டைத்தாதன்(?).

(விடுகதை): இடையில்லாத, இடையில்லை, உட்காரமாட்டாதவர், கழுத்தில்லா, குடலில்லா, சிரமில்லாதவர், தலையில்லா, தலையில்லாத, தலையில்லாதவன், தலையில்லை, மார்பில்லை, முகமில்லா, வயிறில்லாமல், வயிறில்லை; பங்கறை(?).

8. குறள்: (பழமொழி): அருங்குள்ளன், அறக்குள்ளன், குட்டி(ச்சுவர்), குட்டைத் தாதன், குண்டன், குள்ள(ப் பார்ப்பான்), குள்ளன், குள்ளா, குறியார், *முண்டன்.

(விடுகதை): கட்ட(ப்பெண்டாட்டி), கட்டையன். குட்ட, குட்டை, குட்டையான, குண்டன், குண்டுக்குள்ளன், குள்ள, குள்ளன், கூழ(ப்பய).

(* திருவனந்தபுரத்தில் ஆறாட்டு விழா நடக்கும்போது, உடைவாளேந்திச் செல்லும் மன்னற்குக் 'கண்ணேறு' படாதிருக்க உடன் செல்லும் குள்ளனை 'ஆறாட்டு முண்டன்' எனக் கூறுவது இங்கு இணைத்துக் காணத் தக்கது).

9. கூன்: (பழமொழி): கோணல், கூனி

(விடுகதை): குனிந்த (கிழவி), கூன், கூனற்கிழவன்.

10. மருள்: (பழமொழி): (1) பெண்ணுமல்லாமல்
ஆணுமல்லாமல், பேடி,
நபுஞ்சகன்.

(2) மடையன், மூடர்

(விடுகதை): தரவு இல்லை.

## இணைப்பு-2

1. **தீமை செய்வர் எனல்:**

ஊமை ஊரைக் கெடுக்கும்;
குள்ளன் குடிகெடுப்பான் குள்ள பெண்சாதி
ஊரைக்கெடுப்பாள்;
கூனி வாயற் கெட்டாற்போல்;
மௌனி குடியைக் கெடுப்பாள்.

2. **தீமை பயப்பர் எனல்:**

உள்ளதையும் கெடுத்தாள் உதறுகாலி வந்து;
உள்ளதையும் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்;
துடைகாலி வந்ததும் எல்லாம் துலைந்து போச்சு.

3. **சகுனத் தடையாதல்:**

எதிரிக்குச் சகுனத்தடை யென்று மூக்கை அறுத்துக்
கொள்கிறது;
தமக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழை
வேண்டும்.

4. **அவருடன் வாழல்கடினம்:**

மூக்கறையனுக்கு வாழ்க்கைப்பட்டால் முன்னும் போகவிடான் பின்னும் போகவிடான்;
மூடரோடு ஆடிய நட்பு கடுவழியிற் கட்டை ஊடாடிய கால்.

5. **இயல்பு மொழிதல்/செயற்குறைபாடு:**

ஆனைகண்ட பிறவிக் குருடர் அடித்துக்கொண்டது போல;
குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்கள்;
பேடிகையில் ஆயுதம் பிரகாசிக்குமா;
வருவான் குருடன் விழுவான் கிணற்றிலே.

6. **இழித்தல்/பழித்தல்:**

குங்குமக் கோதைக்கு அஞ்சு பணம் குருட்டுக் கன்னிக்கும் அஞ்சு பணமா;
குருட்டுக் கண்ணுக்குக் குறுணி மையிட்டு ஆவதென்ன;
குருடன் கூத்தைப் பழித்தான் செவிடன் பாட்டைப் பழித்தான்.

7. **பயனின்மை/பிரச்சினை:**

குருடனை நோட்டம் பார்க்கச் சொன்னாற் போல்;
குருடி தண்ணீருக்குப் போனால் எட்டாள் மினக்கெடு.

8. **தகுதிக்கு மீறி ஆசைப்படல்:**

குதிரை குருடானாலும் கொள்ளு தின்கிறதில் குறையா;
குருட்டுக்கோழி தவிட்டுக்கு வீங்கினாற் போல;
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல.

9. **ஊனர் ஊனரைப் பழித்தல்:**

ஓரக்கண்ணனைப் பழிக்கிறான் ஒற்றைக் கண்ணன்;
மூக்கு அறுந்த மூளி காது அறுத்த மூளியைப் பழித்தாளாம்.

10. **சினங் கொள்ளல்/அழுக்காறு:**

உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்;

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச்
சொன்னால் நொண்டிக்குக் கோபம்;
சப்பாணிக்கு விட்ட இடத்திலே கோபம்;
தன் கண் இரண்டும் போனாலும் அயலான் கண்
ஒன்றாவது போகவேண்டும்.

11. **ஊனத்துக்கு இறை காரணம்:**

நிட்டூரன் கண்ணை தெய்வம் கெடுக்கும் நீதிமான்
கண்ணைப் பரிதானம் கெடுக்கும்.

12. **ஊனரை இறை காக்கும்:**

கண்ணைக் கெடுத்த தெய்வம் மதியை(கோலை)க்
கொடுத்தது;
கர்த்தாவைக் குருடன் வேண்டுவது கண்பெறத் தானே.
குருட்டு மாட்டைத் தெய்வம் காக்கிறது.

13. **இறை ஊனம் செய்யாது எனல்:**

ஆன தெய்வம் ஊனஞ் செய்யாது.

## இணைப்பு-3

### தொழில் /இனம்/பதவி

கணக்கப்பிள்ளை பெஞ்சாதி கடுக்கன் போட்டுக் கொண்டாள்
என்று
காரியக் காரன் பெஞ்சாதி காதை அறுத்துக் கொண்டாளாம்;
கம்மாளன் பசுவைக் காதறுத்துக் கொண்டாலும் உள்ளே
செவ்வரசுக்கு பாய்ச்சி யிருப்பான்;
கள்ளன் செய்த சகாயம் காதை அறுக்காமல் கடுக்கனைக்
கழற்றிக் கொண்டான்;
குசத்தி நாக்கைக் கூழையாய் அறுத்தாலும் குடம் இரண்டு
காசென்பாள்;
குள்ளப் பார்ப்பான் கிணற்றில் விழுந்தால் தண்டு எடு தடி
எடு;
கூனனைக் கொண்டு குழப்படிமாமி காணிக்குப் பிள்ளை
பெற;
கையைச் செட்டிம(ய)ார் குறைத்தால் காலைக் கைக்கோளன்
குறைப்பான்;
சூதுக்காரன் கையை வெட்டிப் போட்டாலும் துடுப்பைக்
கட்டிக்கொண்டு ஆடுவான்;

செட்டி பணத்தைக் குறைத்தான், சேணியன் காலைக் குறைத்தான்;

திவட்டிக் காரனுக்குக் கண் தெரியாது;

நொண்டி ஆயக்காரன் கண்டு மிரட்டுகிறது போல.

நிலை

எடுக்கப் போன சிமாட்டி இடுப்பொடிந்து விழுந்தாளாம்;

என்னடி அம்மா தெற்கத்தியாள் எந்நேரம் பார்த்தாலும் தொள்ளைக்காது;

கசடருக்கு யோகம் வந்தால் கண்ணுந் தெரியாது காதுங் கேளாது;

நாய் வாசலைக் காத்தென்ன, கை இல்லாதவன் பணக்காரனைக் காத்தென்ன;

பரிசத்துக்கு லோபி இழிகண்ணியைக் கொண்டானாம்;

முடப்பிள்ளை யானாலும் மூத்தபிள்ளை.

விடுகதை 'கழுத்தில்லா குயவர்', 'தலையில்லாச் செட்டிமகன்' என அருகிக் குறிப்புத் தந்தது.

# விளையாட்டில் ஊனம்

## விளக்கம்

விளையாட்டு என்பதற்குத் தமிழ் லெக்சிகன் கூறும்பொருள்,[1] ஆய்வேடு[2]/ நூல்[3] தரும் விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்வருமாறு வரைவு கூறலாம்.

> பொழுதுபோக்கிற்காகவும்,அறிவுத்திறன் மனவளம் அல்லது உடற்றிறன் வளர்ச்சிக்காகவும் ஏற்பட்டு, தனிநபர் அல்லது குழு, இருபாலினர்/பலவயதினர், பங்காளராகவோ பார்வையாளராகவோ இடம்பெற வாய்ப்பளித்து, கருவிகளுடனோ, கருவிகளின்றியோ அமைந்து, போட்டி மனப்பான்மை (competitive spirit) ஊக்கியாகவும், போராட்டக்குண வடிகாலாகவும் உருவாகி, எதிர் விளைவுகளோ பாதிப்புகளோ அற்று அல்லது வேண்டப் படாது, விதிமுறைகட்கு உட்பட்ட, பலவகையான செயற்பாடு களும் சொல்லாடலும் விளையாட்டு என்பதில் அமையும்.

உடற்குறை அல்லது உறுப்புக்குறையாகிய ஊனம் விளையாட்டில் பெறும் இடம் என்ன எனக் காண்பது, சமுதாயம் ஊனரைப்பற்றி என்ன நினைத்தது என விளங்கிக்கொள்ளத் துணையாகலாம்.

பொழுதுபோக்கிற்காகவும் பல்பயன்பாட்டு நிலையிலும் கையாளப்படும் விடுகதையிலும் பழமொழியிலும் ஊனம் அமைந்த நிலை [4] ஏற்கெனவே அணுகப்பெற்றதன் தொடர்ச்சியாக இப்பார்வை அமைகின்றது.

'விளையாட்டில் ஊனம்' என்பதை இரண்டாகப் பகுத்துக் காணலாம். ஒன்று, ஊன(முற்றது போன்ற) அமைப்புடன் நபர்/ நபர்கள் விளையாட்டில் ஈடுபடுவது. மற்றொன்று, விளையாட்டு(க்குப் பயன்படும்) பாடலில் ஊனம் பற்றிய கருத்து/ குறிப்பு வருதல்.

முதல் வகையில், விளையாட்டு முழுமையும் ஊனநிலை இடைபடுதல் என்பதும், விளையாட்டு தொடங்கும்போது, அல்லது, இடையில், அல்லது சிறிதுநேரம் மட்டும் ஊனநிலை கொள்ளப்படுதல் என்பதுமாக இருநிலை அமையும்.

குழு விளையாட்டில் பங்கேற்கும் அனைவரும் ஊனநிலை கொள்ளுதல் எனவும் ஒருவர் அல்லது சிலர் அல்லது ஒரு பகுதியினர் ஊனநிலை கொள்ளுதல் எனவும் கூடப் பகுத்துக் காணமுடியும்.

ஊனரைப் போலச் செய்கையால், ஊனரை இழிவுபடுத்துதல்/ எள்ளுதல் என்ற மன நிலை புலப்படலாம். அல்லது ஊனரும் சமுதாயத்தில் ஒருங்கிணைக்கப்படுதலின் வெளிப்பாடு என்பதாக அமையலாம். ஊனமுற்றோராலேயே அல்லது ஊனமுற்றவரின் செயற்பாட்டைக் கவனித்ததாலேயே இத்தகு விளையாட்டுகள் தோன்றியிருக்கக்கூடும் என்ற கருதுகோளும் அமையலாம். ஊனமுற்றோர் ஒதுக்கப்படுதல் இல்லை என்பதும், ஊனமுற்றோரும் வாழமுடியும், ஊனமற்றவரோடு இணையாக-சமமாக-உடனாக வாழமுடியும் என்பதும் இதில் தொனிக்கும் எண்ணமாகும். மேலும், நல்ல உடல்நிலை உள்ளவர், ஊனமுற்றோர்பால் பரிவும் நெகிழ்வும் பெறவும் இவை உதவலாம்.

மேலும், மெய் வாய் கண் மூக்கு செவி எனும் ஐம்புலன்களிலும் உள்ள ஊனம் விளையாட்டில் தெரிகிறதா? எல்லா ஊனநிலைக்கும் ஒரே நிலையில் விளையாட்டில் பங்கு அமைகிறதா? பங்கின் மிகுதி, குறைவு பற்றி ஊனநிலை குறித்த சமுதாயத்தின் கருத்து தெளிவுபடுகிறதா? சாதாரண 'முழு' மனிதனைவிட ஊனமுடையவரின் திறமை மிகுதி எடுத்துக்காட்டவே இத்தகு விளையாட்டுகள் புனையப்பட்டன எனலாமா? - என்பது போன்று அணுகத் தக்க களங்கள் உள்ளன.

**வகை.**

மெய் ஊனம், முடம், கூன் என்பதில் அமைகின்றன. முடம் (ஒருகால் முடம்) நொண்டி எனும் விளையாட்டிலும், இத்தகு செயற்பாடுள்ள சில்லி, கல்லுக்குச்சி போன்ற வேறுசில விளையாட்டுகளிலும் அமையல் கூடும். கூன் எனும் மெய்யூனம் தொடுதல் விளையாட்டொன்றில் அருகிக் காணப்படுகிறது. வாய்ப்புலனில் 'பேச்சு இன்மை' எனும் ஊமை - ஊனநிலை, ஊமை விளையாட்டில் அருகிப் பயன்படுகிறது. கண் ஊனம், பார்வை இன்மை/பார்வை மறைப்பு என்ற பாங்கில், கண்ணாமூச்சி/ கண்பொத்தி, கண்கட்டி போன்ற விளையாட்டுகளிலும், பாண்டி (சில்லி), மெல்லவந்து மெல்லப்போ போன்ற விளையாட்டுகளின் சில தடங்களிலும் அமைகின்றது. மூக்கு, செவிப்புலன்களின் குறைபாடு தொடர்பான விளையாட்டு நிலை இருப்பது வெளிப்படப் புலப்பட்டிலது.

ஆயினும், இரகசியம் என்ற விளையாட்டை ஒருவேளை கேள்விப் புலன் குறைபாட்டுடன் தொடர்புபடுத்தலாம். அவ்வாறே மூச்சையடைக்குதலுடன் தொடர்பு பெறும் 'சடுகுடு' விளையாட்டின் ஒருநிலையை 'மூக்கு' என்பதுடன் பொருத்த முயலலாமெனினும், 'முகர்ச்சி' வராமை இவ் வாய்ப்பை நீக்கும்.

தமிழர் நாட்டு விளையாட்டுகள் 126-இல்[5], மகளிர் விளையாட்டில் (4)[6] ஊனம் இடம்பெறவில்லை; ஆடவர் விளையாட்டு (17) ஒன்றிலும், சிறுவர் சிறுமியர் விளையாட்டு (20) நான்கிலும், சிறுவர் விளையாட்டு (54) ஏழிலும், சிறுமியர் விளையாட்டு (22) மூன்றிலும், குழந்தை விளையாட்டு (9) ஒன்றிலும் ஊனம் அமைகிறது.[7] இது மிகக்குறைந்த விழுக்காட்டையே மொத்தத்தில் தருகிறது.

ஊனநிலை விளையாட்டுகள்/பாடல்கள் குறைவாக அமைவது, ஒருபாலாக, எல்லா ஊனநிலைக்கும் விளையாட்டில் ஒத்தபங்கு அமையாமையும் காணப்படுகிறது. ஊன நிலைகளில் பார்வைக்குறை, கால் குறை என்பன பிறவற்றிலும் மிகுதியாக இடம்பெறுகின்றன.

இவ்விரு ஊனநிலைகளும் கடுமையானதாக, கடினமானதாக, கொடுமையானதாகக் கருதப்பட்டதுதான் இம்மிகுதிக்குக் காரணமா என்பது மேலாய்வுக்கு உரியது. அல்லது, சமுதாயத்தில் மிகுதியாகக் காணப்பட்டவை இவ்வூன நிலைகளோ என்பதையும் கருதிப் பார்க்கலாம்.

அன்றியும், ஊனமுற்றோரும் மனிதரே; அவரும் சமுதாயத்தில் வாழ உரிமை உடையவரே என்ற வெளிப்பாடும் உட்பொருளாகி இவற்றில் அமையலாம்.

ஊனங்குறிக்கின்ற சொற்களால் ஊனவிளையாட்டு எல்லாவிடத்தும் குறிக்கப்படுதலில்லை. நொண்டி (நொண்டியடித்தல்), ஊமை விளையாட்டு என்பனவே வெளிப்பட்ட சொல்நிலையுடன் அமைகின்றன. இவற்றுள் முன்னது 'கிந்தி'[8] விளையாடுதல் என்றும் (திருவிதாங்கூர்ப் பகுதியில்) வழங்கப்பெற்ற நிலையில் நேரடியான ஊனச்சொல் தவிர்ப்பு அமைகின்றது.

**கால் ஊனம்**

நொண்டி, கோழிக்கால், கல்லுக்குச்சி, கால்தூக்குகிற கணக்குப்பிள்ளை, சில்லி (பாண்டி)*, ஒருவகைத் தொட்டு விளையாட்டு (இருப்பா நிப்பா ஒத்தக்கால் தபசா?)* ஆகியவற்றில் (ஒரு) கால் ஊனமுற்றது போன்ற விளையாட்டு நிலை அமைகின்றது.

தொட்டு விளையாட்டாக அமையும் 'நொண்டி' என்பதில் மூவகை நிலை குறிக்கப்படுகின்றன. முதல்வகையில், தொடுபவர் ஒருவர், ஒருகாலில் நொண்டிவர, தொடப்படவேண்டிய வரனைவரும் ஒரு எல்லைக்குள் குழுவாக ஓடி, தொடப்படுவதைத் தவிர்க்க முயல வேண்டும். அனைவரும் தொடப்படுவதில் விளையாட்டு நிறைவுறும். இரண்டாம் வகையில், விளையாடுபவர் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் தொடுபவராகவும் மறு குழுவினர் தொடப்படுபவராகவும் அமைந்து, மேலே சுட்டியது போன்று, தொடுபவர் ஒவ்வொருவராக, தம் முறை வரும்போது, நொண்டிவந்து தொட முயலவேண்டும். மூன்றாம் வகையான 'பாப்பா நொண்டி'யில் விளையாட்டு முதல்வகை போல் அமையினும், நொண்டுதல் எனும் செயல் நீட்சி தவிர்த்த குறுமையுடன் (குழந்தை நடைபோல) அமைந்து தனிவகையா கின்றது. இம்மூன்றிலும், ஊனமற்றவரை ஊனன்/ஊனர் வெல்வது போன்ற பாங்கு அமைகின்றது. ஊனமுற்ற ஒருவருக்கு எதிராக ஊனமுறாத பலர் என்ற நேர்நிலையின்மையும் அமைகின்றது.

'கோழிக்கால்' என்னும் விளையாட்டு, ஒற்றைக்காலை மட்டும் தரையில் ஊன்றி விரைவாகச் சுழல (சுற்ற) முயலுதலாகும். நீண்டநேரம் அவ்வாறு சுழல (சுற்ற) இயல்பவர் வென்றவராவர். இங்கு, ஒரு காலில் அனைவரும் சுழல்வதால், ஊனமுற்றோர் ஊனமுறாதோர் என்ற எதிர்நிலை இல்லை.

நடித்தாடும் வகையைச் சார்ந்த 'கால்தூக்குகிற கணக்குப் பிள்ளை' எனும் விளையாட்டு, இருகால் முடம் பற்றி, தனித்து இயங்க முடியாத ஊன நிலையை மையமாகக் கொள்கிறது எனலாம்.

'கல்லுக்குச்சி' விளையாட்டு மூன்று பகுதியுடையதாக அமைகின்றது. மூன்றாம் பகுதி, 'குச்சி விழுந்த இடத்திலிருந்து வட்டம் வரைக்கும் நொண்டியடித்து வருதல்' என்ற நிலையில் நொண்டி விளையாட்டுடன் இணைத்துப் பார்க்கக் கூடியதாய் அமைகிறது.

'சில்லி'யில், ஒற்றைச்சில்லி, இருவகையான இரட்டைச்சில்லி, நம்பர் சில்லி அல்லது வட்டச்சில்லி, சதுரச்சில்லி என்பனவும் ஏரோப்ளேன் பாண்டி* என்பதுவும், ஆட்டநிலையின் கூறாக நொண்டிவருவதைக் கொண்டு, தனிநிலை காட்டுகின்றன.

நொண்டிக்கும், தொட்டுவிளையாட்டின் ஒருவகையான 'இருப்பா நிப்பா ஒத்தக்கால் தபசா?' என்பதற்கும் அடிப்படையில் சிறிது வேறுபாடு அமைகின்றது. நொண்டியில், தொடவருபவர், ஒற்றைக்காலில் நொண்டி வர வேண்டும். இந்தத் தொட்டு

விளையாட்டில், தொடப்படுபவர் தொடப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள தற்காலிகமாக ஒற்றைக்காலில் நின்று (ஒத்தக்கால் தபசு)-விட வேண்டும். ஊனம் காட்டித் தப்பித்துக்கொள்ளும் இந்நிலை தனித்தது. (தபசு = தவம் என்பதால் ஊனநிலை அல்ல எனவும் அணுகலாம்).

குழு விளையாட்டில், குழுவினருடன் ஒத்த வயதினராகவோ அல்லது ஒத்த பாலினராகவோ அமையாத ஒருவரைச் சேர்க்க வேண்டிய சூழல் ஏற்படும்போது, கால் ஊனமுடையவரை (சப்பாணி) 'ஒப்புக்கு' விளையாட்டில் இணைத்துக்கொள்வது போன்று, சேர்த்துக் கொள்ளும் பாங்கு உண்டு; அத்தகு நபர் இணைவு,

உப்புக்குச் *சப்பாணி*
ஊருக்கு மாங்கொட்டை*

என்று கூறிச் செய்யப்படுகிறது. விளையாட்டிலோ, விளையாட்டுப் பாடலிலோ இன்றியும், விளையாட்டுச் சூழலில் 'ஊனம்' தொடர்புறுதலாக இது அமைந்து வேறுபடுகிறது.

'தமிழர் நாட்டு விளையாட்டுகள்' தரும் வண்டியுருட்டுதல் (ப.199) என்பதையொத்த விளையாட்டொன்றில் கீழ்க்காணும் பாடல் அமைவது 'கால் ஊன' நிலையில் இணைத்துக் கருதத்தக்கது:

கடகட லொடலொட வண்டி
மாடு ரெண்டும் சண்டி
வண்டிக் காரனும் *நொண்டி*
கடகட லொடலொட வண்டி*

இது திரை இசைப்பாடல் தாக்கமுடையதாக அமைந்ததோ என்பது ஐயம்.

**கூன்**

மெய்யூனமாக அமையும் கூன், தொட்டு விளையாட்டொன்றின் தொடக்க நிலையில் அமைந்து, அதற்குரிய விளையாட்டுப் பாடலிலும் பதிவு பெறுவது காணப்படுகிறது. இது, 'தமிழர் நாட்டு விளையாட்டுகள்' தரும் குழவி விளையாட்டு (ப. 220) என்பதுடன் ஓரளவு இணைக்கக் கூடியதாகலாம்.

விளையாட்டில் பங்குபெறும் சிறுமியருள் ஒருவர் கூனியாக, குனிந்து உட்கார்ந்து கொண்டு தரையில் ஏதோ தேடுவது போல 'பாவனை' செய்வார். இவர் தொடுபவராகவும், குழுவினர் தொடப்படுபவராகவும் அமைவர். குழுவினருக்கும் இக்கூனி உட்கார்ந்திருக்கும் சிறுமிக்கும் கீழ்வருமாறு உரையாடல் நிகழும்:

குழு : கூனி கூனி என்ன தேடுறே
சிறுமி : ஊசி
கு : என்னத்துக்கு
சி : பைதைக்க
கு : பை என்னத்துக்கு
சி : பணம் போட
கு : பணம் என்னத்துக்கு
சி : வெட்டுக்கத்தி வாங்க
கு : வெட்டுக்கத்தி என்னத்துக்கு
சி : உங்களையெல்லாம்.......*

என்று கூறிக்கொண்டு சிறுமி எழுந்து நிமிர்ந்து ஓடி குழுவினரை விரட்ட, முதலில் தொடப்படுபவர் கூனியாக அமர மீண்டும் விளையாட்டு தொடரும். 'கூனி கூனி' என்பதற்குப் பதிலாகப் 'பாட்டி பாட்டி' எனவும், 'கிழவி கிழவி' எனவும் அமைவதும் உண்டு. இத்தகைய விளையாட்டைச் சிறுவர் விளையாடும்போது, இருமொழிச் சூழலில் வேறுபாடலைப் பயன்கொள்வர்.[9] பாடலுக்கேற்ப, தொடுபவராக அமையும் சிறுவன் கூனிக்கூனி நடந்து செல்வான்; தொடப்பட வேண்டிய சிறுவர் குழுவாக அவன் பின்னே சென்றுகொண்டே கேள்வி, பதிலாக உரையாட, அதன் இறுதி வரி வரும்போது, கூனனாகச் செல்லும் சிறுவன் நிமிர்ந்து திரும்பி, துரத்த குழுவினர் ஓடித் தொடப்படாதிருக்க முயல்வர்.

தொட்டுவிளையாட்டில், தொடப்படுவதற்கு/தொடுவதற்குத் தயாராகும் முன்நிலையிலேயே இவ்வூன இணைவு அமைகின்றது.

ஊனம் சுட்டுவதனால் ஊனர் கோபமுறல் என்ற மனப்பாங்கு அடிப்படையில், இது, போலச் செய்தலாக அமைந்திருக்கலாம்.

இங்கும் ஊனமுற்ற ஒருவர் ஓரணியாக, ஊனமற்ற குழுவினர் மற்றோரணியாக ஒருவருக்கெதிராகப் பலர் என்ற நேர்நிலையின்மை அமைகின்றது. ஊனமற்றவரை ஊனர் வெல்லுதல் என்பதும் பொருந்துகின்றது.

**ஊமை**

சிறுமியரின் குழு விளையாட்டொன்றில் (சுண்ணாம்புக் கலயம், டப்)* ஊமையாக நடித்தாடுதல் காணப்படுகிறது. சிறுகுழுவாகச் (சுமார் ஐந்து) சிறுமியர் (சம்மணக் காலிட்டு) வட்டமாக உட்கார்ந்து கொள்ள, அவருள் ஒருவரான விளையாட்டைத் தொடங்குபவர், 'சுண்ணாம்புக் கலயம், டப்' என்று சொன்னதும் அனைத்துச் சிறுமியரும், வாய்க்குள் காற்று இருக்கும்

வண்ணம் கன்னம் உப்பி உதடுகள் இறுக்கி வாய்மூடி கைகளைக் கட்டி அமர்வர். விளையாட்டுத் தொடங்கியவர் முதலில் தன் வலது கையால், வலப்பக்கம் இருப்பவரின் தொடையில் தட்டி, 'என்ன?' என்பது போல் வலக்கையால் சைகை செய்து முகபாவத்தாலும் அவருக்குச் சிரிப்பூட்ட முயல்வர். வாய்திறவாத நிலையில், அவர் அடுத்தவரிடம் அதேபோல் செய்வர்; இவ்வாறே சுழன்று வரும். சிரிப்புக் காரணமாகவோ, தொடர்ந்து வாயை உப்பிவைக்க முடியாமையாலோ வாயைத் திறப்பவர் தோற்றவராவார்; பிறரிடையே விளையாட்டு மீண்டும் தொடரும். கையால் என்ன என்று சைகை செய்வதாலும், விளையாட்டுத் தொடங்கியபின் பேச்சில்லாமையாலும் இது ஊமை விளையாட்டு* என வழங்கப்படுகிறது எனலாம்.[10] விளையாட்டில் ஈடுபடும் அனைவரும் ஊனநிலை கொள்வது இங்குக் காணப்படுகிறது. இது பிறவிளையாட்டில் இல்லாத தனித்தன்மையாகும்.

வாய்ப்புலன் ஊனத்தைக் குறிக்கும் 'ஊமை' என்பது அப்பொருண்மையை நேரடியாகச் சுட்டாமலும் விளையாட்டில் பயன்படுவது அருகிக் காணப்படுகிறது. 'ஊனச் சொற்களின் பிறபொருள்கள்' என்ற பார்வையில் இதனை இணைக்கலாம். (சான்று: ஊ(மை)மக்காய் = உள்ளீடு இல்லாத தேங்காய்).

ஒற்றையா? இரட்டையா? (ஒத்தையா ரெட்டையா)* என்ற விளையாட்டில் (புளிய) முத்துக்கள் இல்லாமல் வெறும் கையை வைத்து, முத்து இருப்பது போல் நடிக்கும் போது, அதனை உணர்ந்து 'ஊமைக்கை' என்று எதிர்க்கட்சியர் இனம்காட்டல் அமைகின்றது.

**கண் ஊனம்**

பார்வை மறைப்பு என்பதைக் கண் ஊனமாகக் கொண்டு, விளையாட்டில் அந்நிலை தொடர்ந்தோ, குறைந்த நேரத்திற்கோ அமைதல் கருதப்படுகின்றது. கண்ணை மூடுதல் என்ற நிலையில், ஒருவர் கண்களை மற்றொருவர், பின்னாலிருந்து கைகளால் பொத்திக் கொள்வதாகவோ, கண்பார்வையை மறைக்கும் வண்ணம் துணியால் (தலையைச் சுற்றிக்) கண்ணைக் கட்டுவதாகவோ இது அமையலாம். பெரும்பாலும் துணியால் கண் மறைக்கப்படும் நிலையில் 'பார்வை இன்மை' என்பது விளையாட்டு முழுமையும் தொடரும். கைகளால் கண் பொத்தப்படும் நிலை, பெரும்பாலும் விளையாட்டின் தொடக்கத்தில் அமைந்து, ஒளிந்திருப்பவரைக் கண்டு பிடித்தல் விளையாட்டில் இடம்பெறும்.

ஆடவர் விளையாட்டான பானை உடைத்தல் என்பதில், கண்ணைக் கட்டிக் கொண்டு, கையிலுள்ள கம்பினால் உயரே

உள்ள பானையினைக் குறிபார்த்து அடித்தல் அமைகின்றது. இவ்விளையாட்டில் கலந்து கொள்பவர் கண்ணைத் துணியால் மறைத்துக் கட்டி பானையிருக்கும் திசையினை அறிய இயலாதவாறு, சிறிது எல்லைக்கப்பால் சுழற்றி விடுதலும் குறிப்பிட்ட நேரத்துக்குள் யார் முதலில் திசையறிந்து வந்து பானையை அடிக்கிறார்களோ அவர் வெல்வதுமாகச் செயற்பாடுகள் அமையும்.

சிறுவர் சிறுமியர் விளையாட்டான 'கண்ணாமூச்சியில்', ஒளிந்து கொள்பவர்களைக் கண்டுபிடிக்கும் செயலை ஏற்பவரின் கண்கள், விளையாட்டின் தொடக்கத்தில் சிறிதுநேரம் மூடப்படுகிறது. தாமே கண்களை மூடிக்கொள்ளுதல்* என்பதும், ('தாய்ச்சி'யாக அமையும்) பிறிதொருவர் கைகளால் இவர் கண்ணைப் பொத்துதல் என்பதும் அமையலாம். ஒளிந்திருப்பவரைக் கண்டால் மட்டும் போதும்* எனவும் கண்டுபிடித்துத் தொடவேண்டும் என்பதும் இருநிலையாகும். ஒருவர் கண்ணை மூட, குழுவினர் ஒளிந்துகொள்வதற்குக் கால வாய்ப்பளிக்கும் நிலையில் இப்பார்வை மறைப்பு அமைகின்றது. இக்கால எல்லை எண்ணுவதன் மூலமோ (சான்றாக ஒன்று முதல் பத்து வரை எண்ணுதல்)* பாடல் மூலமோ அமையலாம். பாடல்கள் பெரும்பாலும் 'கண்ணாமூச்சி', 'கண்ணாமூச்சாரே', கண்ணாம்பொத்தி, 'கண்ணாங் கண்ணா(ம்) மூச்சி', 'கண்ணு கண்ணு மூச்சி' எனத் தொடங்குவதிலும்[11] ஊனச்சுட்டு அமைவதாகக் கருதலாம்.

'மெல்ல வந்து மெல்லப்போ' எனும் விளையாட்டில், இவ்வாறு தொடக்கநிலை மட்டுமன்றி ஏறத்தாழ விளையாட்டு நிறைவுறும் வரை கண்மூடப்படுதல் அமைகின்றது. ஒத்த எண்ணிக்கையுடைய இருகுழுவினராகப் பிரிந்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைவருடன் அமைந்து, நபர்கள் காய்/கனியின் பெயரால் மாற்றுப் பெயர் பெற்று வரிசையாக நிற்பர். பின்பு ஒரு குழுவின் தலைவர் எதிர்க்குழுவினரின் வரிசைக்குச் சென்று ஒருவர் கண்களைப் பொத்தி, தன் குழுவிலுள்ள ஒருவரை மாற்றுப் பெயரால் சுட்டி யழைக்க அவர் மெல்ல வந்து, கண் பொத்தப்பட்டிருப்பவரின் தலையை மெதுவாகத் தட்டிவிட்டுத் தன் இடத்திற்குத் திரும்பியதும், கண் மூடியமை நீக்கப்பெறும். அதுவரை கண்மூடப்பெற்றவர் தன்னை வந்து தொட்டவர் யார் என இனம் காண வேண்டும்.

கண்பார்வை மறைக்கப்பெற்ற நிலையில், ஊகித்துச் சொல்லுதல் என்ற இவ்வமைப்பு 'அந்தக் கழுதை இந்தக் கழுதை' என்ற விளையாட்டின் தொடக்கத்திலும் அமைகின்றது. தேடுபவர் ஒருவராகவும் ஒளிந்து கொள்பவர் குழுவாகவும் அமைய, முன்னவரின் கண்கள் ('தாய்ச்சி'யான ஒருவரால்) மூடப்பெறும்.

பின்பு, ஒளிந்துகொண்டவரின் பெயர்களை ஒவ்வொன்றாய்ச் சுட்டிக்கேட்க, ஒளிந்துகொண்ட திசை சரியாகக் கூறப்படுகிறதா எனக் கணிக்கப்பெறும்.

'ஐந்து பத்து' எனும் விளையாட்டின் இறுதிப்பகுதியில் 'தண்டனை' வழங்குதல் என்பதில், 'ஒரு கண்ணை மூடிக்கொண்டு அடித்தல்' எனும் தளம் அமைகின்றது. இதனையும் ஊனச்சார்பில் நோக்குதல் ஏற்புடையதாகலாம்.

ஆடவர் விளையாட்டான பானை உடைத்தல் போல சிறுமியர் விளையாட்டான 'கண்கட்டி விளையாடுதல்', ஆட்டம் முழுமையும் கண்பார்வை மறைக்கப்படுதல் என்பதைக் கொண்டுள்ளது. துணியால் கண்கட்டப்பட்டவர் தொடுபவராக, குழுவினர் தொடப்படுபவராக இவ்விளையாட்டில் அமைவர். இங்கும் ஊனமுற்றவர் ஊனமற்றவரை மேற்கொள்ளல் என்பதும் ஒருவருக்கெதிரே பலர் என்பதும் அமைகின்றது.

'சில்லி'யில் 'கால்ஊனம்' இணைதல் காட்டப்பெற்றதுபோல், சில தளங்களில் 'கண்ணை மூடுத'லுடனான செயற்பாடும் அமைவது சுட்டற்குரியது. ஒற்றை, இரட்டைச் சில்லி விளையாட்டின் இறுதிக்கு முந்தைய கட்டத்தில், கண்ணினை மூடியவாறு, சில்லியின் கோடுகளை மிதிக்காமல், 'சரியா....சரியா......' என்று சொல்லிக்கொண்டே முன்னேறுதல் அமைகிறது. இங்கு ஊனமுற்றோரின் தன்திறம் என்பது அமைகின்றதே யன்றி போட்டி முதன்மைபெற்றிலது. மேலும் ஊனமுற்றோர் ஊனமுறாதோர் என்ற எதிர்நிலை யின்றி, விளையாட்டில் ஈடுபடும் இரு தனிநபரும் குறைந்த நேரத்திற்கேனும் ஒருவித ஊனநிலை காட்டி நேர்நிலை கொள்ளுதல் அமைகின்றது.

## பொது

குறிப்பிட்ட புலன்களும் அவற்றின் குறைபாடும் மேலே கண்டவாறு விளையாட்டில் அமைவது ஒருபாலாக, இன்னும் ஒருசில விளையாட்டுகளில் அருகியும் விளையாட்டுப் பாடலில் சுட்டாகியும் ஊனம் அமைவது காணத்தக்கது. சிறுவர் விளையாட்டு வகையில் அமையும் தீப்பந்தம் சுற்றுதல், காற்றாடி என்பனவும் சிறுமியர் விளையாட்டான கியாக் கியாக் குருவியும், குழந்தை விளையாட்டான சீப்பு விக்கிது என்பதுவும் இந்நிலைக்கு இடம் தருகின்றன.

தீப்பந்தம் சுற்றுதலில் 'பல் ஒடிதல்', 'இடுப்பு ஒடிதல்' என்று ஊனமுறல் பாடல்வரிகளில் இடம்பெறுகிறது.[12] காற்றாடியில், ஓலையினால் செய்யப்படும் காற்றாடி நன்றாகச் சுழல்வதற்கு,

அவற்றின் நுனிகளைப் பிடித்து மையத்தை நோக்கி வளைக்கும்போது பாடப்படும் பாடலில் 'செவுட்டு' (செவிடு) என்ற குறிப்புக் காணப்படுகிறது.[13] வேறு விளையாட்டுகளில் காதுப்புலன் குறைபாடு பற்றிய குறிப்பு இன்மை இங்கு நேர் செய்யப்படுகிறது எனலாம்.

கதையமைப்புடைய நடித்தாடும் விளையாட்டான கியாக்கியாக் குருவியில் இறக்கை ஒடிதல் எனும் கருத்து உளது.[14] சிப்பு விக்கிது எனும் ஒளித்து விளையாட்டின் தொடக்கத்தில், தேடுபவர் யார் என நிர்ணயிப்பதற்காகப் பயன்படும் பாடல் 'காக்கறுத்தா! மூக்கறுத்தா!' என (க் காது?) மூக்குச் சிதைவு காட்டுகிறது.[15] புற மூக்குச் சிதைவாக அமையினும் இதனை முகர்ச்சிப்புலன் குறை எனப் பார்க்கக் கூடும். கும்மி விளையாட்டுப் பாடலொன்று, குடலறுதல் நாக்சறுதல் எனச் சில உறுப்புச் சிதைவு சுட்டுகின்றது;[16] இவை ஊனமாக அன்றி உணவு வர ஏற்பட்ட காலத்தாழ்வையும் அதனால் உருவான பசிமிகுதியையும் சுட்டியது எனக் கொள்ளவும் இடம் தருகின்றன.

## சில எண்ணங்கள்

நாட்டுப்பாடல்கள் பற்றிய தொகுப்புகளும் ஆய்வுகளும் ஓரளவுக்கு விளையாட்டு, விளையாட்டுப்பாடல் பற்றிச் சுட்டுகின்றன;[17] அவற்றுள்ளும் ஒருசில, பாடலில்/விளையாட்டில்/விளையாட்டுப்பாடலில் ஊனச்சுட்டு அமைதலை அறிய உதவுகின்றன.[18] எனவே முழுமையான களமும் ஆய்வுப் பார்வைக்கு உட்பட்டால் மட்டுமே தெளிவான முடிவுகட்கு வரவியலும். விளையாட்டுப் போலவே மக்கள் வழக்காற்றின் பிற பலவகை வாய்மொழிப் பாடல்களிலும் ஊனர் பற்றிய கருத்தைத் தேர முடியும். உலகளாவிய நிலையில் ஊனமுற்றோர்க்குத் தம் திறம் வெளிப்படுத்தும் பாங்கில் விளையாட்டுப் போட்டிகள் நடக்கின்றன (Handicapped Olympics) எனினும் தமிழர் நாட்டு விளையாட்டுகளில் ஊன நிலை புலப்படுத்தப்பெறுகிறதே யொழிய ஊனர் விளையாடுவதாகக் குறிப்புக் கிடைத்திலது.

## அடிக்குறிப்பு

1. விளையாட்டு -
   1. பொழுதுபோக்குக்குரிய மகிழ்ச்சிச் செயல்
   2. சிரமமின்றி இலேசாகச் செய்யுந் தொழில்
   3. வேடிக்கை
   4. காமலீலை
   5. கலைத்தொழில் எட்டனுள் பாட நினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுகை

தமிழ் லெக்சிகன், சென்னைப் பல்கலைக் கழகம், 1982, தொகுதி-6, பக்.3730, 3731.

2. (1) களிப்பைப் பெறுதற்கும் கொண்ட களிப்பின் வெளிப்பாட்டிற்கும் சில கருவிகளுடனோ கருவிகளின்றியோ குழுவாகக் கூடியும் தனித்தும் ஆடுவது விளையாட்டு. இது இளம் பருவத்தினர்க்கு இயல்பானது. வளர்ந்தவர்களுக்கு அவர்கள் உள்ள நிலையைப் பொறுத்தது. உடல் வலிமை, அறிவு வளர்ச்சி, பொழுதுபோக்குத் தன்மை என்ற நிலைகளைச் சார்ந்தமைவது.

- வே. சீதாலட்சுமி, **தமிழிலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகளும் நோன்புகளும்** (கி.பி. 10-ஆம் நூ. வரை), பிஎச்.டி., ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், 1981 (வெளியிடப்படாதது), ப.19.

(2) இரா. பாலசுப்பிரமணியன், **தமிழர் நாட்டுப்புற விளையாட்டுகள்**, பிஎச்.டி., ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1982, (வெளியிடப்படாதது), ப. 52-55 (விளையாட்டின் வரையறைகள்).

(3) செ.அ. முத்துக்கிருஷ்ணன், **தமிழர் விழாக்களும் பொழுதுபோக்குகளும்** (கி.பி. மூன்றாம் நூ. வரை), பிஎச்.டி., ஆய்வேடு சென்னைப் பல்கலைக் கழகம், 1988, (வெளியிடப்படாதது), ப. 52-54.

3. இரா. பாலசுப்பிரமணியன், தமிழர் நாட்டு விளையாட்டுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980, பக்.3-4.

4. அன்னி தாமசு, 'ஊனர் - பழமொழி, விடுகதை', வெள்ளிக் கருத்தரங்கு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990, இந்நூலின் முன்னியலாக அமைகிறது.

5. அடிக்குறிப்பு 3-இல் சுட்டப்பட்ட நூலின் தரவு (இதே ஆசிரியரின் ஆய்வேட்டில், இவ் எண்ணிக்கை 185-ஆக அமைகிறது).

6. அடைப்புக்குறி எண்கள், மேற்படி நூலிலமையும் அக்குறிப்பிட்ட விளையாட்டு வகைகளின் எண்ணிக்கை.

7. (1) ஆடவர் விளையாட்டு: பானை உடைத்தல் (69);

(2) சிறுவர் சிறுமியர் விளையாட்டு: கண்ணாமூச்சி(111),
மெல்லவந்து மெல்லப்போ (116),
நொண்டி (118),
கோழிக்கால் (121);

(3) சிறுவர் விளையாட்டு: கல்லுக்குச்சி (138), அந்தக் கழுதை இந்தக் கழுதை (151), ஐந்து பத்து (153), ஒற்றையா இரட்டையா (189), கால் தூக்குகிற கணக்கப்பிள்ளை (200), தீப்பந்தம் சுற்றுதல் (203), காற்றாடி (205).

(4) சிறுமியர் விளையாட்டு: கண்கட்டி விளையாடுதல் (212), சில்லி (216), கியாக்கியாக் குருவி (241).

(5) குழந்தை விளையாட்டு: சீப்பு விக்குது (253)

குறிப்பு: (1) அடைப்புக்குறி எண்கள் 'தமிழர் நாட்டு விளையாட்டுகள்' நூலின் பக்க எண்கள்.

(2) அடிக்கோடிட்டவை, விளையாட்டுப் பாடலில் மட்டும் ஊனம் சுட்டுபவை.

(3) வளைகோடிட்டது நேரடியாக உடல் ஊனம் குறிக்காதது.

8. கட்டுரையாளர் தன் இளவயதில் அறிந்தவை (*) உடுக்குறியிட்டுக் காட்டப்படுகின்றன.

9. கூனா கூனா எவிடே போணு?
கூனங் குளத்தில் குளிக்கான் போணு.
ஆன வரும்போள் எந்து செய்யும்?
ஆல மரத்தில் கயறி இரிக்கும்.
குதிர வரும்போள் எந்து செய்யும்?
கூனன்றே கூனெடுத்தொரு குத்து கொடுக்கும்.*

10. 'ஊமை விளையாட்டு' என்ற பெயரில், சிறிது வேறுபட்டமைந்த விளையாட்டு நிலையும் காணப்படுகிறது:

விளையாட்டில் ஈடுபடும் சிறுவர் எண்ணிக்கையில் வரையறையில்லை. கலந்துகொள்பவர் வட்டமாக உட்கார்ந்து கொள்வர். ஒருவரும் பேசக்கூடாது; சிரிக்கக் கூடாது.

இந்நிலையில் ஒருவருக்கொருவர் சைகையினாலேயே பேசிக் கொள்ளலாம். இம்முறையில் யாராவது ஒருவரைச் சிரிக்கவோ அல்லது பேசவோ வைத்து விட்டால் யார் இச்செய்கைக்குத் தூண்டுதலாக இருந்தாரோ அவர் சொல்லுகிறபடி செய்தல் வேண்டும். அவர் பாட்டுப்பாடவோ அல்லது வேடிக்கையாய்

நடனம் ஆடவோ அல்லது கதை சொல்லவோ சொல்லலாம். அதன்படி அவர் செய்ய வேண்டும். மறுபடியும் விளையாட்டு முன்போல் தொடரும்.

-இரா. பாலசுப்பிரமணியன், தமிழர் நாட்டுப்புற விளையாட்டுகள் (ஆய்வேடு), பின்னிணைப்பு, ப. 311.

11. மேற்படி, பின்னிணைப்பு, பக். 57, 58.

12. மாவளியோ மாவளி
மாவளிக்காரன் பெண்டாட்டி
மரக்கால் பிள்ளை பெற்றாளாம்
பார்க்கப் போன சீமாட்டி
பல் ஒடிந்து செத்தாளாம்
எடுக்கப்போன சீமாட்டி
இடுப்பு ஒடிந்து செத்தாளாம்

தமிழர் நாட்டு விளையாட்டுகள், ப. 203 (மேற்கோள்).

13. குன்னாங் குன்னாங் குர்ர்......
செவுட்டுக் குன்னாங் குர்ர்.......
காத்தடிச்சான் குர்ர்..........
சின்னக் காத்தைக் குழியிலே போட்டுப்
பெரியக் காத்தே ஓடிவா

மேற்படி, ப. 207.

14. குருவி: கியா கியா குருவி நான்
கியா கியா குருவி நான்
ஒருகுருவி ஒருமுள்ளில் வசித்து வந்தது
அதன் றக்கை ஒடிந்துவிட்டது
வேப்ப மரமே வேப்ப மரமே
சிறகிழந்த பறவைக்கு இடம் தருவாயோ?

வேப்பமரம்: மாட்டேன். மேற்படி, ப. 241.

15. சிப்பு விக்கிது! சித்தாடை விக்கிது!
எரிச்சங்குழல் தோப்பு விக்கிது
வள்ளி நடந்துவா! வரப்பிலே ஓடிவா!
காக்கறுத்தா! மூக்கறுத்தா!
குறத்திமகன் ஓடிப்போ!

மேற்படி, ப. 253 (காதறை>காக்கறை என வந்திருக்கலாம்).

16. இரு சிறுமியர் எதிரெதிராக நின்று கொண்டு, தம்கை தட்டியும் ஒருவர் கைகளை மற்றொருவர் தம் கைகளால் தட்டியும் கீழ்வரும் பாடல் பாடி அமையும் 'கும்மி' வகை.

கத்திரிக்கா சூத்த
காசுக்கு ரெண்டு
மாமிக்கு மருந்து
மாதளம் கொழுந்து
தண்ணில வெண்ண
சமயடி பெண்ணே
அந்திச் சோறு
பிந்திப் போச்சு
அரமன வாசல்
பூட்டிப் போச்சு
கொக்குக்கும் நண்டுக்கும்
குடலத்துப் போச்சு
கோட்டாத்து சாமிக்கு
நாக்கத்துப் போச்சு*

17. (1) தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாலை, என்.சி.பி.எச்., சென்னை, 1964 (4வது 1976), இயல் 4. விளையாட்டு (ஊனக் குறிப்பு இல்லை).

(2) ஏட்டில் எழுதாக் கவிதைகள், செ. அன்னகாமு, சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர், 1959 (2வது 1960). 7. குழந்தைகள் விளையாட்டு (ஊ.கு.இ.)

18. (1) நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு, ஆறு. அழகப்பன், கழகம், சென்னை, 1976.

விளையாட்டுப் பாடல் என்ற தலைப்பு இல்லை. பாநலம் (ப. 242) என்பதில் கோமாளி கதை எனும் பகுதியில் கீழ்வரும் பாடல் உண்டு:-

...... தண்ணியில்லா குளத்துக்கு
மண்ணு வெட்ட மூணு பேரு
ரெண்டு பேரு நொண்டி
ஒருத்தன் கையே இல்லை
கையில்லாத குசவன்
செய்தது மூணு பானை.......

(2) ஈழத்து நாடோடிப் பாடல்கள், லேனா. தமிழ்வாணன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1986, 2. பிள்ளைகளின் விளையாட்டுப் பாடல்களும் வேடிக்கைப் பாடல்களும், பக். 74, 76.

கிட்டியடித்தல் - கவடி யடிக்கக் கவடி யடிக்கக்
கைகால் முறியக் கைகால் முறியக்
காலுக்கு மருந்து தேடிக்கட்டு தேடிக்கட்டு..
கண்ணாம் பொத்தி கடகட மாரி
மூன்று விளாச்சி மூக்கறை பொத்தி
பாலையுஞ் சோற்றையுங் கொண்டுவா...

## ஊனச்சொற்கள்

## (களம்: தமிழ்லெக்சிகன்)

| | |
|---|---|
| அக்கியானி | அறிவில்லாதவன் |
| அகன்னம் | செவிடு |
| அகுணி | அங்கவீனன் |
| அங்ககீனம் | உறுப்புக்குறைவு |
| அங்கவீனன் | உறுப்புக் குறைந்தவன் |
| அங்குஷ்டம் | குறளுருவம் |
| அசூதி | மலடி |
| அஞ்சலி | பேதைமையுள்ளவ-ன்-ள் |
| அஞ்ஞை | அறிவிலான் |
| அடிமடையன் | முழு முட்டாள் |
| அடிமுட்டாள் | அடிமடையன் |
| அடுப்பூதி | மூடன் |
| அண்ணகன் | விரையெடுக்கப்பட்டவன் |
| அண்ணாளன் | அலி |
| அண்ணை | அறிவின்றி மயங்கியிருக்குமவன் |
| அத்திமுகத்தோன் | விநாயகன், யானை முகம் |
| அந்தகக்கவி வீரராகவ முதலியார் | ஒரு கவி |
| அந்தகன் | குருடன் |
| அந்த கஜ நியாயம் | ஒன்றை முற்ற ஆராயாது அதனொரு பாகத்தை மட்டும் கண்டு நிச்சயிக்கும் நெறி |
| அந்த பங்கு நியாயம் | குருடன் தோள்மேல் நொண்டி யேறிக்கொண்டு வழிகாட்டக் குருடன் நடந்து செல்வது போன்ற நெறி |
| அந்த பரம்பரை | குருடரைக் குருடர் பின்பற்றும் நெறி |

| | |
|---|---|
| அந்தம் | குருடு |
| அந்தன் | குருடன், யமன் |
| அந்திமாலை | மாலைக்கண், கண்ணோய்வகை |
| அப்பிரசாதை | மலடி |
| அப்புண்டு | முட்டாள் |
| அபுதன் | மூடன் |
| அம்மாஞ்சி | மூடன் |
| அம்மைக்குள்ளி | வளராது குள்ளமாயிருக்கும் பெண் |
| அமிர்தங் கலங்குதல் | மூளை கலங்குதல் |
| அயக்கிரீவன் | திருமாலின் அவதார மூர்த்திகளுள் ஒருவன், குதிரைக் கழுத்து |
| அரிட்டம் | பிறவியிற்குற்றம் |
| அருப்பகன் | அறிவில்லான் |
| அல்லி | அலி |
| அலி | ஆண் பெண்ணல்லாதது |
| அலிக்கை | அலிச்செயல் காட்டும் அபிநயக் கை |
| அலிபேடு | அல்லியம், மாயோனாடல் |
| அலிமரம் | வயிரமில்லாத மரம், பாலும் நாரும் முள்ளும் உள்ள மரம் |
| அவ்வியக்தன் | அறிவில்லாதவன் |
| அவாக்கு | ஊமை |
| அழிதூஉ | அலி |
| அறாக்கட்டை | மூடன் |
| அனூரு | முடவன், அருணன், புதன் |
| அஷ்டவெச்சம் | ஊமை, செவிடு, குறள், கூன், குருடு, முடம், உறுப்பு மயக்கம், உறுப்பில் பிண்டம் என உடலுக்கு இயற்கையிலுண்டாகும் எட்டு வகைக் குறைபாடு |
| ஆணலி | ஆண்தோற்றம் மிக்க அலி |
| ஆணாப்பிறந்தோன் | முட்டாள் |

| | |
|---|---|
| ஆதன் | அறிவில்லாதவன், குருடன் |
| ஆதன்மை | பேதைமை |
| ஆதுல(ர்)சாலை | அசத்தர்க்கும் வறியவர்க்கும் உண்டியும் உறைவிடமும் அமைக்கும் சாலை |
| ஆதுலன் | அசத்தன் |
| ஆனைமுகன் | விநாயகன், ஓர் அசுரன் |
| இடபி | ஆண்வடிவப் பெண் |
| இப்பந்தி | பேடி, மூடன் |
| இரட்டையர் | இரட்டைப்பிள்ளைகளான இளஞ்சூரியர் முதுசூரியர் என்ற புலவர் |
| இரண்டுங்கெட்டான் | நன்மை தீமையறியாதவன் |
| இராக்குருடு | மாலைக்கண் |
| இருமூடம் | தானாகவும் அறியாது பிறர் அறிவிக்கவும் அறியாத மூடத்தனம் |
| இருள் | மயக்கம் |
| இலைச்சுமடன் | மூடன் |
| இளமை | உன்மத்தம் |
| ஈவி ழுங்கி | எதையும் நம்பும் மூடம் |
| உடற்குறை | கவந்தம் |
| உண்டு | ஊன்றுகோல் |
| உதடு வெடிப்பு | உதட்டு மூளி |
| உதறுகாலி | காலை இழுத்து நடப்பவள் |
| உதைகால் | முட்டுக்கால் |
| உவமன் | ஊமன் |
| உள்ள நோய் | மனோவியாதி |
| உறுப்பணங்கெட்டவன் | அங்கவீனன், மூடன் |
| உறுப்பற்றவன் | அங்கவீனன் |
| உறுப்பறை | அங்கவீனன், அங்கச்சேதம் |
| உறுப்பில் பிண்டம் | கருவில் வடிவுறுமுன் சிதைந்த தசைப்பிண்டம் |

| | |
|---|---|
| உறுப்புக்குறை | அங்கவீனம் |
| உறுப்புக்கேடு | உடற்குறை |
| உன்மத்தன் | பித்தன் |
| உன்மாதம் | வெறி |
| ஊட்டுணை | தலையாட்டம் |
| ஊத்தையட்டுதல் | ஊனமுறுதல் |
| ஊம் | ஊமை |
| ஊமச்சி | மூங்கைப்பெண் |
| ஊமணாமூஞ்சி | பேசுந் திறமில்லாதவ-ன்-ள் |
| ஊமணை | பேசுந் திறமற்றவ-ன்-ள் |
| ஊமன் | ஊமையன் |
| ஊமாண்டி | பிச்சையெடுக்கும் ஊமை எனப் பொருள்படும் வசவுச் சொல் |
| ஊமை | மூங்கைத் தன்மை, வாயிலி, சிப்பி, ஊமச்சி, மெய்யெழுத்து |
| ஊமைப்பணம் | ஒலிக்குறைவுள்ள பணம் |
| ஊமைக்கட்டி | முகங்கொள்ளாத சிலந்திக் கட்டி, கூகைக்கட்டி |
| ஊமைக்கணவாய் | மீன்வகை |
| ஊமைக்காய் | பருப்பற்ற காய் |
| ஊமைக்காயம் | முரட்டடியால் வெளிக்குக் காயந்தெரியாது உண்டான வீக்கம் |
| ஊமைக் கிளாத்தி | கடல்மீன் வகை |
| ஊமைக்கூறன் | ஊமையன் பேச்சு |
| ஊமைக்கோட்டான் | கோட்டான், பேசத்தெரியாமல் விழிப்பவ-ன்-ள் |
| ஊமைக்கோட்டான் வெயில் | மேகமூட்டத்தில் உறைக்கும் வெயில் |
| ஊமைச்சி | ஊமைப்பெண் |
| ஊமைச்சொறி | சொறிவகை |
| ஊமைத்தசும்பு | வாயில்லாத குடம் |

| | |
|---|---|
| ஊமைத் தேங்காய் | நீராடாத் தேங்காய், உள்ளே ஒன்றும் இல்லாத தேங்காய் |
| ஊமைப்பயில் | ஊமையின் சைகை |
| ஊமைமணி | நாக்கில்லாத மணி |
| ஊமையடி | இரத்தக் காயமுண்டாக்காத அடி |
| ஊமையன் | மூங்கையன் |
| ஊமையாமொழி | அசபா மந்திரம் |
| ஊமையெழுத்து | மெய்யெழுத்து, பிரணவம் |
| ஊமை விளையாட்டு | பிள்ளை விளையாட்டுவகை |
| ஊமை வீக்கம் | அடியினால் வெளிக்குக் காயந்தெரியாது உண்டாகும் வீக்கம் |
| ஊமை வெயில் | ஊமைக் கோட்டான் வெயில் |
| ஊர்மச்சி | ஊமச்சி |
| ஊழ்தல் | முதிர்தல் |
| ஊழ்த்தல் | முதிர்தல் |
| ஊன் | உடல் |
| ஊன்கணார் | மானிடர் |
| ஊன்செய்கோட்டம் | உடல் |
| ஊனக்கண் | கட்பொறி, பசுஞானம் |
| ஊனகாரகன் | இழிதொழில் செய்விப்போன் |
| ஊனம் | குறைவு, குற்றம், பழி, தீமை, அழிவு, பிணம்; ஆந்தை; ஊனமர் குறடு |
| ஊனமர் குறடு | இறைச்சி கொத்தும் பட்டடை மரம் |
| ஊனமாசிகம் | சிரார்த்த வகை |
| ஊனவன் | மனிதன் |
| ஊனன் | உடற்குறைபாடுள்ளவன் |
| எச்சம் | குறைவு, பிறப்பிலே வரும் குறை - சிதடு, உறுப்பில் பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் |
| எட்டன் | மூடன் |

| | |
|---|---|
| எண்வகை யெச்சம் | எச்சம் |
| ஏகதந்தன் | ஒற்றைத் தந்தத்தையுடையவரான விநாயகர் |
| ஏகபாதம் | ஒற்றைக் காற் பிராணி |
| ஏகபாதர் | ஒற்றைத் தாளர் ஆகிய சிவமூர்த்தம் |
| ஏக பிங்கலன் | பசப்படைந்த ஒற்றைக் கண்ணையுடைய குபேரன் |
| ஏகாட்சி | ஒற்றைக் கண்-ணன்-ணி, காகம் |
| ஏடன் | செவிடன் |
| ஏப்பியன் | பேதை |
| ஏப்பிராசி | ஏப்பியன் |
| ஏய்ப்பிலே வட்டன் | மதிகேடன் |
| ஏறு | நந்திதேவன் |
| ஏனவாயன் | பேதை |
| ஐஞ்ஞை | அறிவுகேடன் |
| ஓச்சம் | குறைவு |
| ஒருகண்ணுறங்குதல் | சிறிது தூங்குதல் |
| ஒருகாலில் நில்(ற்)த(ற)ல் | உறுதியாயிருத்தல் |
| ஒருகை | கட்சியின் ஐக்கியம், ஒருகட்சி |
| ஒருகை பரிமாறுதல் | ஒருமுறை பரிமாறுதல், ஒருபுறமாகப் பரிமாறுதல் |
| ஒருகைபார்த்தல் | வெல்ல முயலுதல் |
| ஒருகையாயிருத்தல் | எதிர்க்கட்சிக்கு விரோதமாக ஒற்றுமையாய் இருத்தல் |
| ஒரு கை விளையாடுதல் | எல்லாருக்கும் ஒரு முறை வர ஆடுதல் |
| ஒருதந்தன் | ஒற்றைக் கொம்பையுடைய விநாயகன் |
| ஒற்றைக் கண்ணன் | ஒருகண் தெரிந்தவன், சுக்கிரன், குபேரன் |
| ஒற்றைக் காலினிற்கை | விடாது முயல்கை |
| ஒற்றைக்கை | ஒருகையாற் கூட்டற்குரிய அபிநயம் |

| | |
|---|---|
| ஒற்றைக் கொம்பன் | ஒற்றைக் கொம்புள்ள யானை, விநாயகர் |
| ஒற்றை மருப்பினன் | ஒற்றைக் கொம்பன், விநாயகர் |
| ஒறு-த்தல் | ஊனமாதல், ஒறுவாய் |
| ஒறுவாய் | சிதைவடைந்த வாய் |
| ஒறுவாய்ப் பல் | சிதைவடைந்த பல் வரிசை |
| ஒறுவாயன் | உதடு சிதைந்த வாயுடையவன் |
| ஒன்றரைக்கண்ணன் | ஒருபக்கஞ் சரிந்த பார்வையன் |
| ஓட்டைச் செவி | கேள்வி தரிக்காத செவி |
| ஓட்டைக் கை | பொருள் தங்காத கை |
| ஓட்டைப்பல் | மூளிப்பல் |
| ஓட்டை வாயன் | இரகசியங்களை மறைக்க மாட்டாது வெளியிடுபவன் |
| ஓரக்கண்ணன் | சாய்ந்த பார்வையுடையவன் |
| ஓவாய் | பற்கள் போன வாய் |
| ஓவாய்ப்பல் | ஒறுவாய்ப்பல் |
| ஓவாயன் | உதடு சிதைந்த வாயுள்ளவன் |
| கக்க தண்டம் | அக்குளில் இடுக்கி நடக்குங் கழி |
| கசடு | குறைவு |
| கசானனன் | விநாயகன் |
| கஞ்ச வாதம் | நொண்டி நடக்கச் செய்யும் வாத நோய் |
| கஞ்சன் | நொண்டி, குறளன் |
| கட்கண் | ஊனக்கண் |
| கட்டை | தேய்ந்தது, குட்டை |
| கட்டைக்காலி | குறுகிய காலுள்ளவ-ன்-ள் |
| கட்டைச்சி | குட்டையான பெண் |
| கட்டைப்புத்தி | மழுங்கின அறிவு |
| கட்டையன் | குட்டையன் |
| கடப்புக்கால் | வளைந்த கால், ஊனமுள்ள கால் |
| கடாச் சங்காத்தம் | மடத்தனம் |
| கடுக்காய்த் தலையன் | சிறுதலையன் |

| | |
|---|---|
| கடைப்புத்தி | மூடத்தனம் |
| கண்கட்டி | ஒருவகை விளையாட்டு |
| கண்கட்டுதல் | கண்ணைக் கட்டி விடுதல் |
| கண்கட்டு | கண்ணைப் பொத்துகை |
| கண்காட்டுவான் | குருடர்களுக்கு வழி காட்டுவான் |
| கண்கெடச் செய்தல் | அறிந்து தீமை செய்தல் |
| கண்கெடப் பேசுதல் | கண்டொன்று சொல்லுதல் |
| கண்கெடுதல் | பார்வை அழிதல், அறிவழிதல் |
| கண்டுயில்(லு)தல் | பார்வை மங்குதல் |
| கண்ணறை | குருடு, குருடன்-டி |
| கண்ணறையன் | குருடன் |
| கண்ணாம்பூச்சி | கண்கட்டியாடும் பிள்ளை விளையாட்டு வகை |
| கண்ணாம்பூச்சியாடுதல் | கண்கட்டி ஓடி விளையாடுதல் |
| கண்ணாம்பொத்தி | கண்ணாம்பூச்சி |
| கண்ணாமூய்ச்சி | கண்ணாம்பூச்சி |
| கண்ணிலன் | குருடன், இரக்கமற்றவன் |
| கண்ணிலி | கண்ணில்லாதவ-ன்-ள், எறும்பு |
| கண்ணைக் கவர்-தல் | கண்ணைப்பறி |
| கண்ணைப் பறித்தல் | கண்பார்வையைக் கவர்தல் |
| கண்தெரியாதவன் | குருடன் |
| கண்பஞ்சடைதல் | மரணக் குறியாகக் கண் ஒளியறுதல் |
| கண்புகைச்சல் | கண் மங்கல் |
| கண் பெறுதல் | பார்வை யடைதல் |
| கண் பொத்துதல் | கண்மூடி விளையாடுதல் |
| கண்பொறி தட்டுதல் | கண்ணொளி மழுங்குதல் |
| கண் பொன்றுதல் | பார்வை குறைதல் |
| கண் மங்குதல் | கண்ணொளி குறைதல் |
| கண் மங்குலம் | பார்வை மங்குகை, வெள்ளெழுத்து |
| கண்மூடி | குருடு |
| கண் விடுதல் | ஊசி முதலியவற்றில் காது ஒடிதல் |

| | |
|---|---|
| கதவடி காரா | மொண்டிப் பிச்சைக்காரர் |
| கப்புக்கால் | வளைகால் |
| கப்பைக் காலன் | தொட்டிக்காலன் |
| கபால நீர் | சிரத்திலேறிய துர்நீர் (குருடுக்குக் காரணமாகக் கூடியது) |
| கபோதி | கண் தெரியாதவ-ன்-ள் |
| கயமுகன் | விநாயகன் (யானை முகம்), விநாயகராற் கொல்லப்பட்ட ஓர் அசுரன் |
| கராளை | குள்ளன், குள்ளம் |
| கரிமுகன் | விநாயகன், கசமுகாசுரன் |
| கருடப்பார்வை | மாறுகண் |
| கருவல் | குட்டையாள் |
| கல்லம் | செவிடு |
| கலிப்புமலை | அந்தகன் பீடம் |
| கவட்டுக்கால் | வளைந்த பாதம் |
| கவந்தம் | தலையற்ற உடல் |
| கவந்தன் | ஓர் அரக்கன் |
| கவித்தம் | அபிநயத்திற்குரிய அலிக்கை வகை |
| கவைக்கால் | பிளவுபட்டுத் தோன்றுங் கால் |
| கவைக்குளம்பு | விலங்கின் பிளவுள்ள பாதம் |
| கவைத்தாள் | பிளவுபட்ட கால் |
| கவைநா | பிளவுபட்ட நா |
| கவையடி | பிளவுள்ள அடி |
| கழுக்காணி | அறிவற்ற தடியன் |
| கழுந்தன் | கழுந்துபோற் பருத்து அறிவு மழுங்கியவன் |
| கறடு | குள்ளமானது |
| கறள்(ளு)தல் | வளர்ச்சியறுதல் |
| கறளை | வளர்ச்சியின்மை, குள்ளன், வளர்ச்சியற்றது |

| | |
|---|---|
| காக்கறை மூக்கறை | அசடன் |
| காக்கைக் கண்ணன் | மாறு கண்ணன் |
| காணன் | ஒற்றைக் கண்ணன் |
| காணாத கண் | ஞானக்கண் |
| காணார் | குருடர் |
| காதடைத்தல் | நோய் முதலியவற்றால் செவி கேளாது போதல் |
| காதடைப்பு | நோய் முதலியவற்றால் காது கேளாமை |
| காதற்ற முறி | செலுத்தற்குரியதைத் தீர்த்துக் கிழித்துவிட்ட ஓலைப்பத்திரம் |
| காதறுதல் | காதின் துளை அறுதல் |
| காதறுத்தல் | காதின் துளையை அறுத்தல் |
| காதறுப்பான் | காதைச் சுற்றி வரும் புண் |
| காதறை | காதறுப்பட்ட ஆள் |
| காதறை கூதறை | ஒழுக்கங் கெட்டவள் |
| காதறைச்சி | சண்டை பிடிப்பவள் |
| காதிலி | செவி-டன்-டி |
| காது கிழித்தல் | பத்திரத்தை ரத்து செய்து கிழித்தல் |
| காது கிள்ளுதல் | காது கிழி - |
| காது நறுக்குதல் | காது கிழி |
| காது மந்தம் | செவிப்புலன் நன்றாகக் கேளாமை |
| காது விடுதல் | காது வெட்டு - |
| காது வெட்டுதல் | காது கிழி - |
| காதெழுச்சி | துர்மாமிசம் வளர்ந்து காதைச் செவிடுபடுத்தும் நோய் வகை |
| காபோதி | கண்ணிலி, அறிவிலி |
| காமாட்டி | மூடன் |
| கால் பின்னுதல் | முட்டிக்கால் தட்டுதல் |
| கால் மட்டம் | கட்பார்வையின்றிக் காலால் தடவி நடக்கை |

| | |
|---|---|
| கால் மடக்கு | கடப்புக் கால் |
| கால் வாங்குதல் | காலை வெட்டுதல் |
| கால் விழுந்து போதல் | பாரிச வாயு முதலியவற்றால் கால் அசைவற்றுப் போதல் |
| காலற்ற நாள் | 3 நட்சத்திரங்கள், கார்த்திகை, உத்திரம், உத்திராடம் |
| காலறுதல் | சந்ததி யற்றுப் போதல் |
| காலறுவான் | சந்ததியறுவான் (வசைச் சொல்) |
| காலிலி | முடவன், முடத்தி, அருணன், பாம்பு |
| காலொட்டுதல் | குறைவைக் காட்டாமல் சரிப்படுத்துதல் |
| கான்முரிதல் | அடியோடு கெடுதல் |
| கிஞ்சணன் | அறிவிலான் |
| கித்துதல் | ஒற்றைக் காலால் தாவி நடத்தல் |
| கிந்தி நடத்தல் | முன்னங்காலால் நடத்தல், நொண்டி நடத்தல் |
| கிந்தியடித்தல் | பிள்ளைகள் நொண்டியடித்து ஒருவரையொருவர் பிடிக்கும் ஒருவகை விளையாட்டு |
| கிந்துதல் | நொண்டி விளையாடுதல், நொண்டி நடத்தல் |
| கிந்துகாலன் | கொந்தி நடப்பவன் |
| கிம்புருடர் | பதினெண் கணத்துள் ஒருவராய் மானுட முகமும் குதிரையினுடலும் படைத்த தேவ சாதியார் |
| கிரகண தோஷம் | கர்ப்ப காலத்தில் தாய் கிரகணத்தைப் பார்த்தலால் குழந்தைக்கு உண்டாவதாகக் கருதப்படும் மேலுதட்டுப் பிளவு நோய் |
| கிலீபம் | அலி |

| | |
|---|---|
| கிளிமூக்கன் | வளைந்த மூக்குடையவன் |
| கிறுக்கன் | பைத்தியக்காரன் |
| கிறுக்கு | பைத்தியம் |
| கின்னரர் | மனிதவுடலும் குதிரை முகமும் உடையவரும் யாழிசை வல்லவருமான ஒருசார் தேவசாதியர் |
| குகதி | முடவன் |
| குஞ்சம் | குறள், கூன், குறளை |
| குஞ்சன் | குள்ளன் |
| குட்டபஸ்கி | குள்ளன் |
| குட்டிப்பாடம் | பொருளுணராது பாராமல் ஒப்பிக்கும்படி பண்ணும் நெட்டுரு, குருட்டுப்பாடம் |
| குட்டை | குறுகிய உருவம் |
| குட்டைச்சி | குள்ளமானவள் |
| குட்டையன் | குள்ளன் |
| குடக்கி | வளைவானது |
| குடக்கியன் | கூனன் |
| குடைச்செவி | கோபம் முதலிய காரணங்களால் வளைவுபட்ட விலங்குகளின் செவி |
| குண்ட வண்டன் | குள்ளமாய்த் தடித்தவன் |
| குண்டோதரன் | பெருவயிறும் குறுவடிவும் உடையவனான சிவகணத்தவருள் ஒருவன் |
| குணி | முடமானது, சொத்தைக் கையன் |
| குணுக்கன் | மூக்காற் பேசுவோன் |
| குணுகுணுத்தல் | மூக்காற் பேசுதல் |
| குத்திரசங்கம் | ஊமச்சி |
| குதிரை மட்டம் | வேகமுள்ள குட்டைக் குதிரை |
| குந்தாங்குச்சி | சிறுவர்கள் நொண்டியாடித் தொடும் விளையாட்டு. |

| | |
|---|---|
| குந்தாடுதல் | நொண்டிக் கொண்டு விளையாடுதல் |
| குந்தி நடத்தல் | முன்னங்காலை மாத்திரம் ஊன்றி நடத்தல் |
| குந்தி நில்-தல் | ஒற்றைக் காலால் நிற்றல், முன்னங்காலால் நிற்றல் |
| குந்தியடித்தல் | நொண்டியடித்தல் என்னும் விளையாட்டு |
| குந்தி வைத்தல் | முன்னங்காலை மாத்திரம் ஊன்றி நடத்தல் |
| குந்துதல் | முன்னங் கால்களை மட்டும் ஊன்றி நிற்றல், நொண்டி நடத்தல் |
| குந்து | நொண்டுகை |
| குந்துகால் | முன்புற மாத்திரம் ஊன்றிய பாதம் |
| குந்துகாலன் | முன்கால்களால் நடப்பவன், காலை இழுத்து நடப்பவன் |
| குந்துப்பு | ஒற்றைக்காலால் நடந்தாடும் சிறுவர் விளையாட்டு |
| குநகி | சொத்தை நகமுள்ளவன் |
| குப்பான் | மூடன் |
| குப்பைக் கீரை | குள்ளத் தண்டுக் கீரை |
| குமதி | அறிவு கேடன் |
| குமர மூக்கன் | கொம்பேறி மூக்கன் |
| குமுக்குதல் | ஊமைக்காயம்படக் கையாற் குத்தல் |
| குரலடைப்பு | பேசமுடியாமற் போகை |
| குருட்டடியாய் | தற்செயலாய் |
| குருட்டாட்டம் | கண்மூடித்தனமான செய்கை |
| குருட்டீ | இருட்டிற் கண்தெரியாத ஓர் ஈ வகை |
| குருட்டுக் கண்ணாடி | முகந்தெரியாத கண்ணாடி |
| குருட்டுக்கல் | ஒளிமங்கின மணி |

| | |
|---|---|
| குருட்டுக் கொக்கு | நொள்ளை மடையான் என்ற கொக்கு |
| குருட்டுச் சாயம் | மங்கலான சாயம் |
| குருட்டுத்தனம் | கண்மூடித் தனம் |
| குருட்டுத் தீர்ப்பு | அவிவேகமான தீர்மானம் |
| குருட்டு நாள் | செவ்வாயும் சனியும் |
| குருட்டு நியாயம் | கண்மூடித்தனமான நியாயம் |
| குருட்டுப் பக்கம் | அச்சடிச் சீலையின் மங்கலான பக்கம் |
| குருட்டுப்பணம் | தேய்ந்த நாணயம் |
| குருட்டுப் பத்தி | மூடபத்தி |
| குருட்டுப் பலகை | அழுக்கடைந்த எழுதுபலகை |
| குருட்டுப் பனங்காய் | உள்ளீடற்ற பனங்காய் |
| குருட்டுப் பாடம் | பொருளுணர்ச்சி இல்லாமல் செய்யும் மனப்பாடம் |
| குருட்டுப் பாவலி | ஒருவகைக் காதணி |
| குருட்டுப் போக்காய் | கண்மூடித்தனமாய், தற்செயலாய் |
| குருட்டு மாசு | ஓடிமறைக்கும் பனிமேகம் |
| குருட்டு முத்து | மங்கலான முத்து |
| குருட்டு மை | எழுத்துத் தெரியாத மசி |
| குருட்டு யோகம் | முயற்சியின்றிச் செல்வமுண்டா தற்குக் காரணமான யோகம் |
| குருட்டு வவ்வால் | பகலில் கண்தெரியாத வாவல் வகை |
| குருட்டுவழி | கண்மூடித்தனமான முறை |
| குருட்டுவளம் | புடவையின் உட்புறம் |
| குருட்டுவாக்கில் | தற்செயலாய் |
| குருட்டெழுத்து | மங்கலான எழுத்து |
| குருடன் | கண்ணில்லாதவன், சுக்கிரன், பிறவிக் குருடனாகிய திருதராட்டிரன் |
| குருடி | கண்ணில்லாதவள் |
| குருடு | பார்வையின்மை, ஒளியின்மை, ஆடை முதலியவற்றின் குருட்டுப் பக்கம், மூடன், காதின் வெளிப் புறத்துள்ள செவிள், குருட்டுப் பாவலி |

| | |
|---|---|
| குருவித்தலைப் பைத்தியக்காரன் | மூடன் |
| குரூபம் | விகாரமான உருவம் |
| குரூபி | விகாரமான ரூபமுள்ளவ-ன்-ள் |
| குழிக்கண்ணி | குழிவான கண்ணுள்ளவள் |
| குழிநரி | குள்ளநரி |
| குழைச்சு விடுதல் | மண்வெட்டியின் காது முறிதல் |
| குள்ளக் கார் | சித்திரைக் கடப்பு என்னும் நெல் |
| குள்ளக் குறுகவிருத்தல் | மிகக்குட்டையாகவிருத்தல் |
| குள்ளக் கெண்டை | குறுங்கெண்டை |
| குள்ளத் தண்டுக் கீரை | குப்பைக்கீரை |
| குள்ளத் தாரா | ஒருவகைச் சிறுவாத்து |
| குள்ள நரி | நரி வகை |
| குள்ளம் | குறள், கொடுமை, தந்திரம் |
| குள்ளம் பாய்தல் | குறுகிக் கொண்டு வருதல் |
| குள்ளல். | குள்ளம் |
| குள்ள வண்டு | சிறுகருவண்டு |
| குள்ள வாழை | குழி வாழை |
| குள்ளன் | குறளன் |
| குள்ளன் கம்பு | அரிசிக்கம்பு |
| குள்ளாரால் | சேற்றாரால் |
| குள்ளி | குள்ளமானவள் |
| குற்றம் | பிழை, அங்கக் குறை |
| குறண்டற் கிழவன் | கூனற் கிழவன் |
| குறண்டிப் போதல் | கூனலாதல் |
| குறள் | குறுமை, ஈரடி உயரமுள்ள குள்ளன், சிறுமை, பூதம் |
| குறள் வெண்பா | |
| குறளடி - | |
| குறளடி வஞ்சிப்பா- | |
| குறளன் | குள்ளன், வாமனனாக அவதாரமெடுத்த திருமால் |

| | |
|---|---|
| குறளி | குறியவள் |
| குறியோன் | குள்ளன், அகத்தியன் |
| குறுகல் | குறுகிய பொருள் |
| குறுத்தவன் | குள்ளன் |
| குறுநரி | குள்ளநரி |
| குறுமுனி | குறுமுனிவன் |
| குறுமுனிவன் | அகத்தியன் |
| குறுமை | குள்ளம் |
| குறைதல் | வெட்டப்படுதல் |
| குறைப்பிள்ளை | பருவம் நிரம்புமுன் பெற்ற கருப்பிண்டம் |
| குறையரவு | குக்குடசர்ப்பம் |
| குறையுடல் | தலையில்லாத உடல் |
| குன்னாத்தல் | குளிரால் உடம்பு கூனிப் போதல் |
| கூதறை | இழிந்தது, இழிந்த குண முடையவ-ன்-ள், கிழியல் |
| கூதை செய்தல் | காதை மூளியாக்குதல் |
| கூமுட்டாள் | பெருமூடன் |
| கூர்மையில்லோன் | மந்தன் |
| கூழங்கை | முடமான கை |
| கூழன் | தெளிந்த அறிவில்லாதவன் |
| கூழாமட்டி | மந்தபுத்தியும் அச்சமுமுள்ளவன் |
| கூழை | குட்டையானது, புத்திக் குறைவு |
| கூழைக்கடா (கிடா) | வாலில்லாத எருமைக் கடா |
| கூழைக்கை | குறைக்கப்பட்ட கை |
| கூழைக்கொம்பன் | மழுங்கின கொம்புள்ள மாடு |
| கூழை நரி | வால் குட்டையான நரி |
| கூழைப்பாம்பு | தலைக்கும் உடலுக்கும் இடையில் கழுத்தின்றி ஒன்று போல் தடித்துள்ள குள்ளமான பாம்பு வகை |

| | |
|---|---|
| கூழையன் | குள்ளன், முழு மடையன் |
| கூழைவாலன் | குட்டையான பாம்பு வகை |
| கூளி | சிவகணங்களாகிய பூதம், குள்ளம் |
| கூன் | உடற்கூனல், கூனன் |
| கூன்கிடை | ஐவகை மெய்க்குற்றங்களுள் ஒன்றாகிய உடற் கூனிக்கிடக்கை |
| கூன்பாண்டியன் | திருஞானசம்பந்தர் காலத்து அரசு செய்த பாண்டியன் |
| கூன்முதுகு | ஆமையோடு |
| கூன்வாள் | வளைவான வாள் |
| கூனல் | கூன் |
| கூனலங்காய் | புளியங்காய் |
| கூனற்கிழவன் | உடல் வளைந்த முதியோன் |
| கூனன் | கூனலுள்ளவன் |
| கூனன் முதுகு | கூன் முதுகு |
| கூனாள் | கூனி |
| கூனி | கூனலுள்ளவள், கூனியிறால், இராமபிரான் முடிசூடுதலைச் சூழ்ச்சி செய்து தடுத்த மந்தரை |
| கூனிக்குயம் | அரிவாள் |
| கூனிப்பொடி | கூனியிறால் |
| கூனிப்போதல் | மூப்பு முதலியவற்றால் உடல் வளைதல் |
| கூனியிறால் | இறால் மீன்வகை |
| கூனிரும்பு | அரிவாள் |
| கூனுதல் | முதுகு வளைதல் |
| கூனை வண்டு | பூச்சி வகை |
| கெந்து | ஒற்றைக் காலாற் கெந்தியாடும் பிள்ளை விளையாட்டு வகை |
| கேளார் | செவிடர் |
| கேன வாயன் | பேதை |
| கேனம் | பைத்தியம் |

| | |
|---|---|
| கைச்சி | ஊமற்கச்சி |
| கைத்தண்டம் | ஊன்றுகோல் |
| கைப்பாணி | முடவன் தவழ்வதற்குக் கொள்ளுங் கைப்பிடி |
| கையர் | மூடர் |
| கொக்கட்டி | குறுகி வளைந்த பனங்கிழங்கு |
| கொக்கரை | வளைவு |
| கொங்கான் | அறிவிலி |
| கொட்டுளு | ஊமைச்சி |
| கொட்டை செத்தவன் | கையாலாகாதவன் |
| கொடிப்பிள்ளை | பள்ளையாடு |
| கொடுங்காய் | வெள்ளரி |
| கொத்தை | குருடன் |
| கொந்து | ஒற்றைக் காலாற் குதித்தாடும் விளையாட்டு வகை |
| கொற்றவன் | முடக்கொற்றான் |
| கொன்னை வாய் | திக்குவாய் |
| கோசா | அலி |
| கோட்டிக்காரன் | பைத்தியக்காரன் |
| கோடம் | ஒருகால் முடம் |
| கோணங்கிப் பல்லு | விகாரமாய் நீண்டுள்ள பல் |
| கோணங்கி யம்மை | தேகவுறுப்புக்களைக் குறைத்து விகாரப்படுத்தும் அம்மை வகை |
| கோணப்பார்வை | மாறுகண் |
| கோணல் | கூன் |
| கோணன் | கூனன் |
| கோம்பை | அறிவற்றவன் |
| கோரப்பல் | கோரதந்தம், விகாரமான பல் |
| கோல்கொடுத்தல் | கோலாற் குருடனை நடத்தி வருதல் |
| சக்கட்டை | மடையன் |
| சங்கூமச்சி | சிப்பிவகை |

| | |
|---|---|
| சடன் | மூடன் |
| சந்திரரோகம் | பைத்தியம் |
| சந்துபோனவன் | முடவன் |
| சப்பரை | மூடன் |
| சப்பாணி | நொண்டி |
| சப்பாணி மாடன் | நொண்டிப் பேய் வகை |
| சப்பைக் கால் | வளைவான கால் |
| சப்பை மூக்கு | தட்டையான நாசி |
| சப்பை மூஞ்சி | தட்டையான முகமுடைய -வன்-வள்-து |
| சப்பை வாய் | உதடுகள் சிறிது உள்ளடங்கிய வாய் |
| சர்வமுட்டாள் | அடிமடையன் |
| சரீரப்பழுது | அங்கவீனன் |
| சன்னக்கூனி | கூனியிறால் |
| சாத்தியந்தன் | பிறவிக் குருடன் |
| சாம்பிராணி | மூடன் |
| சாம்பிராணி மாடன் | முழுமூடன் |
| சிகண்டி | அலி |
| சித்திரக்குள்ளன் | கூழையன் |
| சிதடன் | குருடன், அறிவிலி, பித்தன் |
| சிதடி | சிதடு, பேதைமை |
| சிதடு | குருடு, பேதைமை, உள்ளீடின்மை |
| சிந்தன் | குறளினும் சிறிது நெடியவன் |
| சிந்தினர் | குள்ளர் |
| சிந்து | குறளினுஞ் சிறிது நெடியனாய் மூன்றடியுயர முள்ளவன் |
| சிரமிலி | தலையில்லாதது, நண்டு |
| சில்லு | நொண்டி விளையாட்டு |
| சிலியானை | முடக்கொற்றான் |
| சிறுகொய்யா | கொய்யாவகை |
| சிறுமகன் | அறிவில்லாதவன் |
| சிறுமட்டம் | குள்ளமானவ-ன்-ள் |

| | |
|---|---|
| சின்னப்படுதல் | ஊனப்படுதல் |
| சிடை | நருங்கல் |
| சுக்கிரக் கண்ணன் | ஒரு கண் குருடானவன் |
| சுக்கிரன் | சுக்கிராசாரி |
| சுக்கிராசாரி | ஒற்றைக்கண்ணன் |
| சுண்டன் | அறிவிலி |
| சுத்தமுட்டாள் | சுத்தமூடன் |
| சுத்தமூடன் | முழுமுட்டாள் |
| சுத்தன் | மூடன் |
| சுத்தாத்துமா | மூடன் |
| சுபாவக்காரன் | மூடன் |
| சுபாவம் | மூடத் தன்மை |
| சும்பத்தனம் | மூடத்தனம் |
| சும்பப்பிரபஞ்சம் | அறிவீனர் தொகுதி |
| சும்பன் | மூடன் |
| சுமடம் | அறிவீனம் |
| சுமடன் | அறிவில்லாதவன் |
| சுயம்பு | மடையன் |
| சுவாவி | மூடன் |
| சூம்பின கை | கையூனம் |
| சூன் | கை முதலியன சூம்பியிருக்கை |
| சூன்மதம் | பைத்தியம் |
| சூனியவன் | முடவன் |
| செகுடன் | செவிடன் |
| செகுடு | செவிடு |
| செவணை | செவிடு |
| செவிடன் | காது கேளாதவன் |
| செவிடி | காது கேளாதவள் |
| செவிடு | காது கேளாமை, காது கோளாத-வன்-வள் |
| செவிடு செல்லுதல் | செவிடுபடுதல் |
| செவிடுபடுதல் | சத்தமிகுதியாற் காது கேளாது போதல் |

| | |
|---|---|
| செவிடுபடுவாதம் | காது கேளாமற் செய்யும் நோய்வகை |
| செவி மத்திபம் | செவி மந்தம் |
| செவி மந்தம் | காது மந்தம் |
| செவி யறை | காதறை, காது கேளாதவன் |
| செவி யிலி | செவி யறை |
| சொக்கன் | மூடன் |
| சொத்தி | அங்கவீனம், நொண்டி |
| சொத்தியன் | நொண்டி |
| சொத்தை | ஊனம் |
| சொத்தைப்பல் | கெட்டுப்போன பல் |
| சொஸ்தி | சொத்தி |
| சோங்கண் | மாறுகண் |
| சோடன் | மூடன் |
| சோடை | அறிவிலி |
| சோழப்பிரமகத்தி | சோம்பேறிமூடன் |
| ஞானப்பைத்தியம் | ஞானத்தாலுண்டாகும் அறிவு மயக்கம் |
| டமாரன் | பெருஞ்செவிடன் |
| டிங்கி சுரம் | முடக்குச் சுரம் |
| டிம்மிக்கட்டை | முட்டாள் |
| டேக்குதல் | பிருட்டபாகத்தால் நகர்ந்து நகர்ந்து செல்லுதல் |
| தட்டிச் சொல்லுதல் | சிக்கிப் பேசுதல் |
| தட்டித் தடவுதல் | தடுமாறுதல் |
| தட்டித் தடுமாறுதல் | தட்டித் தடவுதல் |
| தட்டை | மொட்டை, அறிவிலி |
| தடிப்பயல் | மட்டி |
| தத்தக்கபித்தக்கவெனல் | பேச்சுத் தடுமாற்றக் குறிப்பு |
| தப்புதல் | தடவுதல் |
| தர்ப்பணானனன் | குருடன் |
| தலையறை | உடற்குறை |

| | |
|---|---|
| தாங்கி நடத்தல் | நொண்டி நடத்தல் |
| தாங்குதல் | நொண்டுதல் |
| திக்கு, திக்குப்பேச்சு | தெற்றிப் பேசும் பேச்சு |
| திக்குவாய் | கொன்னைவாய், திக்குவாயன் |
| திக்குவாயன் | தெற்றிப் பேசுபவன் |
| திமிரன் | மந்தன் |
| திமிராகரன் | அறிவிலி |
| திராபம் | மூடன் |
| திருஷ்டிக் குறைவு | பார்வைக் குறைவு |
| திவானம் | பைத்தியம் |
| துக்கப் பைத்தியம் | காரணமின்றிப் பயமுந் துக்க-முங் கொள்ளும் மனநோய் |
| தூவரன் | அண்ணகன் |
| தெக்கணாம்பட்டி | தெக்கணாமுட்டி |
| தெக்கணாமுட்டி | மூடன் |
| தெண்ணர் | அறிவிலிகள் |
| தெம்மாடி | ஒன்றுக்கு முதவாத அறிவீனன் |
| தெற்றிக்கால் | தெற்றுக்கால் |
| தெற்றுதல் | வாய் கொன்னுதல் |
| தெற்றுக்கால் | முட்டிக் காலுள்ளவன்-வள்-து |
| தெற்றுக்காலன் | முட்டிக்காலுள்ளவன் |
| தெற்றுப்பல் | ஒன்றோடொன்று பின்னி யிருக்கும் பல் |
| தெற்றுப்பல்லன் | பின்னற் பல்லுள்ளவன் |
| தெற்றுப்பல்லி | பின்னற் பல்லுள்ளவள் |
| தெற்றுவாய் | கொன்னை |
| தொத்திக்கை | கையூனம் |
| தொன்னைக் காது | மடங்கிய காது |
| தோட்டந்தூரம் | செவிடு |
| நக்கவாரி | குள்ளமானது |
| நசிவுகாயம் | ஊனமைக்காயம் |
| நசுக்குணி, நசுகுணி | கூழையன் |

| | |
|---|---|
| நபுஞ்சகம் | ஆண் தன்மையின்மை |
| நபுஞ்சக வேதம் | ஓர் அலி மற்றோர் அலியின் நட்பை விரும்புவதான தோஷம் |
| நபுஞ்சகன் | அலி, ஆண்டன்மையிழந்தவன் |
| நபும்ஸகம் | நபுஞ்சகம் |
| நரியன் | குள்ளன் |
| நருக்காணி | கறளை |
| நருங்கல் | வளர்ச்சிக் குறைவு |
| நருவாணி | நருக்காணி |
| நாக்குத் தட்டுதல் | திக்கிப் பேசுகை |
| நாமர்தா | ஆண்மையற்றவன் |
| நாவடைத்துப்போதல் | பேசமுடியாமற்போதல் |
| நாவுழலை | நாக்குழறுகை |
| நிர்மூடன் | முழுமூடன் |
| நிர்மூடி | மூடப்பெண் |
| நிரம்பா நோக்கு | இடுக்கிப் பார்க்கும் பார்வை |
| நிருமூடம் | முழுதும் அறிவின்மை |
| நிருமூடன் | முழுதும் அறிவற்றவன் |
| நிருமூடி | முழுதும் அறிவற்றவள் |
| நிழலாடுதல் | நிழல் மாத்திரம் தெரியும்படி பார்வை குன்றுதல் |
| நின்மூடன் | முழுமூடன் |
| நீசன் | அறிவில்லாதவன் |
| நுலையிலி | ஊமை |
| நுளை | குருடு |
| நெண்டுதல் | நொண்டுதல் |
| நெளியலன் | கூனன் |
| நெளியலி | கூனி |
| நொடித்தல் | நடக்கும்போது கால் சிறிது வளைதல் |
| நொண்டி | முடமான ஆள் அல்லது விலங்கு, முடம், நொண்டி நாடகம் |

| | |
|---|---|
| நொண்டிக்கால் | முடக்கால் |
| நொண்டி கட்டுதல் | பொய்க்கால் பிணைத்தல் |
| நொண்டிச்சாக்கு- | |
| நொண்டிச் சிந்து | நொண்டி நாடகம் |
| நொண்டித்தனம் | முடம் |
| நொண்டி நாடகம் | கள்வனொருவன் படையிலுள்ள குதிரையொன்றைத் திருட முயன்ற போது கால்தறியுண்டு பின் நல்வழி பெற்ற செய்தியைச் சிந்துச் செய்யுளாற் புனைந்து கூறும் நாடக நூல் |
| நொண்டியடிக்கை | நொண்டித்தனம் |
| நொண்டியடித்தல் | நொண்டி விளையாடுதல் |
| நொண்டுதல் | காலை ஊன்றாது குன்றி நடத்தல் |
| நொள்ளல் | பார்வையற்றுக் கண் குழிந்த நிலை |
| நொள்ளை | குருடு |
| நொள்ளைக்கண் | பார்வை மாறிய கண் |
| நொள்ளை மடையன் | கொக்கு வகை |
| பக்கவாதம் | உடலின் ஒரு பக்கத்தை உணர்ச்சியறச் செய்யும் நோய் வகை |
| பகற்குருடு | கூகை |
| பங்கம் | விகாரம் |
| பங்கறை | அவலட்சணம், அவலட்சணமானவ-ன்-ள் |
| பங்கு | முடம், முடவன் |
| பசடன் | அறிவிலான் |
| பஞ்சடைதல் | பசி முதலியவற்றால் பார்வை மங்குதல் |
| படிகாலி | தட்டையாகப் படிந்திருக்கும் பாதமுடையவ-ன்-ள் |

| | |
|---|---|
| படுவி | குறள் வடிவிலுள்ள தொழுத்தை |
| பண்டகன் | அலி |
| பண்ணறையன் | தெளிவாகப் பேச இயலாதவன் |
| பணிந்தவன் | குள்ளன் |
| பதிரன் | செவிடன் |
| பதுக்காய் | பருத்துக் குள்ளமாயுள்ள-வன் -து |
| பதுக்காயன் | குறுக்கே வளர்ந்த குள்ளன் |
| பயலி | மூடன் |
| பயித்தியக்காரன் | பித்துப்பிடித்தவன், மூடன் |
| பயித்தியம் | பித்து, பயித்தியக்காரன் |
| பரிமுகமாக்கள் | கின்னரர் |
| பல்லவராயன் | மூடன் |
| பள்ளை | குள்ளம் |
| பள்ளைச்சி | குள்ளமானவள் |
| பள்ளையன் | குறுகிப் பருத்தவன் |
| பள்ளையாடு | குள்ளமான ஆடு வகை |
| பளகர் | மூடர் |
| பறுகன் | குள்ளன் |
| பறுகு | குள்ளம் |
| பன்னாடை | மூடன் |
| பனாட்டுக்கூடை | பருத்துத் தடித்த குள்ளன் |
| பாதிரியம் | செவிடு |
| பாமரம் | மூடத்தனம், மூடம் |
| பார்வைக் குறைவு | கட்புலன் மங்குகை |
| பார்வைத் தாழ்ச்சி | பார்வைக் குறைவு |
| பார்வையிலி | குருடன் |
| பாலிசன் | மூடன் |
| பிச்சி | பித்துப்பிடித்தவள், பைத்தியம் பிடித்தவ-ன்-ள் |
| பிச்சு | பைத்தியம் |

| | |
|---|---|
| பிண்ணாக்கு மடையன் | பிண்ணாக்கு மூடன் |
| பிண்ணாக்கு மாடன் | பிண்ணாக்கு மூடன் |
| பிண்ணாக்கு மூடன் | முழுமூடன் |
| பிணவறையன் | புத்தியில்லாச் சோம்பேறி |
| பித்தம் | பைத்தியம் |
| பித்தன் | பைத்தியக்காரன், மூடன் |
| பித்து | பைத்தியம் |
| பித்துக்கொண்டாடுதல் | பைத்தியக்காரனைப்போற் காரியஞ்செய்தல் |
| பித்துக்கொள்ளி | பைத்தியம் பிடித்தவ-ன்-ள் |
| பித்துப்பிடித்தல் | பைத்தியமாதல் |
| பித்தேறி | பைத்தியங் கொண்டவ-ன்-ள் |
| பித்தோன் மாதம் | பித்து வெறி |
| பிரகன்னளை/பிருகன்னளை | அலியாக அமைந்த அருச்சுனன் |
| பிரசவ பைத்தியம் | பிரசவத்தின்பின்னர் உண்டாகும் மனத்தடுமாற்றம் |
| புரவித்தேவர் | குதிரைமுகமுள்ள தேவர் |
| புருடாமிருகம் | புருஷ முகங்கொண்ட விலங்கு வகை |
| புலி, புலிமுனியோன் | புலிக்கால் முனி, வியாக்ர பாதர் |
| புறக்காதுபடல் | குத்திய காதில் சோணை கோணிமடிந்திருக்கை |
| பூ | வெகுநேரம் நோக்குதலால் கண்ணொளி மழுங்குதல் |
| பூச்சிவெட்டு | குழிந்த கண் |
| பூஞ்சல் | கண்ணொளி மங்கல் |
| பூஞ்சலாடுதல் | கண்ணொளி மங்குதல் |
| பூஞ்சற்கண் | ஒளிமங்கிய கண், குழிந்த கண் |
| பூத்துப் போதல் | கண்பார்வை மங்குதல் |
| பூவெடுத்தல் | கண்ணில் விழுந்த பூவை நீக்குதல் |

| | |
|---|---|
| பூனைக்கண்ணன் | பூனைக்கண் போன்ற கண்ணை உடையவன் |
| பெட்டை | குருடு |
| பெட்டைக்கண் | ஊனமுள்ள கண், மாறுகண் |
| பெட்டையன் | அலி, ஆண்மையற்றவன் |
| பெண்டகம் | பெண்டகை |
| பெண்டகன் | அலி |
| பெண்டன் | பெண்டகன் |
| பெண்ணலி | பெண்மைத் தன்மை மிக்க அலி |
| பெண்ணை வாயன் | அலி |
| பேக்கலாண்டி | மூடன் |
| பேகூப் | மூடமான |
| பேசார் | ஊமைகள் |
| பேடன் | ஆண்தன்மை மிகுந்த அலி |
| பேடி | பெண் தன்மை மிகுந்த அலி |
| பேடியெழுத்து | ஆய்தவெழுத்து |
| பேடு | பேடி |
| பேது | உன்மத்தம் |
| பேதை | அறிவிலி, அலி |
| பேமாலம் | மூடன் |
| பேமாளம் | பேமாலம் |
| பேய்த்தனம் | பைத்தியம் |
| பேய்ப்பிள்ளை | அறிவில்லாத பிள்ளை |
| பேய்ப்புத்தி | அறிவின்மை |
| பேய்ப்பெண் | அறிவில்லாத பெண் |
| பேயன் | பைத்தியக்காரன் |
| பைத்தியம் | கிறுக்கு, மூடத்தனம் |
| பொட்டை | குருடு, கண்ணொளி மழுக்கம் |
| பொட்டைக்கண் | குருட்டுவிழி |
| பொட்டையன் | குருடன் |
| பொய்க்கண் | போலிக்கண் |

| | |
|---|---|
| பொய்க்கால் | காலுக்குப் பிரதியாக மரத்தால் அமைத்துக் கட்டப்பட்ட போலிக் கால் |
| பொய் மூக்கு | போலி மூக்கு |
| பொற்கைப் பாண்டியன் | இரவில், பார்ப்பனி யொருத்தியின் வீட்டுக் கதவைத் தட்டிப் போந்த குற்றத்திற்காகத் தன் கை குறைத்து, அக்கைக்குப் பிரதியாகப் பொற்கை பூண்ட பாண்டிய வேந்தன் |
| பொறியறை | பொறியிலி |
| பொறியிலி | அறிவற்றவ-ன்-ள், உறுப்புக் குறையுடையவ-ன்-ள் |
| பொன்றுதல் | பார்வை முதலியன குறைதல் |
| போழ்வாய் | பொக்கைவாய் |
| போளி | மூடன் |
| மக்கண்முரி | வடிவிற் சிறியவன் |
| மக்காயன் | மூடன் |
| மக்கு | அறிவீனன் |
| மக்கையன் | மந்த புத்தியுள்ளவன் |
| மகண்மா | அலி, பெண்வடிவுகொண்ட ஒரு மிருகம் |
| மங்கிணி | மிக்க மந்த புத்தியுள்ளவ-ன்-ள் |
| மசணை | மந்தன் |
| மசை | மூடன் |
| மட்டம் | சிறுகுதிரை |
| மட்டன் | மூடன் |
| மட்டி | மூடன் |
| மட்டித்தனம் | மூடத்தனம் |
| மட்டை | மூடன், உடற்குறை |
| மடசாம்பிராணி | மடைய சாம்பிராணி |
| மடத்தனம் | மூடகுணம் |
| மடம் | அறியாமை |

| | |
|---|---|
| மடமட்டி | முழுமுட்டாள் |
| மடவன் | அறிவில்லாதவன் |
| மடவார் | மூடர் |
| மடவியர் | மடவார் |
| மடவோர் | மடவார் |
| மடன் | அறியாமை, அறிவிலான் |
| மடைச்சாதி | அறிவு குறைந்த கூட்டத்தார் |
| மடைத்தனம் | அறிவீனம் |
| மடையசாதி | மடைச்சாதி |
| மடைய சாம்பிராணி | அறிவீனன் |
| மடையன் | அறிவீனன் |
| மடையன் சாம்பிராணி | மடைய சாம்பிராணி |
| மண்டு | மூடன் |
| மண்டூகம் | மூடன் |
| மண்டைக்கண் | குழிந்த கண் |
| மண்ணன் | மந்தன் |
| மண்ணாந்தை | அறிவிலி |
| மண்ணை | மூடன் |
| மண்வெட்டிப்பல் | மண்வெட்டிபோல் அகன்று தட்டையாயுள்ள பல் |
| மணையன் | புத்திக்கூர்மையற்றவன் |
| மத்தான் | மதிமயங்கியவன் |
| மத்தப்பிரமதத்தன் | வெறிபிடித்தவன், பைத்தியம் பிடித்தவன் |
| மத்தம் | பைத்தியம் |
| மத்தன் | பயித்தியம் பிடித்தவன் |
| மத்திமதானம் | ஏழை, குருடர் முதலியோர்க்குக் கொடுக்கும் கொடை |
| மத்தோன்மத்தன் | முழுப்பித்தன் |
| மதம் | வெறி |
| மதன் | மடமை |

| | |
|---|---|
| மதிகேடன் | நல்லறிவில்லாதவன் |
| மதிகேடி | அறிவில்லாதவன் |
| மதிகேடி | அறிவில்லாத பெண் |
| மதிகேடு | புத்தியீனம் |
| மதிப்பிரமம் | மதிமயக்கம் |
| மதிப்பிராந்தி | மதிமயக்கம் |
| மதிமயக்கம் | புத்திமாறாட்டம் |
| மதிமோசம் | அறிவின்மை |
| மதியிலி | அறிவற்றவ-ன்-ள்-து |
| மதியீனம் | மதிமோசம் |
| மந்தபுத்தி | அறிவுக்குறை, குறைந்த அறிவுடையவன் |
| மந்தம் | அறிவு மழுக்கம் |
| மந்தரை | கைகேயியின் தோழியாகிய கூனி |
| மந்தவறிவு | மழுங்கலான அறிவு |
| மந்தம் | அறிவு மழுங்கியவன் |
| மந்தி | முட்டாள் |
| மந்தையன் | மந்தன் |
| மப்பன் | மந்தன் |
| மப்பு | மட்டித்தனம் |
| மயக்கம் | அறிவின் திரிபு, சிருட்டியில் அலித்தன்மை முதலிய கலப்பு |
| மயங்கியோர் | அறிவு திரிந்தோர் |
| மயங்குதல் | அறிவுகெடுதல் |
| மயர்வு | அறிவு மயக்கம் |
| மயரி | அறிவீனன் |
| மயல் | பைத்தியம் |
| மரக்கண் | புலனற்ற கண் |
| மரக்கால் | மரத்தால் செய்த பாதம், மரக்காலாடல் |

| | |
|---|---|
| மரக்காலாடல் | கூத்துப் பதினொன்றனுள் வஞ்சத்தால் வெல்லுதல் கருதிப் பாம்பு தேள் முதலியவாய் அவுணர் புகுதலை யுணர்ந்து துர்க்கை அவற்றை யுழக்கிக் களைதற்கு மரத்தால் செய்த காலைக் கொண்டு ஆடிய ஆட்டம் |
| மரக்காற்கூத்து | ,, |
| மரச்செவி | சற்றும் கேளாச்செவி |
| மருள் | எச்சம் எட்டனுள் பிறவி முதல் அறிவின்றி மயங்கி யிருக்கும் நிலை |
| மருளன் | அறிவு மயக்கமுள்ளவன் |
| மருளி | புத்தி மயக்கமுள்ளவள் |
| மலட்டா | ஈனாப்பசு |
| மலடன் | மகப்பெறாதவன் |
| மலடி | மகப்பெறாதவள் |
| மலடு | கருத்தரியாமை, ஈனாதவ -ன்-ள்-து |
| மலடு நிற்றல் | மலடாய் நிற்றல் |
| மலைப்பு | அறிவு மயக்கம் |
| மழுகூழை | வாலிழந்த குரங்கு, மூடன் |
| மழுங்கல் | மூடன் |
| மழுங்குணி | அறிவற்றவன் |
| மழுங்குணி மாங்காய் | மழுங்குணி |
| மழுங்குணி மாங்கொட்டை | மழுங்குணி |
| மழுமட்டை | முழு மடத்தனம் |
| மனக்குருடு | அறிவின்மை |
| மனக்குள்ளம் | தந்திரம், வஞ்சம் |
| மா | விலங்குவடிவாய்ப் பிறக்கும் மானுடம் |
| மாட்டுப்புத்தி | மிகுந்த அறிவீனம் |

| | |
|---|---|
| மாடன் | மூடன் |
| மாணி | குறள் வடிவம் |
| மாணியரிதல் | விதையெடுத்து ஆண்பிள்ளையைப் பேடியாக்குதல் |
| மாலைக்கண்ணன் | இராக்குருடன், பார்வைக் குறைவுள்ளவன் |
| மாலைக்காமாலை | மாலைக்கண் |
| மாறுகண் | வக்கிரக்கண் |
| மாறுகால் மாறுகை வாங்குதல் | ஒரு பக்கத்துக் கையையும் மறுபக்கத்துக் காலையும் தண்டனையாக வெட்டுதல் |
| மான்றார் | புத்தி மயங்கினவர் |
| மானக்குருடன் | முழுக்குருடன் |
| மானன் | மூடன் |
| மானுடமடங்கல் | திருமாலின் நரசிம்மாவதாரம் |
| முகுரவானனன் | திருதராட்டிரன் |
| முட்டன் | மூடன் |
| முட்டாட்டம் | முட்டாள்தனம் |
| முட்டாள் | மூடன் |
| முட்டிக்கால் | முட்டிக்காற் பின்னல் |
| முட்டிக்கால் தட்டுதல் | முட்டுக்கால் தட்டு |
| முட்டிக்காலன் | முட்டுக்கால் தட்டும்படி நடப்போன் |
| முட்டுக்கட்டியாடுதல் | பொய்க்கால்களில் நின்று நடத்தல் |
| முட்டுக்கால் தட்டுதல் | முழங்கால் ஒன்றோடொன்று இடித்தல் |
| முட்டுற்றவன் | அறிவீனன் |
| முடக்கம்மை | கைகால்களை முடக்கும் சுரவகை |
| முடக்குக் காய்ச்சல் | முடக்கம்மை |
| முடக்குச் சுரம் | முடக்கம்மை |
| முடக்குமாரி | முடக்கம்மை |

| | |
|---|---|
| முடக்குவாதம் | கைகால் முதலிய உறுப்புகளை முடங்கச் செய்யும் நோய்வகை |
| முடங்கி | முடவன் |
| முடங்குதல் | கைகால் வழங்காமற் போதல் |
| முடங்கு | முடக்குவாதம் |
| முடத்தாமக் கண்ணியார் | பொருநராற்றுப்படை இயற்றிய பழைய புலவர் |
| முடத்தி | முடப் பெண் |
| முடத்திருமாறன் | இடைச்சங்கத்தினிறுதியில் வாழ்ந்த பாண்டியன் |
| முடத்தெங்கு | கோணலாக வளர்ந்த தென்னை |
| முடந்தை | முடம் |
| முடம் | கை, கால் உபயோகத்திற் கின்றிப் போகும் நிலை |
| முடவன் | நொண்டி |
| முடவாண்டி | கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர் கூட்டத்துப் பிறக்கும் பிறவிக் குருடு முடங்கலான குழந்தைகளை வலிய எடுத்து வளர்த்து வரும் பிச்சைக்கார வகையினர் |
| முடவுதல் | நொண்டுதல் |
| முண்டக்கண் | முண்டைக்கண் |
| முண்டம் | உடற்குறை, உறுப்புக்குறை |
| முண்டைக்கண் | வெளியில் பிதுங்கியுள்ள பருத்த விழி |
| முத்தண்ணா | அசடன் |
| முத்தன் | மூடன் |
| முதலைக்கண் | முன் தள்ளிய விழி |
| முதலை தள்ளுதல் | கண் வெளிப்பிதுங்குதல் |
| முதிராப் பிண்டம் | முற்றாத கருப்பம் |
| மும்மூடம் | உலோக மூடம், தேவதாமூடம், பாஷாண்ட முடம் என்ற மூவகை அறிவீனம் |

| | |
|---|---|
| மும்மூடர் | முழுமூடர் |
| முரி | முழுதிற்குறைவானது |
| முருடன் | மூடன் |
| முழங்கால் முட்டி | முட்டிக்கால் |
| முழுமகன் | அறிவிலான் |
| முழுமூடன் | பெருமுட்டாள் |
| முன்னிசிவு | உடம்பை முன்பக்கமாக வளையச் செய்யும் தம்ப வாத நோய் |
| மூக்கறுத்தை | மூக்கையறுத்தல், அவமானஞ் செய்தல் |
| மூக்கறுப்பு | அவமானம் |
| மூக்கறை | குறைமூக்குள்ளவ-ன்-ள்-து |
| முக்கறைச்சி | குறைமூக்குள்ளவள் |
| மூக்கறையன் | குறைமூக்குள்ளவன் |
| மூக்கிலி | மூக்கறை |
| மூக்குப்பூரி | மேலுதடு விண்டவன் |
| மூக்குப்பூறி | மூக்குப்பூரி |
| மூகம் | ஊமை |
| மூகன் | ஊமையன், ஓர் அசுரன் |
| மூகை | ஊமை |
| மூகைமை | ஊமையாயிருக்குந்தன்மை |
| மூகையெழுத்து | ஊமையெழுத்து |
| மூங்கர் | ஊமையர் |
| மூங்கை | மூகை |
| மூங்கைமை | ஊமைத்தன்மை |
| மூங்கையான் | ஊமையன் |
| மூங்கை ரோகம் | நோய்வகை |
| மூஞ்சை | கோணியமுகம் |
| மூஞ்சையன் | முகங்கோணியவன் |
| மூடத்தனம் | அறிவீனம் |
| மூடதை | மூடத்தனம் |

| | |
|---|---|
| மூடம் | அறிவின்மை |
| மூடலை | மதிகேடு |
| மூடன் | அறிவிலான் |
| மூடனம் | மூடம் |
| மூடாத்துமா | மூடன் |
| மூடி | மூடத் தன்மையுள்ளவன் |
| மூடி | மூடன் |
| மூர்க்கம் | மூடத்தனம் |
| மூர்க்கன் | மூடன் |
| மூர்ச்சிதம் | அறிவின்மை |
| மூளி | உறுப்புக்குறைவு, உறுப்பறை |
| மூளிக்காது | அறுபட்ட காது |
| மூளிநாய் | காதறுபட்ட நாய் |
| மூளியுதடு | பிளந்த உதடு |
| மூளை கெடுதல் | அறிவு குறைதல் |
| மூளையில்லாதவன் | மூடன் |
| முளைவறண்டவன் | மூளையில்லாதவன் |
| மூன்றாங்கட்டு | முடிவான தீர்மானம், ஒடிந்த உறுப்புக்கு மூன்றா முறை கட்டுங்கட்டு |
| மெய்க்குற்றம் | கொட்டாவி, நெட்டை, குறு குறுப்பு, கூன்கிடை, நட்டு விழல் என்பனவாகிய உடலில் உண்டாம் ஐந்து வகைக் குற்றங்கள், நிலைநின்ற தோஷம் |
| மேதி | எருமை முகங்கொண்டவனும் துர்க்காதேவியாற் சங்கரிக்கப் பட்டவனுமான ஓர் அசுரன் |
| மேதித்தலைமிசை நின்றாள் | துர்க்கை |
| மேழை/மோழை | கொம்பில்லா விலங்கு |
| மை | மலடு, மலடி, மலட்டெருமை |
| மைந்து | அறியாமை |

| | |
|---|---|
| மைம்மை | மலடி, மலட்டெருமை |
| மைம்மைப்பு | பார்வைக்குறை |
| மையல் | பித்து |
| மையலவர் | பித்தர் |
| மையா | மலட்டுப்பசு |
| மொட்டந்தலை | மொட்டைத்தலை |
| மொட்டை | அறிவின்மை |
| மொட்டைப்புத்தி | மழுங்கின அறிவு |
| மொட்டைமாடு | கொம்பில்லாத மாடு |
| மொட்டையன் | மொட்டைத்தலையன் |
| மொண்ணன் | வழுக்கைத்தலையன் |
| மொண்ணையன் | அறிவு மழுங்கியவன் |
| மொத்தி | புத்தியில்லாதவள் |
| மொத்து | மூடமானவன்-வள்-து |
| மொத்தை | மூடப்பெண் |
| மொழிமுறித்தான் காய்ச்சல் | முடக்குச் சுவரம் |
| மோகை | உருத்தோன்றாத பிண்டம் |
| மோடம் | மூடம், மூடத்தனம் |
| மோடன் | மூடன் |
| மோடனம் | மூடத்தனம் |
| மோடு | மடமை |
| மோழை | மொட்டை, மடமை |
| மோழைக்கொம்பன்/கொம்பு | வளர்ச்சியறும்படி சுடப்பெற்ற கொம்பு/ உள்ள மாடு |
| மௌட்டியம் | அறியாமை |
| மௌட்டியன் | முட்டாள் |
| யட்டி | ஊன்றுகோல் |
| யானைக்கண் | சிறுகண் |
| யானைமுகவன் | விநாயகர் |
| யூகம், யூபம் | உடற்குறை |
| ரசப்பிடிப்பு | பாதரசமுட்கொண்டதாலுண்டாம் முடக்குவாதம் |

| | |
|---|---|
| லங்கடா | நொண்டி |
| வக்கிரக்கண் | மாறுகண் |
| வக்கு | ஊமைக்காயம் |
| வசங்கெட்டவன் | நபுஞ்சகன் |
| வசை | மலட்டுப்பசு |
| வட்டன் | வட்டுப் போன்ற உடலுடையவன் |
| வடுகன் | மூடன் |
| வண்டரன் | அலி |
| வண்டன் | குள்ளன் |
| வண்டு | அபிநயத்துக்குரிய அலிக்கை வகை |
| வதிர் | செவிடு |
| வதிரன் | செவிடன் |
| வந்தியை | மலடி |
| வந்தை | வந்தியை |
| வருடவரன் | அலி |
| வழுக்கட்டை | மூடத்தனம் |
| வழுக்கை/வழுக்கைத்தலை | பொட்டலாயிருக்குந்தலை |
| வழுங்கல் | அறிவற்றவன் |
| வள்ளக்கால் | வளைந்தகால் |
| வற்சை | மலட்டுப்பசு |
| வறடன் | வீரியமற்றவன் |
| வறிது | அறியாமை |
| வறியோன் | அறிவிலான் |
| வன்செவி | உணர்ச்சியற்ற காது |
| வஜ்ரசும்பன் | முழுமுட்டாள் |
| வாக்கி | மாறுகண்ணுள்ளவள் |
| வாக்குக்கண் | மாறுகண் |
| வாக்குக்கண்ணன் | மாறுகண்ணுள்ளவன் |
| வாமன் | வாமனன் |
| வாமனம் | குறள் வடிவம், வாமனாவதாரம் |

| | |
|---|---|
| வாமனன் | தசவதாரத்துள் குறள் வடிவாய் அவதரித்த திருமால் |
| வாமனாவதாரம் | குறள்வடிவான திருமாலவதாரம் |
| வாய்க்கட்டு | மந்திரத்தால் பேசமுடியாமலும் வாயைத் திறக்க முடியாமலுஞ் செய்கை |
| வாய்கட்டுதல் | மந்திரத்தால் துஷ்டப் பிராணிகளின் வாயைத் திறவாமற் பண்ணுதல் |
| வாய்விடாச்சாதி | மிருகம் |
| விகலபாணிகன் | சூம்பினகையன் |
| விகலன் | குறைவுடையோன் |
| விகலாங்கன் | குறைவுடையோன் |
| விங்களம் | குறைவு |
| விடலி | மலடி |
| விடுகாது | வளர்த்துத் தொங்கவிடும் தொள்ளைக்காது |
| வியங்கம் | பிறவியூனம் |
| விரையெடுத்தவன் | அண்டவிரையெடுக்கப் பட்டவன் |
| விழிகண்குருடு | வெளித்தோற்றத்தில் விழியில் மாறுபாடின்றியே கண் தெரியாமை |
| விழியன் | பெருங்கண்ணுடையவன், பிதுங்கிய விழியுடையவன் |
| விழுத்தண்டு | பெரிய ஊன்றுகோல் |
| விற்கால் | வளைந்த கால் |
| விறகு தலையன் | முட்டாள் |
| வெதிர் | செவிடு |
| வெதிரன் | செவிடன் |
| வெள்ளெழுத்து | எழுத்து முதலியன விளங்கத் தெரியாமைக்குக் காரணமாகிய பார்வைக் குறை |

| | |
|---|---|
| வெள்ளை | அறிவில்லாதவன் |
| வெள்ளைப்புத்தி | அறிவீனம் |
| வெள்ளை மகன் | மூடன் |
| வெள்ளைமை | அறிவின்மை |
| வெள்ளொளிப்பருவம் | வெள்ளெழுத்துண்டாம் பருவம் |
| வெளியர் | அறிவிலார் |
| வெளிறன் | அறிவில்லாதவன் |
| வெளிறு | அறியாமை |
| வெறி | பேதைமை, பயித்தியம் |
| வெறித்தல் | பயித்தியம் பிடித்தல் |
| வெறிகொள்ளுதல் | பயித்தியங் கொள்ளுதல் |
| வெறிது | அறிவின்மை |
| வெறிமுண்டன் | பித்துப்பிடித்த தடியன் |
| வெறியன் | பயித்தியக்காரன் |
| வைதேயன் | அறிவீனன் |
| ஜடம் | மூடத் தன்மையுள்ளவன் |
| ஜடன் | மூடன் |
| ஜாத்யந்தன் | பிறவிக்குருடன் |
| ஜிஹ்வா ஸ்தம்ப வாதம் | நாக்கை அசையவொட்டாது செய்யும் வாதநோய் |
| ஸ்தம்ப ரோகம் | பக்கவாதம் |
| ஹ்ரஸ்வம் | குள்ளம். |

## நூற்றொகை


இணைப்பழமொழிகள், (தொகு) தி. செல்வக் கேசவராய முதலியார், கழகம், சென்னை, 1974.

இளங்கோவும் கம்பனும், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, 1986.

ஈழத்து நாடோடிப் பாடல்கள், லேனா தமிழ்வாணன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1986.

ஏட்டில் எழுதாக் கவிதைகள், செ. அன்னகாமு, சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர், 1959.

கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956.

கழகப் பழமொழி அகர வரிசை, கழகம், சென்னை, 1970.

தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாமலை, என்.சி.பி.எச். சென்னை, 1964.

தமிழர் நாட்டுப்புற விளையாட்டுகள், இரா. பாலசுப்பிரமணியன், சென்னைப் பல்கலைக் கழக பிஎச்.டி. ஆய்வேடு, 1982 (வெளியிடப்படாதது).

தமிழர் நாட்டு விளையாட்டுகள், இரா. பாலசுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

தமிழர் விழாக்களும் பொழுதுபோக்கும் (கி.பி. 3-ஆம் நூ. வரை), செ.அ. முத்துக்கிருஷ்ணன், சென்னைப் பல்கலைக்கழக பிஎச்.டி. ஆய்வேடு, 1988 (வெளியிடப்படாதது).

தமிழில் விடுகதைகள், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975.

தமிழிலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகளும் நோன்புகளும் (கி.பி. 10-ஆம் நூ. வரை), வே. சிதாலட்சுமி, சென்னைப் பல்கலைக் கழகப் பிஎச்.டி. ஆய்வேடு, 1981. (வெளியிடப்படாதது).

நாட்டுப்புறப் பாடல்கள் - திறனாய்வு, ஆறு. அழகப்பன், கழகம், சென்னை, 1976.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஊனமுற்றோர், அ.லோ. பழனிச்சாமி, வெளியிடப்படாத எம்.பில் ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1989.

வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை, 1987.

A Comprehensive Etymological Dictionary of the Tamil Language, N. Devaneyapavanar, 1985.

Disablement in the Community, (Ed). Donald L. Patrick & Hedley Peach, Oxford Medical Publications, OUP, London, 1989.

Dravidian Etymological Dictionary, T. Burrow & M.B. Emeneau, Clarendon Press, Oxford, 1984.

Handicapped Children in the Community. Grace E. Woods, John Wright & Sons Ltd., Bristol, 1983.

International Encyclopaedia of Social Sciences, (Ed.) David.L. Sills, Collier Macmillan, London, 1972.

An Introduction to Social Anthropology, D.N. Majumdar, T.N. Madan, National Publishing House, New Delhi, 1989.

The Meaning of Disability, A Sociological Study of Impairment, Mildred Blaxter, Heinman, London, 1976.

Tamil Lexicon, Madras University, 1982.

Tamil Proverbs, a classified collection, Herman Jensen, Asian Educational Services, New Delhi, 1982.

**கட்டுரைகள்**

1. *நா. காமராசனின் குறையங்கப் படைப்புகள், சு. வேலப்பன், ஆய்வுக் கோவை, பதினைந்தாவது கருத்தரங்கு, 1983, தொகுதி 1, பக். 691-695.*

2. **The Handicapped as Viewed in Tamil Literature,** S.V. Subramanian (Sixth International Conference Seminar on Tamil, Malaysia, 1987).

3. **The Handicapped in Tamil Society**, Annie Thomas, (National Seminar on the Social Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Chennai, 1992).

4. **Multilation as Punishment,** Annie Thomas, (National Seminar on the Legal Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Chennai, 1994).

5. **Ūnam (handicap) and Idiomatic Usages,** Annie Thomas (XVII All India Conference of Dravidian Linguists, Kanyakumari, 1990).

# சொல்லகராதி

## (எண் - பக்க எண்)


அகராதி 16, 27, 80, 110, 113, 114, 116, 117, 118, 120
அடிச்சொல் 17
அடித்தொழிலர் 43
அரசநீதி 52
அரசவை ஊழியர் 41
அரசியல் 52
அரசு ஏவலர் 10
அறங்கூறல் 52
அறிவுக்குறை 8
அறிவுமருள் 28
ஆகுபெயர் 18, 27
ஆன்மா 90
இயங்கு பாத்திரம் 43
இரட்டையர் 67
இருமொழிச் சூழல் 132
இலஞ்சி மன்றம் 13, 71, 88, 105
இழிபிறப்பு 78
இறைமை 13, 69, 70, 71, 88, 89, 101, 104
இறையனார் களவியல் 55
உடல் ஊனம் 18
உடலியல் 67
உடற்குற்றம் 37
உடற்குறை 1, 6, 9, 10, 18, 65, 118
உடற்கூறு 96
உயிரிரக்கம் 57
உருவம் 76, 77
உரையாடல் 131, 132
உலகக் கவிஞர் 3
உவமை 38, 42, 57, 76, 86, 90
உளச்சிதைவு 53
உளநோயாளி 21
உளவியல் 3, 53, 108, 110
உறுப்பறை 4, 18, 47-64, 84
உறுப்புக்குறை 100
உறுப்புச் சிதைவு 52, 116, 136
ஊமும் செவிடும் 79-94
ஊழியர் 106
ஊனச் சிறப்பு 87
ஊனச் சுட்டு 83
ஊனச் சொற்கள் 110, 133, 141-179
ஊன நீக்கம் 13, 45, 83, 88, 90, 103, 106
ஊனப் பணியாளர் 41
ஊனப் பிறவி 26, 39, 99
ஊனப் பொருள் 65
ஊனம் செய்தல் 47
ஊனர் சமூகநிலை 107
ஊனர் மறுவாழ்வு 35
ஊனன் 12
எச்சம் 4, 18, 33-46
எதிர்நிலை 112, 130, 135
எள்ளல் 98, 106, 128
ஏவல் சிலதியர் 72
ஏவலர் 73, 87, 89
ஏவலர் குழாம் 45
கண்களைதல் 55
கண் தானம் 54
கதை 136
கதைக் களன் 44
கற்பனை 88
கனவு 86
காது குத்துதல் 115
காந்தியடிகள் 13
காப்பியக் களன் 42
காப்பியம் 10, 13, 43, 45, 52, 69, 71, 72, 73, 75
கால் ஊனம் 131
கால்வழி 3
குடும்பமொழி 24
குழந்தை 130
குழந்தை விளையாட்டு 131, 135
குழு விளையாட்டு 128, 131, 132

குற்றவுணர்வு 53, 84
குற்றம் 55, 56, 101
குற்றமும் தண்டனையும் 100
குற்றவாளி 95
குறிப்பு 42, 43, 67, 75
குறியீடு 9, 16, 27, 67, 75, 78, 89, 90, 104, 110, 111, 115, 119
குறுந்தொழிலிளைஞர் 67
குறுமுனி 70
குறைப்பிறவி 6
குறைபாடு 1
கூனும் குறளும் 65-67
கேள்விப்புலன் 129
கொலை 50, 58
சங்கப்புலவர் 3
சட்டம் 56, 57
சட்டவியல் 60
சமயக் கோட்பாடு 88
சமயச் சார்பு 14
சமய நம்பிக்கை 2
சமய நீதி 52
சமயம் 52, 87, 89
சமுதாயம் 1, 6, 40, 52, 90, 113, 114, 115, 118, 119, 120, 127, 128, 129
சமுதாய வாழ்வு 9
சமூக அறிவியல் 96
சமூகச் சீர்கேடு 109
சமூக நோக்கு 13
சமூகப் பாதிப்பு 117
சமூகம் 1, 16, 56, 95, 96, 106, 107
சமூகவியல் 16, 95, 103, 107
சிதைவு 1
சிதைவுப் பட்டியல் 52
சிந்து 7
சூடாமணி 5
செய்யுளியல் 7
செயற்கை உறுப்பு 35, 60, 117
செவிப்புலன் 81
செவியூனம் 83
சைகை 85
சொல்லாட்சி 22, 26, 38
சொல்வகை 24
சொற்பயிற்சி 25
தண்டனை 2, 14, 48, 53, 55-56, 84, 100, 101, 102, 135
தம்முறுப்பறை 53-55
தவறு 53, 55, 58, 100, 101, 102
தற்காப்பு 59
தற்கொலை 53
தற்சிதைவு 53
தாக்குதல் 59
திட்டுதல் 20
திராவிடமொழி 17, 24
திருத்தொண்டு 107
திருவிதாங்கூர் 129
தேவதைக் கதை 16
தொட்டு விளையாட்டு 130, 131, 132
தொன்மம் 54
தொனி 59
தோழி 11, 43, 44, 45, 46, 71, 72, 74
தோழியர் மரபு 45
நகைச்சுவை 73
நம்பிக்கை 14, 15, 39, 40, 103, 104, 119
நாட்டாரியல் 109
நாட்டுப்பாடல் 136
நாயன்மார் 52, 70
நிகண்டு 6, 7, 8, 9, 18, 19, 36-38, 67, 79, 80
நீதிமுறை 57
நீர்நிலை 105
நேர்நிலை 112, 130, 132, 135
நொண்டி நாடகம் 3, 14, 16, 58
நோய் 21, 22, 23, 35, 36, 48, 65, 68, 105, 110
நோயாளி 96
பக்தி இலக்கியம் 51, 69
படிநிலை 22, 56, 120
படைப்பாளி 3
பண்புக்குறைபாடு 119
பந்தடி 44, 73
பரியாயச்சொல் 6, 7, 118

பழங்கதை 25
பழமொழி 3, 15, 109-1126
பாடபேதம் 37
பாடற்றலைவர் 10
பாத்திரம் 3, 34, 43, 48, 68, 71, 74, 98
பாரதி 12
பாரதிதாசன் 57, 58
பால்மருள் 26
பிழை 55, 100, 103
பிறப்பு 68
பிறப்பு வழி 33
பிறமொழி 25
பிறமொழிச்சொல் 33
பிறவிக்குறை 65
பிறவிநோய் 106
பிறவியூனம் 18, 33, 35, 83, 90, 99
பின்புலம் 67
புராணகாலம் 51
புத்தன் 40, 54, 71, 89
புலவர் 3
புலன் குறைபாடு 19, 65
புலனடக்கம் 88
புறநடை 69
பேச்சுத்திறன் 115, 116
பேச்சுப் பாதிப்பு 23
பேச்சுப் புலன் 80
பேச்சுறுப்பு 23, 79
பேச்சொலி 79
பொழுதுபோக்கு 127
பொறியின்மை 5, 99
போர் 51, 52, 59
போலச் செய்கை 128, 132
மக்கட்குழு 95
மக்கட்கூட்டம் 95
மக்கட்தொகுதி 95
மக்கட்தொகை 27, 34
மக்கட் பாகுபாடு 120
மக்கள் வழக்காறு 136
மரபு 69
மரபுத் தொடர் 110, 114
மரபு வழி 33
மருத்துவத்துறை 96
மருத்துவம் 103
மருள் 98
மறுவாழ்வு 46
மறைபொருள் 87
மனிதாபிமானம் 57
மானுடவியல் 109
மீவியல் 13, 58, 103
மீவியற்கை 2, 88
முத்தொள்ளாயிரம் 55
முதுமை 22, 35, 65, 68, 90, 110
மூடநம்பிக்கை 2, 96
மூப்பு 21, 68, 83
மூளைக் காய்ச்சல் 36
மெய்க்குற்றம் 24
மெய்யூனம் 128, 131
மொழி 79, 118
மொழிக்குடும்பம் 28
மொழிமரபு 20
மொழியியல் 22
மொழிவளம் 49
யாப்பியல் 65
வசை 20
வஞ்சினம் 53
வடமொழி 24
வரலாறு 58
வழக்கு 8, 9, 20, 22, 23, 25, 27, 48, 49
வாய்ப்புலன் 133
வாய்மொழிப்பாடல் 136
வாழ்வியல் 15, 56, 60, 60, 99
விடுகதை 16, 109-126
விதூடகன் 43, 44, 74, 85
விபத்து 35, 48, 59, 110
விவிலியம் 12, 14, 45, 101, 104, 105
விளையாட்டு 16, 127-140
விளையாட்டுப்பாடல் 136
வினைச்சொல் 59

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

Pub.No. 415 **தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்** **45.00**